
கொலைப் பித்தன்
வேலவன்
எழுதிய
மர்ம நாவல்
149
JAS

# கொலைப் பித்தன்

'வேலவன்'

எழுதிய துப்பறியும் நாவல்

மர்ம நாவல்

பிரேமா

பிரசுரம்

சென்னை—24

பதிப்புரிமை வாய்ந்தது

விலை ரூ. 1-4-0

பிரேமா பிரசுரம்—30
முதற் பதிப்பு : ஜூன், 1955
சகல உரிமைகளும் பெற்றது
அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 510
நன்கொடை எண்: 510



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

27—1—1979

அச்சிட்டோர் :
பிரேமா ஆர்ட் பிரிண்டர்ஸ்,
சென்னை—24.

## இந்த நாவலின் மர்மங்கள்

கோடித் தீவிலிருந்து வருபவனின் எதிர்காலம்......

அவன் தந்தை மீதுள்ள பழிச்சொல்......

12 வருஷங்களாகப் பூட்டப்பட்டிருந்த வெள்ளை மாளிகை...

அங்கே 12 வருஷங்களுக்கு முன் நடந்த ஒரு கொலை...

அதைக் கண்டு பிடிக்க முயலும் துப்பறியும் கேசவனின் போக்கு...

பழி வாங்கத் துடிக்கும் கனகப்பன்...

பணத்திற்காகக் காதலிக்கும் மஞ்சுளா...

பாசத்திற்காகப் போராடும் பவானி...

பேராசைக்காரியொருத்தியின் கடந்த கால வாழ்க்கை...

கல்யாண விருந்து...

தலைமறையும் நண்பன்...

காதலன் தலைக்கு வந்த ஆபத்து...

சட்டையில் இரத்தக் கறை...

பத்மாவதியம்மாள் வீட்டில் அகப்பட்ட ஒரு போத்தல்...

தூசி படிந்த ஒரு சுவர்க் கடிகாரம்...

ஒரு பேப்பர் அறுக்கும் கத்தி...

குப்பைக் கூடையில் கிழிபட்ட ஒரு பத்திர நகல்...

உயிலின் ஒரு வாசகம்...

ஒரு டெலிபோன் அழைப்பு...

இரண்டு உப்புக்கட்டிகள்...

---

*இத்தனை மர்மங்களையும் துப்பறியும் கேசவன் விடுவித்தால் முடிவு என்னவாக இருக்கும்?*

# முன்னுரை

மனிதனுக்குப் பித்துப் பிடித்து விட்டால் அவன் சாதிக்க நினைக்கும் காரியங்கள் சற்று அமானுஷ்யமாகவே இருக்கும்! கலைப் பித்து, காதல் பித்து, கௌரவப்பித்து, பணப் பித்து, பழி வாங்கும் பித்து, பெண் பித்து எனப் பலரகப் பித்துகளும் ஒரு கொலைப்பித்தைச் சுற்றி நடமாட ஆரம்பித்து விட்டால், பலரகப் பித்தலாட்டக்காரர்களும் ஏற்படுவது இயற்கையே! அத்தகையவர்களின் சிக்கல்களை யெல்லாம் அவிழ்க்க முனையும் துப்பறியும் கேசவன் பலவிதமான சித்து வேலைகளும் செய்து நம்மைப் பிரமிக்க வைக்கிறார் இந்த நாவலில்.

அடுத்து என்ன நிகழப் போகிறது என்கிற ஆவலை அடுக்கடுக்காக எழுப்பும் விதமாக மர்ம நாவல் எழுதுவதற்குப் போதிய கைத்திறன் வேண்டும். அந்த வகையில் வேலவனின் கைவண்ண்ணத்தையும், நடை வண்ணத்தையும் இந்த நாவலில் நாம் நிறையக் காணலாம்.

**அரு. ராமநாதன்**

அ
தி.க. சண்மு
தமிழ் ய

அத்தியாயம் : 1

# கோடித் தீவு

**சு**ற்றிலும் ஹோவென்ற கடல் இரைச்சல் கேட்டது.

அதன் நடுவே அனுதியான தீவு!

அங்குள்ள நிர்மானுஷ்யமான மலையின் உச்சியை நோக்கி, **செல்லையா** மெதுவாக ஏறிச் சென்றான்.

அவனது அழகிய முகத்திலும் வாலிப விழிகளிலும் சிந்தனை தேங்கி நின்றது.

பாதி நிலா அப்போதுதான் கீழ்த்திசையில் தலையை நீட்டி, எட்டிப்பார்க்கத் தொடங்கியது.

பொழுது விடிவதற்குள் செல்லையா அந்தக் கோடித் தீவை விட்டுப் புறப்படவேண்டும். அங்குள்ள அநாகரிகமான பழங்குடி மக்கள் அவனுக்குப் பரிவோடளித்த பிரிவுபசார விருந்தை அருந்தி, அவன் வெளியே வந்தான். உடனே என்னென்னவோ எண்ணங்கள் தோன்றி அவன் இதயத்தைக் குழப்பின. தனியே உட்கார்ந்து ஆர அமரச் சிந்தித்து ஒரு முடிவுக்குவரத் தீர்மானித்தான். அக்குன்றின்மீது ஏறினான்.

கோடித் தீவு என்பது, இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் இடையிலுள்ள ஒரு சிறு தீவு. சுமார் 400 சதுர மைல் விஸ்தீரணமுள்ளது. அடர்ந்த வனங்களும் மலைகளும் நிறைந்தது. அதன் ஜனத்தொகை ஏறக்குறைய ஆயிரத்திருநூறு இருக்கலாம். காட்டுமிராண்டிகளைப்போல் தோற்றமும் களங்கமற்ற உள்ளமும் படைத்த அந்த மக்கள், பெரும்பாலும் வேட்டையாடியும் மீன் பிடித்துமே வாழ்க்கை நடத்தி வந்தனர்.

கடலில் அனுதியாகத் தனித்துக்கிடக்கும் அந்தத் தீவை நாகரிக உலகத்தோடு ஓரளவு தொடர்புபடுத்த, அந்தத் தீவின் ஒரு மூலையில், சிறிய ரேடியோ நிலையமொன்றிருந்தது. அந் நிலையத்திற்கு மாற்றுச் சிப்பந்திகளையும் உணவுப் பண்டங்களையும் ஏற்றிக் கொண்டு, இந்திய அரசாங்கத்தினரால் அனுப்பி வைக்கப்படும் ஒரு நீராவிக் கப்பல், அங்கு மூன்று மாதங்களுக்கொருமுறைதான் வந்து போவது வழக்கம்.

குன்றின் உச்சியில் போய், தன் உள்ளங் கையை முகவாய்க் கட்டையில் அழுத்தியவண்ணம் உட்கார்ந்திருந்தான் செல்லையா.

அத் தீவெங்கினும் தெள்ளிய பால் போன்ற நிலவை வீசி நின்றது அரை வட்டச் சந்திரன். குன்றின் அடிவாரத்தில், கடந்த பன்னிரண்டு வருஷ காலமாக அவன் குடியிருந்த குடிசையும், குறுங்காட்டின் ஊடே சென்ற ஓர் ஒற்றையடிப் பாதையும், அதற்கப்பாலுள்ள அந்தக் குக்கிராமமும் அவன் கண்ணெதிரே காட்சியளித்தன. அவனை இந்தியாவிற்குக் கொண்டு செல்வதற்காக வந்திருந்த சிறிய ஹைட்ரோ விமானமொன்று கடற்கரையருகே நிறுத்தப்பட்டிருந்தது. தீவின் வேறொரு மூலையில், நெடுந் தூரத்தில் ஒரு நக்ஷத்திரம்போல் மினுக்கிக்கொண்டிருந்தது ரேடியோ நிலையத்தின் விளக்கு.

முதன் முதலில் செல்லையாவும் அவன் தந்தையும் அத்தீவுக்கு வந்து சேர்ந்தபொழுது, அவன் ஒரு பத்து வயதுச் சிறுவனாயிருந்தான். அதன்பின் இப்போது பன்னிரண்டு வருஷங்களாகிவிட்டன. இந்த இடைக்காலத்தில், பெரும்பாலும் அங்குள்ள பழங்குடி மக்களைத் தவிர வேறு யாருடனும் அவன் பழகியறியான். அந்தச் சிறுவர்களுடன் விளையாடுவது, சண்டை போடுவது, காட்டில் வேட்டையாடுவது, கடலில் நீந்துவது, முத்துக் குளிப்பவர்களுடன் சேர்ந்து ஆழ நீரில் நெடுநேரம் முத்துக் குளித்துப் பழகுவது, இவையே அவனது முக்கியப் பொழுதுபோக்குகளாயிருந்தன. வெயிலிலும் பனியிலும் காற்றிலும் கடலிலும் அடிபட்டு, வைரம்போல் உரமேறியிருந்தது அவன் உடம்பு; எனினும், அவனது பரம்பரைச் சொத்துக்களாகிய மதி நுட்பமும் வசீகரத் தோற்றமும், அவ் வனவாசத்திலும் அவனைவிட்டு அகலாது நின்றன.

செல்லையாவின் தந்தை **செந்தில் நாதர்** ஒரு காலத்தில் சென்னைக் கல்லூரியொன்றின் பிரின்ஸ்பாலாயிருந்தவர். மிக அடக்கமான மனிதர். அவர் அதிகமாகப் பேசியதையோ, சிரித்ததையோ, செல்லையா பார்த்ததில்லை. அவர் கோடித் தீவில் தங்கியிருப்பதே ஒரு மர்மமாக இருந்தது. அவனுக்கு ஆங்கிலம், தமிழ் கணிதம் இம்மூன்றிலும் அவர்தான் ஓரளவு பயிற்சியளித்திருந்தார். இரண்டு வருஷங்களுக்கு முன்பு, அவனுக்கு ஒரு புதிய தோழன் வந்து சேர்ந்தான். அவன் பெயர் **பழனியப்பன்**. அவனும் செல்லையாவைப்போல் தமிழ் நாட்டைச் சேர்ந்தவனே. பர்மாவுக்குப் போகும் வழியில், அவன் ஏறி வந்த கப்பல் கவிழ்ந்துவிடவே, அவன் மட்டும் ஒரு மரக்கட்டையைப் பற்றிக்கொண்டு கோடித் தீவின் கரைப் பக்கமாய் மிதந்து வந்தான்.

அவனுயிரைக் காப்பாற்றினன் செல்லையா. அதுமுதல் இருவரும் இணைபிரியா நண்பர்களானார்கள். இந்தியாவைப் பற்றியும், குறிப்பாகத் தமிழகத்தைப் பற்றியும் பழனியப்பனிடம் செல்லையா குடைந்து குடைந்து விசாரிப்பான். அப்போது அவனுக்குக் கிடைக்கும் சில அரைகுறைத் தகவல்களைத் தவிர, வெளியுலகத்தைப் பற்றி ஏதுமே அறியாதிருந்தான் அவ்வாலிபன்.

குன்றின் உச்சியில் உட்கார்ந்துகொண்டு, பன்னிரண்டாண்டுகளுக்கு முன்னர் தான் விட்டுவந்த பழைய உலகை நினைவிற் கொண்டுவர முயன்றான் செல்லையா. ஜனப் பெருக்கமுள்ள நாகரிகத் தெருக்களும் கடைகளும், அவன் அகக் கண்முன் மங்கலாக வந்து மறைந்தன. ஒரு பெரிய வெள்ளை மாளிகையும், அதில் அவனோடு விளையாடித் திரிந்த சிறுமியொருத்தியின் வடிவமும், கனவில் கண்ட காட்சிகள்போல் தோன்றின. நாளைக் காலையில் அந்த வெள்ளை மாளிகையை நோக்கி அவன் புறப்படப் போகிறான். அங்கு அவனுக்காக எத்தகைய எதிர்காலம் காத்திருக்குமோ ?

எல்லாம் வெகு சுருக்காக நடந்துவிட்டன. திடீரென்று அவன் தந்தை உடல் நலிவுற்றார் ; ஒரு மணி நேரத்திற்குள் இறந்துவிட்டார். சாகப் போகும் தருவாயில் அவர் கூறிய சில துன்பகரமான வார்த்தைகள், இன்னும் அவன் செவியில் எதிரொலித்துக்கொண்டிருந்தன.

"மகனே ! என் முடிவுகாலம் நெருங்கிவிட்டது. இது எனக்குக் கொஞ்ச நாட்களுக்கு முன்பே தெரியும். நீ தாயகம் போக விரும்பினால், ரேடியோ நிலையத்தின் மூலமாக என் பழைய நண்பரும் ஓவியருமான கிருஷ்ணமூர்த்திக்குத் தகவல் அனுப்பு. அது சம்பந்தமான விவரங்களெல்லாம் தெளிவாக எழுதி ஒரு பைக்குள் போட்டு, அதோ அந்த மேஜையில் வைத்திருக்கிறேன். ஆனால் என்னுடைய ஆலோசனையை நீ கேட்பதாயிருந்தால், அந்தக் கவரைக் கிழித்தெறிந்துவிட்டு, இந்தத் தீவிலேயே நீ தங்கிவிடுவதுதான் உத்தமம் !

"உலகத்தைவிட்டு ஒதுங்கிக்கிடப்பதாய், அநாகரிகமாய்த் தோன்றினாலும் இந்தத் தீவில்தான் அமைதி உண்டு ; ஆனந்தம் உண்டு; பயமற்ற இயற்கையான சாவு உண்டு! நாகரிக உலகத்தில் நாசகாரர்களின் தொகைதான் அதிகமிருக்கும் !"

இதற்கு என்ன பதில் சொல்வதென்றே செல்லையாவுக்குப் புரியவில்லை. அவன் தந்தையோ, தன் கண்களை மூடிய வண்ணம்

சிறிது நேரம் மௌனமாய்க் கிடந்தார். பிறகு அவர் மறுபடியும் பேசினார்.

"செல்லையா, நீ போகத்தான் விரும்புவாய் என்பது எனக்குத் தெரியும். அதில் தவறொன்றும் இல்லை. மகாராஜனைகப் போ. ஆனால் யாரையும் அதிகமாக நம்பாதே. முக்கியமாக உன் நண்பர்கள் விஷயத்தில் ஜாக்கிரதையாக இரு. ஏனெனில், உன்னை சுலபமாக மோசம் செய்யும் வாய்ப்பும் வசதியும் அவர்களுக்குத்தான் அதிகம்!"

அவர் அன்று கூறிய அந்த வார்த்தைகளை செல்லையா இன்று ஆழ்ந்து சிந்தித்தான். இந்தியாவுக்குத் திரும்புவோமா வேண்டாமாவென்று ஊசலாடத் தொடங்கியது அவன் உள்ளம்.

பின்புறத்தே யாரோ வந்துகொண்டிருப்பது அவனுக்குத் தெரிந்தது. அவன் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அடுத்த நிமிஷம் செல்லையாவுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான் பழனியப்பன்.

பீப்பாய் போன்ற வயிறும், வழுக்கைத் தலையும், பருத்த உடலும், தாழ்ந்த நெற்றியும், அகலமான சப்பட்டை மூக்கும், பூனைக் கண்களும் வாய்ந்த அந்த விகார புருஷனைக் கண்டதும் செல்லையாவின் முகம் சிறிது விகசமடைந்தது.

"ஏன் செல்லையா, ஏதோ விசாரம் பிடித்தவன்போல் உட்கார்ந்திருக்கிறாய்?" என்றான் பழனியப்பன், தன் இயல்பான கனத்த குரலில்.

"ஆம், பழனி. நாளைக்கு நம் பயணத்தை ரத்து செய்து விடுவதென்றே சற்று முன்பு நான் முடிவு செய்துவிட்டேன். ஆனால் அது சரியல்ல. நான் போகத்தான் வேண்டும். அங்கு போய்ப் பல விஷயங்களை நான் தெரிந்துகொள்ளவேண்டியிருக்கிறது!" என்றான் செல்லையா.

"அங்கு எல்லாமே உனக்குப் புதுமையாயிருக்கும், செல்லையா! சினிமாக்கள், டிராமாக்கள், ஹோட்டல்கள், பெண்கள்—இவற்றையெல்லாம் நீ ரொம்ப ரஸிப்பாய். அத்துடன், நீ ஒரு பெரிய பணக்காரனும் ஆகிவிடப்போகிறாய். உனக்குப் 'பிரியமானதையெல்லாம் நீ தடையின்றி அடையலாம். விமானத்தின் கேப்டன் சொன்னதைக் கேட்டாயல்லவா?"

"ஆம்; அங்கு என் தந்தையாருக்குச் சொந்தமான அளவற்ற ஐசுவரியங்கள் எனக்குக் கிடைக்கப் போவதாய் அவர் கூறினார். ஆனால் அவ்வளவையும் அங்கே விட்டுவிட்டு என் தந்தை ஏன்

இங்கு வந்தார்? இத்தனை வருஷங்களாக இந்த அநாகரிகமான கோடித் தீவில் தங்கியிருந்தார்?" என்று கேட்டான் செல்லையா.

"அதுதான் எனக்கும் புரியவில்லை!" என்றான் பழனியப்பன்.

செல்லையா எழுந்து நின்றான். "நாளை நான் போகத்தான் போகிறேன். எனக்கு இந்தக் கோடித் தீவு சலித்துப்போய் விட்டது. நாளை நான் தமிழ் நாட்டை நோக்கி விமானத்திலே பறந்துவிடுவேன். அங்கே கமல வனத்திலே, அங்குள்ள அந்த வெள்ளை மாளிகையிலே, எனக்காக எத்தகைய அதிருஷ்டங்களும் ஏமாற்றங்களும் காத்திருக்கின்றன என்பதைப் பார்க்கத் தான் போகிறேன். என் நண்பர்கள் யார், விரோதிகள் யார் என்பதுதான் எனக்குத் தெரியவில்லை. அவர்களை நான் எப்படிப் பகுத்தறிந்து கொள்வது?"

"இப்போதே ஏன் அப்பா, விரோதிகளைப் பற்றிக் கற்பனை பண்ணிக்கொள்கிறாய்?" என்று சிரித்தான் பழனியப்பன். "உனக்கோ வயது இருபத்திரண்டுதான் ஆகிறது. நல்ல முறுக்கான வாலிபம். ஏராளமான பணமும் கிடைக்கப் போகிறது. இனி எந்தெந்த வகைகளில் வாழ்வின் இன்பங்களை அனுபவிக்கலாம் என்று சிந்திப்பதைவிட்டு..." என்று குரலை இழுத்தான் பழனியப்பன்.

"என் தகப்பனாரின் கடைசி வார்த்தைகளைத் தவிர, வேறு எதையும் என்னால் சிந்திக்க முடியவில்லை", என்றான் செல்லையா. "யாரையும் அதிகமாக நம்பாதே என்றார் அவர். தன் பகைவன் என்று அறியாமல், யாரையோ நண்பன் என்று நம்பி அவர் மோசம் போயிருக்கிறார்!"

"அதனாலென்ன?" என்று வெடுக்கெனக் கேட்டான் பழனியப்பன். "அதெல்லாம் பன்னிரண்டு வருஷங்களுக்கு முந்தி நடந்த பழைய கதை, அப்பா! அப்போது உன் தகப்பனாருக்குச் சில விரோதிகள் இருந்ததாகவே வைத்துக்கொள்வோம். அவர்களெல்லாம் இன்னுமா உயிருடனிருந்து உன் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கப் போகிறார்கள்?"

"அப்படி அவர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்க வேண்டும் என்றே நான் விரும்புகிறேன்! அவர்களை நேருக்கு நேர் சந்திக்கவே நான் ஆசைப்படுகிறேன்! என் தந்தை கோடித் தீவிலே வந்து பயந்து ஒதுங்கும்படியாக அவருக்கு ஜன்ம சத்ருக்களாக விளங்கியவர்களை நான் பழி தீர்த்துக்கொள்ள விரும்புகிறேன்.

மகனிடமும் சொல்லத் தயங்கிய என் தந்தையைச் சுற்றியுள்ள மர்மங்களை அவருடைய மரணத்திற்குப் பிறகாவது நான் கண்டு பிடித்துவிட விரும்புகிறேன் !" என்றான் வீர உணர்ச்சி பொங்கிய செல்லையா.

---

## அத்தியாயம் : 2

# மாருத வடு

---

சுற்றிலும் நாகரிகத்தின் இரைச்சல் !

ஜனக்கும்பல் அதிகமான இந்தியா தேசத்திலே, தமிழகத் திலே.... ஒரு பங்களாவிலே....

"ஏண்டி பவானி, அவன் எப்படியடி இருப்பான் ? கோடித் தீவிலிருந்து வரப்போகிறானே, அசல் காட்டுமிராண்டியாக இருப் பானோ ? நம்மைப்போல சாதம், கறி, குழம்பெல்லாம் சாப்பிடு வானா, அல்லது காட்டு மிருகங்கள் மாதிரி, ஆடு கோழிகள்மேலே பாய்ந்து, கடித்து, பச்சையாய்ச் சாப்பிடுவானா ?" என்று சிரித் தாள் நாகரிக யுவதியான **லலிதா.**

"எனக்கு இன்னொரு சந்தேகமடீ," என்று ஆரம்பித்தாள் **பவானி** "அந்தத் தீவிலே ஸலூனும் இருக்காது; ஸேப்டி ரேஸரும் கிடைக்காது. ஒரே கரடிக் குட்டி மாதிரி அவன் இங்கே வந்து காட்சியளிக்கப் போகிறான் ! நீயும் நானும் பயந்து அலறப் போகிறோம் !"

"போடி ! நாமதான் நம்ப அப்பாவைத் தினசரி பார்த்துப் பழகிப்போயிருக்கிறோமே ? இனி நிஜக் கரடியே வந்தாலும் நாம் பயப்படவா போகிறோம் ?" என்று சிரித்தாள் குறும்புக்காரியான லலிதா தன்னுடைய இரட்டைச் சடையை அழகாகப் பின்னிக் கொண்டே.

இதையெல்லாம் கேட்டு மனத்திற்குள் சிரித்தவாறே அடுத்த அறையில் உடையணிந்து கொண்டிருந்தார் அப்பெண்களின் தந்தையாகிய **ஓவியர் கிருஷ்ணமூர்த்தி.**

லலிதாவும் பவானியும் இரட்டைக் குழந்தைகள். குழந்தைப் பருவத்திலேயே தாயை இழந்தவர்கள். அவர்களை மிகவும் ஷ்கடப் பட்டு அருமையாக வளர்த்தார் ஓவியர் கிருஷ்ணமூர்த்தி. இப்போது இருவரும் தக்க பருவம் வாய்ந்த எழில் மங்கையராக

விளங்கினர். தங்கள் தந்தையிடமே தமாஷ் பண்ணி அவரைத் திணற அடிப்பார்கள் அந்தக் குறும்புக்காரிகள். மகாவாயாடிகள்; ஆனால் நல்ல குணவதிகள் ; பருவ அழகிகள்.

"ஏண்டி லலிதா! அவன் நம்மை நினைவு வைத்திருப்பானா? சிறு வயதில் பார்த்தது!" என்றாள் பவானி ஒரு பெருமூச்சோடு.

"என்னை நினைப்பு வைத்திருக்காவிட்டாலும் நிச்சயம் உன்னை நினைப்பு வைத்திருப்பானடி, பவானி! ஏனெனில் சதா நீதான் அவனைப்பற்றி நினைக்கிறாய்! கேள்வி கேட்கிறாய்! அதனால் அவனுக்கு அடிக்கடி புரைபோயிருக்கும்!" என்றாள் லலிதா. பவானி நாணத்துடன் தலைகுனிந்து கொண்டாள்.

இருவரும் ஒரு சி ய பங்களாவின் தாழ்வாரத்தில் அமர்ந்து காலையுணவு அருந்திக்கொண்டிருந்தார்கள். வங்காளக் குடாக் கடலின் கருநீலப் பரப்பு, அவர்கள் கண்ணெதிரே கதிரவன் ஒளிக் கற்றைகளோடு கலந்து காட்சியளித்தது. பக்கத்து அறை யின் கதவைத் திறந்துகொண்டு வெளிவந்தார் ஓவியர் கிருஷ்ண மூர்த்தி, கலைஞருக்கு உரிய வெண்ணிறத் தாடியைக் கை விரல் களால் கோதிக்கொண்டே.

"அடியே, அப்பாவைப் பார்த்தாயா? தாடி, மீசையெல் லாம் ஜோரா வாரி விட்டிருக்கிறாரடீ!'" என்று கைகொட்டினாள் லலிதா.

"என் அப்பா, அந்தத் தாடிக்குள்ளே யிருந்து ஏதாவது புதைபொருள் கிடைத்ததா? ஐந்தாறு நாளாய் என் பென்சில் கிளிப்பைக் காணோம்...." என்று கண்ணைச் சிமிட்டினாள் பவானி.

"சுத்தப் போக்கிரிக் குரங்குகள்! பெற்ற தகப்பனுச்சே, அவனைப் போய் நையாண்டி பண்ணலாமா என்ற ஞானம் கொஞ்சமாவது இருக்கிறதா?" என்று சிரித்துக்கொண்டே, அவர்கள் பக்கத்தில் வந்து ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார் ஓவியர் கிருஷ்ணமூர்த்தி.

கிருஷணமூர்த்திக்கு வயது ஐம்பதிருக்கும். பருத்த, ஆனால் உறுதி வாய்ந்த, சரீரம். எப்போதும் புன்னகை பொலிவுறும் களையான முகம். களங்கமற்ற நெஞ்சத்தைக் காட்டும் ஒளி படைத்த கண்கள். செல்லையாவின் தந்தையாகிய செந்தில் நாத ருக்கு அவர் அந்தரங்க நண்பராயிருந்தவர். செந்தில்நாதர் கோடித் தீவிற்குப் போய்விட்டபிறகு, கமலவனத்திலுள்ள அவரது ஆஸ்திகளனைத்தையும் ஓவியர் கிருஷ்ணமூர்த்திதான் பராமரித்து வந்தார். அது விஷயத்தில் அவருக்கு உறுதுணையாக

இருந்தவர், செந்தில்நாதரின் குடும்ப வக்கீலாகிய **லாயர் வேதாசலம்.**

"பவானி! கோடித் தீவிலிருந்து செல்லையா விமானத்தில் வந்து மீனம்பாக்கத்தில் இறங்கிவிடுவான். நான் இன்னும் இருபது நிமிஷத்தில் புறப்பட வேண்டும். எனக்குச் சீக்கிரம் காபி கொண்டுவா," என்று கூறியவாறே, மேஜைமேல் அடுக்கி வைக்கப்பட்டிருந்த அன்றைய காலைத் தபால்களை யெடுத்துப் பிரித்துப் படிக்கத் தொடங்கினார் ஓவியர் கிருஷ்ணமூர்த்தி. முதற் கடிதம் ஆயிற்று. இரண்டாவது கடிதமும் முடிந்தது மூன்றாவது கடிதத்தைக் கண்ணுற்றதும், அவர் முகமே மாறியது. அவரது செழித் தடர்ந்த புருவங்கள் சினத்தால் நெரிந்தன. அவர் எதிரே காபியைக் கொண்டுவந்து வைத்தாள் பவானி. அவர் முகத்தைப் பார்த்ததும், அவளது இதழ்களில் குலவி நின்ற குறுநகை மறைந்தது.

"என்ன அப்பா அது? அந்த சமாச்சாரம் தானா?"

"ஆம்!" என்று வெறுப்போடு அக் கடிதத்தைத் தன் பெண்கள் பக்கமாக வீசினார் ஓவியர் கிருஷ்ணமூர்த்தி. சுத்தமாகத் தமிழ் டைப்ரைட்டர் மிஷினில் டைப் செய்யப்பட்டிருந்த அக் கடிதத்தின் வாசகம் பின் வருமாறு காணப்பட்டது :

"பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்பு, செந்தில்நாதன் என்பவன், தன் பெரிய தந்தையின் மகன் முத்தையா முதலியாரை, அவருடைய பணத்தை அபகரிக்கும் நோக்கத்துடன் படுகொலை செய்தான். போலீஸாரின் திறமைக் குறைவால், அந்தக் கேஸில் அவன் தண்டனையடையாமல் விடுதலையடைந்தான். ஆனால், அந்தக் கொலையினால் அடைந்த ஆஸ்தி அவனுக்கு சுகத்தை அளிக்கவில்லை. தன் அவமானத்தை மறைத்துக்கொள்வதற்காக, தொலைதூரத்திலுள்ள ஒரு தீவை நோக்கி அவன் ஓடிப்போனான்.

"இப்போது அவன் இறந்துபோய் விட்டான். ஆனால் அவனுடைய மகன் ஒருவன் இருக்கிறானாம். தன் தந்தையின் பேரிலுள்ள மங்காத மாசை மறந்துவிட்டு, இந்தக் கமலவனத்திற்குத் திரும்பி வரத் துணிந்திருக்கிறானாம் அந்த மானங்கெட்ட மகன். வந்தால் அவனுக்குப் பணம் கிடைக்கலாம்; அதையொட்டி சில நண்பர்களும் கிடைக்கலாம். ஆனால், அவன் ஒரு கொலைகாரன் மகன் என்பதையோ, அவன் கைப்பட்ட ஒவ்வொரு தம்பிடியும் கறைபடிந்த காசு என்பதையோ, இங்குள்ள மக்களில் பெரும்பாலோர் மறக்கவே மாட்டார்கள்!"

கடிதத்தின் அடியில் கையெழுத்து எதுவும் காணப்படவில்லை. அது ஒரே மாதிரி டைப் அடித்துப் பொதுஜனம் எல்லோருக்கும் இலவசமாக அளிக்கப்படும் சுற்றறிக்கை மாதிரி இருந்தது.

"என்ன அருவருப்பான மொட்டைக் கடிதம்!" என்று பெருமூச்செறிந்தாள் பவானி. "இதை யார் எழுதியிருக்கக் கூடும்? ஒருவேளை இதுகிழட்டு வெறியன் கனகப்பன் வேலையாக இருக்குமோ?"

"சேச்சே! அவனில்லை. வெள்ளை மாளிகையிலிருந்து அவனை நான் விரட்டித் துரத்திவிட்டதிலிருந்து அவனுக்கு க்ஷாத்திரம் அதிகமாகிவிட்டது என்பது வாஸ்தவந்தான். ஆனால் அவன் சுத்தப் பித்துக்கொள்ளிப் பயல்! இது யாரோ நன்கு படித்தவன் வேலை இக் கடிதத்தைக் கவனித்தாயா? ஒழுங்காக டைப் செய்யப்பட்டு, நகலெடுக்கும் யந்திரத்திலிருந்து வந்திருக்கிறது. இதைப்போல் நூற்றுக்கணக்கான நகல்கள் வெளியே அனுப்பப் பட்டிருக்கலாம்!" என்றார் ஓவியர் கிருஷ்ணமூர்த்தி.

"பாவம், இதைச் செல்லையா பார்க்க நேர்ந்தால் ரொம்ப வருத்தப்படுவான்!" என்று உருக்கத்துடன் கூறினாள் பவானி. "அவன் கோடித் தீவிலிருந்து வந்து இங்கே நம் வீட்டில் தங்கி யிருக்கும் இரண்டொரு நாட்களிலாவது, இம்மாதிரிக் கடிதங்கள் அவன் கைக்குக் கிட்டாமல் நாம் கவனித்துக்கொள்ளவேண்டும்!"

"அது சாத்தியமில்லை!" என்றார் கிருஷ்ணமூர்த்தி. "ஏனென்றால் அவன் இங்கே நம் வீட்டில் தங்கப் போவதில்லை!"

"தங்குவானென்று சொன்னீர்களே நேற்று?" என்று வெடுக்கெனப் பவானி கேட்டாள்.

"நேற்று சொன்னேன்; அதற்கப்புறம் நிகழ்ச்சி நிரல் மாறி விட்டது. நானும் வக்கீல் வேதாசலமும் இப்போது பட்டிணத்துக்குப்போய் அவனை இங்கு அழைத்துவரப் போகிறோம். மத்தியானம் நம் வீட்டில்தான் அவனுக்குச் சாப்பாடு. சாப்பிட்டானதும் அவன் தனக்குச் சேரவேண்டிய பங்களாவான வெள்ளை மாளிகைக்கே போய்விடுவான்...." என்று சொல்லிக் கொண்டே வந்த ஓவியர் கிருஷ்ணமூர்த்தி, "ஓ! ஒரு முக்கிய மான விஷயத்தை உங்களிடம் தெரிவிக்க மறந்துவிட்டேனே!" என்றார் திடீரென்று.

"என்ன?"

"இப்போது நான் வெளியே போகப்போகிறேன்!-விமானத் திடலிலிருந்து செல்லையாவைக் கூட்டிவரத்தான். அந்தச் சமயத்தில், என்னைத் தேடி வேறொரு விருந்தாளி வருவார். அவரைச் செவ்வையாய் உபசரியுங்கள்!" என்றார்.

"யாரப்பா அவர்?" என்று ஆவலோடு கேட்டாள் பவானி.

"வேறு யாராக இருக்கப் போகிறார்? சித்திரக்கலையைப் பற்றிய ஒரு பத்திரிகை விமர்சகராயிருப்பார். அப்பாவுக்குத்தான் இத்தனை வயசாகியும் பெர்னார்ட்ஷா மாதிரி விளம்பரப் பைத்தியம் விட்டபாடில்லையே!" என்று குறும்பாய்ப் பதிலளித்தாள் லலிதா.

"அப்பப்பப்பா! என்ன உளறல்! என்ன உளறல்!!" என்று தன் கன்னப் பொட்டுக்களில் கையை வைத்து அழுத்திக் கொண்டார் கிருஷ்ணமூர்த்தி. "அட நான் பெற்ற அருமை அசடுகளே! வரப்போகிறவர் சித்திரக்கலை விமர்சகரல்ல...!"

"பிறகு?"

"இந்தியாவிலேயே மிகப் பிரசித்தி வாய்ந்த ஒரு துப்பறியும் நிபுணர்."

"ஆ?" என்று வியப்படைந்தார்கள் சகோதரிகள் இருவரும். "அவர் எதற்காக அப்பா, இங்கு வருகிறார்? இந்த விஷமக் கடிதங்களை எழுதுவது யார் என்பதைக் கண்டுபிடிக்கவா?" என்று கேட்டாள் பவானி.

"அதுமட்டுமல்ல; பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்பு முத்தையா முதலியாரைக் கொலை செய்தவன் யாரென்பதையும் அவர் கண்டுபிடிக்கப் போகிறார்!"

"அது எப்படியப்பா முடியும்...?" என்று ஆரம்பித்தாள் லலிதா.

"துப்பறியும் கேசவனால் முடியாதது எதுவுமே இல்லை!" என்று முடித்தார் கிருஷ்ணமூர்த்தி.

"துப்பறியும் கேசவனா?" என்று வாயைப் பிளந்தாள் லலிதா.

"ஆமாம்! அவர் முதன் முதலாகச் சந்திக்கவரும் சமயத்தில் நான் வீட்டில் இல்லாமலிருப்பது வருந்தக்கூடிய விஷயந்தான்! அது அவர் மனதில் படாதபடி நீங்கள்தான் அவரை நன்றாக உபசரிக்க வேண்டும்! அத்துடன் உங்களுக்குத் தெரிந்த விஷயங்களை யெல்லாம் அவரிடம் ஒளிக்காமல் சொல்லுங்கள்!" என்று ஓவியர் கிருஷ்ணமூர்த்தி விமானத் திடலுக்குப் புறப்பட்டார்.

"அடியே! துப்பறியும் கேசவன் எப்படியடி இருப்பார்?" என்று ஆவலோடு லலிதா கேட்டாள்.

"அடியே! கோடித் தீவிலிருந்து வரப்போகும் செல்லையா எப்படிக் காட்டுமிராண்டியாக இருப்பான் என நான் பார்க்

கிறேன்! நீ கேசவன் எவ்வளவு பெரிய கொம்பேறி மூக்கனு யிருப்பார் எனப் பாரடி!" என்று சிரித்தாள் பவானி.



அத்தியாயம் : 3

## பணமும் பழியும்

கம்பீரமான ரோல்ஸ் ராய்ஸ் மோட்டார் வண்டியைக் கிருஷ்ணமூர்த்தியின் பங்களா வாசலில் நிறுத்திவிட்டுப் புன் சிரிப்புடன் கீழே இறங்கினர் துப்பறியும் கேசவன். அவரைக் கண்டதும், தாழ்வாரத்தில் துப்பறியும் நாவல் ஒன்றைப் படித்துக் கொண்டு உட்கார்ந்திருந்த லலிதா, சட்டென்றெழுந்து வாசற் படிக்கு வந்து அவரைப் புன்முறுவலுடன் வரவேற்ருள். அவள் பருவ உடலில் பொங்கி வழியும் மினுமினுப்பு முழுதும் அவளு டைய மைதீட்டிய விழிகளில் ஆவல் குறுகுறுப்பாகப் பிரகா சித்தது.

"நீங்கள்தான் மிஸ்டர் துப்பறியும் கேசவனா?" என்று அவரை ஏறஇறங்கப் பார்த்தபடியே கேட்டாள் லலிதா.

"ஆம்," என்று சற்று புன்னகைபோடு அவர் தலையை ஆட்டினார்.

"உங்களைப் பார்த்தால் ஒரு துப்பறியும் நிபுணர் மாதிரித் தோன்றவில்லையே?" என்று சிரித்தாள் லலிதா. கேசவனின் ரோல்ஸ்ராய்ஸ் காரை வியப்போடு நோக்கின அவளுடைய கருவிழிகள். "இது உங்களுடைய சொந்தக் கார்தானா? அல்லது.... இரவலா?" என்று அவள் குறும்பாகக் கண்ணைச் சிமிட்டினாள்.

"இரவலில்லை! இதை நான் திருடிக்கொண்டு வந்திருக்கிறேன்! தயவு செய்து யாரிடமும் சொல்லிவிடாதே!" என்று சிரித்தார் துப்பறியும் கேசவன்.

இதற்குள், எங்கேயோ வெளியே சென்றிருந்த பவானியும் வந்து சேர்ந்தாள்.

"வாருங்கள் உள்ளே. இவள் என் சகோதரி. பெயர் பவானி. இவளோடு நீங்கள் பேசிக்கொண்டிருங்கள். உங்களுக்கு நேரம் போவதே தெரியாது! உயிர் போவதுகூடத் தெரியாது! நான் இரண்டே நிமிஷத்தில் காபி போட்டுக்கொண்டு வருகிறேன்!" என்று கூறிக்கொண்டே சமையற்கட்டை நோக்கி மான்குட்டி போல் துள்ளி ஓட முயன்றாள் லலிதா.

"அவளுடைய அகராதியில் இரண்டு நிமிஷம் என்பது இரண்டு மணி நேரம் என்று அர்த்தம்! அவள் தயாரித்துக் கொண்டு வரும் காப்பியைச் சாப்பிட்டால் உங்களுக்கு உயிரே போய்விடும்!" என்று சிரித்தாள் பவானி.

"துப்பறியும் கேசவனின் உயிர் போய்விட்டால் அப்புறம் அந்தக் கொலையைக் கண்டுபிடிக்க இன்னொரு துப்பறியும் கேசவன் பிறக்கமாட்டான்! மேலும் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் நடந்த கொலையைத் துப்பறிந்து கண்டுபிடிக்க உங்கள் அப்பாவிற்கு வேறு ஆசாமியும் அகப்படமாட்டான்....! சரி; லலிதா! நீ காபி போட்டுக் கொண்டு வா! அதில் விஷம் கலந்திருந்தாலும் பரவாயில்லை!" என்று சிரித்தார் துப்பறியும் கேசவன்.

"இந்த லலிதா, உங்கள் உயிரைக் கவர காபியில் விஷம் வைக்க மாட்டாள்! கண்ணில்தான் விஷம் வைப்பாள்! உங்களைப் பார்க்க வேண்டும் என்று இவளுக்கு நிறைய ஆசை!" என்றாள் பவானி.

"இவளுக்குக் கோடித்தீவு காட்டுமிராண்டியைப் பார்க்க வேண்டும் என்று ஆசை!" என்று லலிதா ஓடிவிட்டாள்.

தாழ்வாரத்தில், கேசவனும் பவானியும் எதிரெதிரே இரண்டு நாற்காலிகளில் உட்கார்ந்தனர்.

"அப்பா உங்களிடம் எல்லா விஷயங்களையும் சொல்லச் சொன்னார். நாங்கள் கேள்விப்பட்டதையெல்லாம் உங்களுக்குச் சொல்லிவிடுகிறோம். அல்லது, உங்களுக்கு ஏற்கெனவே எல்லாம் தெரிந்திருக்குமானால்...." என்று நிறுத்தினாள் பவானி.

"எனக்கு அதிகமாக ஒன்றும் தெரியாது!" என்றார் துப்பறியும் கேசவன். "உன் தந்தை எனக்குக் கடிதம் எழுதினார். பிறகு டெலிபோனிலும் பேசினார். யாரோ சில விஷமமான கடிதங்களை எழுதியிருக்கிறார்களாம். அதையும், சுமார் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்பு நடந்த ஒரு கொலையையும் துப்புத் துலக்குமாறு உங்கள் அப்பா என்னைக் கேட்டிருந்தார். இவ்விரண்டு விஷயங்களும் ஏதோ ஒரு தீவிலிருந்து இன்று இங்கே திரும்பிவரப் போகும் ஒரு வாலிபனுக்குச் சம்பந்தப்பட்டவையெனவும் அவர் கூறினார்!" என்றார் துப்பறியும் கேசவன்.

"ஆம்; அவன் பெயர் செல்லையா. அவனை அழைத்து வருவதற்காகத்தான், எங்கள் அப்பாவும் வக்கீல் வேதாசலமும் பட்டிணத்துக்குப் போயிருக்கிறார்கள். சற்று நேரத்தில் எல்லோரும் இங்கு சாப்பாட்டுக்கு வந்துவிடுவார்கள்!" என்ற பவானி, "அதிருக்கட்டும். பன்னிரண்டு வருஷங்களுக்கு முந்தி நடந்த முத்தையா முதலியாரின் கொலையை நீங்கள் கண்டுபிடித்து விட முடியுமா?" என்று சவால் கேட்டாள்.

"இனிமேல் நடக்கப்போகிற கொலையைக் கண்டுபிடிப்பதை விடப் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் நடந்த கொலையைக் கண்டுபிடிப்பது சுலபந்தான்!" என்று கூறினார் துப்பறியும் கேசவன். "இருந்தாலும் கொஞ்சம் கஷ்டந்தான். நாம் சிறிது முயற்சி செய்வதில் தவறில்லையல்லவா? உன் அப்பாவின் கடிதம் கிடைத்தவுடன், நான் கோர்ட்டுக்குப் போய் பழைய கேஸ் கட்டுகளைப் புரட்டிப் பார்த்தேன். உண்மையாகவே, அந்தக் கேஸில் கொலையுண்ட முத்தையா முதலியாரின் சிற்றப்பா புதல்வரான செந்தில்நாத முதலியார், அதாவது செல்லையாவின் தந்தை விடுதலையடைந்தது மிகமிக அதிருஷ்டவசந்தான். ஒன்று ஜூரர்கள் மகாபுத்திசாலிகளாக இருந்திருக்கவேண்டும்; அல்லது, அவர்களைச் சுத்த முட்டாள்கள் என்றே தீர்மானிக்கவேண்டும்!"

"அப்படி யென்றால் என்ன அர்த்தம்?"

"அதை விளக்கிச் சொல்வது சற்று சிரமமான காரியம். அதாவது, சாட்சிகளின் வாக்கு மூலங்களை நாம் படிக்கும்போது, அவர்கள் கூறிய வார்த்தைகளைத்தான் நாம் பார்க்கமுடியுமே தவிர, அந்த வார்த்தைகளின் தொனியையோ, பாவத்தையோ, நாம் யூகிக்க முடிவதில்லை. சில சமயங்களில், குற்றவாளியின் மீது ஒருவித அனுதாபமும், பிராஸிகூஷன் தரப்பு சாக்ஷிகள்மீது வெறுப்பும் ஜூரர்கள் மனத்தில் ஏற்பட்டுவிடுவதுண்டு. அப்போது அவர்கள் கூறும் தீர்ப்பானது, சாக்ஷியங்கள் அனைத்திற்கும் முரண்பட்டாற்போல் காணப்படும். இந்தக் கேஸில்கூட, விசாரணை யெல்லாம் முடிந்து நீதிபதி ஜூரர்களுக்கு விளக்கிக் கூறும் தருவாயில், சாட்சியங்களை உத்தேசித்து அவர் குற்றவாளிக்குப் பாதகமாகவே பேசவேண்டிய நிமித்தம் ஏற்பட்டிருப்பினும், குற்றவாளிக்குச் சாதகமாகவே ஜூரர்கள் பேசியிருக்கிறார்கள். ஆனால், நீ அப்போது இதையெல்லாம் புரிந்துகொள்ள முடியாத குழந்தையாய் இருந்திருப்பாய்!"

"ஆம்," என்று ஒப்புக்கொண்டாள் பவானி. "ஆனால் இந்தக் கமலவனத்திலுள்ள பொதுமக்களில் பெரும்பாலோர், செந்தில்நாதரே உண்மைக் குற்றவாளி யென்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் அப்பா ஒருவர்தான் அப்படி நினைப்பதில்லை!" என்றாள் மேலும் அவள்.

"அப்படித்தான் உன் அப்பாவும் சொன்னார். மேலும் முத்தையா முதலியாரின் மரணத்தால் அவருடைய சிற்றப்பா மகனான செந்தில்நாத முதலியார் ஒரு பெரிய ஜமீனுக்கு அதிபதியாக நேர்ந்ததாகவும் அவர் தெரிவித்தார். அந்த ஜமீனைப் பற்றிய விவரங்கள் உனக்குத் தெரியுமா?"

"உண்மையில் அது ஒரு ஜமீனேயல்ல!" எனத் தொடங்கினாள் பவானி. "ஏனெனில், ஜமீந்தார்களுக்கெல்லாம், நிலத்தின் மேல்வாரத்தில் மட்டும்தான் உரிமையிருந்தது. பிற்காலத்தில் அதையும் அரசாங்கம் பறித்துக்கொண்டுவிட்டது. ஆனால், இந்தச் சொத்துக்கள் இருவாரப் பாத்தியதையோடு கூடியவை. சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன்பு, ரங்கநாயகியம்மாள் என்ற ஒரு கிழவிக்கு அவை சொந்தமாயிருந்தன. அவளுக்குக் குழந்தையில்லை; ஆனால் இரண்டு சகோதரர்களும் ஒரு சகோதரியும் இருந்தனர். அம்மூவரும் ரங்கநாயகியம்மாளுக்கு முன்பே காலமாகிவிட்டனர். எனினும், அவர்களுக்குக் குழந்தைகள் இருந்தன. காலஞ்சென்ற முத்தையா முதலியார், செந்தில்நாத முதலியார்

இருவரும், ரங்கநாயகியம்மாளது சகோதரர்களின் பிள்ளைகள். கிழவியின் சகோதரிக்கு, பத்மாவதி யென்று ஒரு பெண்ணுண்டு. இம் மூவருக்கும் பகிர்ந்து கொடுப்பதானல் சொத்து சிதைந்து விடுமே யென்று, ரங்கநாயகியம்மாள் பயந்தாள். அதற்காக ஒரு யுக்தி செய்து, தான் இறக்கும் தருவாயில், அவள் ஓர் உயில் எழுதி வைத்தாள். அந்த உயிலின்படி, அவள் இறந்து ஐம்ப தாண்டுகள் முடிவடையும் வரையில், அந்தச் சொத்துக்கள் மீது யாருக்கும் பரிபூரண பாத்யதை கிடைபாது. ஆனல், அதன் வரு மானத்தை மட்டும் முத்தையா முதலியார் அனுபவித்துக்கொள்ள லாம். முத்தையா முதலியாரும் வார்சின்றி இறந்துவிட்டால், அது செந்தில்நாதரை வந்தடையும். செந்தில்நாதரும் மனைவி மக்களின்றி இறக்க நேர்ந்தால், பத்மாவதியும் அவள் வார்சு களும் சொத்துக்களின் பாத்யதையைப் பெறுவார்கள். ஆனல், முத்தையா முதலியார், செந்தில்நாதர், பத்மாவதி இம்மூவருமே, தமக்கு இஷ்டப்பட்ட நபர்களுக்கு சொத்தின் உரிமையை உயில் எழுதிக் கொடுத்துவிடலாம். அப்படி உயில் மூலம் அல்லது வேறு விதமாக அதை அடைபவர்கள், குடும்பத்துக்கு அன்னியமானவர் களாகவோ, ஏதேனும் கிரிமினல் வழக்கில் தண்டனையடைந்தவர் களாகவோ, அல்லது தண்டனையடைந்தவர்களின் வார்சுகளா கவோ இருக்கக்கூடாது என்பது ஒரு முக்கியமான நிபந்தனை!"

"இந்தமாதிரி உயில்களைச் சில பெரிய குடும்பங்களில் நான் பார்த்திருக்கிறேன்!" என்றார் கேசவன். "பாகப் பிரிவினையால் சொத்துக்கள் சிதறிச் சிறுத்துவிடாமலும், குடும்பத்தைவிட்டு அவை பராதீனமாகிவிடாமலும், தீயவர்கள் கையில் அவை சிக்கி விடாமலு மிருப்பதற்காகவே இப்படிப்பட்ட உயில்கள் எழுதப் படுகின்றன. அதிருக்கட்டும்; அந்த உயிலில் குறிப்பிட்ட ஐம்பது வருஷத் தவணை எப்போது முடிவடைகிறது?"

"இன்னும் நான்கு மாதங்களில்!" என்றாள் பவானி. "அதற் கப்புறம், சுமார் ஒரு கோடி ரூபாய் விலை மதிப்புள்ள அந்தச் சொத்துக்கள் எல்லாம், செல்லையாவின் பரிபூரண சுவாதீனத் திற்கு வந்துவிடும்"

"அதாவது அதற்குள் அவன் சிறைக்குள் அனுப்பப்படாம லிருந்தால்," என்று குறுக்கிட்டார் துப்பறியும் கேசவன்.

"அதென்ன அப்படிச் சொல்கிறீர்கள்?" என்று திடுக்கிட்டுக் கேட்டாள் பவானி.

"வேறொன்றுமில்லை. அந்த உயிலின் ஷரத்து அப்படி யல்லவா? அதற்காகச் சொன்னேன். அப்படியானல் முத்தையா முதலியாருக்கு சந்ததி இல்லையல்லவா?"

" இல்லை! மனைவியும் இல்லை! கட்டினவனுக்கு ஒரு பெண் ஜாதி, கட்டாவிட்டால் பல பெண்ஜாதிகள் என்று நினைக்கக்கூடியவர் முத்தையா முதலியார்! ஆனால் செந்தில்நாதர் உத்தமர். அவருக்குச் செல்லையா பிறந்து குழந்தையாக இருக்கும்போதே மனைவி இறந்துவிட்டாள்! இன்னொரு வாரிசான பத்மாவதிக்கு **மஞ்சுளா** என்று ஒரு புத்திரி உண்டு. இருவரும் உயிரோடிருக்கிறார்கள்."

" அது போகட்டும். செந்தில்நாத முதலியார், முத்தையா முதலியார் இவ்விருவரது குணாதிசயங்களைப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா?" என்று கேட்டார் துப்பறியும் கேசவன்.

" ஏதோ கேள்விப்பட்டவரையில் சொல்லுகிறேன்" என்று ஆரம்பித்தாள் பவானி.

" செந்தில்நாதர் ஒரு பெரிய படிப்பாளியாம். பரம சாது. மகா சங்கோஜ குணமுடையவர்.. ஆனால் மிக வைராக்கியசாலி. அவரைப்போல் ஒரு தங்கமான மனிதரை எங்குமே காணமுடியாது என்று அப்பா அடிக்கடி சொல்லுவார். முத்தையா முதலியாரோ அதற்கு நேர் எதிரிடையான குணம் படைத்தவராம். மகாக் கர்வி. தமக்கு ஒரு பொருளின்மீது விருப்பம் விழுந்துவிட்டால், நீதி அநீதிகளை யெல்லாம் பொருட்படுத்தாது அதை எப்படியும் அடைந்தே தீருவாராம். அவர் மகா முரடர்; முன் கோபி. சட்டென்று எதையும் செய்துவிடுவார். வேலைக்காரர்களை, அற்பக் குற்றங்களுக்கெல்லாம் கூட அடிப்பாராம், திட்டுவாராம். ஆனால் அதே சமயத்தில், நல்ல தயாள சிந்தையும், விருந்தினர்களைப் பரிவோடு உபசரிக்கும் தாராள குணமும் அவரிடம் இயற்கையிலேயே அமைந்திருந்தனவாம். அதனால்தான் அவரிடம் எவ்வளவோ தடவைகள் அடிபட்டு வந்தும் சமையற்காரக் கனகப்பன் அவரிடம் விசுவாசமாகவே இருந்து வந்திருக்கிறான்!"

" அப்படியானால், அவருக்கும் செந்தில்நாதருக்கும் எப்போதுமே அவ்வளவு பிடிக்காது போலிருக்கிறது?" என்றார் கேசவன்.

" அப்படியில்லை. இருவரும் நெடுநாள்வரை நல்ல நண்பர்களாகவே இருந்தார்கள். கிழவியின் சொத்தை, உயில்படியே அனுபவிக்க வேண்டிய முத்தையா முதலியார் வெள்ளை மாளிகையில் இருக்கும்போது, கல்லூரியில் ஆசிரியர் வேலை பார்த்து வந்த செந்தில்நாத முதலியார், தம் ஒன்றுவிட்ட தமையனைப் பார்க்க வெள்ளை மாளிகைக்கு வருவதுண்டு. கடைசி காலத்தில்

அத்தைமகள் பத்மாவதியின் விஷயமாகத்தான் அவர்களுக்குள் சிறிது மனக்கசப்பு ஏற்பட்டதாக வதந்தி. அப்போதுகூட, செந்தில்நாதர் அதை வெளிக்காட்டிக் கொண்டதில்லையாம்! அவ்வளவு அடக்கமானவர்! முத்தையா முதலியாரோடு சண்டை பிடிப்பதற்காகக் கொலைநடந்த இரவு அவர் வெள்ளை மாளிகைக்கு வந்திருக்க மாட்டார்!"

"அப்படிச் சொல்லிவிட முடியாது! இதற்கு முன்னல் செந்தில்நாதர் வரும்போதெல்லாம் வெள்ளை மாளிகைக்குத் தம் சிறு மகனையும் கூட்டி வந்திருக்கிறார் தன் தமையனாரைப் பார்ப்பதற்காக! ஆனல் கொலை நடந்த இரவு அவர் தனியாகத் தான் வந்திருக்கிறார்."

"அந்த விஷயத்திற்கு அப்புறம் வருவோம். முதலில் கொலை நடந்த சந்தர்ப்பச் சூழ்நிலைகளை எனக்குக் கொஞ்சம் விவரமாகச் சொல்."

பவானி கூறத் தொடங்கினாள்.

"கொலை நடந்த இரவு, முத்தையா முதலியாரின் வெள்ளை மாளிகைக்கு யார் யாரோ விருந்தினர்கள் வந்திருந்தார்கள். தற்செயலாகச் சென்னையிலிருந்து அன்று செந்தில்நாதரும் வந்திருந்தார். விருந்தினர்களெல்லாம் விடைபெற்றுச் சென்ற பிறகு, முத்தையா முதலியாரின் அந்தரங்க அறையில், அவருக்கும் செந்தில்நாதருக்கும் ஏதோ பலத்த வாக்குவாதம் நடப்பது போல் சப்தம் கேட்டது..."

"அப்போது அந்த வீட்டில் வேறு யாரார் இருந்தார்கள்?" என்று இடைமறித்துக் கேட்டார் துப்பறியும் கேசவன்.

"கனகப்பன் என்ற ஒரு சமையற்காரன், பத்மாவதி, அவள் மகள் மஞ்சுளா, அருளானந்தசாமி யென்னும் ஒரு சாமியார், செந்தில்நாத முதலியார் இந்த ஐவரும் அங்கிருந்தனர். முத்தையா முதலியாரைப் பார்க்கச் செந்தில்நாத முதலியார் பிற்பகலில்தான் வெள்ளை மாளிகைக்கு வந்தார். அத்தை மகளான பத்மாவதி அம்மாளும், அவளுடைய பெண்ணான மஞ்சுளாவும் இரண்டு நாளுக்கு முன்பே வெள்ளை மாளிகைக்கு வந்து தங்கியிருந்தார்கள். அருளானந்த சாமியாரோ தம்முடைய வேதாந்தப் புத்தகங்களோடு அங்கே குடியேறியிருந்தார்.

நடுராத்திரி மணி சுமார் பன்னிரண்டு இருக்கும். எல்லோரும் படுக்கச் சென்றுவிட்டனர். ஆனல் அருளானந்த சாமியாருக்குத்



...மரசர் பல்...

தூக்கம் வரவில்லை. ஏதாவது படிக்கலாமென்று நினைத்து, ஒரு புஸ்தகம் எடுப்பதற்காக மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தார். ஹாலில் ஒரே இருட்டாயிருந்தது. படிக்கட்டின் பாதியில் அவர் வந்துகொண்டிருந்தபோது, கீழே முத்தையா முதலியாரது அந்த ரங்க அறையின் கதவு திறக்கப்படுவது அவருக்குத் தெரிந்தது. கதவைத் திறந்துகொண்டு அவ்வறையிலிருந்து வெளிவந்தார் செந்தில்நாதர். வெளிவந்ததும், அக்கதவை அவர் சட்டென்று மீண்டும் சாத்திவிட்டார். ஆனால் அந்த ஒரு க்ஷணத்திற்குள், உள்ளிருந்து வீசிய ஒளிக் கற்றையின் உதவியால், அந்த ஹாலில் மாட்டப்பட்டிருந்த ஒரு சுவர்க் கடியாரமானது சாமியாரின் பார்வையில் பளிச்சென்றுபட்டது. மணி பன்னிரண்டைத் தாண்டி ஐந்து நிமிஷங்களாயிருந்தது. 'இந்த அகால வேளைக்கு மேல் படிக்கவேண்டுமா?' எனச் சற்று தயங்கினர் அவர். அதற்குள், அறையைவிட்டு வெளியே வந்த செந்தில்நாதர், படிக்கட்டிலேறிச் சாமியாரைத் தாண்டி மாடியை நோக்கிச் சென்றார். அப்போது அவர் முகத்தில் ஓர் அசாதாரணமான கடுகடுப்புக் காணப்பட்டது. விஷயம் இன்னதென்று புரியாமல், சாமியாரும் தம் படுக்கையறைக்குச் சென்றார்..."

"சாமியாருக்கும் செந்தில்நாதருக்கும் ஏதேனும் பழைய மனஸ்தாபங்கள் உண்டோ?" என்று துப்பறியும் கேசவன் இடைமறித்துக் கேட்டார்."

"கிடையவே கிடையாது!" என்று அழுத்தமாகக் கூறினள் பவானி. "சாமியார் அந்தக் குடும்பத்துக்கே பழமையான நண்பர். மற்றெல்லோரையும்விட, செந்தில்நாதரிடத்தில் அவருக்கு ஓர் அலாதியான அன்பு எப்போதுமே உண்டு! இருவரும் தமிழ் இலக்கிய இலக்கண ஆராய்ச்சி செய்வதுமுண்டு."

"ஆனல் கோர்ட்டில் சாமியார் கொடுத்த வாக்குமூலம்தான், செந்தில்நாதரைத் தூக்குமேடைக்கு மிக அருகில் கொண்டுபோய் நிறுத்தியது," என்றார் துப்பறியும் கேசவன்.

"அதற்கென்ன செய்வது? சந்தர்ப்ப சாட்சியங்கள் அப்படி அமைந்துவிட்டன. பன்னிரண்டு மணி, ஐந்து நிமிஷத்திற்குச் சில விநாடிகளே முன்பின்னாக, முத்தையா முதலியார் ஒரு கூரிய ஆயுதத்தால் குத்தப்பட்டு இறந்திருக்கவேண்டும் என்று, பிரேத பரிசோதனை செய்த டாக்டர்கள் கூறினர்கள். அவர் டெலிபோனைக் கையிலெடுத்து, போலீஸ் ஸ்டேஷனைக் கூப்பிட்டு, 'ஐயோ! என்னைக் குத்திவிட்டான்...' என்று சொல்லி முடிப்பதற்குள், அவர் பிரக்ஞையற்றுக் கீழே பிரேதமாய்ச் சாய்ந்துவிட்

டிருக்கிறார். அந்த டெலிபோன் வந்த நேரத்தை, மணி 12, நிமிஷம் 5 என்று போலீசார் கச்சிதமாய்க் குறித்து வைத்திருக்கிறார்கள். அதற்கும், டாக்டர் கூறியதற்கும், சாமியார் சாட்சியத்திற்கும் சரியாக இருக்கிறது!"

"ஆமாம்," என்று ஆழ்ந்த ஆலோசனையோடு தலையை ஆட்டிய துப்பறியும் கேசவன், "அப்புறம்?" என்று கேட்டார்.

"அப்புறம் சில நிமிஷங்களுக்கெல்லாம் போலீஸார் வெள்ளை மாளிகைக்கு வந்துவிட்டார்கள். முத்தையா முதலியார் தன் அந்தரங்க அறையில் கொலையுண்டுகிடப்பதைக் கண்டார்கள். அவர் மேஜைமுன் இருந்தவாறே குத்துப்பட்டுச் சாய்ந்து கிடந்தார். அவர்முன் புஸ்தகம் ஒன்று பிரித்தபடி கிடந்தது. பலமாகக் குத்தப்பட்டதால், மேஜையிலுள்ள டெலிபோனை எடுத்து இரண்டு வார்த்தை மட்டும் பேசும் அளவிற்குத்தான் அவருக்குப் பலம் இருந்திருக்கிறது. அவர் அருகில் இருந்த குப்பைத் தொட்டியில் ஒரு பத்திர நகல் கிழித்தெறியப்பட்டிருந்தது. அவ்வறையின் வாசற்படியருகில், சமையற்கார கனகப்பன் பிரக்ஞையற்று மயங்கிக்கிடந்தான். முதலில், அவன்மீதுதான் எல்லோருக்கும் சந்தேகம் வீழ்ந்தது. டாக்டர்கள் அவனது மூர்ச்சையைத் தெளிவித்து, அவனை நினைவு நிலைக்குக் கொண்டுவந்தார்கள். ஆனால் அந்த நிமிஷம் முதல் அடிக்கொருதடவை அவன் சித்தம் தன் சுவாதீனத்தைவிட்டு நழுவத் தொடங்கியது. 'செந்தில்நாதரும் முத்தையா முதலியாரும் சச்சரவிட்ட சப்தம் என் காதில் வீழ்ந்தது. அறையின் கதவைத் திறந்துகொண்டு செந்தில்நாதர் வெளியே சென்றதையும் நான் தூரத்திலிருந்து பார்த்தேன். என் எஜமான் தனியே இருந்ததால், அவருக்கு ஏதேனும் தேவையா என்று கேட்பதற்காக, வழக்கம்போல் நான் படுக்கப்போகுமுன் அவர் அறைக்குச் சென்றேன். அதற்கப்புறம் எனக்கு ஒன்றுமே நினைவில்லை' யென்றான் கனகப்பன்."

"சரிதான். தன் எஜமான் பிணமாய்க் கிடக்கும் காட்சியைத் திடீரென்று பார்க்க நேர்ந்த அதிர்ச்சியால் அவன் மூளை பேதலித்துவிட்டதுபோலும்!" என்றார் கேசவன்.

"ஆமாம். அப்படித்தான் டாக்டர்களும் அபிப்ராயப்பட்டார்கள்," என்று சொல்லிக்கொண்டே கையில் காபித் தம்ளருடன் காட்சியளித்தாள் லலிதா. "மேலும், அந்தச் சமையற்கார கனகப்பன் இருபத்தைந்து வருஷங்களாய் அந்த வீட்டில் வேலை பார்த்து வருபவன். முத்தையா முதலியாரிடத்தில் அவன் மிகவும் விசுவாசமுடையவன். அவனே அவரைக் கொன்றிருக்கச்

கூடுமோ வென்று சந்தேகிப்பதற்கு, எவ்வித முகாந்திரமுமே ஏற்படவில்லை! முத்தையா முதலியார் குத்தப்பட்டாரே என்று அவன் சித்த வெறிபிடித்து கொலையாளியின் வம்சத்தையே பழி தீர்க்கக் கருவிக்கொண்டிருக்கிருன். விசாரணையின்போது செந்தில்நாதர்மீது க்ஷாத்திரங்கொண்டு தாறுமாருக எவ்வளவோ சீறினன்; சபித்தான்!"

லலிதா கொடுத்த காபியைக் குடித்துவிட்டு, ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தார் கேசவன். உள்ளே போய் ஒரு 'ஆஷ்-டிரே'யை எடுத்து வந்து, மேஜைமேல் அவர் எதிரில் வைத்தாள் பவானி.

"சரி. இப்போது எனக்கு அந்தப் பத்மாவதியம்மாளைப் பற்றிக் கொஞ்சம் விவரமாகக் கூறுங்கள்," என்ருர் அவர்.

"தயவு செய்து அதைப்பற்றி மட்டும் என்னிடம் கேட்காதீர்கள். அவள் பேச்சைப் பேசுவதற்கே எனக்குப் பிடிக்கவில்லை!" என்று முகத்தைச் சுளித்தாள் பவானி.

"அவள் என்ன அவ்வளவு பொல்லாதவளா?" என்று புன்னகை செய்தார் துப்பறியும் கேசவன்.

"பொல்லாதவளா? அப்படி வார்த்தைகளால் எல்லாம் அவளை வர்ணித்துவிட முடியுமா? மகா நயவஞ்சகமான நாக சர்ப்பம்! பஞ்ச பாதகங்களுக்கும் அஞ்சாத பழையனூர் நீலி!...." என்று படபடத்தாள் பவானி.

"அவள் எவ்வளவோ நல்லவள் என்கிறேன் நான்!" என்று குறுக்கே பேசினுள் லலிதா.

"அதாவது, அவள் மகள் மஞ்சுளாவோடு ஒப்பிடும்போது!" என்று திருத்தமளித்தாள் பவானி. "அவ்விருவரையும் நீங்கள் நேரில் சந்திக்கவேண்டும்; நெருங்கிப் பழகவேண்டும். அப்போது தான் நாங்கள் கூறுவதன் உண்மை உங்களுக்குச் சரிவரப் புரியும்!"

"நீ ஒரு பைத்தியமடி! நெருங்கிப் பழகினல், இவரை வெகு சுலபமாகத் தன் வலையில் வீழ்த்திவிடுவாளே அந்த மஞ்சுளா!" என்று குறும்பாகக் கண்ணைச் சிமிட்டினுள் லலிதா.

"அப்படியொரு பெண்ணைத்தானே நான் ஆவலோடு தேடிக் கொண்டிருக்கிறேன்." என்று சிரித்தார் துப்பறியும் நிபுணர்; "அவள் அவ்வளவு வசீகரமாயிருப்பாளோ?" என்றும் கேட்டு வைத்தார்.

"அது என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் கண்ணன் கண்களுக்கு அவள்தான் மிஸ். இந்தியா!" என்று சிரித்தாள் லலிதா.

"அவன் யார் கண்ணன்? நான் கேள்விப்படாத புதுப் பெயராயிருக்கிறதே?" என்று கேட்டார் கேசவன்.

"வக்கீல் வேதாசலத்தின் மகன். விமான நிலையத்தில் பைலட்டாக வேலை பார்க்கிறான். கோடித் தீவிலிருந்து செல்லையாவை அழைத்துவரச் சென்றிருப்பவன் அவன்தான்."

"ஓஹோ!... அந்தப் பத்மாவதியும் அவள் மகளும் இப்போது எங்கிருக்கிறார்கள்?"

"வெள்ளை மாளிகையைச் சேர்ந்த ஒரு விடுதியில் குடியிருக்கிறார்கள்."

"அதெப்படி? முத்தையா முதலியார் கொலை வழக்கில் அவள் செந்தில்நாதனுக்கு விரோதமாக சாட்சியம் கூறியிருக்கிறாள்...."

"அப்படியிருந்தும் அவளை அந்த வீட்டைவிட்டு அப்புறப்படுத்தாமலிருப்பதுதான் செந்தில்நாதரது பெருந்தன்மையின் விசேஷம். அதுமட்டுமா? அவளுடைய குடும்பக் காலட்சேபத்துக்குப் போதுமான ஒரு குறிப்பிட்ட தொகையையும் மாதா மாதம் அவளுக்குக் கொடுத்து வருமாறு அவர் ஏற்பாடு செய்திருக்கிறார்!" என்றாள் பவானி.

"பத்மாவதி கிடக்கட்டும்; அவளாவது ஒருவிதத்தில் அவருக்குச் சொந்தக்காரி! அவளை அவர் மன்னித்ததில் ஆச்சர்யமில்லை. ஆனால் அந்தக் கனகப்பன் இருக்கிறானே! அப்பப்பா! அவன் கோர்ட்டில் மட்டுமா அவருக்குப் பாதகமாகச் சாட்சியமளித்தான்?...." என்று லலிதா சொல்லிக்கொண்டு வரும்போதே, கேசவன் குறுக்கிட்டு "கோர்ட்டில் அவன் கன்னாபின்னாவென்று உளறியிருக்கிறான். அதை நான் கேஸ் கட்டில் பார்த்தேன்!" என்றார்.

"இன்றைக்கும் அவன் அதேமாதிரிதான் உளறிக்கொண்டிருக்கிறான். செந்தில்நாதரை நேரிலேயே அவன் வாயில் வந்தபடி திட்டினான். அப்படியிருந்தும் அவர் அவனை வேலையைவிட்டு விலக்கவில்லை. 'பாவம்! ஏதோ பைத்தியத்தில் பிதற்றுகிறான்' என்று மன்னித்துவிட்டார்!" என்றாள் பவானி.

"அந்தக் கனகப்பனை நான் நேரில் பார்த்தபிறகுதான் முடிவு கட்டவேண்டும்," என்று தம் டைரியை எடுத்து ஏதோ குறித்துக்

கொண்டார் துப்பறியும் கேசவன். "இன்னும் அவன் வெள்ளை மாளிகையில்தான் இருக்கிருனு?" என்று அவர் கேட்டார்.

"போனவாரம் வரையில் அவன் அங்குதான் இருந்தான். நாலைந்து நாட்களுக்கு முன்புதான் அப்பா அவனை வெளியே அனுப்பினர்."

"ஏன் அப்படி?"

"அவன் எப்போதுமே செந்தில்நாதரைச் சதா திட்டிக் கொண்டிருந்தான். அதை நாங்கள் பொருட்படுத்துவதில்லை. ஆனல் வரவர அவனுடைய பைத்தியம் அதிகரித்துவிட்டது. முத்தையா முதலியாரின் ஆவியை வெள்ளை மாளிகைக்குள் தான் அடிக்கடி சந்திப்பதாகக் கூறலானன். கோடித் தீவிலிருந்து செல்லையா திரும்பி வரப்போவதாகக் கேள்விப்பட்டவுடன், 'அந்தக் கொலைகாரன் மகனு வரப்போகிருன்? அவனை நான் பார்க்கிறேன் ஒருகை. அந்தக் கொலைகாரன் மகன் வெள்ளை மாளிகையில் எப்படி மிதிக்கிருன் எனப் பார்ப்போம்!' என்று கூச்சல் போட ஆரம்பித்துவிட்டான். அதற்கு மேலும் அவனை வெள்ளை மாளிகையில் விட்டுவைப்பது சரியல்லவென்று, அப்பா அவனை விலக்கிவிட்டார்!" என்ருள் பவானி.

"அதுபோகட்டும். பத்மாவதி விஷயமாக, முத்தையா முதலியாருக்கும் செந்தில்நாதனுக்கும் ஏதோ மனத்தாங்கல் ஏற்பட்டதாகக் கூறினயே, அது என்ன?" என்று கேட்டார் துப்பறியும் கேசவன்.

"அது ஒரு சிறு கதை," என்று ஆரம்பித்தாள் பவானி. "பத்மாவதி தன் யௌவன வயதில் ஒரு பட்டாளத்தானைக் கூட்டிக்கொண்டு சிலோனுக்கு ஓடிப்போனவள்! அங்கே அவர்களுக்குக் கலியாணம் நடந்து ஒரு பெண் குழந்தையும் பிறந்தது. அந்தக் குழந்தைதான் மஞ்சுளா. மஞ்சுளா பிறந்த நாலைந்து வருஷங்களுக்கெல்லாம், அவள் தந்தை இறந்துவிட்டார். உடனே தன் மகளை அழைத்துக்கொண்டு, நிர்க்கதியாய்ச் சென்னைக்குத் திரும்பி வந்தாள் பத்மாவதி....

"சென்னைக்கு வந்ததும் அவள் செந்தில்நாதரைப் போய்ப் பார்த்தாள். அவர் அப்போது ஒரு கல்லூரியின் பிரின்ஸ்பாலாக வேலைபார்த்து வந்தார். பத்மாவதியைக் கண்டதும், அவள்மீது அவருக்கு இரக்கம் உண்டாயிற்று. அவளையும் அவள் குழந்தையையும் தம் வீட்டிலேயே வைத்து ஆதரித்தார். நாளடைவில், அவருடைய இரக்கமானது காதலாகத் தளிர்விட ஆரம்பித்தது..."

"ஏன், அப்போது அவருக்கு மனைவியில்லையா?"

"அவருடைய மனைவியும் எங்கள் தாயாரும் ஒரே நாளில் மோட்டார் விபத்தில் இறந்துவிட்டார்கள்!" என்று கண்ணீரை அடக்கிக்கொண்டாள் லலிதா.

"சரிதான். செந்தில்நாதருக்கு மனைவி இல்லை, ஓர் ஆண் குழந்தை இருந்தது. பத்மாவதிக்குக் கணவனில்லை, ஒரு பெண் குழந்தையிருந்தது. அத்தகைய சூழ்நிலையில், இருவருக்கும் காதல் ஏற்படுவது சகஜந்தானே?" என்றார் துப்பறியும் கேசவன்.

"காதலாவது, கனிமண்ணாவது? அத்தகைய கௌரவமான வார்த்தைகளை யெல்லாம் அவள் விஷயத்தில் கண்மூடித்தன மாகப் பிரயோகிக்காதீர்கள்!" என்று கடிந்துகொண்டாள் லலிதா.

"அப்படியானால் சந்ததியில்லாத முத்தையா முதலியாரின் காலத்திற்குப் பிறகு உயிலின் ஷரத்துப்படி செந்தில்நாத முதலியாருக்குத்தான் வெள்ளை மாளிகை வந்து சேரும் என்று அறிந்து அவர்மீது ஆசைவலை வீசினாளா?"

"சுத்தக் காசாசை பிடித்த பிசாசல்லவா அவள்? இல்லாவிட்டால், கொஞ்சமேனும் நன்றியில்லாமல் செந்தில்நாதரை அப்படித் திடீரென்று புறக்கணித்துவிட்டு முத்தையா முதலியாரிடம் வந்து சேருவாளா?"

"அதென்ன மூன்றாவது காதலா?"

"ஆமாம்! மூன்றாவது வலை! பத்மாவதி அதற்கு முன்னால் ஒரு தடவைதான் சிறுவயதில் எப்போதோ முத்தையா முதலியாரைப் பார்த்திருக்கிறாள். செந்தில்நாத முதலியாரோடு அவள் வெள்ளை மாளிகைக்கு வந்தபோது முத்தையா முதலியாரை அடையத் திட்டமிட்டாள். அந்தக் கிழவரையே வலைவிரித்துப் பிடித்தால் சுலபமாக சொத்துரிமை அடைந்துவிடலாம் என்று நினைத்தாள். செந்தில்நாதருக்குப் பதிலாகத் தன்னைவிட இருபது வருஷங்கள் வயதில் மூத்த அந்தக் கிழவரையே மணக்கத் திட்டமிட்டாள். அதன் பிறகு.... ஒரு நாள் இரவு யாரும் இல்லாத சமயத்தில் வெள்ளை மாளிகைக்கு வந்து கிழவரோடு தங்கியிருந்தாள்...."

"அப்புறம்?"

"அந்தக் கிழவரும் வெட்கமில்லாமல் விதவையான பத்மாவதி குழந்தையுள்ளவள் என்றும் பார்க்காமல் பகிரங்கமாகவே கலியாணம் செய்துகொள்ளத் தீர்மானித்துவிட்டார்..."

"அவள் பேருக்கே தனக்கு வந்து சேரப்போகும் சொத்துக்களையெல்லாம் உயில் எழுதி வைப்பதற்கு முத்தையா முதலியார் பத்திர நகல்கூடத் தயாரித்துவிட்டார் போலிருக்கிறதே?" என்றார் துப்பறியும் கேசவன்.

"அது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று வியப்போடு கேட்டாள் பவானி.

"எல்லாம் அந்தப் பழைய கேஸ் கட்டுகளைப் பார்த்துத் தெரிந்துகொண்டவைதான். முத்தையா முதலியார் இறந்துகிடந்த அறையிலுள்ள குப்பைத் தொட்டியில் அந்த உயிலின் பத்திர நகல் கிழிபட்டுக் கிடந்ததாம். அதுவே செந்தில்நாதர் மீது அதிக சந்தேகத்தைக் கிளப்புவதற்குக் காரணமாயிருந்திருக்கிறது. முத்தையா முதலியார் அந்த உயில் நகலைச் செந்தில்நாதரிடம் காட்டியிருக்க வேண்டும்; அவர் ஆத்திரப்பட்டு அதைக் கிழித்திருக்க வேண்டும்; அதன்மேல் இருவருக்கும் வாக்குவாதம் வலுத்திருக்க வேண்டும்; முடிவில் அந்தக் கொலை நடந்திருக்க வேண்டும்.... இவ்வாறெல்லாம் அப்போது போலீசார் அனுமானித்திருக்கிறார்கள். அதற்கு அனுசரணையாக அருளானந்த சாமியார், சமையற்காரன் கனகப்பன், அத்தைமகள் பத்மாவதியம்மாள் மூவரும் சாட்சியம் கூறியிருக்கிறார்கள்!" என்றார் துப்பறியும் கேசவன்.

"பத்மாவதி என்ன சொல்லியிருக்கிறாள்?" என்று ஆவலோடு கேட்டாள் லலிதா.

"வேறொன்றுமில்லை. கொலை நடந்த இரவு, மாடியிலிருந்த தன் அறையில் அவள் தூக்கம் பிடிக்காமல் படுத்துக்கொண்டிருந்தாளாம். பக்கத்து அறை செந்தில்நாதருடையது. அந்த அறையின் கதவைத் திறந்துகொண்டு அவர் உள்ளே நுழையும் சப்தம் அவள் செவியில் பட்டதாம். உடனே அவள் தற்செயலாகக் கடிகாரத்தைப் பார்த்தாளாம். மணி சரியாகப் பன்னிரண்டு அடித்து ஐந்து நிமிஷம் ஆகியிருந்ததாம். இவ்வளவுதான் அவள் வாக்குமூலம். தனியாகப் பார்க்கும்போது இதில் ஒன்றும் விசேஷம் இல்லை. ஆனால் அருளானந்த சாமியாரின் சாட்சியத்தை இது ஊர்ஜிதப்படுத்தி விட்டது!" என்றார் கேசவன்.

"சாமியார் உண்மையிலேயே மிக உத்தமமான மனிதர். அவர் பொய் சொன்னாரென்று யாருமே நினைப்பதற்கில்லை. ஆனால் செந்தில்நாதரும் பொய் சொல்லத் தெரியாதவரே. முத்தையா முதலியாரின் அறையைவிட்டு அவர் வெளியே வரும் போது, சாமியார் பார்த்த அதே ஹால் கடிகாரத்தைத் தானும் பார்த்ததாகவும், அப்போது சரியாகப் பதினொரு மணி ஐம்பத்தைந்து நிமிஷம்தான் ஆகியிருந்ததாகவும் அவர் கூறுகிறார். இருவரும் ஒரே கடிகாரத்தில் ஒரே சமயத்தில் மணி பார்த்தபோது ஐந்து நிமிஷம் வித்தியாசமாகச் சொல்கிறார்கள்! இதில் எதை நாம் உண்மையென்று நம்புவது?" என்றாள் பவானி.

துப்பறியும் கேசவன் இந்தக் கேள்விக்கு உடனே பதிலளிக்க வில்லை. கண்ணை மூடியவண்ணம், சுமார் 3 நிமிஷ நேரம் ஏதோ சிந்தனையிலாழ்ந்திருந்தார். கடைசியாக, "இதில் ஏதோ ஒரு தவறு நேர்ந்திருக்கிறது!" என்று ஒரு நெடு மூச்சுவிட்டார்.

"அதைத்தான் இதுவரையில் யாராலும் கண்டுபிடிக்க முடிய வில்லை. செந்தில்நாதர் தெய்வாதீனமாய் விடுதலையடைந்தார். எனினும், கமலவனத்துப் பொதுமக்கள் அவரை நிரபராதி யென்று நம்ப மறுத்தார்கள். வாழ்க்கையிலேயே மிக வெறுப் புற்று அவர் கோடித் தீவுக்குப் போய்விட்டார். பன்னிரண்டு வருஷங்கள் ஓடி மறைந்துவிட்டன. போனவாரம்தான், செந்தில் நாதர் இறந்துவிட்டதாகக் கோடித் தீவிலிருந்து எங்கள் அப்பா வுக்கு ஒரு செய்தி கிடைத்தது. அதன்மேல், செல்லையாவை அங்கிருந்து இங்கே அழைத்து வருவதற்காகக் கண்ணனை அனுப்பினோம். செந்தில்நாத முதலியார் மகன் செல்லையா வரப் போகிறான் என்ற செய்தி வெளியானதும், நூற்றுக்கணக்கான விஷமக் கடிதங்கள் இவ்வூர் மக்களிடையே விநியோகிக்கப்பட லாயின...."

"கடைசியாக வந்த அக்கடிதத்தை எடு, பார்க்கலாம்!" என்றார் துப்பறியும் கேசவன்.

பவானி அதைத் தன் தந்தையின் டிராயரிலிருந்து எடுத்து வந்து கொடுத்தாள். அதைக் கேசவன் நெடுநேரம் கூர்ந்து கவனித்துவிட்டு, "இது வெறும் குரோதத்தினால் எழுதப்பட்ட கடிதம் அல்ல. ஒரு புதிய சதியின் சாதுர்யமான அங்குரார்ப் பணம் இது! அதாவது இப்போது வரப்போகும் செல்லையா விற்கு எதிராகச் சதி நடக்கிறது என்பதற்கு இது ஆரம்பக் குறி! என்று புன்னகை புரிந்தார்.

பவானியின் முகம் வெளிறியது.

"ஆமாம்! முத்தையா முதலியாரின் காலமும், செந்தில் நாதரின் காலமும் முடிந்துவிட்டது. இனிமேல் வெள்ளை மாளிகைக்கு உரிமை கொண்டாடக்கூடியவர்கள் எத்தனைபேர் மிஞ்சி இருக்கிறார்கள்?" என்று கேட்டார் துப்பறியும் கேசவன்.

"செல்லையா, பத்மாவதி அம்மாள், மஞ்சுளா இம் மூவருக்கு மட்டும்தான் உயிலின் பிரகாரம் பாத்தியதை கொண்டாட உரிமையுண்டு. ஆனால் ஏதாவது குற்றத்திற்குத் தண்டனை பெற்றவர்கள் உரிமை கொண்டாட முடியாது! செல்லையா இன்னும் நான்கு மாதத்தில் வெள்ளை மாளிகையின் பூரண உரிமை அடையும் வரை, அவன் ஏதாவது குற்றத்தில் அகப்படாமல் இருக்க வேண்டும்!" என்றாள் பவானி.

---

### அத்தியாயம் : 4

## சதிகாரக் கும்பல்

---

வெள்ளை மாளிகைக் காம்பவுண்டுக்குள் ஒருபுறம் தள்ளி இருந்த ஒரு விடுதியின் அறை ஒன்றில், தேனீர் அருந்தியவண்ணம் உரையாடிக்கொண்டிருந்தனர் இரு ஸ்திரீகளும் ஓர் ஆடவனும்.

ஸ்திரீகளில் மூத்தவளுக்கு வயது முப்பத்தைந்துக்கு மேல் இருக்கும். எனினும் கட்டுத் தளராத உடல். ஒரு யுவதிக்குரிய வனப்பும், வசீகரமும் அவள் முகத்தில் வாய்ந்திருந்தன. மத்திய வயதுள்ள தாசிகளின் முகத்திலுள்ள ஓர் அனுபவக் கவர்ச்சியும், களையும்தான் அந்த அம்மாளுடைய முகத்திலும் இருந்தன. அவள் பேசும் தொனியும், சொற்களும் மிகவும் நயமாக விளங்கின. அவள் அணிந்திருந்த கவர்ச்சிகரமான உடைகளின் தோற்றத்தையோ, அல்லது உடல் வாகோடு கூடிய அவளது விழிகளின் ஒளியையோ கொண்டு, அவள் கலியாணமாகி விதவையாகி ஒரு பருவப் பெண்ணையும் பெற்றவளாயிருப்பவள் என்பதைக் கண்டுபிடிக்க முடியாமலிருந்தது. அவள்தான் பத்மாவதி!

அவளுடைய புதல்வி மஞ்சுளாவுக்கு, வயது பதினெட்டுக்கு மேலிராது. ஆனால் ஒருமுறை கண்ணுற்ற மாத்திரத்திலேயே, வாலிபர்களின் உள்ளத்தைவிட்டு அகல மறுக்கும் கவர்ச்சிகரமான உடற்கட்டு. அலங்காரத்திலும் ஆடம்பரத்திலும் தன் அழகைப் பற்றிய அகம்பாவத்திலும் அவளுக்கிருந்த அளவற்ற ஆசையை வெளிப்படுத்தி நின்றன அவளது ஆடைகள். பகட்

டான பாவாடையும், மெல்லிய தாவணியும், உடல் பூரிப்போடு இறுக்கமாகவுள்ள பட்டு ரவிக்கையும் அணிந்திருந்தாள் மஞ்சுளா. அவள் விரும்பினல், தன் தாயைக்காட்டிலும் பன்மடங்கு அதிகமான விநய ரஸந்ததும்ப அவளால் சிரித்துப் பேச இயலும். ஆனல் அன்றைய தினம் அவள் சற்று வெடுவெடுப்பாகவே பேசிக்கொண்டிருந்தாள். அதற்குக் காரணம், அங்கு கூட இருந்த **கோதண்டராமன் !**

கோதண்டராமனுக்கு வயது ஏறக்குறைய நாற்பத்தைந்து இருக்கலாம். நல்ல உயரமான ஆகிருதி ; சிறிது படாடோபமான உடைகள் ; எப்போதும் போதையிலிருப்பவனைப் போன்ற ஒரு பார்வை ; வாயில் ஒரு முரட்டுச் சுருட்டு ; இவ்வளவே அவன் லக்ஷணங்கள். அவன் பெரிய சூதாடி. எல்லப்பபிள்ளை கடையில் குமாஸ்தா வேலை பார்ப்பதினல் கிடைக்கக்கூடிய சம்பளம் அவனுடைய சுருட்டுச் செலவுக்குக்கூடப் போதவில்லை. அவனுக்கு நாலாபுறமும் கடன். சூதாடியோடு அவன் ஸ்திரீலோலன். அவனுக்கு அடிக்கடி பெருந்தொகையான பணம் தேவைப்படும். பத்மாவதிக்கும், அவளது காலஞ்சென்ற கணவன் கந்தசாமிக்கும் அவன் நெருங்கிய நண்பனுயிருந்தவன். பத்மாவதியின்மூலம் ஒரு பெருந் தொகையைத் திரட்டிக்கொண்டு விடலாம் என்ற பேராசையில், காலம் நோக்கிக் காத்திருந்தான்.

தேநீர் அருந்திக்கொண்டிருக்கும்போதே, பத்மாவதியின் கடந்தகால நினைவுகள் அவள் கண்ணெதிரே வந்து நின்றன. தானும் தன் மகளும் அந்த வெள்ளை மாளிகையின் அதிபதிகளாய் அதிகாரம் செலுத்திக்கொண்டிருப்பதற்குப் பதிலாக, அதற்கு வெளியே ஓர் அற்ப விடுதியில் வாழ்க்கை நடத்தும் அதிருஷ்டயீனத்தை யெண்ணி, அவள் உள்ளம் அங்கலாய்த்தது. அந்தக் குபேர சம்பத்தானது, அதுவரையில் மூன்று தடவைகள் அவளது கைக்கருகில் வந்தும், கானல் நீரைப்போல் எட்டிப்போய்விட்டது. முதலாவது, முத்தையா முதலியாரின் வார்சு என்பதற்காக, அவள் செந்தில்நாதரைக் காதலிப்பது போல் நடித்தாள். அவரைக் கலியாணம் செய்துகொள்வதன் மூலம், அந்தச் சொத்துக்களை அடைய எத்தனித்தாள். அது கைகூடும் தருவாயில், அவளது அவசர புத்தியே அவளது திட்டங்களைக் குட்டிச்சுவராக்கிவிட்டது. அதாவது, செந்தில்நாதருக்குப் பதிலாக முத்தையா முதலியாரையே மறு மணம் செய்துகொண்டால், தன் ஆசைகள் அதிவிரைவில் நிறைவேறும். கிழவர்தான் அதிகம் பெண் பித்தராகி வெகு சுலபமாகச் சொத்துக்களை தன்மீது அள்ளிச்சொரிவார்; சீக்கிரமும் இறந்துவிடுவார் என்று மனப்பால் குடித்தாள். அதற்காக, செந்தில்நாதரைப்

புறக்கணித்துவிட்டு, அவருடைய தமையனார் முத்தையா முதலியாரை நோக்கித் தன் வலையை வீசினாள். அந்தக் கிழட்டு மீனும் சுலபமாகவே அவள் கையில் சிக்கியது. ஆனால் அவரைத் திருமணம் புரிந்துகொள்வதற்குள், எதிர்பாரா விதமாக அவர் எமனுலகுக்கு அனுப்பப்பட்டார். செந்தில்நாதர் கொலைகாரன் என்று குற்றம் சாட்டப்பட்டுக் கூண்டிலேறி நின்றார். 'இதுவும் நன்மைக்கே!' என்று எண்ணியவளாய், அவரை அவள் தூக்கு மேடைக்கு அனுப்ப முயன்றாள். ஏனெனில் செந்தில்நாதர் தண்டிக்கப்பட்டால் உயிலின் பிரகாரம் சொத்து தன்னை வந்தடைந்து விடும்! அதற்காகச் சிறிது பொய் சாட்சியங் கூறவும் துணிந்தாள். ஆனால் தெய்வத்தின் தீர்ப்பு வேறுவிதமாய் இருந்துவிட்டது. செந்தில்நாதர் விடுதலை செய்யப்பட்டார். உடனே பத்மாவதி மறுபடியும் செந்தில்நாதரை நோக்கி தன் வலையை வீச முயன்றாள். அவர்மீதுதான் தனக்கு உள்ளூர ஆசை என்றும், அவருக்கு எதிராகக் கொலை வழக்கில் நிர்பந்தத்தின் பேரில்தான் தான் சாட்சியம் சொல்ல நேர்ந்தது என்றும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். அவரோ அவ்வளவையும் அவநம்பிக்கையோடு காதுகொடுத்துக் கேட்டுவிட்டு அவளுடைய வாழ்க்கையை விட்டே கோடித் தீவிற்குப் போய்விட்டார். ஆனால் அவளை வெள்ளை மாளிகை காம்பவுண்டிலுள்ள தனி விடுதியில் வசித்துவர அனுமதியும், சிறிது பணமும் கொடுத்துவிட்டுப் போனார்.

அதுமுதல் ஒவ்வொரு நாள் விடிந்து எழுந்து அந்தக் காம்பவுண்டிலுள்ள பிரும்மாண்டமான வெள்ளை மாளிகையைக் காணும்போதும், அதற்குத் தானே ஏகபோக எஜமானியாகும் நாளை எதிர்நோக்கி ஏங்குவாள். அந்த ஆசையே, அவளுடைய வாழ்க்கை முழுவதையும், பெண்மையையுங் கூட விஷமாக்கி விட்டது! இதெல்லாம் பழங் கதைகள். விளையாட்டுப்போல் பன்னிரண்டு வருஷங்கள் ஓடிவிட்டன. செந்தில்நாத முதலியாரின் ஏக புதல்வனான செல்லையா இன்று கோடித்தீவிலிருந்து திரும்பி வரப்போகிறான். அவன் இந்த வெள்ளை மாளிகையின் பரிபூரண உரிமையாளனாவதற்கு, இன்னம் நான்கு மாதங்களே பாக்கியிருக்கின்றன. 'அதற்குள் நாம் செய்யப் போகும் சூழ்ச்சிகளெல்லாம் பலிதமாகுமா!' என்று எண்ணியவளாய் அவள் பெருமூச்செறிந்தாள்.

"ஏன் அம்மா ஆழ்ந்த சிந்தனை? நீ எதற்கும் கவலைப்படாதே! முதலில் அந்த செல்லையா இங்கே வந்து சேரட்டும். அதற்கப்புறம் அவனை நான் கவனித்துக்கொள்கிறேன்!" என்றாள் மமதைச் சிரிப்புடன் மஞ்சுளா.

"முதலில் அவன் இங்கே வரப்போவதில்லையாமே? நேரே கிருஷ்ணமூர்த்தியின் வீட்டில் போய் இறங்கப்போகிறான். அந்தத் தாடிவாலாவின் பெண்கள் அவன் புத்தியைக் கெடுத்துவிட்டால்? பவானி, லலிதா என்ற பெயர்களைப் பார்த்தே அவன் பாதி மயங்கிப் போய்விடுவான். அதல்லவா எனக்குப் பயமாய் இருக்கிறது?" என்றாள் பத்மாவதி.

"அப்படி யெல்லாம் நடக்கவிடாதபடி செல்லையாவைக் கோடித் தீவிலிருந்து கூட்டிவரும் நம் கண்ணன் கண்காணித்துக் கொள்வான். அவன் திறமையை இன்னும் சரிவரப் புரிந்து கொள்ளவில்லையே, அம்மா!" என்றாள் மஞ்சுளா.

"அவனை நான்தான் நன்றாகப் புரிந்துகொண்டிருக்கிறேன்!" என்று குறுக்கே பேசினான் கோதண்டம். "கண்ணனைப் போன்ற ஒரு புளுகுணிப் பயலை எங்குமே காணமுடியாது. அவன் பொய் சொன்னாலும், அது மெய்யைப்போலவே இருக்கும்—அது விஷயத்தில் மஞ்சுளாவும் அவனும் ஒன்று!"

மஞ்சுளாவுக்குச் சுறுக்கென்று தைத்தது இந்தச் சுடுசொல். "இருக்கலாம். ஆனால் அது விஷயத்தில், நீ எங்கள் இருவருக்கும் நே...ர் எதிரிடை, நீ நிஜத்தையே பேசினாலும் உன்னை ஒருத்தரும் நம்பமாட்டார்கள். ஏனென்றால், நீ ஓர் அசகாயப் புளுகன் என்பது, உன் மூஞ்சியில் பட்டயம் போட்டதுபோல் எழுதி ஒட்டப்பட்டிருக்கிறதே!" என்று படபடத்தாள் மஞ்சுளா.

கோதண்டத்துக்குக் கோபம் வந்துவிட்டது. எப்போதுமே மஞ்சுளாவுக்கும் அவனுக்கும் அவ்வளவாகச் சரிப்பட்டுக்கொள்வதில்லை.

"என்னடி சொன்னாய்? நான் அசகாயப் பொய்யனா? நான் அப்படியிருப்பது உங்கள் அதிருஷ்டம் என்று எண்ணிக்கொள், மஞ்சுளா. நீ சிறுசு! அதனால் உனக்கு ஒன்றும் புத்தியில் படவில்லை. நான் மட்டும் பொய்யனாயில்லாமல் உண்மை பேசத் தொடங்கிவிட்டால், உன் தாயும் தந்தையும் சிலோனில் ஆறு மாத காலம் சிறைவாசம் அனுபவித்த செய்தியுள்பட, உங்களுடைய பல ரகசியங்கள் வெளியாகிவிடும். அதில் உனக்கு இஷ்டம் தானா?"

இதைக் கேட்டதும், பத்மாவதியின் கண்கள் பளீரென்று சினத்தால் சிவந்தன. கோதண்டத்தை வெட்டி விழுங்கிவிடுவன போல் நோக்கின அவள் விழிகள். ஆனால் மஞ்சுளாவோ, அவன் மிரட்டலைச் சற்றேனும் சட்டை செய்யாதவளாய் மறுபடியும்

பேசினாள். "இனிமேல் எங்களிடமிருந்து காசு பறிக்க முடியாது என்று தெரிந்தால்தான் அந்த ரகசியத்தை நீ வெளியே சொல்லு வாய்! அதுவரை உன் முகத்தில் நான் காரியுமிழ்ந்தாலும் எங்க ளுடைய இரகசியங்களை வெளியே சொல்லமாட்டாய். மேலும் எங்க அம்மா சிலோன் சிறையிலிருந்தாள் என்று வெளியில் சொல்ல உனக்கு தைரியமுண்டா? நீயும் அவர்களுடன் சிறை வாசம் செய்தவன்தானே? உன்னைப் பார்த்தாலே முன்னே பின்னே சிறையிலே இருக்கவேண்டியவன் என்று எந்த முட்டா ளுக்கும் புரிந்துவிடுமே! உன்னுடைய குட்டுகள் அம்பலத்துக்குவர அப்புறம் எவ்வளவு நாழியாகும்?" என்று மஞ்சுளா கோதண் டத்தின்மீது பாய்ந்தாள்.

"மஞ்சுளா! உனக்கு நாக்கு நீளமடி! வாயை மூடு!" என்று தன் மகளை அதட்டினாள் பத்மாவதி.

பிறகு கோதண்டத்தின் பக்கம் திரும்பி, "ஏனப்பா நீ அவ ளோடு அனாவசியமாக வம்பிழுக்கிறாய்? எங்களுடன் சண்டை போடவா நீ இங்கே வந்திருக்கிறாய்? இப்போது உடனடியாக ஆகவேண்டிய காரியத்தைக் கவனிக்காமல்...."

"உன் மகள் மட்டும் அவ்வளவு வாய்த்துடுக்காகப் பேச லாமா? அவளை நீ கண்டிக்க மாட்டேன் என்கிறாயே?"

"அவளுக்கும் உனக்கும் இப்படி அடிக்கடி சண்டை போடு வதே சகஜமாகப் போய்விட்டது. நீ விபரம் தெரிந்தவன்! அவள் சிறுசுதானே! அது தொலையட்டும். இனி அடுத்தபடியாக நாம் செய்யவேண்டியதென்ன? அதைச் சொல்," என்றாள் பத்மாவதி. அவளுக்கும் மகளைப்போலவே கோதண்டத்தை உள்ளூரப் பிடிக்காது. கோதண்டத்திற்கும் அவர்கள்மீது பந்தபாசம் எதுவும் கிடையாது. ஒன்றுகூடி சூழ்ச்சி செய்ய வேண்டியவைகளை உத்தேசித்துத்தான் நேசபாவம்!

கோதண்டம் சிறிது நேரம் மௌனமாக யோசித்தான். "அதிருக்கட்டும். நான் அனுப்பி வருகிற அநாமதேயக் கடிதங் களைப் பற்றி, உன் அபிப்பிராயம் என்ன?"

"என் அபிப்பிராயம் கிடக்கட்டும். அக்கடிதங்களில் நீ எழுதி யுள்ள விஷயங்களை, இங்குள்ள பொதுஜனங்கள் நம்புகிறார்கள். பெரிய மாளிகைகள் முதல் சிறிய குடிசைகள் வரை எங்கே பார்த்தாலும் இதைப்பற்றிப் பேசுகிறார்கள். பன்னிரண்டு வருஷங் களுக்கு முன் அந்தக் கொலைவழக்கு நடந்தபோது, செந்தில் நாதரை இவ்வூர் மக்கள் எவ்வளவுக்கு வெறுத்தார்களோ, அவ்வ

ளவுக்கு அவன் மகனை இப்போது வெறுக்கத் தொடங்கிவிட்டார்கள். அதற்குக் காரணம் உன் விஷமக் கடிதங்கள்தான். ஆனால், அதன்மூலம் நமக்கென்ன லாபம் என்பதுதான் எனக்குப் புரியவில்லை," என்றாள் பத்மாவதி.

"சொல்லுகிறேன், கேள்," என்று தொடங்கினான் கோதண்டன். "பன்னிரண்டு வருஷம் காட்டுமிராண்டிகளிடையே வசித்துவிட்டு, செல்லையா இன்று திரும்பிவருகிறான். வந்ததும், என் கடிதங்களின் மகிமையால், இவ்வூரிலுள்ள எல்லோருமே அவனை வெறுப்போடு நோக்கப்போகிறார்கள். அந்தக் கிருஷ்ண மூர்த்தியும் அவன் பெண்களும் வேண்டுமானால், இதற்கு விதி விலக்காயிருக்கலாம்...."

"இல்லை! என் கண்ணன் அவர்களைக் கவனித்துக் கொள்வான். செல்லையாவின் உள்ளத்தில் அவர்கள்மீது சம்சயமும் துவேஷமும் உண்டாகும்படி, அவன் சாதுரியமான சில சூழ்ச்சிகள் செய்யப்போகிறான். இந்நேரம் செய்துமிருப்பான்!" என்றாள் தன்னம்பிக்கையோடு மஞ்சுளா.

"அப்படியானால், செல்லையாவுக்கு இவ்வூரில் சிநேகிதர்களே யாருமில்லை யென்ற நிலைமை ஏற்படும். அவனுக்குத் தன் காரியங்களைத் தானே நிர்வகித்துக் கொள்ளவும் சக்தியிராது. அப்போது, நம்முடைய துணையைத்தான் அவன் நாடிவருவான். அதற்குள், மஞ்சுளாவும் தன் சாகஸங்களால் அவனைப் பக்குவமாக மயக்கிவைத்திருப்பாள்...".

"அதைப்பற்றி உங்களுக்குச் சந்தேகமே வேண்டியதில்லை!" யென்று தன் நெஞ்சை நிமிர்த்திப் பெருமிதத்தோடு பேசினாள் மஞ்சுளா.

"பையன் நம் வலையில் வீழ்ந்துவிட்டால், அப்புறம் நம்முடைய சூழ்ச்சிகளெல்லாம் பரம சுலபமாக நிறைவேறிவிடும்! அவனுடைய சொத்துகளை யெல்லாம் அபகரித்துவிடலாம்!" என்றான் கோதண்டம்.

"எப்படி?" என்று கேட்டாள் பத்மாவதி.

"அதற்குப் பல வழிகளிருக்கின்றன. முதலாவதாக, அவன் மீது ஏதேனும் ஓர் அபாண்டமான பழியைச் சுமத்தி, அவனை ஜெயிலுக்கு அனுப்பிவிட நாம் முயலவேண்டும். தண்டனையடைந்து விட்டால் அவன் தானாகவே சொத்துரிமையை இழந்து விடுவான். உடனே அந்தச் சொத்துக்கள் அனைத்தும் உயிலின் ஷரத்துப்படி உங்களுக்கு வந்துவிடும்..."

" அவன் தண்டணையடையாமல், தன் தந்தையைப் போலவே தப்பித்துவிட்டால்?" என்றாள் பத்மாவதி.

" அப்போதும்தான் என்ன? அவனை ஒழித்துக்கட்டுவது அவ்வளவு பிரமாதமா? ஒரு மோட்டார் விபத்து, நீந்தும்போது ஆற்று மடுவில் தவறிவிடுவது, அல்லது இரத்த வெறியனொருவன் கொலை செய்துவிட்டான்....இப்படி ஏதாவது ஒரு சூழ்ச்சிசெய்து விடலாம்!" என்று சிரித்தான் கோதண்டம்.

" அது சரி," யென்று புன்னகை செய்தாள் பத்மாவதி. "தீராப் பக்ஷத்திற்கு அப்படியும் செய்ய வேண்டியதுதான்...."

" எப்படி? எனக்கொன்றும் புரியவில்லையே?" என்று இடைமறித்தாள் மஞ்சுளா.

" இதெல்லாம் உனக்கொன்றும் புரியவே வேண்டாம். நீ பேசாமலிருடி!" என்று அவளை அடக்கினாள் பத்மாவதி.

மஞ்சுளா முகத்தைச் சிணுக்கிக்கொண்டாள்.

" அது போகட்டும், மஞ்சுளா! நீ நம் கண்ணனோடு ஒரு ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறாயே, அது என்ன? அந்தத் திட்டத்தை அவன் நிறைவேற்றுவானா?" என்று சந்தேகத்தோடு கேட்டான் கோதண்டம்.

" கண்ணன் தீராத விளையாட்டுப் பிள்ளைதான்! ஆனால் எனக்காக எதுவும் செய்வான்! கோடித்தீவிலிருந்து செல்லையாவைக் கூட்டிவந்ததும் எனக்கு உடனே தகவல் அனுப்பிவிடுவான்!" என்றாள் மஞ்சுளா.

"அது போகட்டும். வேலைக்காரக் கனகப்பனை நீ சந்தித்தாயா?" என்று கேட்டான் கோதண்டம்.

" நேற்றிரவு அவன் இங்கு வந்திருந்தான். கடந்த ஒரு வாரத்திற்குள் அவன் ஒரு வெறி நாய்போல் ஆகிவிட்டான். எஜமானர் முத்தையா முதலியாரைக் கொலை செய்தவன் குடும்பத்தையே பழிதீர்க்கவேண்டும் எனத் துடி துடிக்கிறான். அவன் மட்டும் செல்லையாவை நேரில் சந்திக்க நேர்ந்தால் ரொம்ப ரஸாபாசமாகிவிடும்," என்றாள் பத்மாவதி.

" நாம் வேறொன்றும் செய்ய வேண்டியதில்லை. தக்க பக்குவம் பார்த்து, கனகப்பன் கையில் ஒரு கத்தியையோ துப்பாக்கியையோ கொடுத்துவிட்டால் போதும்; செல்லையாவை அந்தச் சித்த வெறியனே தீர்த்துக் கட்டிவிடுவான்!" என்றான் கோதண்டம்.

"கடவுள் புண்ணியத்தால் அப்படி நடந்துவிடுமானல் நம் கவலைகளெல்லாம் தீர்ந்துவிடுமே!" என்று பெருமூச்செறிந்தாள் பத்மாவதி.

"நமக்குத்தான் இன்னும் நாலுமாத சாவகாசம் இருக்கிறதே? அதற்குள் நாம் அண்டத்தையே புரட்டி விடலாம்; கவலைப்படாதே! மேலும், பாவம் கனகப்பனுக்கும் ஒரு சந்தர்ப்பம் கொடுப்போம்! அந்தச் சித்த வெறியனைத் தக்க சமயத்தில் நான் உபயோகித்துக்கொள்கிறேன்!" என ஆறுதல் கூறினன் கோதண்டம்.



அத்தியாயம்: 5

# கனகப்பன் வெறி

மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து, கமலவனத்தை நோக்கி வேகமாக வந்துகொண்டிருந்தது ஒரு ஸ்டுடிபேக்கர் மோட்டார் வண்டி. அவ்வண்டியை ஓட்டிக்கொண்டிருந்த ஓவியர்

கிருஷ்ணமூர்த்திக்குப் பக்கத்தில், முன் சீட்டில் அமர்ந்திருந்தான் செல்லையா. அவனது தோழன் பழனியப்பன், வக்கீல் வேதா சலம், அவர் மகன் கண்ணன்—இம்மூவரும் பின்ஸீட்டில் உட்கார்ந்திருந்தனர்.

கண்ணன் இடைவழியிலேயே இறங்கிக்கொண்டான். விமான இலாகாவைச் சேர்ந்த ஓர் ஆபீஸரைப் பார்த்துவிட்டு, நேரே அவன் கிருஷ்ணமூர்த்தியின் வீட்டுக்கு வருவதாகக் கூறிச் சென்றான். அவன் போனதும், ஏதோ சிந்தனையில் ஆழ்ந்துபோய் மௌனமாக உட்கார்ந்திருந்தான் செல்லையா. எதிரிகளுக்கு மத்தியில் இருப்பது போலவே அவன் ஜாக்கிரதையாகவும் விழிப் போடும் இருந்தான். காரில் யாரோடும் அவன் அதிகமாகப் பேசவில்லை! அவனுடைய அருமை நண்பன் பழனியப்பன் முகத்தில் காரணமில்லாத ஒரு கடுகடுப்பும் காணப்பட்டது.

கிருஷ்ணமூர்த்தியின் வீட்டை யணுகும்போது, வாசலுக் கருகில் ஒரு சிறு கூட்டம் வீதியில் கூடி நிற்பதை அவர்கள் கண் ணுற்றனர். செல்லையாவை அழைத்துவரும் காரைக் கண்டதும் கூட்டத்திலிருந்து இரண்டு மூன்று சீட்டிச் சப்தங்கள் கிளம்பின; ஓர் அழுகிய கோழிமுட்டை கிருஷ்ணமூர்த்தியின் காதோரமாக உராய்ந்து சென்றது. அது வந்த திக்கை நோக்கிப் பளிச் சென்று திரும்பினான் செல்லையா.

"காரை நிறுத்துங்கள். அந்த முட்டையை எறிந்தவன் யாரென்று நான் பார்த்துவிட்டு வருகிறேன்," என்று கூறிய வாறே, காரை விட்டுக் கீழே குதித்துவிடத் துடிப்பவன் போல் செல்லையா காணப்பட்டான். இதற்குள் வீட்டின் வெளிக்கேட் டைத் தாண்டி, காம்பவுண்டுக்குள் நுழைந்துவிட்டது ஓவியர் கிருஷ்ணமூர்த்தியின் கார்.

"கொஞ்சம் பொறு, தம்பி! யாரோ ஒருவன் என்னைப் பார்த்துக் கொஞ்சம் தமாஷ் பண்ண ஆசைப்பட்டிருக்கிறான். அதற்கு நாம் கோபிக்கலாமா?" என்றார் ஓவியர் கிருஷ்ணமூர்த்தி சிரித்துக்கொண்டே.

"இல்லை. அவன் என்னைப் பார்த்துத்தான் வீசினான். எனக்கு இங்கே பகைவர்கள் நிறைய இருக்கிறார்கள் என்று தெரி கிறது!" என்றான் செல்லையா.

"சேசே! அப்படியெல்லாம் நினைக்காதே, இங்கு உனக்கு ஏராளமான நண்பர்களிருக்கிறோம். அதாவது நீ அனுமதித்தால்!" என்றார் ஓவியர் கிருஷ்ணமூர்த்தி.

"ஊஹூம்! எனக்கு நம்பிக்கையில்லை," என்று அழுத்த மாகக் கூறினான் செல்லையா.

வீட்டு வாசலில் கார் வந்து நின்றதும், செல்லையாவைப் பார்க்க, கிருஷ்ணமூர்த்தியின் புத்திரிகளான லலிதாவும், பவானியும் ஆவலோடு ஓடிவந்தனர். "இவள்தான் பவானி! இவள் தான் லலிதா! இருவரும் மகாக் குறும்புக்காரிகள்!" என்று அவர்களைச் செல்லையாவிற்கு அறிமுகப்படுத்தி வைத்தார் கிருஷ்ணமூர்த்தி.

அந்த ஓவியரின் புத்திரிகள் என்றதும், விருப்போடு பார்த்த செல்லையா வெடுக்கென்று வெறுப்போடு முகத்தைத் திருப்பிக் கொண்டான். அவனுடைய முகத்தில் சந்தேகத்தின் நிழல் அதிக ரித்தது. ஓவியர் கிருஷ்ணமூர்த்தியைத் தன்னுடைய முதல் நம்பர் விரோதியாகவும் நயவஞ்சகராகவும் அவன் உள்ளூரக் கருதினான்.

இதற்குள் துப்பறியும் கேசவனும் உள்ளிருந்து எழுந்து வந்தார். கேசவனது ரோல்ஸ் ராய்ஸ் வண்டி செல்லையாவின் கவனத்தை ஈர்த்தது.

"இது யாருடைய கார்?" என்று கேட்டான் செல்லையா.

"ஏன்? என்னுடையதுதான்!" என்றார் துப்பறியும் கேசவன்.

"இதேபோல் கார் வாங்குவதற்குப் போதுமான பணம் எனக்கிருக்கிறதா?" என்று வினவினான் ஓவியர் கிருஷ்ணமூர்த் தியை நோக்கி.

"ஒரு கார் என்ன? நீ இஷ்டப்பட்டால் ஒன்பது டஜன் கார் வேண்டுமானாலும் வாங்கலாம். பணத்தைப்பற்றி நீ கவலைப் படவேண்டியதில்லை!" என்றார் அவர்.

"அப்படியானால் நான் இரண்டு கார் வாங்கிக்கொள்கிறேன். எனக்கொன்று; பழனியப்பனுக்கு, ஒன்று. என்ன பழனீ, உனக்கு இந்தக் கார் பிடிக்கிறதா?"

"ஓ! இந்தக் காரில் ஏறிக்கொண்டு நான் ஊரெங்கும் சவாரி செய்தால் என்ன ஜோராயிருக்கும்!" என்று பல்லையிளித்தான் பழனியப்பன்.

எல்லோரும் தாழ்வாரத்தில் போடப்பட்டிருந்த நாற்காலி களில் போய் உட்கார்ந்தனர்.

செல்லையாவை நோக்கி, "எங்களை உனக்கு நினைவிருக்கிறதா? நான் இன்னும் ஞாபகம் வைத்திருக்கிறேன்!" என்று குறும்புச் சிரிப்புடன் கேட்டாள் பவானி.

"அவ்வளவு தெளிவாக நினைவில்லை! ஏதோ கொஞ்சம் நினைப்பிருக்கிறது." என்றான் செல்லையா. "ஆனால் மஞ்சுளா என்னும் பெயருள்ள ஒரு பெண்ணைப் பற்றி எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது!" என்று சொல்லிக்கொண்டே, தன் சட்டைப் பைக்குள்ளிருந்து ஒரு சிறு போட்டோவை அவன் வெளியிலெடுத்தான்.

பவானியின் மலர்ந்த முகம் சிறிது வாடியது. கண்களும் இலேசாகக் கலங்கின.

அது ஒரு ஏழு வயதுச் சிறுமியின் படமாகக் காணப்பட்டது. கையில் ஒரு பந்தை ஏந்தியவண்ணம், அவள் காமிராவை நோக்கிச் சிரித்துக்கொண்டு நின்றாள்.

"இவள்தான் மஞ்சுளா! சுருள் சுருளாகத் தலைமயிர்! ஆழமான கருவிழிகள்! மல்லிகைப்பூப் பாவாடை! நான் சிறுவனாயிருக்கும்போது இவளோடு விளையாடியிருக்கிறேன். இந்த போட்டோவை இவளேதான் எனக்குக் கொடுத்தாள்...." என்றான் செல்லையா, குரலில் ஆசை வடிய.

"ஐயோ பாவம்! அதைப் பன்னிரண்டு வருஷ காலமாய் நீ உன் சட்டைப் பையிலேயே சுமந்து வந்தாயா? கோடித் தீவிலிருந்து நீ கொண்டுவந்த அதிசயம் இதுதானா?" என்று சிரித்தாள் பவானி. அவளைச் சற்று சினம் ததும்ப நோக்கியவாறு, போட்டோவை வெடுக்கென மீண்டும் தன் பைக்குள் செருகினான் செல்லையா.

பவானி வெட்கத்தோடு முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

"ஆமாடி! பாவம் செல்லையாவிற்கு நம்மை எப்படி நினைப்பு இருக்கப்போகிறது! மஞ்சுளாவைத்தான் அவன் அதிகம் பார்த்திருக்கிறான்! அந்த சின்ன வயதிலே மஞ்சுளாவிற்கு இருந்த சாமர்த்தியம்....ஹூம்!"...என்றாள் லலிதா.

எல்லோருக்கும் காபி கொண்டுவருவதற்காக உள்ளே எழுந்து சென்றாள் லலிதா.

அதே சமயத்தில், தோட்டத்தின் கேட்டைத் தாண்டி, ஒரு வயதான கிழவன் சித்தவெறியனைப்போல சைக்கிளில் வெகு விரைவாக உள்ளே வந்து கொண்டிருந்தான்.

ஒல்லியாய், உயரமாய், நரைத்த மீசையும் குழிவிழுந்த கன்னங்களும் உடையவனாய் அவன் காணப்பட்டான். அவன் கண்களில் ஒருவித வெறி ததும்பும் ஜ்வாலை சுடர்விட்டுக் கொண்டிருந்தது. மொத்தத்தில் அவனைப் பார்க்கும்போது, சோளக் கொல்லையில் காக்கைகளை மிரட்டுவதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் விகாரமான ஒரு பொம்மையைப்போல அவன் தோற்றமளித்தான். எனினும், அவனது முகபாவத்தில் ஏதோ ஒரு பயங்கரமான அம்சமும் கலந்திருந்தது—ஆமாம், அவன் மிதியுண்ட விஷப் பாம்பு போலவே சீறிக்கொண்டு வந்தான்.

தாழ்வாரத்தில் குழுமியிருந்த ஆட்களைக் கண்டதும், கீச்சுக் குரலில் அவன் ஒரு பேய்ச் சிரிப்புச் சிரித்தான். தன் சைக்கிளை விட்டுக் கீழிறங்கி, தாழ்வாரத்தின் மீது ஏறினான். "அடே கொலைகாரன் மகனே!" என்று கூவியவாறு, செல்லையாவை நெருங்கினான் அவன்.

"நில் அங்கே!" என்று அதட்டிக்கொண்டே எழுந்து சென்று, அவனைத் தடுத்து நிறுத்தினார் ஓவியர் கிருஷ்ணமூர்த்தி. அவரைக் கொலை செய்து விடுபவன் போல் முறைத்துப் பார்த்தான் அக்கிழவன்.

அந்தச் சமயத்தில், ஒரு கேத்தல் நிறையச் சூடான காபியும் நாலைந்து கண்ணாடித் தம்ளர்களும் ஒரு தட்டில் சுமந்தவளாய் வீட்டினுள்ளிருந்து வந்துகொண்டிருந்தாள் லலிதா.

கிழவன் குபீரென்று அந்தக் கேத்தலைத் தூக்கி, செல்லையாவை நோக்கி வீசுவதற்காக ஓங்கினான். அவ்வாறு ஓங்கிய கை தாழ்வதற்குள், அதைப் பாய்ந்து பற்றிக் கேத்தலைத் திருகிப் பறித்தார் துப்பறியும் கேசவன். கிழவனது உடையிலும் தரையிலும் சிதறியோடியது செந்நிறக் காப்பி.

"அடே கொலைகாரன் மகனே!" என்று மறுபடியும் அலறினான் கிழவன். "என்ன தைரியத்திலடா இவ்வூருக்கு நீ திரும்பி வந்திருக்கிறாய்? உன் அப்பனைப்போல் நீயும் தப்பித்துவிடலாமென்று மனப்பால் குடிக்காதே! மரியாதையாய் இந்த ஊரை விட்டு ஓடிப் போய்விடு. இல்லாவிட்டால் எப்படியும் நாங்கள் உன்னைப் பழிக்குப் பழி வாங்காமல் விடமாட்டோம். அதில் உனக்குச் சந்தேகமிருந்தால், படித்துப்பார் இந்த மொட்டைக் கடிதத்தை!" என்று கூறியவாறு, தன் மடியிலிருந்து ஒரு கவரையெடுத்து அவ்விளைஞனை நோக்கி வீசியெறிந்தான் அந்தக் கிழவன்.

"இவன்தான் கனகப்பனு? கொலேயுண்ட முத்தையா முதலியாரிடம் வேலே பார்த்த பழைய வேலேக்காரனு?" என்று சாவதானமாகக் கேட்டார் துப்பறியும் நிபுணரான கேசவன்.

"ஆமாம்," என்று கூறியவாறே, ஒரு பழந் துணியை யெடுத்துத் தரையில் சிந்திய காபியைத் துடைத்தார் ஓவியர் கிருஷ்ணமூர்த்தி.

"இதென்ன வீடா, பைத்தியக்கார விடுதியா ?" என்று முணு முணுத்த வண்ணம், கனகப்பன் விட்டெறிந்த கடிதத்தைக் கையில் எடுத்தான் பழனியப்பன்.

"அதைக் கொடு இப்படி," என்று கையை நீட்டினுன் செல்லேயா.

"கொடுக்காதே!" என்று அதட்டினுள் பவானி.

அதற்குள் கைமாறி விட்டது காகிதம்!

அன்று காலேயில் கிருஷ்ணமூர்த்திக்கு வந்த அநாமதேயக் கடிதத்தின் நாற்றுக்கணக்கான பிரதிகளில் அது ஒன்றென் பதைக் கண்டுகொண்டார் துப்பறியும் கேசவன்.—அதாவது, முத்தையா முதலியாரை அவருடைய தம்பி செந்தில்நாதர் கொன்றுவிட்டுக் கோடித்தீவுக்கு ஓடிப்போய் விட்டாரென்றும், வெள்ளே மாளிகையின் சொத்துக்களே அனுபவிக்க அந்தக் கொலேகாரனின் மகனை செல்லேயா வருகிருன் என்றும் குற்றம் சாட்டும் மொட்டைக் கடிதந்தான் அது! செல்லேயா அதைப் படிக்கும்போது, அவன் முகபாவம் எப்படி யிருக்கிறதென்பதை எல்லோரும் உற்று நோக்கினர். தன் உணர்ச்சிகளேச் சற்றேனும் வெளிக்காட்டிக்கொள்ளாமல் அவன் அதை மனதிற்குள்ளேயே படித்துமுடித்தான்; கடைசியாக, அதைத் தன் சட்டைப்பைக்குள மடித்து வைத்துக்கொண்டான்.

சித்த வெறியனுன கனகப்பன் அவனே நோக்கிக் கிறீச்சிட் டான்.

"அடே கொலேகாரன் மகனே! படித்தாயா கடிதத்தை! என் எஜமானர் கொல்லப்படும்போது எப்படித் துடித்திருப்பார் என்பது உனக்குத் தெரியுமா?...வெள்ளே மாளிகையில் வந்து நீ சேரும்வரை பொறுத்திரு! அங்கே நீ அவரைப் பார்க்கலாம். உன் தகப்பனுல் கொல்லப்பட்டாரே, அந்த முத்தையா முதலி யாரின் ஆவியை நீ அங்கே பார்க்கலாம். அவர் உனக்காக வெள்ளே மாளிகையில் காத்திருக்கிருரடா பல வருஷங்களாக!" என்று சீறினுன் கனகப்பன்.

"என்னது? கொலையுண்ட முத்தையா முதலியாரை நீ வெள்ளை மாளிகையில் இப்போதும் பார்ப்பதுண்டா?" என்று கேட்டார் துப்பறியும் கேசவன்.

"ஆமாம்! அவரைப் பார்க்கிறேன்! பார்க்கிறேன்! பல தடவைகளில்! அவர் கொல்லப்பட்ட இரவில் எப்படித் தம் படிப் பறையில் உட்கார்ந்திருந்தாரோ அப்படியே இன்னம் உட்கார்ந் திருப்பதைப் பார்த்திருக்கிறேன்! அவர் திரும்பிப் பார்ப்பார். ஆனால் எதுவும் பேசுவதில்லை! நீர் வெள்ளை மாளிகைக்கு நடு ஜாமத்தில் போய், அவருடைய படிப்பறையில் பாரும். அவரை நீரும் பார்க்கலாம்!" இவ்வாறு கிறீச்சிட்ட கிழட்டுக் கனகப்பன், ஒருகணம் மெய்சிலிர்த்து உடலெல்லாம் ஜில்லிட்டுப்போய் நின்றான். அடுத்த நிமிஷம் தன் சைக்கிளில் ஏறிக்கொண்டு தலை தெறிக்கும் வேகத்தில் வெளியே சென்று விட்டான்.

மறுபடியும் புதிதாகக் காபி போட்டுக்கொண்டு வந்தாள் லலிதா. செல்லையா அதைச் சிறிது சிறிதாக ரஸித்துக் குடித்தான். பழனியப்பன் அதை ஒரே மூச்சில் விழுங்கிவிட்டு, உதடுகளைச் சப்பிக்கொண்டான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் விருந்துச் சாப்பாட்டிற்கு இலை போட்டாயிற்று. தக்க சமயத்தில் குசாலாகச் சிரித்துக்கொண்டே கண்ணனும் வந்து சேர்ந்தான். அவன் சிறந்த வாசாலகன். யாரும் தன்னை நம்பும்படி பழகக்கூடியவன். அவனைக் கண்டதும் செல்லையாவின் வதனமண்டலம் தன்னையறியாமலே மலர்ச்சி யுற்றது.

"பன்னிரண்டு வருஷங்களுக்கு அப்பால், இன்றுதான் தமிழ் நாட்டு உணவை நீ ருசி பார்க்கப் போகிறாய். ஆனால், லலிதாவின் கைபட்ட எந்த உணவும் ருசியாகத்தானிருக்கும்," என்று ஒரு குறும்பான புன்னகை புரிந்தான் கண்ணன்.

"இதோ பார்; லலிதா, சோறு மட்டும்தான் வடித்தாள். நான்தான் பாயஸம் பண்ணினேன். உனக்கு அதில் அரைக் கரண்டி கூட ஊற்றமாட்டேன்!" என்று சிணுங்கினாள் பவானி.

"ஓ! வந்ததா ஆபத்து! அப்படியானால் என் வார்த்தையை வாபஸ் வாங்கிக்கொள்கிறேன், அம்மா!" என்று சிரித்தான் கண்ணன்.

சாப்பாடு முடிந்ததும், செல்லையாவை அழைத்துக்கொண்டு வக்கீல் வேதாசலமும் கிருஷ்ணமூர்த்தியும் ஓர் அந்தரங்க அறைக்

குள் சென்றார்கள். தன்னோடு பழனியப்பனும் கலந்துகொள்ள வேண்டுமென்று செல்லையா வற்புறுத்தியதால் அவனும் அங்கு அனுமதிக்கப்பட்டான். துப்பறியும் கேசவன், லலிதா, பவானி, கண்ணன் ஆகிய நால்வரும், மீண்டும் தாழ்வாரத்தில் வந்து அமர்ந்தனர்.

வெற்றிலை போட்டுக்கொண்டே பவானி சொன்னாள்: "இந்தச் செல்லையாவின் வருகையை நாங்களெல்லாம் எவ்வளவு ஆவலோடு எதிர்பார்த்திருந்தோம்! ஆனால் கடைசியில் பார்த்தால் அவனுக்கு ஏனோ எங்களைக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை!"

"காரணம் வேறொன்றுமில்லை! அண்ணனைக் கொன்றவர் தான் அவனுடைய தந்தை என உலகம் கூறுகிறது. அதை அவன் நம்பவில்லை..."

"நாங்களுந்தான் நம்பவில்லை" என்றாள் பவானி வெடுக்கென்று.

"எனக்கு அது தெரியும்! மேலே கேள். செல்லையாவிற்குத் தன் தந்தையைக் கொலைவழக்கில் நயவஞ்சகமாகச் சிலர் மாட்டிவிட்டு கோடித்தீவிற்கு விரட்டிவிட்டார்கள் என்ற எண்ணம் உறுத்திக் கொண்டிருக்கிறது. அங்கே அவன் தகப்பனார் திடீரென்று இறந்துபோனார். சாகும் காலத்தில், 'யாரையும் நம்பாதே' என்று அவனுக்கு அவர் உபதேசம் செய்தாராம். பையன் அதை வேதவாக்காக எடுத்துக்கொண்டுவிட்டான். கண்மூடித்தனமாக எல்லோர் மீதும் அவநம்பிக்கைப் படுகிறான். எல்லோரையும் தன் எதிரிகளென்று நினைக்கிறான்! முக்கியமாகத் தன்னுடைய தகப்பனாரின் நண்பர்களைத்தான் அதிகமாகச் சந்தேகிக்கிறான்!" என்றான் கண்ணன்.

"ஆனால் உன்னிடத்தில் மட்டும் அவன் பிரியமாயிருக்கிறானே?" என்று கேட்டாள் லலிதா.

"அதுதான் என்னுடைய விசேஷ வசீகரசக்தி!" என்று கண்ணைச் சிமிட்டினான் கண்ணன். "எல்லாம் இன்னும் இரண்டொரு நாளில் சரியாய்ப் போய்விடும். நானே அவனுக்குத் தக்க புத்தி சொல்லி, அவனைத் திருத்திவிடுகிறேன், பார்! ஆனால் இந்த விஷயம் நமக்குள்ளேயே இருக்கவேண்டும். அவனுக்குத் தெரிந்தால் அவன் என்னையும் நம்பமாட்டான்!"

"எங்களை அவனுக்கு இயற்கையிலேயே பிடிக்காவிட்டால், அவனது அந்த மனோபாவத்தை நீ சிரமப்பட்டுச் சீர்திருத்த

வேண்டிய அவசியமேயில்லை!" என்று கூறிவிட்டு, வெடுக்கென்று எழுந்து சென்றாள் பவானி.

"பார்த்தாயா? உன் சகோதரிக்கு அதற்குள் கோபம் வந்து விட்டது!" என்று லலிதாவை நோக்கினான் கண்ணன்.

"அது கிடக்கட்டும். செல்லையா கோடித்தீவிலிருந்து வந்து விட்டான் என்று எவ்வளவோ ஆசைப்பட்டோம்! அவனை இங்கே எங்கள் வீட்டிலே வைத்துக்கொள்ள வேண்டுமென விரும்புகிறோம்! அவனோ வந்த அன்றைக்கே எங்களை எதிரியாகப் பாவித்துக் குத்தலாகப் பேசுகிறான். எங்கள் அப்பாவும் முன் கோபி! நல்ல வேளை, அவன் எங்கள் வீட்டில் தங்காமல் அவனுடைய பயங்கர வெள்ளை மாளிகைக்குப் போய்விடுவதே நல்லது!" என்றாள் லலிதா.

இந்தச் சமயத்தில் துப்பறியும் கேசவனும் மெல்ல எழுந்து, ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக்கொண்டு தோட்டத்துப்பக்கம் சென்றார்.

"யார் இந்த ஆசாமி?" என்று லலிதாவைக் கேட்டான் கண்ணன்.

"இவர் ஒரு துப்பறியும் நிபுணர். கேசவன் என்று பெயர்!" என்று பெருமையுடன் புன்முறுவல் செய்தாள் லலிதா.

அந்தப் பெயரைக் கேட்டதும், தன்னையறியாமலே திடுக்கிட்டான் கண்ணன். "ஓ! துப்பறியும் கேசவனா? இவர் ரொம்பப் பிரசித்தி பெற்றவராச்சே? இங்கே எதற்காக வந்திருக்கிறார்?"

"அப்பா வரச் சொன்னாராம்!" என்றாள் லலிதா.

"எதற்காக?" என்று கேட்டான் கண்ணன்.

"அது எனக்கெப்படித் தெரியும்?"

"லலிதா, பொய் சொல்லாதே! உனக்குத் தெரியாமல் உங்க அப்பா ஒன்றுமே செய்யமாட்டார்," என்று சிரித்தான் கண்ணன்.

"எனக்குத் தெரியும் என்றே வைத்துக்கொள்ளேன். உன்னிடத்தில் அதைச் சொல்வதற்கு எனக்கு அதிகாரமில்லை!" என்றாள் அவள்.

"அது போகட்டும்! துப்பறியும் கேசவன் என்னைத் தன் அஸிஸ்டெண்டாகவோ, அமெச்சூர் துப்பறிபவனாகவோ சேர்த்துக்கொள்வாரா?"

"வேண்டுமானால் நான் கேட்டுப் பார்க்கிறேன்."

"வேண்டாம், அம்மா. நான் விளையாட்டுக்குச் சொன்னேன். நீ நிஜமாகவே அவரிடம் போய்க் கேட்டு வைக்காதே!" என்று விடைபெற்றுச் சென்றான் கண்ணன்.

அவன் போனதும் துப்பறியும் கேசவனிடம் லலிதா வந்து, "அந்தக் கண்ணன் உங்களின் கீழே வேலை பார்க்க ஆசைப்படுகிறான்! அவனால் உங்களுக்கு உதவி உண்டா?" என்றாள்.

"இருக்கலாம்! அவனை உனக்கு நன்றாகத் தெரியுமென்று நினைக்கிறேன்!"

"சிறு வயதிலிருந்தே தெரியும்! யாரும் பிரியப்படும்படி நடந்துகொள்ளக் கூடியவன்!"

"அவன் எப்படியோ செல்லையாவின் பிரியத்தையும், நம்பிக்கையையும் சம்பாதித்து விட்டான். அது கிடக்கட்டும். இந்தச்சித்த வெறியன் கனகப்பனைப்பற்றிச் சொல்லு! அவனுடைய எஜமானர் கொலையுண்ட பிறகுதான் அவனுக்குச் சித்தவெறி வந்துவிட்டதா? அதற்குப் பிறகுதான் சின்ன யஜமானரான செந்தில்நாத முதலியார் மீது அவனுக்கு க்ஷாத்திரம் ஏற்பட்டதா?"

"ஆமாம். வெள்ளை மாளிகையிலே அவன் பயங்கரமாக உறுமியவண்ணம் வசித்துக் கொண்டிருக்கிறான். செல்லையா அங்கு வரப்போவது தெரிந்ததும் அவன் இன்னும் மோசமாகி விட்டான்! கொலை அவனுடைய மூளையைக் குழப்பிவிட்டது என்கிறார் என் அப்பா!"

அந்தச் சித்த வெறியனைப்பற்றிச் சிந்தனையில் ஆழ்ந்தார் கேசவன்.

---

### அத்தியாயம் : 6

# துப்பறிபவரின் யுக்தி

---

சுமார் அரைமணி நேரத்திற்கெல்லாம், செல்லையா, பழனியப்பன், வேதாசலம், கிருஷ்ணமூர்த்தி இந் நால்வரும் அவர்கள் ஆலோசனை புரிந்த அந்தரங்க அறைக்குள்ளிருந்து ஒருவர் பின் ஒருவராக வெளியே வந்தனர். முகத் தோற்றங்களைப்

பார்க்கும்போது, அவர்களிடையே ஏதோ மனக்கசப்பு விளைந்திருப்பது தெளிவாகத் தெரிந்தது.

வக்கீல் வேதாசலம் ஒரு தர்ம சங்கடத்தில் தத்தளிப்பவர் போல் காணப்பட்டார். பழனியப்பன் ஏதோ அசட்டு உறுதி கொண்டவனாக நெஞ்சை நிமிர்த்தி நடந்தான். சர்ப்பங்கள் வாழும் புதர்களிடையே நடமாடுபவன் போல், செல்லையாவின் கண்களில் ஒருவித ஜாக்கிரபாவம் ததும்பியது. எப்போதும் புன் முறுவல் செய்யும் ஓவியர் கிருஷ்ணமூர்த்தியோ, மறைக்க முடியாத கோபாவேசம் கொண்டவராய்த் தோற்றமளித்தார்.

நால்வரும் தாழ்வாரத்தை நோக்கி வந்துகொண்டிருந்தனர். வரும்போதே, "செல்லையா, உன்னை நாங்கள் இப்போதே உன்னுடைய வெள்ளை மாளிகையில் கொண்டுபோய் விடுகிறோம். உனக்குரிய சொத்துக்கள் அனைத்தையும் உன்னிடம் ஒப்புவித்து விடுகிறோம். அதன் பிறகு இதர ஏற்பாடுகளை நீ உன் இஷ்டம் போல் செய்துகொள்ளலாம்!" என்றார் ஓவியர் கிருஷ்ணமூர்த்தி. இனிமேல் அவனுடைய மூஞ்சியிலேயே விழிக்க விரும்பாதவர் போல் அவர் வார்த்தைகள் தொனித்தன.

"நம்முடைய உதவியோ, யோசனைகளோ செல்லையாவுக்குத் தேவையில்லையாம்!" என்றார் அவர், துப்பறியும் கேசவனை நோக்கி. "அவனும் பழனியப்பனுமே எல்லாக் காரியங்களையும் பார்த்துக்கொள்ளப் போகிறார்களாம்!"

"ஆமாம்," என்று கடுகடுப்போடு கூறினான் பழனியப்பன். "சொத்துக்களை எங்கள் வசத்தில் ஒப்படைத்து விட்டு, நீங்கள் விலகிக்கொண்டு விடலாம். செல்லையாவும் நானும் சென்னையிலிருந்து ஒரு நல்ல வக்கீலைக் கொண்டுவந்து, எல்லாம் சரியாயிருக்கிறதா வென்று பரிசோதித்துக் கொள்கிறோம்!"

ஓவியர் கிருஷ்ணமூர்த்திக்குக் கோபம் பொங்கிக்கொண்டு வந்தது. பழனியப்பனை அறைய வேண்டும்போல் அவர் கை தினவெடுத்தது. அவருடைய மகள் பவானிக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை.

"செல்லையா, உன்னைப் பார்ப்பதற்கு முன்பு, நீ ஒரு காட்டு மிராண்டியாயிருப்பாயோ என்று நாங்கள் சந்தேகித்ததுண்டு. ஆனால் நீ அதைக் காட்டிலும் மோசமாயிருக்கிறாய். நீ ஒரு நன்றி கெட்ட முட்டாள்!" என்றாள் அவள் துடுக்குடன்.

செல்லையாவின் கண்கள் சினத்தால் சிவந்தன. ஏதோ பதில் கூறுவதற்கு அவன் வாயெடுத்தான். ஆனால் அடக்கிக்கொண்டான். 'நல்ல வேளையாகக் கண்ணன் நமக்கு ஏற்கெனவே எச்சரிக்கை செய்து வைத்தான். இல்லாவிட்டால் இந்தக் கிருஷ்ண மூர்த்தியையும் இவரது பெண்களையும் நமது நண்பர்களென்றல்லவா நாம் நம்பியிருப்போம்!' என்பதுபோல் பழனியப்பனை நோக்கிப் பேசாமல் பேசின செல்லையாவின் விழிகள். பவானியின் சுடு சொற்களுக்குப் பதிலளிக்காமல் விடுவதா என்ற அகங்காரம் அவன் உள்ளத்தை உறுத்தியது.

"பவானி! நான் மட்டும் முட்டாளல்ல; என் தந்தையும் கூடத்தான்! சில தகுதியற்ற நபர்களை அவர் நண்பர்களென்று நம்பி மோசம் போனார்! ஆனால், அதே தவறை நான் செய்ய மாட்டேன்!" என்றான் அவன்.

"செல்லையா, ஏன் இந்த வீண் விவகாரம்? வா, உன்னுடைய வெள்ளை மாளிகைக்குப் போகலாம்," என்று தம் இருக்கையை விட்டு எழுந்தார் துப்பறியும் கேசவன்.

அவரைச் சற்று சந்தேகக் கண்களோடு நோக்கினான் செல்லையா. துப்பறியும் கேசவன் சிரித்தார்.

"என்னுடைய ரோல்ஸ் ராய்ஸ் மோட்டார்காரைப் பார்த்து ஆசைப்பட்டாயே? அதில் நீ ஏறிப்பார்க்க வேண்டாமா?" என்றும் கேட்டார். "அதில் ஏறிப்போயே உன்னுடைய வெள்ளை மாளிகையைப் பார்த்துவிடலாம், வா!"

செல்லையாவின் பார்வை அவனையறியாமலே அந்த ரோல்ஸ் ராய்ஸ் காரின் பக்கம் திரும்பியது. அதன் கம்பீர்யத்தின் கவர்ச்சியால் அவன் முகம் மலர்ந்தது. ஆனால், பழனியப்பன் குறுக்கிட்டான்.

"அப்படியானால் நானும் செல்லையா கூடவே அந்தக் காரில் வருவேன்!" என்றான் அவன்.

"நீ யாரப்பா அழையா விருந்தாளி?" என்று அவன் பக்கமாகத் திரும்பினார் துப்பறியும் கேசவன்.

"நான் யாராய் இருந்தால் உமக்கென்ன? முதலில் நீர் யார்? அதைச் சொல்லும்."

"என் பெயர் துப்பறியும் கேசவன்! ஆனால் நீ யார் என்பது தான் எனக்கு இன்னம் சரியாகத் தெரியவில்லை!"

அந்தப் பெயரைக் கேட்டதும், ஒருவித வியப்பும், திகைப்பும் அடைந்தவனும், வாயைப் பிளந்துகொண்டு நின்றான் பழனியப்பன். செல்லையாவின் தோளில் கையை வைத்தவாறு, அவனைக் காருக்கு அழைத்துச்சென்றார் துப்பறியும் நிபுணர்.

"சரி, வெள்ளை மாளிகைக்கு எப்படிப் போகவேண்டுமென யாராவது வழி சொல்லுவீர்களா?" என்று கேட்டார் அவர்.

"சுலபமான வழிதான்! நேரே டவுனுக்குள் போய், திருவெற்றியூர் ரோடு வழியாகப் போங்கள். அதில் ஒரு கிளை ரோடு பிரியும். முக்கால் மைல் போனால் தனியாக ஒரு தோப்பில் வெள்ளைச் சலவைக்கல் மாளிகை தென்படும்!" என்றார் ஓவியர்.

முன் சீட்டில் துப்பறியும் கேசவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தான் செல்லையா. எண்பத்தைந்து மைல் வேகத்தில் கார் பறந்துகொண்டிருப்பதைக் காட்டியது ஸ்பீடா மீட்டர். அந்தப் புதுமையான அனுபவத்தால், அவன் கண்களில் மகிழ்ச்சி ததும்பியது. இதழ்களில் புன்னகை பொலிந்தது.

"இந்தக் கார் எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது!" என்றான் செல்லையா.

"வாஸ்தவம்! எனக்குக்கூட அப்படித்தான்!" என்று அவன் முகத்தைப் பார்க்காமலே பதிலளித்தார் துப்பறியும் கேசவன். பிறகு திடீரென்று எதையோ நினைத்துக்கொண்டவர் போல அவன் பக்கம் திரும்பினார்; "ஆமாம், நீ ஏனப்பா இவ்வளவு முட்டாள்தனமாக நடந்துகொள்கிறாய்?" என்று கேட்டார்.

இந்த வார்த்தையைக் கேட்டதும், அதுகாறும் செல்லையாவின் முகத்தில் ததும்பிய மலர்ச்சியானது பளிச்சென்று மறைந்து, அதில் கடு கடுப்பும் சந்தேகமும் குடிபுகுந்தது.

"என்ன? நான் முட்டாள்தனமாக நடந்துகொள்கிறேனா? இப்படி மரியாதையில்லாமல் பேசுவதற்காகத்தான் என்னைக் காரில் அழைத்து வந்தீரா?"

"உன்னை அவமதிக்க நான் ஆசைப்படவில்லை. ஆனால், நீதான் உன்னையறியாமலே உன் நண்பர்களை அவமதித்து விடுகிறாய்! அதனால் உனக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகளையும் இழந்துவிடுகிறாய்!" என்றார் துப்பறியும் கேசவன்.

"என் நண்பர்களென்று நீர் யாரைக் குறிப்பிடுகிறீர்? ஓவியர் கிருஷ்ணமூர்த்தியையா?"

"ஏன், அவருடைய பெண்கள்..."

"இல்லை. அவர்களெல்லாம் என் நண்பர்களல்ல," என்று அழுத்தமாகக் கூறினன் செல்லையா. "ஒரு வேளை அவர்கள் என் விரோதிகளாகக்கூட இருக்கலாம்! ஏன் நீர் கூட என் விரோதியாய் இருக்கலாம்!" என்ருன் செல்லையா.

"உண்மைதான்!" என்று ஆமோதித்தார் துப்பறியும் கேசவன். "மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் தான்! நீ விரோதிகள் வேண்டுமென்று தேட ஆரம்பித்தால், விரைவில் அவர்களைச் சந்திப்பாய்! இருந்தாலும் உனக்கு யாருமே ஓரளவாவது நண்பர்களில்லையா?"

"ஏன் இல்லை? கண்ணனும் பழனியப்பனுமே ஓரளவாவது என் உண்மையான தோழர்கள்!"

"ஓஹோ! அப்படியானல் நீ ஒரு பெரிய மேதாவிதான்! உன்னை யாருமே ஜயிக்க முடியாது!" என்று சிரித்தார் துப்பறியும் கேசவன்.

"நான் மேதாவியோ, முட்டாளோ? அதைப்பற்றி உமக்குக் கவலையில்லை. உமக்குச் சம்பந்தமில்லாத விவகாரத்தில் நீர் ஏன் தலையிடுகிறீர்?" என்ருன் செல்லையா.

"அதுதான் என் தொழில் தம்பீ!" என்று சிரித்தார் துப்பறியும் கேசவன். "நான் ஒரு துப்பறியும் நிபுணன்! அப்படியென்ருல் என்னவென்பது உனக்குத் தெரியுமல்லவா?"

"தெரியும்! துப்பறியும் நாவல் ஒன்றை நான் படித்திருக்கிறேன். நீர் ஒரு போலீஸ்காரர்!"

"அதுதான் இல்லை. சர்க்காரிடம் சொற்ப சம்பளம் வாங்கிக்கொண்டு பொது மக்களுக்காக இரவு பகலாய் அரும்பாடு பட்டு உழைப்பவர்கள் போலீஸ்காரர்கள். ஆனல் நானே, தனிப்பட்டவர்களுக்காகச் சொற்பமாக வேலை செய்துவிட்டு, ஏராளமாகப் பணம் வாங்குவேன். எனக்குப் பணம் கொடுக்கும் தகுதியுடையவர்கள் யார் வேண்டுமானலும் என்னைப் பயன்படுத்திக் கொள்ளலாம்!" என்ருர் துப்பறியும் கேசவன்.

"நீர் இப்பொழுது யாருக்காக வேலை செய்கிறீர்?"

"ஓவியர் கிருஷ்ணமூர்த்திக்காக! முத்தையா முதலியாரைக் கொலை செய்தது உன் தந்தையல்லவென்று அவர் நிச்சயமாக

கம்புகிறுர்! உண்மையான கொலேகாரனேக் கண்டுபிடிப்பதன் மூலம், உன் தந்தையின் மீதுள்ள அபவாதத்தை அகற்றுவதற் காக அவர் என்னே அமர்த்தியிருக்கிறுர்!"

இதைக் கேட்டதும், சிறிது நேரம் மௌனமாகச் சிந்தனே செய்தான் செல்லேயா. பிறகு திடீரென்று கேட்டான், "கிருஷ்ண மூர்த்தியும் நீரும் நெடுநாள் சிநேகிதர்களோ?"

"அதெல்லாமில்லே! இன்று முதற்கொண்டுதான் அவர் எனக்கு அறிமுகமாகியிருக்கிறுர்!"

"என் தந்தையின் விஷயத்தில் அவருக்கென்ன அவ்வளவு அக்கறை?"

"அவர் உன் தந்தையின் நண்பர் என்பதனுல்தான்!"

"அதை நான் நம்ப முடியாது. நீர் அவருக்காக வேலே செய்யவேண்டிய அவசியமுமில்லே!"

"அதெப்படி முடியும்? எனக்குப் பணம் கொடுப்பவர் யாராயிருந்தாலும் நான் வேலே செய்யத்தானே வேண்டும்?"

"உமக்கு அவர் எவ்வளவு கொடுப்பார்?"

"அதை இன்னும் நாங்கள் பேசிக்கொள்ளவில்லே!"

"அவர் கொடுப்பதைவிட இரண்டு மடங்கு சன்மானம் உமக்கு நான் தருகிறேன். எனக்கு நீர் வேலே செய்வீரா?"

"தாராளமாக!" என்று சொல்லிக்கொண்டே வெள்ளே மாளிகையின் காம்பவுண்டுக்குள் காரைத் திருப்பி, ஒரு மரத்தின் நிழலில் நிறுத்தினுர் துப்பறியும் கேசவன்.

"ஆனுல் ஒரு விஷயம்! இதை நான் ஓவியர் கிருஷ்ண மூர்த்தியிடம் தெரிவித்துவிடவேண்டும்."

"அவர் உம்மை விட மறுத்தால்?"

"அவ்வளவு பணம் உன்னேப்போல் கொடுக்க அவரிடம் இல்லே! செல்லேயா! அவரை நான் சரி பண்ணிக்கொள்கிறேன். அதைப் பற்றி உனக்குக் கவலே வேண்டாம்," என்றுர் துப்பறியும் கேசவன்.

"உம்மைத் துப்பறியும் வேலேக்கு வைத்துக்கொண்டால் உண்மையை மட்டுந்தான் கண்டுபிடிப்பீரா?"

“ஆமாம். அப்புறம் வேண்டாம் என்றாலும் விடமாட்டேன்! உதாரணமாகப் பார், செல்லையா! என்னைத் துப்பறியும் வேலைக்கு ஒருவர் அமர்த்திக்கொண்டார்! அதாவது உண்மையான கொலைகாரனைக் கண்டுபிடிக்கும்படி சொன்னார்! நான் கஷ்டப்பட்டு அவர்தான் அந்தக் கொலைகாரன் எனக் கண்டுபிடித்தேன். அவர் எனக்குச் சன்மானம் கொடுக்கவில்லை. ஆனால் தூக்குமரத்தில் தொங்கினார்.”

அதே சமயம் ஓவியர் கிருஷ்ணமூர்த்தி, வக்கீல் வேதாசலம், பழனியப்பன் மூவரும் வெள்ளை மாளிகைக்கு வேறொரு மோட்டார் காரில் வந்திறங்கினார்கள்.

“ஏன் வெளியே நிற்கிறீர்கள்? பங்களாவின் உள்ளே போய் உட்கார்ந்திருக்கலாமே?” என்று துப்பறியும் கேசவனை நோக்கினார் ஓவியர் கிருஷ்ணமூர்த்தி.

வெள்ளை மாளிகை மர்ம மாளிகைபோல் காட்சியளித்தது மதில் சுவரையுடைய ஒரு பெரிய தோப்பின் நடுவிலே, பிரும்மாண்டமான வெண்ணிறத் தூண்களுடன் வானளாவி நிற்கும் பழையகாலத்துக் கட்டிடம் அது. அந்தப் பங்களாவைச் சுற்றிலும் பூப் பந்தல்களும், தடாகங்களும் கவனிக்கப்படாமல் நிராதரவாய் இருந்தன. அந்தக் காம்பவுண்டிற்குள், பங்களாவிற்குச் சிறிது தள்ளி, பத்மாவதி வசிக்கும் சிறு விடுதி. விருந்தினர் அவுட் ஹவுஸாகக் கட்டப்பட்ட விடுதி அது! இன்னொருபுறம் வேலைக்காரன் கனகப்பன் வசிப்பதற்கு ‘சர்வெண்டு க்வார்ட்டர்ஸ்’! வெள்ளை மாளிகைத் தோப்பின் பின்புறம், சமுத்திரத்தில்போய் விழக்கூடிய கால்வாய் ஓடியது.

“பங்களாவில் இப்போது யாரிருக்கிறார்கள்?” என்று கேட்டான் செல்லையா.

“குருந்தாயி என்ற வேலைக்காரியை அமர்த்தியிருக்கிறேன்! அவள் காலையில் வந்து, சாயங்காலம் வீட்டுக்குப் போய்விடுவாள். உனக்கிஷ்டமானால் அவளைத் தொடர்ந்து வேலையில் வைத்துக் கொள்ளலாம்...”

“இல்லை, இல்லை. நாங்கள் அதற்கெல்லாம் வேறு ஏற்பாடு செய்துகொள்கிறோம்!” என்று குறுக்கிட்டான் பழனியப்பன்.

அவனுக்கு ஒன்றும் பதில் சொல்லவில்லை ஓவியர் கிருஷ்ணமூர்த்தி. நேரே சென்று, அவர் பங்களாவின் முன் வாசல் கதவைத் தட்டினார். நடுத்தர வயதுள்ள மாதொருத்தி வந்து கதவைத் திறந்தாள். அவள்தான் குருந்தாயி. எல்லோரும் வெள்ளை மாளிகையின் உள்ளே நுழைந்தனர்.

அது மிகவும் பழங்காலத்துக் கட்டிடமாகையால், ஜன்னல்கள் அதிகமில்லாதபடி, உள்ளே இருளடைந்திருந்தது.

முதலில் ஒரு பெரிய ஹால். அந்த ஹாலில், வெளிக் கதவுக்கு நேரே, மாடிக்குச் செல்லும் ஒரு விசாலமான படிக்கட்டு. அந்தப் படிக்கட்டின் ஒருபுறத்தில், பழமையான பெரிய சுவர்க் கடிகாரம் ஒன்று மாட்டப்பட்டிருந்தது. அந்தக் கடிகாரத்தின்மீது தூசியும் சிலந்தி வலைகளும் படர்ந்திருந்தன.

"முத்தையா முதலியாரது கொலை வழக்கில் பிரதானமாகப் பிரஸ்தாபிக்கப்பட்ட கடிகாரம் இதுதான் போலும்?" என்று வினவினார் துப்பறியும் கேசவன்.

"ஆம்; இதுவேதான் அந்தக் கடிகாரம்!" என்று பதிலளித்தார் ஓவியர் கிருஷ்ணமூர்த்தி. "பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்பு அந்தக் கொலை நடந்தது. ஆனால் அன்றுமுதல் இன்றுவரை இங்குள்ள தட்டுமுட்டுச் சாமான்களைக்கூட யாரும் இடம் பெயர்த்து எடுத்து வைக்கவில்லை. இவ்வளவு பெரிய வீட்டிற்கு ஒரே வேலைக்காரியை அமர்த்திபிருக்கிறபடியாலே, சமையற்கட்டும் சல்லாப கூடமும் மட்டுந்தான் கூட்டிச் சுத்தமாக வைக்கப்பட்டிருக்கின்றன! மற்ற அறைகளெல்லாம் மூடப்பட்டே இருந்துவந்திருக்கின்றன. இந்த வீடு முழுவதையும் கவனித்துவைத்துக் கொள்ளவேண்டுமானால் நாலைந்து ஆட்கள் தேவைப்படும்! இதோ பாருங்கள்; இந்தப் படிக்கட்டுக்கு வடக்குப் புறத்திலிருப்பதுதான் முத்தையா முதலியாரின் அந்தரங்க அறையாயிருந்தது. இதே அறையில்தான் அவர் நடு இரவில் கொலை செய்யப்பட்டுக் கிடந்தார்! பன்னிரண்டு வருஷங்களுக்குப் பிறகு இப்போதுதான் திறந்து பார்க்கிறோம்!" என்றார் ஓவியர் கிருஷ்ணமூர்த்தி.

அந்தப் பயங்கரமான அறையின் கதவைத் திறந்து, உட்புறத்தே உற்றுப் பார்த்தார் துப்பறியும் கேசவன்; பிறகு, அவ்வறையின் வாயிற்படியில் நின்றவாறே, அந்த ஹால் முழுவதையும் தன் விழிகளால் துழாவினார்; அங்கிருந்து படிக்கட்டில் வந்து ஏறி, அதன்மேல் கோடி வரையில் நடந்துபோய் மறுபடியும் கீழே இறங்கினார். அவர் முகத்தில் ஒரு விநோதமான புன்னகை நிலாவீசலாயிற்று.

ஆனால் இதிலெல்லாம் சிரத்தை கொள்ளவில்லை செல்லையா. அந்த மாபெரும் மாளிகையின் கம்பீரமான தோற்றம் அவனை பிரமிக்க வைத்தது. குழந்தைப் பருவ முதல் அவன் கோடித் தீவில் அனுபவித்த குடிசை வாழ்க்கை எங்கே? இப்போது அவன்

அனுபவிக்கப் போகும் இந்த உப்பரிகையின் உல்லாச வாழ்வு எங்கே? உண்மையிலேயே எல்லாம் ஒரு கனவு போலிருந்தது அவனுக்கு. மனங்கொள்ளாப் பெருமிதம் அவனது வாலிப விழிகளில் ததும்பியது.

"பழனியப்பா, இந்தப் பங்களா எப்படி? உனக்குப் பிடித்திருக்கிறதா?" என்முன் செல்லையா தன் உற்சாகத்தை வெளிக் காட்டாத தொனியில். பழனியப்பன் ஒருவன் மீதுதான் தற்காலீகமாக அவனுக்கு நம்பிக்கை; மனப்பூர்வமான நட்பு! "அம்மாடி! எம்மாம் பெரிய வீடு! இது நிஜமாகவே உன்னுடையதாகப் போகிறதா, செல்லையா?" என்று வாயைப் பிளந்தான் பழனியப்பன்.

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கையிலேயே, அங்கு வாசற்படியில் வந்து நின்ருள் ஒரு பருவப் பெண். அவள் அணிந்திருந்த நீல ரவிக்கையும், செந்நிற வாயில் சேலையும் அவளது பருவ அழகை மிகவும் கவர்ச்சிகரமாக எடுத்துக்காட்டின. அவளைச் சுற்றி கம்மென்ற சந்தனச் சோப்பின் வாசனையும், பௌடர், அத்தர் சென்டு, ஜாதி மல்லிகை முதலானவற்றின் மணமும் வீசின. அவளைப் பார்த்த மாத்திரத்திலேயே, இவள்தான் மஞ்சுளா போலும் என்று ஊகித்துக்கொண்டார் துப்பறியும் கேசவன். மயக்கு விழி மோகினியாக நடிக்க வந்திருக்கும் சினிமா நடிகை போலவே அவள் தோற்றமளிப்பதையும் துப்பறியும் கேசவன் புரிந்துகொண்டார். வாயிற்படியில் நின்றவாறே, அவள் தன் கரு நீலக் கண்களால் செல்லையாவைக் கனிவோடு நோக்கினாள். "செல்லையா, என்னை உனக்குத் தெரியவில்லை? நான்தான் மஞ்சுளா! நாமிருவரும் இதே வீட்டில் குழந்தைகளாய் விளையாடியிருக்கிறோம். எனக்கு அதெல்லாம் அப்படியே நினைவிருக்கிறது. உனக்கு நினைவிருக்கிறதா?" என்ருள் அவள், ஒரு பெருமூச்சுடன். அவனுடைய நினைவால் அப்படியே இத்தனை வருஷங்களும் வாடிக்கொண்டிருப்பவள் போலவே உருக்கமாக நடித்தாள் மஞ்சுளா.

"நன்ருய் நினைவிருக்கிறது!" என்று வெட்கம் ததும்பக் குறுநகை புரிந்தான் செல்லையா. அவ்விருவரையும் மாறிமாறி நோக்கிப் பல்லை பிளித்தான் அவலட்சண முகம் படைத்த பழனியப்பன்.

"உன்னை அவன் மறக்கவேயில்லை, அம்மா. உன் போட்டோவை அவன் பன்னிரண்டு வருஷ காலமாய்த் தன் சட்டைப் பையிலேயே சுமந்து திரிகிருன்!" என்ருன் பழனியப்பன்.

"நிஜந்தானா?" என்று வியப்போடு வினவினாள் மஞ்சுளா, உணர்ச்சிவசமானவள் போன்ற பார்வையுடன்.

"ஆமாம்!" என்று லஜ்ஜை ததும்பத் தன் தலையைக் கவிழ்த்தான் செல்லையா.

"நீங்கள் யார்? செல்லையாவின் சிநேகிதரா?" என்றாள் அவள் பழனியப்பனை நோக்கி.

"ஆமாம் பெண்ணே! நானும், அவனும் பழமையான தோழர்கள். அதேபோல் உனக்கும் அவன் பால்யத் தோழன். இப்போது நாம் மூன்றுபேரும் ஒன்றாகிவிட்டோம்! இல்லையா?" என்றான் நேசபாவத்தோடு பழனியப்பன்.

"ஆமாம், ஆமாம்!" என்றாள் மஞ்சுளா. பழனியப்பன் ஒரு தினுசான பேதை என்று அவளுக்குப்பட்டது. "நீங்கள் செல்லையாவோடு கோடித் தீவில் வசித்தீர்களா? அவர் அங்கே எப்படியெல்லாம் வாழ்ந்தார் என்று தெரிந்துகொள்ளவேண்டு மென்று எனக்கு எவ்வளவு ஆசை தெரியுமா?" என்றாள் மஞ்சுளா.

"அதை செல்லையாவின் வாயாலேயே கேட்டால்தான் உங்கள் ஆசை அடங்கும்!" என்று சிரித்தான் பழனியப்பன்.

அவள் கடைக் கண்ணால் செல்லையாவை நோக்கினாள். "செல்லையா, உன் வேலையெல்லாம் முடிந்த பிறகு நம் வீட்டுக்கு வாயேன். கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு வரலாம்!" என்று கூறிய மஞ்சுளாவின் குரலில் பரிவு மிளிர்ந்தது.

"ஆகட்டும்" என்றான் செல்லையா பாசப் புன்னகையோடு, அவளைக் கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டே. அவனது நெஞ்சத்தைக் காந்தம்போல் இழுத்துக்கொண்டே வெளியே ஓடினாள் மஞ்சுளா.

ஓவியர் கிருஷ்ணமூர்த்திக்கு ஏனோ அந்த மாளிகையில் நிற்பதற்கே பிடிக்கவில்லை. வக்கீல் வேதாசலத்தை நோக்கி, "வக்கீல் சார், செல்லையாவின் சொத்துக்களையெல்லாம் நீங்களேயிருந்து அவனிடம் ஒப்படையுங்கள்! நான் வீட்டுக்குப் போகிறேன்!" என்றார் அவர்.

"நான் கூடத்தான் புறப்பட வேண்டும்!" என்றார் தப்பறியும் கேசவன்.

"ஏன்? நீங்கள் இங்கேயே தங்கியிருந்து எனக்காக வேலை செய்ய மாட்டீர்களா?" என்று ஆவலோடும் பீதியோடும் கேட்டான் செல்லையா.

"உன் வேலையாகத்தான் இப்போது நான் சென்னைக்குப் போகிறேன். நாளைக் காலையில் திரும்பி வந்துவிடுவேன்!" என்றார் துப்பறியும் கேசவன்.

கேசவனும் செல்லையாவும் இப்படிப் பேசிக்கொள்வது ஓவியர் கிருஷ்ணமூர்த்திக்கு வியப்பாக இருந்தது. வெள்ளை மாளிகையை விட்டுப் புறப்பட்டுப் போகும் வழியில், செல்லையாவுக்கும் தனக்கும் நடந்த சம்பாஷணைகளை அவரிடம் விளக்கிக் கூறினார் துப்பறியும் கேசவன்.

"நல்ல யுக்தி செய்தீர்கள்!" என்று சிரித்தார் ஓவியர் கிருஷ்ணமூர்த்தி. "அந்தப் பைத்தியக்காரப் பையன் எங்களை நம்பமாட்டேன் என்கிறான். என்னை ஓர் அணுவளவுகூட நம்ப முடியாது என்பதுபோல் நேரிலே என் முகத்தில் அடித்ததுமாதிரிப் பேசிவிட்டான். இதற்குமேல் அவனைப் பார்க்கக்கூட எனக்குப் பிடிக்கவில்லைதான். ஆனால் அவனுடைய அப்பாவின் சினேகிதத்திற்காக அவனைப் பாதுகாக்க வேண்டிய கடமை இருக்கிறது! முறித்துக்கொண்டு போகிறவனை என்ன செய்வது என யோசித்தேன். ஆனால் நீங்கள் சாதுரியமாகப் பேச்சுக்கொடுத்து அவனே உங்களைத் துப்பறியும் வேலைக்கு அமர்த்திக்கொள்ளும்படி செய்துவிட்டீர்கள்!" என்றார் ஓவியர் கிருஷ்ணமூர்த்தி.

"இதில் சாதுர்யம் ஒன்றுமில்லை! நான் பட்டவர்த்தனமாகச் சில வார்த்தைகள் பேசினேன். பையன் என் விருப்பம்போல் வளைந்து வந்துவிட்டான்!"

"ரொம்ப சந்தோஷம்! அடுத்தபடியாக நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?"

"முத்தையா முதலியார் கொலை வழக்கை விசாரித்த நீதிபதியையும், அதில் சாட்சி சொன்ன கிழச்சாமியாரையும் நான் பார்த்துவரப் போகிறேன்! அவரை எங்கே கண்டுபிடிக்கலாம் என்று உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும்! அறவானந்த அடிகளார் மடத்தில் போய் கேட்டுப் பாருங்கள். ஆனால் அந்தச் சாமியாரை நீங்கள் விசாரிப்பதால் உங்களுக்கு ஒரு பலனுமில்லை. கொலை வழக்கின் விசாரணையில் சாட்சியம் சொன்னதைத் தவிரப் புதிதாக ஒன்றையும் அவர் சொல்லிவிடப்போவதில்லை!" என்றார் ஓவியர்.

"அதையும் பார்க்கலாம். ஏதாவது ஒரு யூகம் கிடைக்கலாம்!" என்றார் துப்பறியும் கேசவன்.

அத்தியாயம் : 7

# கேசவனைப் பிடிக்கவில்லை

அன்று மாலை நான்கு மணியாயிற்று. சொத்துக்களின் விவரமடங்கிய சில முக்கியமான தஸ்தாவேஜிகளைச் செல்லையா விடம் ஒப்படைத்துவிட்டு, வக்கீல் வேதாசலமும் தம் வீட்டுக்குப் போய்விட்டார். பழனியப்பன் மட்டும் ஏதோ கிலேசம் பிடித்தவன் போல் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தான்.

"என்ன பழனீ, ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்?" என்று கேட்டுக்கொண்டே, அவன் அருகில் வந்து அமர்ந்தான் செல்லையா.

"ஒன்றுமில்லை, நண்பா! நான் ஊருக்குப் போகவேண்டும்!" என்றான் பழனியப்பன்.

"ஊருக்கா? எந்த ஊருக்கு?"

"என் சொந்த ஊருக்கு."

"ஏன்? அதற்குள் என்ன அவசரம்?"

"இனிமேல் நான் இங்கு எதற்காக இருக்கவேண்டும்? உனக்கோ வீடு, வாசல், சொத்து, சுகம் எல்லாம் வந்துவிட்டது. காதலில் உனக்கு நாட்டமிருக்குமானால், மஞ்சுளா அதற்காகக் காத்துக்கொண்டிருக்கிறாள். உனக்கு உயிர்த் தோழனாக இருந்து உதவிபுரியக் கண்ணன் இருக்கிறான். இதர விஷயங்களில் உனக்கு வழிகாட்டுவதற்குத் துப்பறியும் கேசவன் வந்து சேர்ந்துவிட்டார். இனி என்னுடைய தேவை உனக்கு எதற்காக வேண்டும்?" என்றான் பழனியப்பன்.

அவன் இப்படிப் பேசுவது, செல்லையாவுக்கு மிகவும் ஆச்சரியமாயிருந்தது. ஒருவேளை, எல்லா மனிதருக்கும் இயல்பாகவே எழக்கூடிய ஓர் அற்பப் பொறாமைதான் இதற்குக் காரணமாயிருக்குமோவென்று அவன் சந்தேகித்தான். ஆனால் அதைக் காட்டிக்கொள்ளாமல், "பழனீ, நீ என்ன சுத்த அசடாயிருக்கிறாய்? மற்றவர்கள் ஆயிரம் பேர் இருந்தாலென்ன? எனக்கு நீயல்லவா உண்மையான நண்பன்? உன்னை விட்டு நான் அரைக்ஷணம் பிரிந்திருக்க மாட்டேன். எப்போதும் நீ என் கூடவேதான் இருக்கவேண்டும்!" என்றான் அவன்.

"அது முடியாது, செல்லையா!" என்று உறுதிவாய்ந்த தொனியில் உரைத்தான் பழனியப்பன். "நான் குப்பை மேட்டில் பிறந்தவன். இம்மாதிரி உப்பரிகையின் வாசம் எனக்கு ஒரு போதும் ஒத்துக்கொள்ளாது. என்றைக்கு இருந்தாலும் ஒரு நாளைக்கு இதை விட்டு நான் ஓட வேண்டியவன்தான். அந்தக் காரியத்தை இன்றைக்கே செய்துவிட்டால் எல்லோருக்கும் நல்லது. ஆனால் நீ எனக்கு ஓர் உதவி செய்யவேண்டும். அதாவது, கொஞ்சம் பண உதவி. அதுவும் உன்னிடம் நான் அதிகம் எதிர் பார்க்கவில்லை. ஒரு நூறு ரூபாய் கொடு. நான் போய்விடு கிறேன்!"

"உனக்குப் பணம் தேவையானால், நூறு ரூபாய்தானா? எவ்வளவு வேண்டுமானாலும் தருகிறேன். நாளையே தருகிறேன். ஆனால் நான் உன்னைப் போகவிட மாட்டேன்!"

"நான் போகத்தான் போகிறேன்!"

"நீ இவ்வளவு பிடிவாதமாகப் பேசுவதற்குக் காரணம்?"

"அந்தத் துப்பறியும் கேசவனை எனக்குப் பிடிக்க வில்லை!" என்றான் பழனியப்பன்.

"அட பைத்தியமே! இந்த அற்ப விஷயத்துக்காகவா நீ இவ்வளவு அங்கலாய்த்தாய்? நான் என்னவோவென்று பயந்து விட்டேன்! துப்பறியும் கேசவனை உனக்குப் பிடிக்காவிட்டால் அவரை நாளையே போகச் சொல்லிவிடுவோம்!"

"வேண்டாம். எனக்குப் பிடிக்காவிட்டாலும், அவனை உனக்குப் பிடித்திருக்கிறது. அவனுடைய சேவை உனக்குத் தேவைப்படும். அவனைப் போன்ற ஒரு திறமைசாலியான துப்ப றியும் நிபுணன் இந்த இந்தியாவிலேயே கிடையாது. ஆனால் என்னைப்போன்ற நண்பர்கள் உனக்கு எத்தனையோபேர் கிடைப் பார்கள். மேலும், நான் உன் கூடவே இருப்பதனால் உனக்கு என்ன பிரயோஜனம்? உண்மையில் நான் இங்கு வந்திருக்கவே கூடாது. கோடித்தீவிலேயே தங்கியிருக்க வேண்டும். இனி அதை நினைத்து என்ன பிரயோஜனம்?" என்று விரக்தியோடு புன்ன கைத்தான் பழனியப்பன். கடைசியாக, "செல்லையா, நாளைக் காலையில் துப்பறியும் கேசவன் இங்கு திரும்பிவருவதற்குள், நான் இவ்விடத்தை விட்டுப் போய்விட வேண்டும்!" என்று தீர்மானமாகப் பழனியப்பன் கூறி முடித்தான்.

"அப்படியானால், துப்பறியும் கேசவனுக்கும் உனக்கும் ஏற்கெனவே ஏதேனும் பகைமையுண்டா, பழனியப்பா?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை, செல்லையா! இதற்கு முன்பு அவனை நான் பார்த்ததுகூடக் கிடையாது. ஆனால் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். நாம் இந்தியாவுக்குத் திரும்பியதும் அவன் நம்மை நிழல்போல பின் தொடருவானென்று நான் நினைக்கவேயில்லை. இனி நான் இங்கிருப்பது ஒரு நாளும் சாத்திய மல்ல. தயவு செய்து என்னை வற்புறுத்தாதே!" என்றான் பழனி யப்பன் கெஞ்சலான குரலில்.

இவன் ஏன் இப்படிப் பேசுகிறான் என்று செல்லையாவுக்குக் கொஞ்சம்கூடப் புரியவில்லை. பழனியப்பன் தன் தீர்மானத்தை மாற்றிக்கொள்வான் என்றும் அவனுக்குத் தோன்றவில்லை.

"சரி, பழனி. நீ ஏதோ ஒரு பிடிவாதத்தில் இப்படிப் பேசு கிறாய். ஆனால் எனக்காக நீ உன் திட்டத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எதற்கும், இன் றிரவு நன்றாக ஆலோசித்துப் பார். நாளைக் காலையில் இதைப் பற்றி ஒரு முடிவுக்கு வரலாம்!" என்றான் செல்லையா.

---

அத்தியாயம் : 8

# மஞ்சுளாவின் யோசனை!

---

செல்லையாவும் பழனியப்பனும் வெள்ளை மாளிகையில் உரையாடிக் கொண்டிருந்த அதே நேரத்தில், அதன் ஒருபுறமுள்ள பத்மாவதியின் வீட்டில் அவளும் அவள் மகள் மஞ்சுளாவும் ஓர் அந்தரங்கமான சம்பாஷணையில் ஈடுபட்டிருந்தனர்.

"அம்மா! செல்லையா என் வலைவீச்சில் வீழ்ந்துவிட்டான் என்றே நிச்சயித்துக்கொள்! பன்னிரண்டு வருஷ காலமாய் அவன் என் போட்டோவைக் கைவிடாது காப்பாற்றி வந்திருக் கிறான்! இன்று என்னை நேரில் கண்டவுடன் அவன் எவ்வளவு மகிழ்ச்சியடைந்தான் தெரியுமா? என் அழகைப் பார்த்து அப்ப டியே பிரமித்துப்போய், பெண்களைப் போல் நாணிக் கோணித் தலை கவிழ்ந்து கொண்டான்! முட்டாள்!" என்று சிரித்தாள் மஞ்சுளா. "உண்மையில் அவனும் நன்றாய் அழகாய்த்தானிருக் கிறான், அம்மா," என்று சொல்லிக்கொண்டே வெற்றிலைக் காவி யால் தன்னுடைய உதடு சிவந்திருக்கிறதா வென்று அழகு

பார்த்துக் கொண்டாள். அவள் உள்ளத்தில் ஏதோ ஒரு திட்டம் உருவாகி வருவதற்கு அறிகுறியாக, அவளது புருவங்கள் சுழித்தன.

இரண்டு நிமிஷங்கள் மௌனமாகச் சிந்தித்துவிட்டு, அவள் மீண்டும் பேசினாள் :

"அம்மா! கண்ணனும் கோதண்டமும் என்னென்னவோ யுக்தி செய்கிறார்கள். அந்த யுக்திகளெல்லாம் சித்தியாகி, செல்லையாவின் சொத்துக்களெல்லாம் நம் கைக்கு வந்தாலும், அதை நாம் முழுசாக அனுபவிக்க முடியாது......" என்று குரலை இழுத்தாள் மஞ்சுளா.

"ஆமாம். கண்ணனுக்கும் கோதண்டத்துக்கும் நாம் ஒரு பெருந் தொகையைப் பகிர்ந்து கொடுக்கவேண்டி வரும்!" என்றாள் பத்மாவதி.

"அதில் நமக்கு லாபமென்ன? அதைவிட, அவ்விருவருடைய தயவையும் எதிர்பாராமல், நாமே நம் சொந்த முயற்சியால் அந்தச் சொத்துக்களை அடைந்துவிட்டால்?"

"எப்படியடி?"

"செல்லையாவை நான் கலியாணம் செய்துகொள்வதன் மூலம்!" என்று கூறிவிட்டு, தன் அன்னையின் முகபாவத்தைக் கூர்ந்து கவனித்தாள் மஞ்சுளா.

பத்மாவதியின் முகத்தில் ஒருவித அவநம்பிக்கை நிழலாடியது. "திருமணத்தின் மூலம் சொத்துக்களைப் பெறலாமென்று, நானும் இப்படித்தான் என் வாழ்வில் இரண்டு தடவைகள் முயன்று பார்த்தேன். ஒன்றும் பலிக்கத்தான் இல்லை!" என்றாள் அவள்.

"ஆனால், இந்தத் தடவை என் முயற்சி நிச்சயமாகப் பலிக்குமென்று நான் திண்ணமாகக் கூறுகிறேன்!" என்று எதிரேயிருந்த மேஜைமீது தன் கையால் ஓங்கியடித்தாள் மஞ்சுளா. "இன்னும் நான்கு மாதங்களில், வெள்ளைமாளிகையின் ஐச்வர்யங்கள் அனைத்திற்கும் செல்லையாவே பரிபூரண உரிமையாளனாகி விடுவான். நான் அவனுடைய மனைவியாகிவிட்டால், அதன்பிறகு அவன் திடீரென்று இறந்துபோனால்கூட, சொத்துகளெல்லாம் அவனது மனைவியாகிய எனக்கே கிடைக்கும்! என் அம்மாவின் கடந்தகால சிறைவாழ்க்கை அதன்பிறகு வெளியானால்கூடக் கவலையில்லை!' என்றாள் அவள்.

தன் மகளின் வார்த்தைகளை ஆமோதிக்கவோ, ஆட்சேபிக்கவோ இல்லாமல், சிறிது நேரம் மௌனமுற்றிருந்தாள் பத்மாவதி.

"இதில் யோசிப்பதற்கு என்ன அம்மா இருக்கிறது? நான் கூறுவதுதான் சரியான வழி! நீ மட்டும் 'சரி' யென்று ஒரு வார்த்தை சொல்லம்மா. உரலைச் சுற்றும் நொண்டிக் கோழியைப் போல், அந்தச் செல்லையாவை என் பின்னாலேயே சுற்றித் திரிய வைக்கிறேன்!" என்று மமதையோடு சிரித்தாள் மஞ்சுளா.

"கோடித் தீவில் செல்லையா இத்தனை வருஷங்களாக ஒரு நாகரிக யுவதியையும் காணமல் காலத்தைக் கழித்துவிட்டு வந்திருக்கிறான். உன்னுடைய போட்டோவின் மீதும் ஆசையை வளர்த்துக் கொண்டிருக்கலாம்! ஆனால் அது நீடித்திருக்க வேண்டுமேயடி!"

"ஏனம்மா நீடித்திருக்காது? என்னைவிட வேறு எவளம்மா இந்த வட்டாரத்தில் அழகானவள்?" என்று கேட்டாள் மஞ்சுளா.

"யாராவது உன்னைப்பற்றி எதிராகச் செல்லையாவிடம் வத்தி வைக்கக் கூடும்! அல்லது நீ நினைக்கிறபடி, அவன் அவ்வளவு முட்டாளாகவும் இல்லாமலிருக்கலாம்!"

"எனக்கெதிராக யாரம்மா செல்லையாவிடம் சொல்ல முடியும்? கிருஷ்ணமூர்த்தியின் பெண்களை அவன் நம்பமாட்டான்!"

"சரிதான், மஞ்சுளா. ஆனால், நம் கண்ணனும், கோதண்டமும் உன்னைச் சந்தேகித்து விடாதபடி ஜாக்கிரதையாக நடந்து கொள்ளடி! நாம் குறுக்குத்திட்டம் போடுவதை அவர்கள் விரும்பமாட்டார்கள்! அதில் அவர்களுக்கு லாபமில்லை! மேலும் நீ இப்படி நினைக்கிறாய் என்று தெரிந்தாலே நம் கண்ணனே நமக்கு எதிரியாகிவிடக் கூடும்!" என்றாள் பத்மாவதி.

"அந்தக் கவலை உனக்கு வேண்டாமம்மா! அதை நான் பார்த்துக்கொள்கிறேன்!" என்று சிரித்தாள் மஞ்சுளா.

---

அத்தியாயம் : 9

# சதித் திட்டம்

---

தாயும், மகளும் ஒரு தனித்திட்டம் வகுத்துக்கொண்டிருந்த அதே சமயத்தில் வேறோரிடத்தில் வேறொரு சதியைத் தயாரித்துக் கொண்டிருந்தனர் கண்ணனும், கோதண்டமும்.

"விஷயங்கள் போய்க்கொண்டிருக்கும் தோரணை ஒன்றும் நன்ருய் இல்லை. இந்தத் துப்பறியும் கேசவன் இதில் சம்பந்தப் பட்டிருப்பது. நம் திட்டங்களுக்கு எல்லாம் பெருத்த இடையூருய் முடியப்போகிறது!" என்று அவநம்பிக்கையோடு தலையை ஆட்டினுன் கோதண்டம்.

"முதலில் இங்கே அந்தத் துப்பறியும் கேசவனை வரவழைத் தவன் ஓவியன் கிருஷ்ணமூர்த்திதான்! இப்போது அவனை அமர்த்திக்கொண்டிருப்பவன் செல்லையா. எப்படியாவது பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் நடந்த முத்தையா முதலியாரின் கொலையைத் துப்பறிந்து, தன் தந்தைமீதுள்ள அபவாதத்தை நீக்கிக்கொள்ள விரும்புகிருன் செல்லையா! துப்பறியும் கேசவன் தான் சிறந்தவர் என யாரும் சிபாரிசு செய்வார்கள். செல்லையா விடம் சொல்லி அவனை நீக்க முயன்ருல் நம்மீது சந்தேகம் உண்டாகும்! அவனைக் கேசவன் கழுகுக் கண் வைத்துப் பாதுகாப் பான். இன்றிரவு கேசவன் சென்னைக்குப் போயிருக்கிருன். நாளை காலையில் கட்டாயம் அவன் திரும்பி வந்துவிடுவான். அதற்குள் இன்றிரவே நம் காரியத்தை நாம் சாதுரியமாக முடித்துவிட வேண்டும்!" என்ருன் கண்ணன்.

"இன்றிரவேயா? அதற்கு நீ வகுத்து வைத்திருக்கும் திட்டத்தையே இன்னும் எனக்குத் தெளிவாக்கவில்லையே?"

"ஏன் அவசரப்படுகிருய்? அதை விளக்குவதற்காகத்தானே நான் இப்போது உன் வீடுதேடி வந்திருக்கிறேன்?" என்று ஆரம்பித்தான் கண்ணன்.

"காலஞ்சென்ற செந்தில்நாத முதலியாருக்கு ஓவியர் கிருஷ்ணமூர்த்தியைத் தவிர இவ்வூரில் இன்னொரு நண்பரும் இருக்கிருர். கிருஷ்ணமூர்த்திக்கும் அவர் நண்பர்தான். உனக்கும் அவரை நன்ருய்த் தெரியும்..." என்ருன் கண்ணன்.

"யாரவர்? பேரைச் சொல்லு" என்று கேட்டான் கோதண்டம்.

"அவர்தான் உன் எஜமானர் எல்லப்ப பிள்ளை!"

"ஆ! அப்படியா?" என்று வியப்போடு விழித்தான் கோதண்டராமன். எல்லப்பபிள்ளையின் மளிகைக் கடையில் அவன் சிறிது காலமாகக் குமாஸ்தாவாயிருந்தவன். அன்று எட்டு மணிக்கு அவர் பெண்ணின் திருமணத்தையொட்டி முக்கிய மான நண்பர்களுக்குத் தனி விருந்து ஒன்று ஏற்பாடாகியிருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு தன் திட்டத்தை நிறைவேற்றத் தீர்மானித்தான் கண்ணன்.

"அந்த நிசி விருந்துக்கு, செல்லையாவைக் கட்டாயம் அழைப்பார் எல்லப்பபிள்ளை. அவர் அதை மறந்துவிட்டாலும், அவருக்கு நினைவூட்டவேண்டியது என் பொறுப்பு. செல்லையா, பழனியப்பன், மஞ்சுளா இம் மூவரையும் அழைத்துக்கொண்டு, இன்றிரவு நான் அந்த விருந்துக்குப் போவேன். எல்லப்பபிள்ளை வீட்டின் நிசி விருந்துக்குப் பல பெரிய மனிதர்களும் வந்திருப்பார்கள். அவர்கள் விருந்தின்போது ரகசியமாக விஸ்கி பிராந்தி முதலான பல மது வகைகளை ஷர்பத் போல் குடிப்பார்கள் என்பது உனக்குத் தெரியும்!"

"வெள்ளை மாளிகையிலிருந்து செல்லையாவையும், அவன் நண்பன் பழனியப்பனையும் விருந்துக்கு அழைத்துவந்து குடிக்க வைத்து மயங்க வைப்பதா?"

"ஆமாம்! கலியாண வீட்டின் விருந்தில் அவ்விருவரும் நன்ருகக் குடித்துவிட்டு மயங்கி விழுவார்கள்; அல்லது சுயநினைவு இல்லாமல் கலாட்டா செய்வார்கள். நாம் உற்ற சமயத்தில் கைகொடுத்து உதவும் நண்பர்கள் போல அவ்விருவரையும் கலியாண வீட்டிலிருந்து தூக்கிக்கொண்டு போய் வெள்ளை மாளிகையில் படுக்க வைத்துவிட்டு, கலியாண வீட்டிற்குத் திரும்பி வந்துவிடுவோம். இன்றிரவு வெள்ளை மாளிகையில் செல்லையாவும், பழனியப்பனும் மட்டுந்தான் குடிவெறியில் சுய நினைவில்லாமல் படுத்துக் கிடப்பார்கள். அப்போது ஒரே ஓர் ஆள் மட்டும் உள்ளே நுழைவான்!"

"யார் அந்த ஆள்?"

"சித்தவெறியன் கனகப்பன்? பழிவாங்கத் துடிக்கும் அந்தக் கிழட்டு வேலைக்காரனைச் சற்று முன்தான் சந்தித்தேன். சரியாக நடுச்சாமத்தில் முத்தையா முதலியாரின் ஆவி வெள்ளை மாளிகைக்கு வரும் என்று நம்பிக்கொண்டு இருக்கிருன்! கொலைகாரன் மகனை செல்லையா, வெள்ளை மாளிகையை மிதிக்கும் இன்றிரவிலே ஏதாவது விபரீதம் நடக்கும் என்றும், பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் முத்தையா முதலியார் கொலை செய்யப்பட்ட அதே நேரத்திலே, முத்தையா முதலியாரின் ஆவி செல்லையாவைப் பழிவாங்கும் என்றும் எண்ணுகிருன். அதைத் தன் கண்ணுல் நேரில் பார்க்க வேண்டுமென வெள்ளை மாளிகைக்கு வர ஆசைப்படுகிருன்!" என்ருன் கண்ணன்.

"அந்த நேரத்திலே கனகப்பன் வெள்ளை மாளிகைக்கு வந்து செல்லையாவைக் கொலை செய்து விடுவாஞே?"

"அது சாமானியமல்ல! செல்லையாவைக் கனகப்பன் கொலை செய்வதற்கு முன்னால் கனகப்பனைத்தான் செல்லையா கொலை செய்து விடுவான்!......அது கிடக்கட்டும், கோதண்டம்! இன்றிரவு கலியாணவீட்டு விருந்தில் எவ்வளவு பெரிய கூத்து நடக்கப் போகிறது தெரியுமா?"

"செல்லையாவும் பழனிபப்பனும் குடித்துவிட்டுக் கூத்தடிப் பார்கள் என நினைக்கிறாய்! ஆனால் அவர்கள் குடிப்பார்களா?..."

"அதுதான் உன் வேலை! நான் அவ்விருவரையும், மஞ்சுளா வையும் அழைத்துக்கொண்டு வருவதற்கு முன்பே நீ கலியாண வீட்டிற்குப் போய் சில காரியங்களைச் செய்யவேண்டும்!... இன்னும் ஒரு முக்கியமான விஷயம்! நாம் மஞ்சுளாவை உபயோ கித்துக் கொள்ளலாமே தவிர, நம்முடைய இந்தச் சதித்திட்டம் அவளுடைய அம்மாவிற்குக்கூட இப்போது தெரியவேண்டாம்!" என்றான் கண்ணன்.

"நான் என்ன காரியங்களைச் செய்யவேண்டும்?"

கோதண்டனது இந்தக் கேள்விக்கு, அவன் காதில் ஏதோ குசுகுசுவென்று கண்ணன் ரகசியமாகக் கூறினான். அதைக் கேட் டதும் அவன் முகம் பளிச்சென்று மலர்ச்சியுற்றது.

"ரொம்பச்சரி. நான் அப்படியே செய்கிறேன். நீ இப்போதே போய்ச் சித்தவெறியன் கனகப்பனைப் பார்த்துவிட்டு வா!" என்றான் கோதண்டம்.

---

அத்தியாயம்: 10

## விருந்தில் நடந்த விபரீதம்!

---

இரவு எட்டு மணியாயிற்று. எல்லப்பபிள்ளையின் மாளிகை யானது கலியாண வைபவத்தால் மிகக் கோலாகலமாக விளங் கியது. கமலவனத்திலுள்ள பெரிய மனிதர்களெல்லாம் தத்தம் குடும்ப சகிதம் அங்கு குழுமியிருந்தனர். வந்துகொண்டிருந்த விருந்தினர்களை யெல்லாம் வாயிற்படியில் நின்று வரவேற்று, அவர்களுக்குச் சந்தன, புஷ்ப, ஷர்பத்துக்கள் கொடுத்துக்கொண் டிருந்தனர் ஓவியர் கிருஷ்ணமூர்த்தியும் அவரது இரு குமாரி களான பவானியும் லலிதாவும். உள்ளே போஜன ஹாலில் பந்தி விசாரணை செய்து கொண்டும், இடையிடையே பரிமாறிக்கொண் டும் பரபரப்பாகத் திரிந்தான் மாஜிக் குமாஸ்தா கோதண்டராமன்.

திருமணச் சடங்குகள் ஒரு புறத்தில் நடந்துகொண்டிருக்கையிலேயே, சீட்டுக்கச்சேரிகள் வேறொரு புறத்தில் விமரிசையாக நிகழ்வுறலாயின. முகூர்த்தமும் சாப்பாடும் முடிந்தபிறகு, இரு பிரபல நர்த்தகியரின் நடனக்கச்சேரி ஆரம்பமாயிற்று. மணி பதினொன்று அடித்தது. சபையின் ஒரு புறத்தே, மஞ்சுளாவுக்கும், கண்ணனுக்கும் மத்தியில் உட்கார்ந்திருந்தான் செல்லையா. அவன் எதிரிகளை நம்பி அவர்கள் விரித்த வலையில் விழுந்துவிட்டானே என்ற ஆத்திரம் பவானிக்கு அதிகம் ஏற்பட்டிருந்தாலும், அவன் தன்னையும், தன் தந்தையையும் உதாசீனம் செய்துவிட்ட பிறகு இனி அவன் முகத்திலே விழிக்கக்கூடாது என்று கங்கணம் கட்டிக்கொண்டிருந்தாலும், அவளுடைய கருவிழிகள் அவளையறியாமலே ஏனோ செல்லையாவைச் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டிருந்தன. அவனோ பவானியை ஓர் எதிரியைப் பார்ப்பது போலவே வெறுப்புடன் பார்த்தான்.

திடீரென்று அவன் சரீரத்தில் ஏதோ ஒரு நூதன உணர்ச்சி பொங்கியெழுவது போல் அவனுக்குப் புலப்பட்டது. அவன் நா வறண்டது. கண்கள் மங்கின. எதிரேயிருந்த ஒவ்வொரு பொருளும் இரண்டிரண்டாகக் காட்சியளிக்கலாயிற்று. பக்கத்திலிருந்த கண்ணனை நோக்கி, "எனக்கு மயக்கமாக வருகிறது," என்றான் அவன்.

"ஏன் அப்படி? ஒருவேளை நீ போட்டுக்கொண்ட பீடாவில் ஏதேனும் பூச்சிப்பாக்கு சம்பந்தப்பட்டிருக்குமோ?" என்று குரலில் சோகத்தை வரவழைத்துக்கொண்டு பரிவோடு விசாரித்தவாறு, அவனுக்குக் குடிதண்ணீர் கொண்டுவர எழுந்தோடினாள் மஞ்சுளா.

"பூச்சிப் பாக்காக இராது. புதிதாக வெற்றிலைபாக்குப் போடுகிறவர்களுக்கே இம்மாதிரி மயக்கம் வருவதுண்டு!" என்று சாவதானமாகக் கூறினான் கண்ணன்.

இதற்கிடையில், கண்ணனைத் தேடிக்கொண்டு அங்கு எல்லப்ப பிள்ளையே ஓடிவந்தார்.

"அவன் யாரப்பா, கண்ணா? செல்லையாவோடு கூட ஒருவன் தீவிலிருந்து வந்திருக்கிறானே, அவன் பேரென்ன?"

"பழனியப்பன். ஏன், அவனுக்கென்ன?"

"அந்தக் காலிப்பயலை யெல்லாம் நீ ஏன் இங்கு கூட்டி வந்தாய்? உள்ளே போய்ப் பார்! எங்கேயோ போய்க் குடித்து

விட்டு வந்து கலாட்டா பண்ணிக்கொண்டிருக்கிறன். முதலில் அவனை கூட்டிக்கொண்டு போய் வீட்டில் விட்டுவா," என்றார் எல்லப்பபிள்ளை.

இதற்குள் மஞ்சுளாவும் ஒரு தம்ளரில் சர்பத் கொண்டுவந்தாள். அதைக் குடித்துவிட்டு, "அப்படியானல் நானும் வீட்டுக்கு வருகிறேன்," என்று தடுமாறியவாறு எழுந்து நின்றான் செல்லையா. அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்த எல்லப்பபிள்ளை, "இவனும் குடித்துவிட்டு கலியாண வீட்டிற்கு வந்திருக்கிறன்! அட கர்மமே!" என்று முணுமுணுத்தார். அது அங்கு நின்ற ஓவியர் கிருஷ்ணமூர்த்தியின் புத்திரிகளின் காதில் விழுந்தது. பவானியின் முகம் வாடியது. செல்லையா தங்களைப் புறக்கணித்து விட்டான் என்று அவளுக்குக் கோபமிருந்தாலும், பரிகாசத்துக்கு இடமாய் அவன் குடித்துவிட்டுக் கலியாண வீட்டில் தள்ளாடுவதை அவளால் சகிக்கவே முடியவில்லை. அவள் கண்ணனை நோக்கி; "செல்லையாவை ஏன் இப்படி அவமானத்திற்கு ஆளாகும்படி இங்கே வைத்தீர்கள்?" என்று கேட்டாள்.

மஞ்சுளா சுருக்கென்று, "செல்லையாவிற்கு ஒன்றுமில்லையடி! எங்களுக்கு எல்லாம் தெரியும். நீயென்ன அவனுக்குச் செவிலித் தாயா?" என்றாள் வெறுப்புடன்.

வெளியே நிற்கும் தன்னுடைய காருக்குக் செல்லையாவை அழைத்துச் செல்லுமாறு மஞ்சுளாவிடம் கூறியபடி, கண்ணன் பழனியப்பனைத் தேடிச்சென்றான்.

* * *

"ஏன் அதற்குள் திரும்பி வந்துவிட்டாய் மஞ்சுளா? மணி பதினொன்றரைதானே ஆகிறது! அவ்வளவு சீக்கிரத்திலேயா கலியாணவீட்டில் நாட்டியக்கச்சேரி முடிந்துவிட்டது?" என்று மஞ்சுளாவைக் கேட்டாள் பத்மாவதி.

"இல்லை, அம்மா. அந்தப் பழனியப்பன் எங்கேயோ போய்க் குடித்துவிட்டு வந்து, கலியாண வீட்டில் கலாட்டா பண்ணத் தொடங்கிவிட்டான். அதே சமயத்தில் செல்லையாவும் திடீரென்று மயக்கமடைந்து தடுமாறினன். அவனும் குடித்திருப்பானென்று எனக்குத் தோன்றுகிறது. அதை அங்குள்ளவர்களிலும் இரண்டொருவர் சந்தேகப்பட்டு விட்டார்கள். ஆகையால், அவனையும் பழனியப்பனையும் அதற்குமேல் அங்கு வைத்திருப்பது உசிதமாகப்படவில்லை கண்ணன் அவர்களை வெள்ளை மாளிகையில் கொண்டு போய் விட்டுவரப் போயிருக்கிறன்!" என்று மஞ்சுளா

சொல்லிக் கொண்டிருக்கும்போதே, கண்ணனும் அங்கு வந்து சேர்ந்தான்.

அவனை நோக்கி, "செல்லையாவும் பழனியப்பனும் எங்கே போய்க் குடித்துவிட்டு வந்திருக்க முடியும்? இன்றிரவு அவர்கள் உன்னைவிட்டு எப்போதேனும் பிரிந்துபோனார்களா?" என்றாள் பத்மாவதி.

"நாளைக்குப் போலீஸ்காரன் கேட்கவேண்டிய கேள்வியை நீ இப்போதே என்னிடம் கேட்கிறாயே?" என்று சிரித்தான் கண்ணன்.

"எல்லாம் நன்மைக்குத்தான்! கவலைப்படாதே!" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறிய அவனுடைய குரலைக் கவனித்த மஞ்சுளாவிற்கு அவன்மீது சந்தேகம் உண்டாயிற்று.

பத்மாவதிக்கும் அப்போதுதான் உண்மை விளங்கியது. "சரி, சரி! நீயேதான் அவர்களை வேண்டுமென்றே குடிக்கவைத்திருக்கிறாய்! ஏன் அப்படி?"

"ஏது! நீயே நான் குடிக்கவைத்ததை நேரில் பார்த்தது போல் சாட்சி சொல்வாய் போலிருக்கிறதே?"

"அம்மாவா சொல்லவேண்டும்? நாளைக்குச் செல்லையாவும் பழனியப்பனுமே சொல்லிவிடப் போகிறார்கள்!" என்றாள் வெடுக்கென மஞ்சுளா.

"அந்த இரண்டு காட்டுமிராண்டிகளுக்கும் ஒன்றுமே தெரியாது. அவர்களுக்கு யாராரோ புதுவிதமான கூல்டிரிங்க்ஸ் கொண்டுவந்து கொடுத்தார்கள். அவர்களும் வாங்கி வாங்கிக் குடித்தார்கள். அவற்றில் எவ்வளவு ஜின் அல்லது பிராந்தி கலந்திருந்ததென்பது, நம் கோதண்டத்தைத் தவிர வேறு யாருக்குத் தெரியும்?"

"ஓஹோ! கோதண்டமும் இதில் கூட்டாளியா?" என்று வெடுக்கெனக் கேட்டாள் மஞ்சுளா. "இதெல்லாம் நீ என்னிடம் ஒன்றுமே சொல்லவில்லையே? செல்லையாவைக் குடிக்கவைத்து எல்லாவற்றையும் குட்டிச்சுவராக்கி விட்டாய்!" என்று மஞ்சுளா எரிந்து விழுந்தாள். அன்றிரவு ஆளை மயக்கும்படி அலங்கரித்துக்கொண்டு போன அவள், அன்றிரவே செல்லையாவைத் தன் மோக வலைக்குள் சுருட்டி இழுத்துவிட வேண்டுமெனப் பிளான் போட்டிருந்தாள்; அவ்வளவும் வீணாகிவிட்டது!

"எல்லாவற்றையும் உன்னிடம் முன்னுடிச் சொல்லிவிட்டுத் தான் பண்ணவேண்டுமோ?" என்றான் கண்ணன் ஏளனமாக.

"செல்லையாவைக் குடிக்கவைத்துக் கலியாணவீட்டில் கூத் தடிக்க விட்டதுமல்லாமல், அவனை நானே காரில் கொண்டுபோய் விடும்படி ஏன் செய்தாய்?" என்று கேட்டாள் மஞ்சுளா.

"எங்களோடு நீ எல்லாவற்றிலும் கலந்துகொள்கிறாய் என்பதற்குத்தான்!" என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினான் கண்ணன்.

மஞ்சுளாவின் முகம் வெளிறியது.

"மஞ்சுளா! கவலைப்படாதே! குடித்தவனை நீ பரிவோடு காரில் கொண்டுபோய் ஏற்றிவிட்டாய் என்று தெரிந்தால், நீ நல்லவள் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் விழும்!" என்றான் கண்ணன்.

"ஆமாம்; ஜின் மிகவும் காரமான மதுவாயிற்றே? அதன் நெடியும் காரமும் அவர்களுக்குக் குடிக்கும்போதே தெரியாமலா போயிற்று?" என்று கேட்டாள் பத்மாவதியம்மாள்.

"நூதன ஷர்பத்திற்குரிய இயற்கையான ருசியே அதுதான் என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருப்பார்கள். மேலும் நாங்கள் சிறிது சிறிதாகத்தானே கலந்து கொடுத்தோம். பயல்கள் இரண்டுபேருக்குமே குடித்துப் பழக்கமில்லாததால் அது சீக்கிரத்தில் போதையேற்றிவிட்டது!"

"அது சரி; இப்போது எங்கே அவர்கள் இரண்டுபேரும்?" என்றாள் பத்மாவதி.

"வெள்ளை மாளிகையினுள்ளே சௌக்யமாய் உலகை மறந்து உறங்கிக் கொண்டிருக்கிறார்கள்!" என்றான் கண்ணன். "சரி, நீ புறப்படு மஞ்சுளா. நாம் மறுபடியும் கலியாணவீட்டுக்குப் போகவேண்டும்."

"எதற்காக? மணி பன்னிரண்டாகப் போகிறது. நடன விருந்து முடிய இரவு ஒரு மணியாகும். நான் வரப்போவதில்லை. படுத்துத் தூங்கப்போகிறேன். அந்த ஓவியரின் இரண்டு குட்டிகளும், என்னைப் பார்க்கிற பார்வையைக் கண்டாலே எனக்குப் பிடிக்கவில்லை!" என்றாள மஞ்சுளா.

"அட பைத்தியமே! இன்றிரவு நீ தூங்கமுடியாது. நடனம் முடியும் தறுவாயில், விருந்தினர்கள் பலபேருடைய கண்ணில்

படும்படியாக நாம் காட்சியளிக்க வேண்டும். நாளைக்காலையில் யாராவது நம்மை 'நேற்று ராத்திரி பன்னிரண்டு மணிக்குமேல் ஒரு மணிக்குள் நீ எங்கே இருந்தாய்?' என்று கேட்டால் நாம் தகுந்த அத்தாட்சியுடன் பதில் சொல்ல வேண்டாமா? அப்போது தான் நாம் தப்பிக்கலாம்."

"எதிலிருந்து?"

"இன்றிரவு நடைபெறப்போகும் ஒரு சம்பவத்தின் பொறுப் பிலிருந்து!" என்று அலக்ஷியமாய்ச் சிரித்தான் கண்ணன்.

அவனோடு மறுபடி கலியாண வீட்டிற்குப் புறப்படும்போது அவன் காதுக்குள் ரகசியமாய் கேட்டாள்: "கண்ணா! உன்னை விட்டுவிட்டு அந்தச் செல்லையாவின்மீது ஆசைப்படுவேன் என்று நினைக்கிறாய்? இப்போது அவனைக் கொன்றுவிடாதே! அவன் சொத்தை ஆபத்தில்லாமல் பறிப்பதற்குத்தான் மயங்குகிறவள் போல் நடிக்கிறேனே தவிர, ஆசையெல்லாம் உன்மேலேதான்!" என்று கூறி அவனுக்கு வெடுக்கென்று ஒரு முத்தம் கொடுத்தாள்.





அத்தியாயம் : 11

# பரிதாபகரமான கொலை

நள்ளிரவு நேரம். பேய்களும் கண்ணுறங்கும் பேரிருளால் வெள்ளை மாளிகை விழுங்கப்பட்டு நின்றது. அத்தகைய பயங்கர வேளையில்,—

அம்மாளிகையின் எதிரேயிருந்த ஓர் அடர்ந்த புதரினுள்ளிருந்து, ஒரு மெல்லிய சிரிப்பொலி யெழுந்தது. அடுத்த விநாடி, அங்கிருந்து ஓர் ஒல்லியான உருவம் தன் தலையை நீட்டி வெளிப்பட்டது. ஒருமுறை சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, அது வெள்ளை மாளிகையை நோக்கி விரைந்து நடக்கலாயிற்று.

ஆம்; கனகப்பன்தான்! அந்த மாளிகையிலிருந்து கிருஷ்ண மூர்த்தியால் அவன் விலக்கப்படும் வரையில், தினசரி இரவு பன்னிரண்டு மணி அடித்தவுடன், முத்தையா முதலியார் கொலையுண்ட அறைக்குள் போய் அவன் பார்த்து வருவது வழக்கம். அதற்குக் காரணம் அவனுக்கே தெரியாது. அவனையும் அறி

யாத ஒரு சக்தி அவனை அங்கே இழுத்துச் சென்றுகொண்டிருந்தது. நாளடைவில் முத்தையா முதலியாரின் ஆவியே அவனுக்கு அங்கு காட்சியளிப்பதாக அவன் கூறத் தொடங்கினான். "ஏதோ பைத்தியத்தில் பிதற்றுகிறான்!" என்று யாருமே அவன் கூற்றுகளை லக்ஷியம் செய்வதில்லை. ஆனால், அவன் மட்டும், அங்கு தினசரி முத்தையா முதலியாரின் ஆவி வந்து போவதாக நிச்சயமாக நம்பினான். முதலியாரின் ஆவி அவருடைய படிப்பறையில் பன்னிரண்டு மணிக்கெல்லாம், பதின்மூன்று வருஷங்களுக்கு முன் அவர் எப்படி நாற்காலியில் உட்கார்ந்திருந்தாரோ, அதே மாதிரி உட்கார்ந்திருக்கும்; அந்தப் பிரமை ஒரு கணம்தான் இருக்கும். பிறகு எல்லாம் மறைந்து கனகப்பனது மூளையையே குழப்பிவிடும். தம் மரணத்திற்குக் காரணமாயிருந்தவர்கள் பழி வாங்கப்படும் வரையில் முத்தையா முதலியாரின் ஆவி அவ்வாறு வந்துகொண்டிருக்கும் என்பது அவன் சித்தாந்தம். அவரைக் கொலை செய்தது செந்தில்நாத முதலியார்தான் என்பதிலும் அவனுக்குச் சந்தேகமில்லை. இப்போது செந்தில்நாத முதலியார் இறந்துபோனாலும், அவருடைய மகன் செல்லையா இங்கே வந்திருப்பதால் முத்தையா முதலியாரின் ஆவி அவனைக் கட்டாயம் வஞ்சம் தீர்த்துக்கொள்ள வரும் என்பது அவனது திடமான முடிவு. அவ்வாறு அவர் வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் காட்சியைத் தன் கண்ணாரக் கண்டு களிக்கவேண்டுமென்று அவன் மட்டற்ற ஆசைப்பட்டான். அந்த ஆசையை அவனுக்கு உண்மையிலேயே உண்டுபண்ணி உச்சாடனம் செய்து விட்டவனாகிய கண்ணன், அந்த வெள்ளை மாளிகையின் வெளிக்கதவுக்குப் பொருந்தக் கூடிய ஒரு கள்ளச் சாவியையும் அவன் கையில் கொடுத்திருந்தான். அன்றைய இரவு கனகப்பனுக்கு நிறையச் சாராயம் வாங்கிக்கொடுத்து மூளை சுருளும்வரை நன்றாகக் குடிக்கவும் வைத்திருந்தான். சித்தவெறியனான கனகப்பன் குடிவெறியும் சேரவே வெள்ளை மாளிகையின் தோட்டத்தின் இருளில் பசித்த புலியைப்போல் தள்ளாடியவாறு காத்திருந்தான். மணி பன்னிரண்டானதும் வெள்ளை மாளிகையை நோக்கிப் பாய்ந்தான். கள்ளச்சாவியை தன் இடுப்பிலிருந்து எடுத்துக் கதவைத் திறந்தான் கனகப்பன். அவனுடைய உடலில் முத்தையா முதலியாரின் ஆவியே ஏறியிருப்பதுபோல் அவன் ஆவேசம் கொண்டான்.

உள்ளே ஒரே இருட்டாயிருந்தது. பேய்க்காட்டு நிசப்தமும் நிலவியிருந்தது. ஆனால் அவனுக்கு அது பல வருஷங்களாகப் பழக்கப்பட்ட வீடல்லவா? ஹாலுக்குள் ஓசைப்படாமல் நுழைந்தான் அவ்வளவுதான்; எங்கிருந்தோ திடீரென்று பாய்ச்சப்பட்ட ஓர் ஒளி வெள்ளத்தில் அவன் கண்கள் கூசின. உடல் முழுதும்

வெள்ளைச் சால்வை போர்த்திய ஓர் உருவம் வெள்ளே வெளே ரேன்று பேய்போல—அப்படி ஒரு பிரமை... அடுத்த விநாடி ஒரு பெரிய கடப்பாறையின் அடி அவன் மண்டையில் வந்து வீழ்ந்தது· கனகப்பன் மயங்கிச் சுருண்டு தரையில் சாய்ந்தான்!

அவனை அடித்த வெள்ளை உருவ மனிதன் கிடுகிடென்று மாடிப்படிகளிலேறிச் சென்று, செல்லையா படுத்துறங்கும் அறைக்குட் புகுந்தான். அங்கே ஆணியில் தொங்கிக்கொண்டிருந்த அவனுடைய சட்டையொன்றைக் கையில் எடுத்துக்கொண்டு படிகளில் இறங்கி ஹாலுக்குத் திரும்பி வந்தான்· கனகப்பன் தலையிலிருந்து பொங்கி வழிந்த ரத்தத்தில் சிறிதை அந்தச் சட்டையில் ஒற்றிக்கொண்டு அதை மறுபடியும் முன்பு இருந்த இடத்திலேயே கொண்டுபோய் மாட்டினன்· பிறகு கீழேயிறங்கி வந்து, கனகப்பன் உடலைத் தூக்கிக்கொண்டு போய் விசாலமான வெளி வாசற்படியில் அதை உதைத்து உருட்டித் தள்ளிவிட்டு, முன் கதவை மூடினன். ஹாலிலும் போர்டிகோவிலும் உள்ள விளக்குகளின் ஸ்விட்சுகளைத் தட்டி, அவற்றை எரியவிட்டான்· இவ்வளவையும் செய்துமுடித்த பிறகு, ஓசைப்படாமல் பின் கட்டின் வழியே அவ்வீட்டை விட்டே அவன் வெளியேறினன்·

அந்த வீட்டிற்குள் இவ்வளவு நடந்தும், ஒன்றுமே தெரியாமல் மெய்மறந்து உறங்கிக் கிடந்தான் செல்லையா. அவன் வீட்டு வாசற் படியில் கனகப்பனின் பிணம் உருட்டப்பட்டுக் கிடந்தால் யார் மீது பழி சாரும் என்பதை உணரும் நிலையிலில்லை அவன்.

கலியாண வீட்டிலோ......?

கண்ணன் மறுபடியும் கலியாண வீட்டிற்குள் வந்து நுழை யும்போது, பவானியும் அவள் சித்தி மகன் சின்னச்சாமியும் மணி பன்னிரண்டேகால் ஆகும்போது தம் வீட்டிற்குப் புறப் பட்டுக் கொண்டிருந்தனர்· கண்ணனைக் கண்டதும் அவன் காரை விட்டுக் கீழிறங்கிச் சென்று, "செல்லையா எப்படியிருக்கிறன்? அவனை நீ என்ன செய்தாய்?" என்று பதைபதைப்புடன் விசாரித்தான்·

"அவனும் அவன் தோழனும் வெள்ளை மாளிகையில் நிம்மதி யாய்த் தூங்கிக்கொண்டிருக்கிறர்கள்·"

"அவர்களை மயக்கத்தோடு தனியே போட்டுவிட்டா நீ திரும்பிவிட்டாய்?"

"வேறு நான் என்ன செய்வது? அந்தக் குடிகாரப் பயல்களை நான் இரவு முழுதும் கண்விழித்துக் காவல் புரியவேண்டும் என்கிருயா?" என்று வேடிக்கையாகச் சிரித்தான் கண்ணன்.

அவன் பேசிய தோரணை பவானிக்குப் பிடிக்கவில்லை. செல்லையாவிடத்தில் அவள் சிறிதும் பிரியமற்றிருந்த போதிலும், அவனது பேதமையை எண்ணும்போது 'பாவம், உலகம் தெரியாத வெகுளி' என்று அவள் நெஞ்சத்தில் பரிவே பெருகியது. அவள் தன் சித்தி மகனோடு காரில் செல்லும்போது அவள் மனம் நிம்மதியாயில்லை.

"அண்ணு, செல்லையா இதற்குமுன் தன் வாழ்நாளில் ஒரு முறைகூட மதுச்குடித்தவனல்ல. அவனைத் தனியே வெள்ளை மாளிகையில் கண்ணன் விட்டு வந்திருக்கவாவது! எனக்கென்னவோ மனசு அடித்துக் கொள்ளுகிறது......அண்ணு! நாம் போகும் வழியில் செல்லையாவைப் பார்த்துவிட்டுப் போவோமா?" என்ருள் அவள் சின்னச்சாமியை நோக்கி.

'எனக்கொன்றும் ஆட்சேபணையில்லை," என்று தன் காரை 'ஸ்டார்ட்' பண்ணினுன் சின்னச்சாமி.

"ஆனல் உன்னை அவனுக்குப் பிடிக்காதே? 'உன்னை யாரிங்கே வரச்சொன்னது?' என்று அவன்கேட்டுவிட்டால்?... அதுவும் உன் தந்தையை ஓர் எதிரியென்று சந்தேகப்பட்டுக் கொண்டிருக்கும்போது நடுச்சாமத்தில் அவனுடைய வீட்டிற்குள் புகுந்தால் .....?"

"அதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை. அவனைக் குடி மயக்கத்தோடு தனியே விட்டு விட்டு வந்திருக்கிருன் கண்ணன். ஏனே அவனைப் பார்த்துவிட்டுப் போகவேண்டும் போல் எனக்குத் தோன்றுகிறது! நாம் வீட்டிற்குள் போய் அவனைச் சந்திக்க வேண்டும் என்கிறதுகூட இல்லை. அவன் வீட்டில் எல்லாம் சரியாக இருக்கிறதாவென ஒருமுறை பரிசோதித்துவிட்டுப் போனுல்தான் என் மனசு நிம்மதிப்படும்!" என்ருள் பவானி.

காரை வெள்ளை மாளிகைக்கு வெளியே நிறுத்திவிட்டு, இருவரும் கீழே இறங்கித் தோட்டத்தினுள்ளே நடந்து சென்ருர்கள். அத்தகைய அகால நேரத்தில் போர்டிகோவின் விளக்கும் வீட்டினுள் இருந்த மின்சார விளக்குகளும் பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தது அவர்களுக்கு வியப்பை அளித்தது.

"வீட்டிற்குள் விளக்குகள் எறிவதைப் பார்த்தால் அவர்கள் மயக்கம் தெளிந்து விழித்திருக்கிருர்கள் போலிருக்கிறது. அல்லது

விளக்குகளையும் போட்டபடியே அவர்கள் இன்னும் உறங்கிக் கொண்டிருக்க வேண்டும்!" என்று கூறிய சின்னச்சாமி, மாளிகையின் முன் வாசற்படியருகே வந்தான்.

திடீரென்று எதையோ கண்டு திடுக்கிட்டவன்போல், பவானியின் கையைப் பிடித்து நிறுத்தினன் சின்னச்சாமி. "பவானி, நீ இங்கேயே நில். நான் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்," என்று அவன் போர்டிகோவை நோக்கி விரைந்து நடந்தான்.

ஆனல் அவன் பார்த்த அதே காட்சியை, அதே சமயத்தில், பவானியும் பார்த்துவிட்டாள். அவளும் திகிலுற்றவளாய், அவனைத் தொடர்ந்து நடந்தாள்.

வெள்ளைமாளிகையின் புறத்தேயுள்ள விசாலமான படிகளில், ஒரு மனித உருவம் சுருண்டு கிடந்தது. அருகில் சென்று பார்க்கும்போது, அங்கு அடிபட்டுக் கிடப்பவன் கனகப்பன் என்று தெரிந்தது. அவன் மண்டையிலிருந்து வழிந்த ரத்தவெள்ளத்தால், அந்த சலவைக்கற் படிகள் கறைபட்டுக் கொண்டிருந்தன.

அவனை நன்கு உற்றுக் கவனித்துவிட்டு, "இன்னும் உயிர் இருக்கிறது," என்றான் சின்னச்சாமி,

"இவனை உள்ளே எடுத்துச்செல்ல வேண்டும்—இல்லை; பயல்கள் இரண்டுபேரும் உள்ளே குடிமயக்கத்தில் கிடக்கும் போது அவர்களை எழுப்புவது சாத்யமல்ல. இவனை இந்தத் தோட்டத்திலுள்ள பத்மாவதியின் விடுதிக்குத் தூக்கிபோகிறேன். நீ போய்ப் பக்கத்திலுள்ள பப்ளிக் டெலிபோனில் போலீஸுக்கும் ஆஸ்பத்திரிக்கும் போன் பண்ணிவிட்டு வா."

பவானி பதில் சொல்லாமல் வெளியே இருளில் பாய்ந்தோடினாள். கனகப்பனின் பூதாகாரமான உடலைச் சின்னச்சாமி தூக்கிக்கொண்டு, அந்தத் தோட்டத்தின் ஒரு புறமுள்ள பத்மாவதியம்மாளின் விடுதிக்குச் சென்றான்.

பத்மாவதியின் வீடு ஒரே இருளிலும் நிசப்தத்திலும் மூழ்கியிருந்தது. வெளிக் கதவைப் படபடவென்று சின்னச்சாமி தட்டினான். பத்மாவதி தூக்கக் கலக்கத்துடன் எழுந்துவந்து கதவைத் திறந்தாள். அவளுடைய வாயில் அடித்த ஒருவித வாடை சின்னச்சாமிக்குப் பிடிக்கவில்லை.

"நடுச்சாமத்தில் வந்து என் வீட்டுக் கதவைப் போட்டு ஏன் உடைக்கிறாய்?" என்று பத்மாவதி குளறியபடி கேட்டாள்

சின்னச்சாமி அவசரமாகக் கனகப்பனின் ரத்தம் சொட்டும் உடலைச் சுட்டிக்காட்டி விபரத்தைச் சொன்னான்.

பத்மாவதியின் முகத்தில் என்னவோ விசித்திரமான ஒரு தோற்றம் ஒரு கணம் படர்ந்து மறைந்தது.



அவளுடைய படுக்கையில் கனகப்பனின் உடலைச் சின்னச் சாமி போட்டுவிட்டு, "என்ன பயங்கரமான இரவு! போலீஸுக்கும் டாக்டருக்கும் டெலிபோன் செய்ய பவானி ஓடியிருக்கிறாள். அவர்கள் வந்துசேரும் வரையாவது கனகப்பனுக்கு உயிர் இருக்கவேண்டும், கடவுளே!" என்று பதறினான்.

கனகப்பனின் கண்ணிமைகள் மூடின. மூச்சு இழுத்தது உதடுகளில் நீலம் பாய்ந்தது; அவனுடைய தலையிலிருந்து வழியும் ரத்தத்தால் தலையணை நனைந்துகொண்டே இருந்தது.

அத்தியாயம் : 12

# சட்டையின் ரத்தக் கறை

முதலில், சர்க்கார் ஆஸ்பத்திரியிலிருந்து ஓர் ஆம்புலன்ஸ் வண்டியும் ஒரு டாக்டரும் வந்து சேர்ந்தனர். அடுத்த இரண்டு நிமிஷங்களில், ஓர் இன்ஸ்பெக்டர், ஸார்ஜண்டு, ஒரு போலீஸ் டாக்டர் மூவரும் ஒரு போலீஸ்வானில் வந்திறங்கினர். உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் கனகப்பனின் உடலை ஆம்புலன்ஸ் வண்டியில் ஏற்றி ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டு, பவானியையும் சின்னச்சாமியையும் கேள்விகள் கேட்கத் தொடங்கினர் போலீசார்.

"கனகப்பன் வாசற்படியில் கிடப்பதை நீங்கள் கண்டீர்கள். அது எப்போது? வெள்ளை மாளிகையைவிட்டு நீங்கள் வெளியே வரும்போதா?"

"வெள்ளை மாளிகையினுள்ளேயே நாங்கள் போகவில்லையே? வீதிவழியே காரில் போய்க்கொண்டிருந்தோம். செல்லையாவைச் சற்று எட்டிப்பார்த்துவிட்டுப் போகலாமென்று காம்பௌண்டுக்குள் வந்தோம்," என்று பதிலளித்தாள் பவானி.

"எட்டிப் பார்க்கிறது நடுச்சாமம் பன்னிரண்டரை மணிக்கா?" இந்த அகால நேரத்தில் நீங்கள் அவனை எதற்காகப் பார்க்க நினைத்தீர்கள்?

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வது, பவானிக்குச் சிறிது சிரமமாக இருந்தது.

"அதிருக்கட்டும், வாசற்படியில் கிடந்தவனை அங்கேயே பங்களாவின் உள்ளே கொண்டுபோய்ப் போடாமல், இவ்வளவு தூரத்திலுள்ள இந்த பத்மாவதியின் விடுதிக்கு ஏன் சுமந்து வந்தீர்கள்?"

இந்தக் கேள்விக்குப் பதிலாக, கல்யாண வீட்டில் நடந்த சம்பவங்களைப் போலீசாரிடம் சுருக்கமாகக் கூறிவிட்டு, "செல்லையாவும் பழனியப்பனும் குடிமயக்கத்தில் கிடப்பார்கள் என்ற எண்ணத்தில்தான், அவர்களைக் கூப்பிட்டுக் கதவைத் திறக்கச் செய்வது சுலபமல்லவென்று நாங்கள் தீர்மானிக்க நேர்ந்தது," என்றான் சின்னச்சாமி.

"சரி, அவர்களையும் நாம் பார்த்துவிடுவோம்," என்று கூறியவாறு பங்களாவை நோக்கி நடக்கலானார் இன்ஸ்பெக்டர்.

"நானும் கூட வரலாமா?" என்று அவரைப் பின்தொடர்ந் தான் சின்னச்சாமி.

"வேண்டாம். அந்தப் பெண்ணைக் கூட்டிக்கொண்டு நீர் வீட்டுக்குப் போகலாம். மேற்கொண்டு தேவைப்பட்டால், உங்க ளிருவரையும் நான் நாளைக்கு விசாரித்துக்கொள்கிறேன்!" என்றார் இன்ஸ்பெக்டர்.

"நான் ஒரு பத்திரிகை நிருபர்..." என்று குரலை இழுத்தான் சின்னச்சாமி.

"உம்முடைய பத்திரிகைக்குச் செய்தி தேவைப்பட்டால், போலீஸ் ஸ்டேஷனில் போய்க் காத்திரும். முதலில் அந்தப் பெண் ணைப் பத்திரமாக அவளுடைய வீட்டில் கொண்டுபோய்ச் சேரும்!" என்றார் இன்ஸ்பெக்டர்!

பங்களாவின் வெளிக்கதவைப் பலமாகத் தட்டினர் போலீ சார். நெடுநேரம் வரை உள்ளிருந்து பதில் ஒன்றும் வரவில்லை. கடைசியாக, "யாரது?" என்று கெட்டுக்கொண்டே, மாடி ஜன்னலொன்றைத் திறந்து எட்டிப்பார்த்தான் பழனியப்பன்.

"நாங்கள் போலீசார். செல்லையாவைப் பார்க்கவேண்டும். சீக்கிரம் கதவைத் திற," என்று அதட்டினார் சார்ஜண்டு.

'போலீசார்' என்ற வார்த்தையைக் கேட்டதும் பழனியப்ப னுக்குத் தூக்கி வாரிப்போட்டது. வெருண்டடித்துக்கொண்டு செல்லையாவின் அறைக்குட் புகுந்து, அவனை அசைத்து உலுக்கி எழுப்பி உட்காரவைத்து, விஷயத்தைக் கூறினான். செல்லையா சட்டென்று எழுந்து, பக்கத்தில் தொங்கிக்கொண்டிருந்த தன் சட்டையை யெடுத்து அவசர அவசரமாக மாட்டிக்கொண்டு, பழனியப்பனோடு கீழே இறங்கிப்போய் வெளிக்கதவைத் திறந் தான். போலீசார் தடதடவென்று ஹாலுக்குள் நுழைந்தனர்.

ஹாலுக்குள், கனகப்பன் அடிபட்டு வீழ்ந்த இடத்தில், ஒரு சின்னஞ்சிறு குட்டைபோல் ரத்தம் தேங்கிக்கிடந்தது. அதையும், செல்லையா அணிந்திருந்த சட்டையில் காணப்பட்ட ரத்தக் கறையையும் மாறி மாறிப் பார்த்தார் இன்ஸ்பெக்டர்.

"மிஸ்டர் செல்லையா, உம்முடைய வெள்ளை மாளிகையில் ஒரு மனிதன் மண்டையில் அடிபட்டுக் கிடந்தான். அவன் பெரும்பாலும் பிழைப்பது அரிது. அதைப்பற்றி உம்மை விசா ரிக்க வந்திருக்கிறோம்!" என்றார் இன்ஸ்பெக்டர்.

"எனக்கு ஒன்றுமே தெரியாதே!" என்று திருதிருவென விழித்தான் செல்லையா. "பழனியப்பனும் நானும் மாடியில் தூங்கிக்கொண்டிருந்தோம்."

"அதை நீர் நிச்சயமாகச் சொல்லமுடியுமா?"

"எனக்கு எதுவுமே தெரியாது! எங்களை மறந்து தூங்கிக் கொண்டிருந்தோம்!" என்றான் செல்லையா.

"நீர் போட்டிருக்கும் சட்டையில் அந்த ரத்தக்கறை எப்படி வந்தது?"

அப்போதுதான் செல்லையா தன்சட்டையைக் கவனித்தான். அதில் படிந்திருந்த கறையைக் கண்டதும் அவன் திடுக்கிட்டு நின்றான். தன் கண்களையே நம்பாமல் அதைக் கையால் தடவிப் பார்த்தான். அவன் விரல்களின் நுனியில் பச்சை ரத்தம் ஒட்டிக் கொண்டு வந்தது. அந்த விரல்களைப் பார்த்து அவன் திக்பிரமை யுற்றான்.

மிஸ்டர் செல்லையா, இந்த வீட்டை நான் சோதிக்கவேண்டும். உம்முடைய சட்டையையும் நீர் அணிந்திருக்கும் மற்ற உடை களையும் நான் பரிசோதனைக்கு அனுப்பவேண்டும்," என்று சொல்லிவிட்டு, ஸார்ஜண்டு பக்கம் திரும்பி, இவர்கள் இருவ ரையும் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போ," என்று உத்தரவிட்டார் இன்ஸ்பெக்டர்.

அன்று இரவு இரண்டு மணியிருக்கும். சென்னையில் துப்ப றியும் கேசவனது படுக்கைக்குப் பக்கத்திலிருந்த டெலிபோன் மணி, கணகணவென்று அலறியது. ரிஸீவரைக் கையிலெடுத்து, "யாரது?" என்றார் கேசவன்.

"ஓவியர் கிருஷ்ணமூர்த்தி பேசுகிறேன்," என்று பதில் வந்தது.

அவ்விருவரும் சுமார் மூன்று நிமிஷங்கள் பேசினர். உடனே பரபரப்பாக எழுந்து சென்று, பக்கத்து அறையில் உறங்கிக் கொண்டிருந்த தன் சிஷ்யனைத் தட்டியெழுப்பி, "தினகர், சீக்கிரம் புறப்படு; நாம் அவசரமாகக் கமலவனம் போக வேண்டும்," என்றார் துப்பறியும் கேசவன்.

### அத்தியாயம் : 13

# பழனியப்பன் கை ரேகை

அதிகாலே மணி நாலரைக்கெல்லாம், கமலவனம் போலீஸ் ஸ்டேஷன் எதிரே வந்து நின்றது துப்பறியும் கேசவனின் ரோல்ஸ் ராய்ஸ் கார். வக்கீல் வேதாசலம், இன்ஸ்பெக்டர் **தர்மராஜ்**, சப் இன்ஸ்பெக்டர் **தங்கமணி**, சார்ஜண்டு **சத்திய நாதன்**, டிப்டி சூப்பரிண்டெண்டெண்டு **சிங்காரவேலு முதலியார்**—இத்தனை பேரும் அங்கு ஏக காலத்தில் கூடியிருந்தனர். அவர்கள் எல்லோரும் துப்பறியும் கேசவனை நன்ருயறிந்தவர்கள் தான். அதிலும் சிங்காரவேலு முதலியார் அவருக்கு நெடு நாளைய நண்பர். நேரே முதலியாரிடம் போய், "விஷயம் என்ன?" என்று விசாரித்தார் கேசவன்.

நடந்த விஷயங்களைச் சுருக்கமாகக் கூறிவிட்டு, அவர் கடைசியாகச் சொன்னர் : "என் அபிப்ராயம் இதுதான் :— அதாவது, செல்லேயாவும் பழனியப்பனும் கலியாண வீட்டிலிருந்து நன்ருகக் குடித்துவிட்டு வந்து வெள்ளை மாளிகையில் படுத்திருக்கிருர்கள். அதில் சந்தேகமே இல்லே. அப்போது கனகப்பன் போய், கதவைத் தட்டியிருக்கிருன். இரண்டுபேர்களில் எவனே ஒருவன் எழுந்து போய்க் கதவைத் திறந்தான். கனகப்பன் உள்ளே நுழைந்தான். அப்புறம் அவர்களுக்குள் என்ன நடந்ததோ தெரியவில்லே. முடிவு என்னவென்ருல், கனகப்பனை ஒரு கடப்பாரையால் அடித்து, மண்டையை உடைத்து வெளியே உருட்டித் தள்ளிவிட்டார்கள். இதுதான் நடந்த கதை."

"இதைப்பற்றி செல்லேயாவும் பழனியப்பனும் என்ன சொல்கிருர்கள்?" என்று துப்பறியும் கேசவன் கேட்டார்.

"அவர்கள் தங்களுக்கு ஒன்றுமே தெரியாது என்று சாதிக்கிருர்கள். கனகப்பனைத் தங்கள் வீட்டில் பார்த்ததுகூட இல்லே என்கிருர்கள். ஆனல் செல்லேயாவின் சட்டையில் ஒரு பெரிய ரத்தக்கறை காணப்படுகிறது. அது எப்படி வந்ததென்பதே தனக்குத் தெரியாதென்கிருன் அவன். உண்மையில் அவன் நன்ருய்க் குடித்திருக்கிருன். ஆனல், அதை ஒரு சமாதானமாகக் கூறி இந்த வழக்கில் அவன் தப்பித்துவிட முடியாது! ஆஸ்பத்திரியில் கனகப்பனின் உயிர் போய்விட்டால், இது கொலேவழக்காகிவிடும்!" என்று அழுத்தமாகக் கூறினர் டிப்டி சூப்பரிண்டு.

"ஒருவேளை அவர்கள் தற்காப்புக்காக அப்படிச் செய்ய நேர்ந்திருக்கலாம்," என்றார் வக்கீல் வேதாசலம்.

"ரொம்ப அழகாயிருக்கிறதே! பாவம், கனகப்பனோ ஒரு வயோதிகன். மேலும் அவன் கையில் ஆயுதம் எதுவும் வைத்திருந்ததாகவும் தெரியவில்லை. அவனை இந்தத் தடிப் பயல்கள் இரண்டுபேரும் தற்காப்புக்காகக் கொன்றார்களென்றால், இதை யாராவது நம்புவார்களா? அப்படியே யிருந்தாலும், அவனை அடித்து வீழ்த்திய உடனே அவர்கள் டாக்டரையல்லவா கூப்பிட்டு அவனுக்குச் சிகிச்சையளித்திருக்க வேண்டும்? அல்லது போலீசுக்காவது ரிப்போர்ட்டு செய்திருக்க வேண்டும். இரண்டையும் விட்டு அவர்கள் ஏன் அவனை வாசற்படியில் உருட்டித் தள்ளினார்கள்? அந்தச் சின்னச்சாமியும் பவானியும் இன்னும் அரைமணி நேரம் கழித்து வந்திருந்தால், கனகப்பன் பிரேதமாகி விட்டிருப்பானே? இப்போதும் அவன் பிழைப்பது நிச்சயமில்லை. கடைசியில் இது ஒரு கொலைக் கேஸாகத்தான் வந்து முடியும் போலிருக்கிறது," என்று கூறி முடித்தார் டிப்டி சூப்பரிண்டு சிங்கார்வேலு முதலியார்.

"உம்!" என்று பெரிய நெடுமூச்செறிந்தார் துப்பறியும் கேசவன். "ரொம்ப சரி. இப்போது செல்லையாவும் பழனியப்பனும் எங்கே? கைது செய்து காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்களா?"

"இன்னும் கைது செய்யப்படவில்லை. ஆனால் விசாரணைக்காக இங்கு அழைத்துவரப் பட்டுத் தனியாக அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்."

"இந்த விசாரணை சமயத்தில், செல்லையாவின் சார்பாக யாரேனும் வக்கீல் ஒருவர் ஆஜராயிருப்பது, பின்னால் கேஸ் நடத்துவதற்கு அனுகூலமாயிருக்கும். அந்த நோக்கத்தோடுதான், அவனுடைய குடும்ப வக்கீல் என்ற முறையில், இதைக் கேள்விப்பட்டவுடன் ஓடிவந்தேன். ஆனால் அவன் என்னை விரும்பவில்லை," என்றார் வக்கீல் வேதாசலம்.

"பிறகு யாரை விரும்புகிறான்?" என்று வினவினார் துப்பறியும் கேசவன்.

"நீங்கள்தான் அவனுக்காக ஆஜராகவேண்டுமாம்," என்று சிரித்தார் வக்கீல் வேதாசலம். "நீங்கள் அவனுக்கு என்னதான் சொக்குப்பொடி போட்டீர்களோ தெரியவில்லை. உங்களிடத்தில் அவனுக்கு அளவுக்கு மிஞ்சி நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. நீங்கள்

ஒரு வக்கீல் அல்ல என்ற விஷயத்தைக்கூட அவனிடம் நான் விளக்கிக் கூறிவிட்டேன். அப்போதும்......"

"நான் வக்கில் அல்லவென்று உங்களுக்கு யார் சொன்னது?"

"பிறகு என்ன? நீங்கள் வக்கீல் பரீட்சை பாஸ் பண்ணி யிருக்கிறீர்களா?" என்று வியப்போடு கேட்டார் வக்கீல் வேதாசலம்.

"என்னுடைய இருபத்து நான்காவது வயசிலேயே நான் வக்கீல் பரீக்ஷை பாஸ் பண்ணிவிட்டேன். ஆனால் அந்தத் தொழிலில் இல்லாததனால் வெளியே யாருக்கும் தெரியாது. இப்படி ஏதேனும் சந்தர்ப்பம் வந்தால் மட்டும் என் சன்னதை உபயோகிப்பேன். அதற்காக வருஷந்தோறும் தவறாமல் கட்டணம் கட்டிவருகிறேன்," என்று தன் தோல் பையிலிருந்து ஒரு சன்னதை எடுத்தார் துப்பறியும் கேசவன்.

"அப்படியானால் நீங்கள் தாராளமாக ஆஜராகலாம்," என்று ஆமோதித்துவிட்டு, ஒரு சேவகனைப் பார்த்து, "செல்லையாவை அழைத்து வா," என்றார் டிப்டி சூப்பரிண்டு.

செல்லையா அழைத்துவரப்பட்டான். அவனுடைய மது போதை முற்றிலும் தெளிந்துவிட்டிருந்தது. துப்பறியும் கேசவனைக் கண்டதும், அவன் அகத்திலும் முகத்திலும் ஒரு புதிய தெம்பு பிறந்தது. அவனை விசாரிக்கத் தொடங்கினார் டிப்டி சூப்பரிண்டு.

"மிஸ்டர் செல்லையா, கனகப்பன் உம்முடைய மாளிகையில் அடிபட்டுக் கிடந்ததைப் பற்றி, உமக்கு ஒன்றுமே தெரியாதென்று நீர் இன்ஸ்பெக்டரிடம் கூறியிருக்கிறீர். இப்போது மிஸ்டர் துப்பறியும் கேசவன் உமக்காக இங்கு ஆஜராயிருக்கிறார். இது மாதிரி சந்தர்ப்பங்களில் போலீசாரிடம் உள்ளதை உள்ளபடி கூறிவிடுவதுதான் நல்லது என்பதை அவரும் உமக்கு எடுத்துச் சொல்வாரென நம்புகிறேன்!" என்று கேசவன் பக்கம் திரும்பினார் டிப்டி.

"ஆம், செல்லையா," என்று ஆமோதித்தார் கேசவன். "கனகப்பன் உன் வீட்டினுள் நுழையும்போது நீ பார்த்தாயா? உன்னை அவன் தாக்க முயன்றானா? அல்லது பயமுறுத்தினானா? எது நடந்திருந்தாலும், நீ பயப்பட வேண்டாம். தைரியமாக உண்மையைக் கூறிவிடு," என்றார் அவர்.

"இன்றிரவு அவனை நான் கண்ணால்கூட பார்க்கவில்லை. அவன் என் வீட்டுக்கு வந்துபோன விஷயமே, போலீஸ் இன்ஸ்பெக்டர் சொன்ன பிறகுதான் எனக்குத் தெரியும்," என்றான் செல்லையா.

"அப்படியானால் சரி. இனிமேல் எந்தக் கேள்விக்கும் நீ பதில் சொல்லவேண்டியதில்லை," என்று சொல்லிவிட்டு, டிப்டியை நோக்கிப் புன்னகை புரிந்தார் துப்பறியும் நிபுணர். "என் கட்சிக்காரரின் இந்த வாக்குமூலத்தை நீங்கள் வேண்டுமானால் எழுத்து மூலமாக வாங்கிக்கொள்ளலாம்."

டிப்டி சூப்பரண்டுக்கு இது பெருத்த ஏமாற்றமாயிருந்தது. செல்லையாவிடம் என்னென்னவோ கேள்வியெல்லாம் கேட்க வேண்டுமென்று அவர் எண்ணியிருந்தார். ஆனால் மேற்கொண்டு எதுவும் கேட்க இயலாதவாறு, கேசவனால் ஆக்கப்பட்டது அவருக்குச் சங்கடமாயிருந்தது. "சரி, சரி. இவனை வெளியே கொண்டு போ. பழனியப்பனைக் கூட்டிவா," என்று சிரித்தார் ஒரு கான்ஸ்டேபிளை நோக்கி.

பழனியப்பன் அவ்வறைக்குள் கொண்டுவந்து நிறுத்தப்பட்டான். போலீஸ் அதிகாரிகளைக் கண்டு சற்றேனும் அச்சமுற்றதாய்க்காணப்படவில்லை அவனது தோற்றம். ஆனைப்பட்ட டிப்டி சூப்பரிண்டின் எதிரிலேயே மிக அலட்சியமாகச் சிரித்துக் கொண்டு நின்றான் அவன்.

"மிஸ்டர் பழனியப்பன் ..." என்று ஏதோ கேள்வி கேட்க ஆரம்பித்தவுடனேயே, அவரை அவன் குறுக்கே மறித்தான்.

"சரி, சரி. ஏன் அனாவசியமாக உங்கள் தொண்டைத் தண்ணீரை வற்ற அடிக்கிறீர்கள்? நீங்கள் என்ன கேட்கப் போகிறீர்களென்று எனக்குத் தெரியும். அதை நானே சொல்லிவிடுகிறேன். அந்த வெறிகொள்ளிப் பயல் கனகப்பனை நான்தான் அப்படி அடித்து வெளியே தூக்கி எறிந்தேன். போதுமா?"

பழனியப்பனது இந்த வார்த்தையைக் கேட்டதும், அங்கிருந்த அனைவருமே திடுக்கிட்டனர். ஒரு நிமிஷ நேரம் யாருமே பேசவில்லை. கடைசியாக இன்ஸ்பெக்டர் தர்மராஜ் பேசினார்:

"கனகப்பனுக்கு மரணபத்தான காயம் விளையும்படியாக அவனது மண்டையில் அடித்து, வீட்டுக்கு வெளியே சாகும்படி அவனை நீ விட்டெறிந்து விட்டாய் என்பதை ஒப்புக்கொள்கிறாய்!"

"ஆமாம்! அப்படித்தான்!" என்றான் பழனியப்பன் அலட்சியமாக.

"நீ அவ்வாறு செய்தது செல்லையாவுக்குத் தெரியுமா?"

"செல்லையாவுக்கு ஒன்றுமே தெரியாது. அவன் தன் அறையில் உறங்கிக்கொண்டிருந்தான்!" என்றான் பழனியப்பன்.

"அப்படியானால், கனகப்பனைக் கடப்பாறையால் அடித்துக் கொடுந் துன்பம் விளைவித்த குற்றத்திற்காக நான் இப்போது உன்னைக் கைதுசெய்யப் போகிறேன். ஆனால் ஓர் எச்சரிக்கை. கனகப்பன் உயிர் பிழைக்காது இறந்துவிட நேர்ந்தால், உன்மீது கொலைக்குற்றம் சாட்டப்படும்," என்று மிகக் கடுமையான தொனியில் கூறினார் டிப்டி.

"வாஸ்தவமான பேச்சு. அதுதான் உங்கள் கடமை! ஆஹா! ஒரு பெரிய சிக்கல் வெகு சுலபமாகத் தீர்ந்துவிட்டது!" என்று ஒப்புக்கொண்டார் துப்பறியும் கேசவன். "ஆனால், இந்த என் கட்சிக்காரரிடத்தில் நான் இரண்டொரு கேள்விகள் கேட்கலாமா?" என்று அவர் கேட்டார்.

"தாராளமாக. அதற்கு உங்களுக்குப் பரிபூர்ண உரிமையிருக்கிறது."

"ரொம்ப வந்தனம்," என்று கூறிவிட்டு, பழனியப்பனை நோக்கித் தம் கேள்விகளை ஆரம்பித்தார் துப்பறியும் கேசவன்.

"மிஸ்டர் பழனியப்பன், நடந்த விஷயங்களை நன்றாய் ஞாபகப்படுத்திக்கொண்டு பதில் சொல்லவேண்டும். முதலாவது, கனகப்பனைக் கடப்பாறையால் அடித்து வீழ்த்தி, வெளியே தள்ளிக் கதவைத் தாழிட்டபிறகு நீ என்ன செய்தாய்?"

"நேரே என் அறைக்குப் போய்ப் படுத்துக்கொண்டேன்!"

"அப்படியானால், செல்லையாவின் சட்டையில் எப்படி ரத்தக் கறை ஏற்பட்டது?"

பழனியப்பன் வெடுக்கெனத் துப்பறியும் கேசவனை வெறித்துப்பார்த்தான். சட்டென ஒரு புத்தி சாதுரியம் அவன் முகத்தில் பளிச்சிட்டது.

"என் அறைக்குப் போகும் வழியில் செல்லையா தூங்குகிறானா, விழித்திருக்கிறானாவென்று கதவைத் திறந்து பார்த்தேன். உள்ளே அவன் தூங்கிக்கொண்டிருந்தான். என் கையெல்லாம் ஒரே ரத்தக்கறையாயிருந்தது. அதை அங்கே தொங்கிக்

கொண்டிருந்த ஒரு துணியில் துடைத்துவிட்டுப் போனேன்! அது செல்லையாவின் சட்டை என்பதைப்பற்றி நான் யோசிக்கவே இல்லை! அந்தச் சமயத்தில் என் நிலை அப்படிப்பட்டது."

"செல்லையாவின் படுக்கையறைக் கதவு உட்புறம் பூட்டப்பட்டிருக்கும் போது, அதை எப்படி உன்னால் திறக்கமுடிந்தது?" என்று கேட்டார் துப்பறியும் கேசவன்.

"அது அவ்வளவு கெட்டியான பூட்டில்லை. கதவிலுள்ள வெளிக் கைபிடியைத் திருகின மாத்திரத்திலேயே அது திறந்து கொண்டது."

"ஓஹோ! பிறகு அந்தக் கைபிடியிலும் ரத்தக்கறை பட்டிருக்க வேண்டுமே?" என்று இன்ஸ்பெக்டரை நோக்கினார் கேசவன்.

"இல்லை. செல்லையாவின் சட்டையையும் கடப்பாறையையும் தவிர வேறு எதிலுமே ரத்தக்கறை காணப்படவில்லை!" என்று பதிலளித்தார் இன்ஸ்பெக்டர்.

"கைப்பிடியிலிருந்த ரத்தக்கறையை நான் துடைத்து எடுத்து விட்டேன்," என்றான் பழனியப்பன்.

"எதைக்கொண்டு துடைத்தாய்?"

"எதைக்கொண்டு?" என்று கோபத்தோடு தடுமாறிய அவன், "ஏதோ ஒரு கிழிந்த துணிக் கந்தலைக் கொண்டுதான்!" என்று கடுகடுப்பாகக் கூறினான்.

"அந்தக் கந்தல் துணி உனக்கு எங்கே கிடைத்தது?" என்றார் துப்பறியும் கேசவன்.

"இதென்ன கேள்வி? அது...அது...நான் அதை எங்கேயோ கிடந்தெடுத்தேன். தற்செயலாக அந்தச் சமயம் அது என் சட்டைப் பையிலிருந்தது."

"சரிதான். இந்தமாதிரி எப்போதாவது ரத்தக்கறைகளைத் துடைக்கவேண்டியிருக்கும் என்று எதிர்பார்த்து, நீ ஏற்கெனவே அதைச் சித்தமாய் எடுத்து வைத்திருந்தாய் போலிருக்கிறது. அது போகட்டும். அந்தத் துணியின் நிறம் என்ன? அதாவது அதில் ரத்தம் படிவதற்கு முன்னால் இருந்த அதன் ஒரிஜினல் நிறம் என்ன?" என்று புன்முறுவலுடன் கேட்டார் துப்பறியும் கேசவன்.

பழனியப்பன் உள்ளத்தில் சிறிது குழப்பமும் கோபமும் விளைந்தன. "அதையெல்லாம் நான் கவனிக்கவில்லை! அந்தக்

கந்தல் துணி என்ன நிறமாயிருந்தாலென்ன?" என்று வெடுக்கெனப் பதிலளித்தான்.

"நியாயந்தான். ஆனல், கதவின் கைப்பிடியைத் துடைத்து விட்டு அந்தக் கந்தலை நீ என்ன செய்தாய்?"

"அதை...அதை...நான் அதை விட்டெறிந்துவிட்டேன்!"

"எங்கே?"

"எங்கேயா?...அது வந்து...அங்கேயேதான். இதெல்லாமா ஒரு மனிதன் நினைவில் வைத்திருக்க முடியும்?" என்ருன் எரிச்சலோடு பழனியப்பன்.

இன்ஸ்பெக்டரை நோக்கித் துப்பறியும் கேசவன் திரும்பினர். "மிஸ்டர் இன்ஸ்பெக்டர், அந்த வீட்டை நீங்கள் பரிசோதிக்கும்போது எங்கேயாவது அம்மாதிரி இரத்தக்கறை படிந்த கந்தல் துணியை நீங்கள் கண்டெடுத்தீர்களா? இதை ஏன் கேட்கிறேன் என்ருல், இந்த வழக்கிலேயே அது ஒரு முக்கியமான தடயம். ஆகையால் உங்கள் கவனத்திலிருந்து அது தப்பியிருக்க முடியாது!" என்ருர் கேசவன்.

"கந்தல் துணியாவது, கத்தரிக்காயாவது? இவன் சொல்வது அத்தனையும் பொய், சார்," என்று வெறுப்போடு கூறினர் டிப்டி சூப்பரிண்டு, "ஏ கான்ஸ்டேபிள், இவனைக் கொண்டு போ வெளியே! சுத்தப் புளுகுணிப்பயல்!"

பழனியப்பன் அவ்வறையை விட்டு அழைத்துச் செல்லப்பட்டான். துப்பறியும் கேசவன் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தார்.

"நான்கூட இவன் வார்த்தையை முதலில் உண்மையென்றே நம்பிவிட்டேன்," என்ருர் டிப்டி. "அயோக்ய ராஸ்கல், அவ்வளவும் ஒரு நிமிஷத்துக்குள்ளே கதை திரித்துவிட்டான்! இவன் ஏன் அப்படி வலிய வந்து குற்றத்தைத் தலையில் வாரிப் போட்டுக்கொண்டான்? அதற்குக் காரணம் ஏதேனும் **உங்களுக்குப்** புலப்படுகிறதா, மிஸ்டர் கேசவன்?"

"காரணம் வேறொன்றுமில்லை. அந்தக் காலத்தில் பழனியப்பன் ஒரு கப்பல் விபத்தில் தத்தளிக்கும்போது, அவனுயிரைக் காப்பாற்றினனும் செல்லையா. அதற்குப் பதிலுபகாரமாக, இப்போது செல்லையாவைக் காப்பாற்ற முயல்கிருன் பழனியப்பன்," என்று சிரித்த துப்பறியும் கேசவன், "ஆகவே, என் கட்சிக்காரர்களைக் கைது செய்வதற்குப் போதுமான சாட்சியம்

இன்னும் உங்களுக்குக் கிடைக்கவில்லை. அவர்களிருவரையும் நான் அழைத்துச் செல்லலாமல்லவா?'' என்று கேட்டார்.

துப்பறியும் கேசவனைச் சற்று கடுமையாக நோக்கினார் டிப்டி சூப்பரிண்டு. "நீர் **இப்போது** அழைத்துச் செல்வதை நான் ஆட்சேபிப்பதற்கில்லை. ஆனால் இந்தமட்டோடு அவர்கள் தப்பித்து விட்டதாக நினைக்கவேண்டாம். இரண்டு பயல்களில் ஒருவன் தான் நன்றாகக் குடித்துவிட்டுக் கனகப்பனைத் தாக்கியிருக்க வேண்டும். முக்கியமாக, அந்தப் பயல் பழனியப்பனைப்பற்றி ஏனோ எனக்குப் பலத்த சந்தேகமாயிருக்கிறது. அவன் கைரேகையை எடுத்து நான் நிபுணரின் பரிசோதனைக்கு அனுப்பப் போகிறேன். நாளை மத்தியானத்திற்குள் எனக்குப் பதில் கிடைத்துவிடும். அப்புறம் அவனை நான் பார்த்துக்கொள்கிறேன்,'' என்று சீறினார் டிப்டி சிங்காரவேலு முதலியார்.

"உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடிப்பதில், நான் உங்களைக் காட்டிலும் ஆர்வமுடையவன் என்பதை மறந்துவிடாதீர்கள், மிஸ்டர் முதலியார்,'' என்று கூறியவாறே, துப்பறியும் கேசவன் தம் நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்தார். "அதிருக்கட்டும். உங்களிடமிருந்து நான் ஒரு முக்கியமான விஷயத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.''

"என்ன?''

"பன்னிரண்டு ஆண்டுகட்கு முன்பு முத்தையா முதலியார் கொலைவழக்கில், தூக்குமேடை ஏறாமல் தெய்வாதீனமாகத் தப்பித்துக்கொண்டார் செந்தில்நாத முதலியார். அவர் உண்மையில் நிரபராதியென்று நீங்கள் நம்புகிறீர்களா?''

"முடிந்துபோன பழைய கதையைப்பற்றி இப்போதென்ன விசாரம்?''

"அது இன்னும் முடிந்துபோகவில்லை, மிஸ்டர் முதலியார். அந்த முத்தையா முதலியாரின் ஆவியானது, அடிக்கடி வெள்ளை மாளிகைக்கு விஜயம் செய்கிறதாமே? நீங்கள் கேள்விப்பட்டதில்லையா?''

"என்ன மிஸ்டர் கேசவன், நீங்கள் கூடவாபேய்பிசாசுகளில் நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள்?'' என்று சிரித்தார் டிப்டி.

"நாம் நம்பிக்கை வைத்தாலும் வைக்காவிட்டாலும், சில சமயங்களில் பேய்களும் நமக்குப் பல பேருண்மைகளை விளக்குகின்றன,'' என்றார் துப்பறியும் கேசவன்.

### அத்தியாயம் : 14

# சாமியார் வருவார்

செல்லையாவையும் பழனியப்பனையும் தம் காரில் அழைத்துக்கொண்டு துப்பறியும் கேசவன் மெதுவாக வெள்ளை மாளிகைக்கு வந்து சேர்ந்தார். அவர்களது வருகையை எதிர்பார்த்து அங்கு ஏற்கனவே காத்திருந்தனர். ஓவியர் கிருஷ்ணமூர்த்தி, கண்ணன், மஞ்சுளா, பத்மாவதியம்மாள் ஆகிய நால்வரும். அங்கு காத்திருந்த பவானியோ, மஞ்சுளா வந்ததும் போய் விட்டாள்.

செல்லையா காரை விட்டிறங்கியதும். கண்ணனும் மஞ்சுளாவும் அவனை வந்து சூழ்ந்துகொண்டனர். கிருஷ்ணமூர்த்தி மட்டும் அவனை ஏறிட்டுக்கூடப் பார்க்காமல் நேரே துப்பறியும் கேசவனிடம் வந்து விசாரித்தார் :

"என்ன ஆயிற்று? நல்ல வேளையாகப் போலீசார் செல்லையாவை இன்னும் கைது செய்யவில்லையென்று தெரிகிறது!"

"அவன் எந்த நிமிஷத்திலும் கைது செய்யப்படலாம்," என்றார் துப்பறியும் கேசவன்.

கேசவனைப் பார்த்துச் சிறிது கோபத்தோடு பேசினான் பழனியப்பன் : "நீர் இடையில் வந்து அநாவசியமாகக் குறுக்கிட்டுக் குட்டையைக் குழப்பிவிட்டீர். இல்லாவிட்டால் போலீசார் என் வாக்குமூலத்தை அப்படியே நம்பியிருப்பார்கள். செல்லையா சௌகரியமாகத் தப்பித்துக்கொண்டிருக்கலாம். அதைக் கெடுத்து விட்டீர்."

"செல்லையா மட்டுமென்ன? உன்னுடைய பித்துக்கொள்ளித்தனமான வாக்குமூலத்தால் உண்மைக் குற்றவாளி எவனோ, அவன் கூடத்தான் சுலபமாகத் தப்பித்துக் கொண்டிருப்பான். நான் அதையும்தான் கெடுத்துவிட்டேன்!" என்று சிரித்தார் துப்பறியும் கேசவன்.

இதற்கிடையில், கண்ணனும் மஞ்சுளாவும் செல்லையாவோடு குழைந்து பேசிக்கொண்டு நின்றனர்.

"போலீசாருடைய பழக்கமே இப்படித்தான். எடுத்த எடுப்பில் நிரபராதிகள் மீதுதான் அவர்கள் திருஷ்டியைச் செலுத்துவார்கள். போயும் போயும் உன்னை அவர்கள் சந்தே

கித்தார்களே! அவர்களுடைய மூளையை என்னவென்று சொல்வது!" என்று பரிதாபமுற்ருன் கண்ணன்.

"செல்லையா, உன்னைப்பற்றி யார் யார் என்ன நினைத்தாலும் சரி; நீ குற்றமற்றவன் என்றே நான் நிச்சயமாக நம்புகிறேன். உன் வாழ்வு தாழ்வு இரண்டிலும் என் உள்ளம் பரிபூரணமாகப் பங்குகொண்டு விட்டது," என்று அவன் கையைப் பிடித்துக்கொண்டு, கண்களில் நீர் ததும்ப உருக்கமாகக் கூறினாள் மஞ்சுளா. அவளுடைய நடிப்புத் திறத்தைக் கண்டு உண்மையிலேயே பிரமித்து நின்றார் துப்பறியும் கேசவன்.

"இவ்வளவும் என்னுடைய அஜாக்கிரதையால் வந்த வினை," யென்று தன்னைத்தானே நொந்துகொண்டான் கண்ணன். "நேற்றிரவு இங்கே உன்னை மயக்கத்தோடு படுக்கவைத்துவிட்டு, நான் கலியாண வீட்டுக்குத் திரும்பிப் போயிருக்கக் கூடாது. ஆனால் இப்படியெல்லாம் நடக்குமென்று யார் கண்டது?"

இப்போது துப்பறியும் கேசவன் குறுக்கிட்டார்: "அதிருக்கட்டும், கண்ணன். கலியாண வீட்டில் செல்லையாவுக்கு ஜின்னோ, விஸ்கியோ கொடுத்தது யார்?"

"ஜின்னாவது விஸ்கியாவது? அதெல்லாம் அங்கே ஏது? என்ன செல்லையா, கலியாண வீட்டில் நீ ஜின்னும் விஸ்கியுமா சாப்பிட்டாய்?"

"அந்த இரண்டையுமே நான் எங்கும் சாப்பிட்டதில்லை. ஆனால் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து இப்போது இங்கே வரும் வழியில் துப்பறியும் கேசவன் என்னை ஒரு டாக்டரிடம் அழைத்துச்சென்று, பரிசோதனை செய்வித்தார். நான் ஜின்னோ விஸ்கியோ அருந்தியிருக்க வேண்டும் என்று டாக்டர் தெரிவித்தார். அதை எனக்கு யார் கொடுத்தார்களென்பது தான் புரியவில்லை. என்னைப் போலவே பழனியப்பனுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது!" என்ருன் செல்லையா.

"அப்படியா?" என்று ஆச்சரியமுற்ருன் கண்ணன். சிறிது நேரம் யோசித்துவிட்டு அவன் கூறினன்: "கலியாண வீட்டுக்கு வந்திருந்த பெரிய மனிதர்களில் அநேகருக்குக் குடிப்பழக்கமுண்டு. அவர்களுக்காகக் கிரஷ்ஷோடு கலந்து வைத்திருந்த ஜின் அல்லது விஸ்கி தம்ளர்கள், பணியாட்களின் கைத் தவறுதலால் செல்லையாவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கலாம்!"

"அப்படித்தான் நானும் நினைத்தேன்! ஆனால் அப்படி எவன் கைத் தவறுதலாகக் கொடுத்திருப்பான் என்று கண்டுபிடித்துச்

சொல்!" என்று கண்ணனை நோக்கிப் புன்னகைத்தார் துப்ப றியும் கேசவன்.

கண்ணனின் முகத்திலிருந்த பிரகாசம் மறைந்தது. ஆனால் சாமர்த்தியமாகத் தன்னைச் சமாளித்துக்கொண்டான்.

"செல்லையா, நீயும் பழனியப்பனும் போய்ப் படுத்துறங் குங்கள். மற்றவர்களெல்லாம் வீட்டுக்குப் போகலாம். நானும் என் சிஷ்யன் தினகரனும் சில தினங்கள் வரை இந்த வெள்ளை மாளிகையில்தான் தங்கியிருக்கப் போகிறோம். இன்னும் இரண் டொரு தினங்களில் வேறொரு விருந்தாளியும் இங்கு வரப் போகிறார்......" என்றார் துப்பறியும் கேசவன்.

"யாரது?" என்றார் ஓவியர் கிருஷ்ணமூர்த்தி.

"அருளானந்த சாமியார்தான்! பன்னிரண்டு வருஷங் களுக்கு முன் முத்தையா முதலியார் கொலையுண்ட இரவு இதே வெள்ளை மாளிகையில் தங்கியிருந்தவர். அவர் இப்போது சென் னையிலிருக்கிறார். அந்தக் கொலை விஷயமாய் நேற்று மாலை அவரோடு நான் வெகு நாழி பேசிக்கொண்டிருந்தேன்!" என்றார் துப்பறியும் கேசவன், ஓவியர் கிருஷ்ணமூர்த்தியின் முகத்தை உற்றுப்பார்த்துக்கொண்டே.

"அவர் இப்போது புதிதாய் என்ன சொல்லப்போகிறார்? பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்பு அவர் கோர்ட்டில் படித்த அதே பாடத்தைத்தான் நேற்று உங்களிடம் திருப்பி ஒப்புவித் திருப்பார்!" என்றாள் மஞ்சுளாவின் தாய்க்காரியான பத்மாவதி யம்மாள்.

துப்பறியும் கேசவன் அதற்கு ஒன்றும் பதில் கூறாமல், அவளை நோக்கி வெறுமனே முறுவலித்தார்.

செல்லையா சிறிது தயக்கத்தோடு ஓவியர் கிருஷ்ணமூர்த்தி யிடம் பேச ஆரம்பித்தான்: "நேற்றிரவு நீங்கள்தான் சென் னைக்கு டெலிபோன் பண்ணி, மிஸ்டர் கேசவனை இங்கு அவசர மாக வரவழைத்தீர்களாம். அதற்கு என் நன்றி......"

"நீ ஒன்றும் எனக்கு நன்றிகூற வேண்டியதில்லை. நான் உனக்காக அவரை வரவழைக்கவில்லை. உன் தந்தை என் உயிர்க் குயிரான நண்பராயிருந்தவர். அவருக்காகத்தான் நான் இதில் ஈடுபட்டிருக்கிறேன்!" என்று வெடுக்கென உரைத்தார் ஓவியர் கிருஷ்ணமூர்த்தி.

செல்லையாவின் முகம் அவமானத்தால் சுருங்கியது. அவன் ஏதோ சொல்ல வாயெடுத்தான்: ஆனால் அடக்கிக்கொண்டான். அந்தச் சமயம் பார்த்து மஞ்சுளா அவனை அணுகினாள்.

"நீ பேசாமல் மேலே உன் படுக்கையறைக்குப் போ, செல்லையா. போய் நிம்மதியாகப் படுத்துத் தூங்கு. நீ தூங்கி விழித்தவுடன் நான் உனக்கு டிபன் கொண்டுவருகிறேன்," என்றுள், சேயிடம் கனிவுகொண்ட ஒரு தாயின் தொனியில். செல்லையா அவளை அன்புடன் பார்த்தான். மஞ்சுளா அவனைக் கடைக் கண்ணுல் பார்த்து மோகச் சிரிப்பொன்றை உதிர்த்துக்கொண்டே, "செல்லையா, யார் எப்படி நடந்துகொண்டாலும் சரி, நாங்கள் உன் பக்கம் இருக்கும்வரை உனக்கு ஒரு கவலையும் வேண்டாம்!" என்றுள்.

---

## அத்தியாயம் : 15

# எச்சரிக்கை

---

வெள்ளை மாளிகையில் கனகப்பனுக்கு நேர்ந்த விபத்தின் செய்தி, கமலவனமெங்கும் காட்டுத் தீ போல் பரவியது. வீடுகள், பார்க்குகள், பஸ்கள், ஹோட்டல்கள் எல்லாவிடங்களிலும் செல்லையாவைப் பற்றியே பேச்சாயிருந்தது.

"அந்தக் காலத்தில் இவனுடைய அப்பன் ஒரு கொலைசெய்து விட்டுக் கோடித்தீவுக்கு ஓடிப்போனுன். இப்போது மகன் வந்த முதல் நாளிரவே குடித்துவிட்டுத் தானும் ஒரு கொலை செய்ய முயன்றிருக்கிறுன். அதுவும் யாரை ?...கொலைக்குப் பழிவாங்கத் துடிக்கும் பழைய வேலைக்காரனை ! 'மரமேறும் கரட்டான்—அதுபோடும் குட்டி' யென்ற பழமொழி பலித்துவிட்டது" என்னும் ரீதியில் உருவாகி நின்றது பொதுஜன அபிப்ராயம்.

காலை எட்டு மணிக்கெல்லாம் வெள்ளை மாளிகையின் தோட்டத்திலுள்ள பத்மாவதியின் விடுதியில் ஒரு காரசாரமான சதி மகாநாடு நடைபெற்றது.

"உன்னுடைய முட்டாள் தனத்தினுல்தான் எல்லாம் கெட்டுப் போய்விட்டது," என்று கண்ணனைக் கடிந்துரைத்தாள் மஞ்சுளா. "நீ செல்லையாவைக் குடிக்க வைத்திருக்கக் கூடாது. அதை எனக்கு முன்னமேயே நீ சொல்லியிருந்தால் நான் தடுத்திருப்பேன்."

"இப்போதும் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லை," என்று அலட்சியமாக ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தான் கண்ணன். "எப்படியாவது நாம் செல்லையாவை ஜெயிலுக்கு

அனுப்பிவிட வேண்டும். நான்குமாதத் தவணைக்குள் செல்லையா குற்றவாளி யெனத் தண்டிக்கப்பட்டால், உயிலின் பிரகாரம் சொத்துகள் அவனைச் சேராது! நம் பத்மாவதியம்மாள் கைக்கு வந்து, நாம் பேசிக்கொண்டபடி பங்குபோட்டுக் கொள்ளலாம். அதற்கு அனுகூலமாகவே சம்பவங்களின் சூழ்நிலை இதுவரையில் அமைந்திருக்கிறது. இன்னமும் செல்லையாவைத்தான் போலீசார் சந்தேகப்படுகிறார்கள்."

"ஆனால் துப்பறியும் கேசவன் உன்மீது சந்தேகப்படுகிறான்! நீதான் செல்லையாவைக் குடிக்க வைத்திருப்பாய் என்று கேசவனுக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெரியும்!" என்றாள் மஞ்சுளா.

"அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால் என்மீது எவ்விதக் குற்றத்தையும் நிரூபிக்க முடியாது. என்னைக் குறிவைப்பதிலேயே தன் கவனத்தையும் காலத்தையும் அவன் போக்கி விடப் போகிறான். அதற்குள் நம் கோதண்டம் நம் இரகசியத் திட்டத்தை நிறைவேற்றிவிடுவான்......"

"ஆமாமாம். கேசவன் உன்னைச் சந்தேகித்துக்கொண்டிருப்பது என் காரியத்தை லகுவாக்கிவிடும்," என்றான் கோதண்டம்.

"எல்லோரும் ரொம்பப் புத்திசாலிகள்தான். துப்பறியும் கேசவன் கண்ணனைச் சந்தேகித்தால், அவன் என்னையும் சந்தேகிக்கிறான் என்றல்லவா அர்த்தம்?" என்று ஆத்திரமுற்றாள் மஞ்சுளா.

"உன்னை அவன் சந்தேகிப்பதால் என்ன நஷ்டம்?" என்றான் கோதண்டம்.

மஞ்சுளா அதற்குப் பதில் சொல்ல வாயெடுத்தாள். கண்ணன் 'ஹா ஹா ஹா' வென்று பயங்கரமாய்ச் சிரித்தான். "மஞ்சுளா, எங்களையெல்லாம் மடையர்களென்று நினைக்காதேயடி! உன்னுடைய அந்தரங்க எண்ணத்தை நான் புரிந்துகொண்டு விட்டேன்."

"என்ன அது?" என்று திடுக்கிட்டுக் கேட்டான் கோதண்டம்.

"அவள் செல்லையாவை மயக்கித் தன் கைக்குள் போட்டுக்கொண்டு,—அதாவது அவனைக் கலியாணம் செய்துகொண்டு அவன் சொத்துக்கள் அனைத்தையும் நமக்குப் பங்குகொடுக்காமல் தான் மட்டுமே அபகரிக்கப் பார்க்கிறாள், திருடி!" என்றான் கண்ணன்.

இதைக் கேட்டதும் மஞ்சுளாவின் முகத்தில் அசடும், பீதியும் வழிந்தது. மிரண்டு நிற்கும் அவளை நோக்கிக் கண்ணன் கத்தியை விடக் கூர்மையான சிரிப்புடன் சீறினன் :

"மஞ்சுளா ! நீ சின்னப் பெண்ணுக இருந்தாலும், பாழ்புக்கு விஷம் வைக்கும் பாம்புடி நீ! உன் அம்மா கற்றுக்கொடுத்த வித்தையா ?"

மஞ்சுளா தன் மயக்குச் சிரிப்பால் அவனுடைய ஆத்திரத்தைச் சமாதானப்படுத்த விரும்பினள். கொஞ்சுதலாய் அவன் கழுத்தைக் கட்டிக்கொள்ள முயற்சித்தாள்.

"கண்ணு ! என்னை அப்படியெல்லாம் நினைக்காதே ! நீதான் எனக்கு..."

"போதும் நிறுத்தடி ! நீ செல்லையாவை மயக்கி ஏமாற்றியது போல் என்னையும் மயக்கிவிட முடியாது ! உன்னைப்போல் நூறுயிரம் பெண்களைப் பார்த்திருக்கிறேன் ! என் பிளான்படிதான் நீ நடக்கவேண்டும். மிஞ்சிப் பிளான் போட்டே...பாவம் சின்ன வயசிலே சாக நேரிடும் !"

கோதண்டத்தின் கண்கள் கோபத்தால் சிவந்தன. பத்மாவதி இடையில் குறுக்கிட்டு நிலைமையைச் சமாளிக்க முயன்ருள்.

"நீ சும்மா இரு கண்ணு !. நீ வேடிக்கையாகப் பேசுவதைக் கோதண்டம் நிஜமென்றே நினைக்கப்போகிருன்," என விஷயத்தை மழுப்ப முயன்ருள் பத்மாவதி.

"நிறுத்தம்மா, உன் சாகஸப் பேச்சை !" என்று சீறினன் கோதண்டம். உன்னையும், உன் மகளையும் எனக்கு நெடுநாளாகத் தெரியுமே ? நீங்கள் பணத்திற்காக எதுவும் செய்வீர்களே? ஆனல் இந்தக் கோதண்டத்தை மட்டும் நீங்கள் ஏமாற்ற முடியாது. அப்படி ஏதாவது நீங்கள் மனதால்கூட நினைத்தால் போதும் உங்களைப் பூண்டோடு ஒழித்துவிடுவேன், ஜாக்ரதை !" என்று நாக சர்ப்பம்போல் படபடவென்று சீறியவாறு அவன் எழுந்து நின்ருன். பிறகு அவன் கண்ணனை நோக்கி "கண்ணு நாம் ஜாக்ரதையாயிருக்க வேண்டும். இன்னும் இரண்டொரு தினங்களுக்கு நாம் பகிரங்கமாகச் சந்திக்காமலிருப்பது நல்லது. நான் வருகிறேன்," என்று வெளியே சென்ருன்.

மஞ்சுளாவின் முகத்தில் மரணபீதி படிந்திருந்தது, கண்ணன் போன வெகுநேரம் வரை நீங்கவில்லை.

### அத்தியாயம் : 16

# மாயமாய் மறைந்தான்!

காலை மணி ஒன்பதரையாயிற்று. செல்லையா அப்போது தான் கண் விழித்து எழுந்து தன் படுக்கையில் உட்கார்ந்தான். எதிரே ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தார் துப்பறியும் கேசவன்.

"செல்லையா, நீ இந்த ஊருக்கு வந்து இன்னும் முழுசாக இருபத்தினாலு மணி நேரம் ஆகவில்லை. அதற்குள் எங்கு பார்த்தாலும் உன்னைப்பற்றி ஒரு கெட்ட பேர் பரவிவிட்டிருக்கிறது." என்றார் துப்பறியும் நிபுணர்.

"அதற்கு நான் என்ன செய்யமுடியும்? இந்த ஊரிலுள்ள எல்லோருமே எனக்கு விரோதிகளாயிருக்கிறார்கள்!" என்று கொட்டாவி விட்டான் செல்லையா.

"உனக்கு யாருமே விரோதியில்லை. வேண்டுமானால் நீ வெகு சுலபமாக விரோதிகளைச் சம்பாதித்துக் கொள்ளலாம். ஓவியர் கிருஷ்ணமூர்த்தி அவருடைய குமாரிகள் போன்ற நண்பர்களைக் கூட, நீதான் உன் பேதமையால் விரோதித்துக் கொண்டு விட்டாய். உன் நன்மைக்காக அவர் என்னென்ன திட்டங்கள் போட்டு வைத்திருந்தார் தெரியுமா?"

"என்ன?"

"அதை இனிமேல் உன்னிடம் விவரித்துப் பிரயோஜனமென்ன? ஆனால் உதாரணத்துக்காக ஒரேயொரு விஷயம் மட்டும் கூறுகிறேன். இன்றிரவு அவர் வீட்டில் ஒரு விருந்து வைத்து, இவ்வூரிலுள்ள பிரமுகர்களையெல்லாம் அதற்கு வரவழைத்து, அவர்களிடம் சிறந்த முறையில் உன்னை அறிமுகப் படுத்தி வைக்க அவர் ஆசைப்பட்டார்......"

"அப்படியா?" என்று வியப்போடு வினவினான் செல்லையா.

"ஆமாம். ஆனால் நீ நேற்று அவர் வீட்டில் நடந்துகொண்ட மாதிரியிலிருந்து, அந்த எண்ணத்தை அவர் கைவிட்டு விட்டார். அப்புறம் நான்தான் சில காரியங்களை உத்தேசித்து, மிகவும் சிரமப்பட்டு அவர் மனத்தை மாற்றினேன்..."

"அப்படியானால் இன்றிரவு நான் அவர் வீட்டில் விருந்து சாப்பிட வேண்டுமா?"

"ஆமாம்."

"நான் மாட்டேன்," என்று அழுத்தமாக உரைத்தான் செல்லையா.

"இனி நீ மாட்டேன் என்று மறுப்பதில் பிரயோஜனமில்லை. நான் ஏற்கனவே உனக்காக அதை ஒப்புக்கொண்டு விட்டேன். நீ வந்துதான் ஆகவேண்டும்," என்றார் துப்பறியும் கேசவன்.

"ஆனால்....." என்று தயங்கினான் செல்லையா.

"அவர்கள் உன்னை விருந்துக்கழைத்து என் கண்முன்னே கொன்றுவிட மாட்டார்கள்; பயப்படாதே! அவர்கள் உன்னை அழைத்திருக்கிறார்கள் என்றால், உன்மீதுள்ள பிரியத்தாலோ, உன் சொத்துகளின் மீதுள்ள பிரியத்தாலோ அல்ல!"

"பின் எதற்காக?"

"அதுதான் சொன்னேனே! ஓவியர் கிருஷ்ணமூர்த்தி உன் தந்தையின் நண்பர். நீயோ பொதுஜன விரோதியாகி விட்டாய்! அந்த அபிப்பிராயம் மாறுவதற்குத்தான்! பவானி உன்னைப்பற்றி விசாரித்துப்போக வந்தாள். நீ சந்தேகிப்பாயோ என்று நினைத்து அவள் செய்த பக்ஷணத்தில் ஒன்றுகூடக் கொண்டுவரவில்லை. மஞ்சுளாவாயிருந்தால் வாயில்கூட ஊட்டிவிடுவாள்!" என்று சிரித்தார் துப்பறியும் கேசவன்.

"நீங்கள் ஏன்சார் செல்லையாவை அனுவசியமாக வற்புறுத்து கிறீர்கள்?" என்று கேட்டவண்ணம் அவ்வறைக்குள் பிரவேசித்தான் துப்பறிபவரின் சிஷ்யனான தினகரன். கேசவனுக்கு அவன் உதவியாளனாக இருந்தபோதிலும், அவனை ஒரு தோழன் போலவே அவர் வாஞ்சையோடு நடத்திவந்தார். அவனும் சில சந்தர்ப்பங்களில் அவரிடம் ஒரு வித சலுகையோடு அதட்டிப் பேசுவது வழக்கம்!

"ஏன் நான் செல்லையாவை வற்புறுத்தக்கூடாது?" என ஒன்றுந் தெரியாதவர் போல் வினவினார் கேசவன்.

"ஏனென்றால் ஓவியர் கிருஷ்ணமூர்த்தியிடத்திலும் அவருடைய பெண்களிடத்திலும் அவனுக்குக் கொஞ்சமேனும் நம்பிக்கையில்லை. கண்ணனையும் மஞ்சுளாவையும் போல், அவர்கள் அவ்வளவு நல்லவர்களல்லவென்பது அவனுடைய அபிப்பிராயம்!" என்றான் தினகரன்.

" ஒருவேளை ஓவியர் கிருஷ்ணமூர்த்தியின் பெண்கள் நேற்றிரவு செல்லையாவுக்கு ஷர்பத்தில் மதுபானத்தைக் கலந்து கொடுத்திருப்பார்களோ ?"—இது கேசவனின் கேள்வி.

" அதில் சந்தேகமென்ன ? கலியாண வீட்டுக்கு அவர்களும் வந்திருந்தார்களல்லவா ? அப்படியானால் அவர்களேதான் கொடுத்திருக்க வேண்டும். கண்ணனோ மஞ்சுளாவோ அந்தக் காரியத்தைச் செய்திருக்கவே மாட்டார்கள் ; ஏனெனில் அவர்களிருவரும் செல்லையாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகும் பாக்கியம் பெற்றவர்கள் !" என்று சிரித்தான் தினகரன்.

" நீங்கள் இப்போது என்ன சொல்கிறீர்கள் ? கண்ணனையும் மஞ்சுளாவையும் நான் நம்பக்கூடாது என்கிறீர்களா ?" என்று துப்பறியும் கேசவனைக் கேட்டான் செல்லையா.

" ஏன் அப்பா, நான் நம்பக் கூடாதென்றால் என் வார்த்தையை நீ கேட்கப்போகிறாயா ? அதுதானில்லையே ? இவ்வூரில் உனக்கு எல்லோருமே முன்பின் தெரியாதவர்கள்தான். ஆனால், அவர்களில் ஒரு சிலரின் போதனையை நீ ஏற்றுக்கொண்டு, மற்றும்சிலரைச் சந்தேகித்திருக்கிறாய். இதில் ஏதாவது வியவஸ்தையிருக்கிறதா ? எதிலும் நீ உன் சொந்த அறிவை உபயோகிக்க வேண்டும். அவசரப்பட்டு ஒருவர்மீது அவநம்பிக்கைப்படக் கூடாது. அதேபோல் வசீகரமாகப் பேசுகிறவர்களெல்லாம் நண்பர்களென்று நம்பிவிடவும் கூடாது ! அதாவது...அவசரப்பட்டு யாரையும் நம்பாதே ; நம்பாமலும் இராதே !...அதாவது என்னைப்போல !" என்றார் துப்பறியும் கேசவன்.

" இவர் புத்திமதியை நீ ஏற்றுக்கொள்ளாதே, செல்லையா !" என்று குறுக்கிட்டான் தினகரன்.

" ஏன் ?"

" இவர் உனக்கு இவ்வளவுதூரம் உபதேசம் பண்ணுகிறாரே, அதற்குத் தகுந்த யோக்கியதை இவருக்குக் கிடையாது. ஏனென்றால், இவரும் உன்னைப்போல் அவசரப் புத்திக்காரர்தான் !',

" அதை உன்னால் நிரூபிக்க முடியுமா ?" என்றார் துப்பறியும் கேசவன்.

" தாராளமாக!" என்றான் தினகரன். கேசவன் பக்கம் திரும்பாமலே, அவன் செல்லையாவை நோக்கிப் பேசலானான் ; இந்தக் கிருஷ்ணமூர்த்தியையோ அவருடைய பெண்களையோ இவருக்குச் சிறிதளவேனும் இதற்கு முன்பு பரிச்சயம் கிடையாது. நேற்றுக்

காலையில்தான் அவர்களை முதன்முதலாகக் கண்ணால் பார்த்திருக்கிறார். பார்த்த மாத்திரத்திலேயே, அவர்களிடத்தில் இவருக்குப் பரிபூர்ணமான நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. இத்தனைக்கும் இவர் ஒரு துப்பறியும் நிபுணர்! எப்படியிருக்கிறது லக்ஷணம்?"

செல்லையா தன் வாயைப் பிளந்தவாறு இருவரையும் மாறி மாறி நோக்கினான். அவனது அறிவுக் கண் திறக்கத் தொடங்கி விட்டதென்பதை, அவனது முகபாவத்தைக்கொண்டே ஊகித்துக் கொண்டனர் தினகரனும் கேசவனும்.

"சரி, செல்லையா நீ எழுந்துபோய் ஸ்நானம் செய்துவிட்டு வா. நாங்கள் கீழே ஹாலில் உட்கார்ந்திருக்கிறோம்!" என்று கூறிவிட்டு வெளியே வந்தனர் துப்பறியும் நிபுணர்கள்.

மாடிப்படியிலிருந்து அவர்கள் கீழே இறங்கும்போது, ஹாலில் மஞ்சுளா நாணிக் கோணிக்கொண்டு எதிர்ப்பட்டாள்.

"செல்லையா எழுந்துவிட்டாரா?" என்று அவள் குனிந்த தலை நிமிராமல் கேட்டாள். அவள் கையில் டிபன் தட்டு இலையால் மூடியபடி இருந்தது. அதிலிருந்து வரும் தின்பண்டங்களின் வாசனையும், மஞ்சுளாவின் முகத்திலிருந்து வரும் பௌடர் வாசனையும் மனிதனுக்கு இரண்டுவிதமான பசியையும் உண்டாக்கி விடும்.

"எழுந்து ஸ்நான அறைக்குப் போயிருக்கிறார்!" என்றான் தினகரன்.

"அப்படியானால் நான் இன்னும் கால்மணி நேரம் கழித்தே டிபன் கொண்டுபோகலாம்," என்று கூறியவாறு, கூடத்தில் போட்டிருந்த நாற்காலி ஒன்றில், துப்பறியும் கேசவனுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள் மஞ்சுளா.

"அதிருக்கட்டும். நேற்றிரவு கனகப்பனை இங்கே கடப்பாறையால் தாக்கியது யாராயிருக்கலாம் என்று உங்களுக்குத் தெரியுமா?" என்றாள் அவள் கேசவனை நோக்கி.

"அது எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை உனக்குத் தெரிந்திருக்கலாமென்று நினைக்கிறேன்!" என்று சிரித்தார் கேசவன்.

வெறும் வேடிக்கைபோல் தொனித்த இந்த வார்த்தை, மஞ்சுளாவைத் திடுக்கிட வைத்தது. எனினும் அவள் சீக்கிரம் சமாளித்துக்கொண்டாள். தானும் தமாஷாகப் பேசுபவள் போலவே, "இந்தக் கேள்வியை நீங்கள் பவானியிடம் கேட்டிருக்கவேண்டும்.

ஏனென்றால் ஒருநாளுமில்லாத திருநாளாய்' நேற்று பாதி ஜாமத்தில் அவள் இந்த வெள்ளை மாளிகைக்கு விஜயம் செய்ததிலிருந்து கனகப்பன் இங்கு அடிபட்டுக் கிடக்கப்போவதை அவள் ஏற்கனவே அறிந்திருப்பாள் என்று தெரிகிறதல்லவா?" என்றாள் அவள்.

"ஐயையோ! நீ இந்தமாதிரியெல்லாம் பேசித் தொலைக்காதே, அம்மா!" என்று பதறினான் தினகரன்.

"ஏன்?"

"நீ இவ்வளவு புத்திசாலியென்று தெரிந்துவிட்டால், அப்புறம் என் எஜமானர் என் உத்தியோகத்தைப் பிடுங்கி உன் கையில் கொடுத்துவிடப் போகிறார்!"

மஞ்சுளா சிரித்தாள், கேசவன் சொன்னார்:

"நல்ல வேளையாக நீ பவானியின் பேச்சை எடுத்தாய். இல்லாவிட்டால் நான் மறந்தே போயிருப்பேன்."

"என்ன?" என்றாள் மஞ்சுளா.

"இன்றிரவு பவானியின் வீட்டில் செல்லையாவுக்கு ஒரு விருந்து நடத்துகிறார்கள். அதற்கு அவர்கள் உன்னையும் அழைத்து வரும்படி என்னிடம் சொல்லியிருக்கிறார்கள்!"

"கொஞ்சங்கூட வெட்கம் மானம் இல்லாதவர்கள்!... ஆமாம், அந்த விருந்துக்கு வருவதற்குச் செல்லையா சம்மதித்தாரோ?"

"ஓ!" என்று ஆமோதித்தார் கேசவன்.

மஞ்சுளாவின் விழிகளில் ஆச்சரியமும் கோபமும் கலந்து ததும்பின. "அப்படியானால், நான் வரமுடியுமாவென்பதைப் பிறகு சொல்லுகிறேன்!" என்றாள் அவள்.

"உனக்குத்தான் அவர்களின் வீட்டுப் படியை மிதிக்கவே பிடிக்காதே!"

"ஆமாம்...ஆமாம்...ஆனால் செல்லையாவைக் காப்பாற்றவாவது நான் எந்த அவமானத்தையும் சகித்துக்கொள்ள வேண்டியிருக்கும்...ஆனால்...அப்படிச் சந்தர்ப்பம் வராதென நினைக்கிறேன்!"

துப்பறியும் கேசவன் சிரித்துக்கொண்டார்!

சிறிது நேரம் சென்றபின், கைகளில் காபி பலகாரத்தட்டை ஏந்திக்கொண்டு, செல்லையாவின் அறைக்குள் புகுந்தாள் மஞ்சுளா.

அவளைக் கண்டதும், "எங்கே பழனியப்பன்? அவன் இன்னும் கீழே இறங்கி வரவில்லையா?" என்று கேட்டான் செல்லையா.

"பழனியப்பன் கிடக்கட்டும். உன்னிடம் நான் தனியே ஒரு முக்கியமான விஷயம் பேசவேண்டும்," என்று கூறியவாறு, பலகாரத்தட்டை ஒரு மேஜைமேல் வைத்துவிட்டு, அவன் அருகில் சென்று கொஞ்சிக் குழைந்தவாறு அமர்ந்தாள் மஞ்சுளா.

"செல்லையா, இந்தத் துப்பறியும் கேசவனை நீ இங்கே வைத்துக்கொண்டிருப்பது எனக்குக் கொஞ்சங்கூட இஷ்டமில்லை!"

"ஏன்? அவர் அவ்வளவு திறமைசாலியல்லவென்று நீ அபிப்ராயப்படுகிறாயா?"

"திறமைசாலியாயிருக்கலாம். ஆனால் அவர் ஓவியர் கிருஷ்ணமூர்த்தியால் வரவழைக்கப்பட்டவர் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இவரைப்போலவே திறமைசாலிகள் இன்னும் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவரை நீ அமர்த்திக்கொள்ளேன்?"

"கேசவனை உனக்குப் பிடிக்கவில்லையா?"

"பிடிக்கவில்லை யென்பதல்ல. அவரிடத்தில் எனக்கு நம்பிக்கையில்லை!" என்றாள் மஞ்சுளா.

"மஞ்சுளா, அவசரப்பட்டு ஒருவர்மீது அவநம்பிக்கைப்படக் கூடாது. அதேபோல், வசீகரமாகப் பேசுகிறவர்களெல்லாம் நண்பர்கள் என்று நம்பிவிடவும் கூடாது. கேசவனைப்போல ஒரு கெட்டிக்காரரான துப்பறியும் நிபுணர், இந்த பாரத தேசத்திலேயே கிடையாதென்கிறான் பழனியப்பன்...ஆமாம், அவன் ஏன் இன்னும் எழுந்துவரக் காணோம்? கொஞ்சம் பொறு; நான் போய் அவனைப் பார்த்து அழைத்து வருகிறேன்," என்று சொல்லிக்கொண்டே அவ்வறையிலிருந்து வெளியேறினான் செல்லையா.

இத்தகைய தோல்வியைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை மஞ்சுளா. செல்லையாவின் மனத்தைக் கேசவன் எவ்வளவு

கெடுத்து' வைத்திருக்கிறரென்பது அவளுக்குத் தெற்றெனப் பட்டது. கோபக்கனல் வீசும் கண்களால் செல்லையா சென்ற திசையை வெறித்துப் பார்த்தவண்ணம், அவள் திக்பிரமையுற்று உட்கார்ந்திருந்தாள்.

வேறெரு விதத்தில் செல்லையாவும் பிரமிக்கலானன். காரணம், பழனியப்பனை அவன் அறையில் காணவில்லை. வீடு முழுவதும் தேடிப்பார்த்தான். அவன் பேரைச்சொல்லிக் கூவிப் பார்த்தான். ஆனல் அவன் எங்குமே காணப்படவில்லை.

பழனியப்பன் மாயமாய் மறைந்துவிட்டான்!

---

### அத்தியாயம் : 17

## நண்பனுக்கு உதவாதே!

---

"ஆச்சரியமாயிருக்கிறதே? கிருஷ்ணமூர்த்தி வீட்டாருக்கும் மஞ்சுளாவுக்கும் கொஞ்சங்கூடப் பிடிக்காதென்றீர்களே; அப்படியானல் மஞ்சுளாவை அவர்கள் ஏன் விருந்துக்கு அழைத்தார்கள்?" என்று துப்பறியும் கேசவனைக் கேட்டான் தினகரன்.

"மஞ்சுளாவை அவர்கள் அழைக்கவில்லை; நான்தான் அவளிடம் ஒரு காரியமாக அப்படிக் கூறினேன்!" என்றார் கேசவன்.

"ஆனல் அவர்கள் வீட்டுக்கு அவள் வரமாட்டாள்."

"அப்படி நினைக்காதே. செல்லையாவை விருந்துக்கு வரவொட்டாமல் அவள் தடுக்க முயல்வாள். அவன் மீறிவந்தால் அவளும் கூடத் தொடர்வாள்......ஓ! அதோ போலீஸ் டிப்டி சூப்பரெண்டு வருகிறரே!" என்றவாறு எழுந்து வாசற்படியண்டை சென்றார் கேசவன். தினகரனும் அவர் அருகில் போய் நின்றான்.

ஒரு சார்ஜண்டையும் கான்ஸ்டேபிளையும் உடனழைத்துக் கொண்டு, ஒரு போலீஸ்காரில் வந்து இறங்கினர் டிப்டி சூப்பரெண்டு. நேரே துப்பறியும் கேசவனிடம் சென்று, "உங்கள் கட்சிக்காரர்களில் ஒருவனை நான் கைது செய்யவந்திருக்கிறேன்!" என்று தன் சட்டைப் பையிலிருந்து ஒரு வாரண்டை எடுத்தார்.

"நீங்கள் தேடி வந்திருப்பது பழனியப்பனைத்தானே?"

"ஆம். அவன் ஒரு பழைய குற்றவாளி. சில வருஷங்களுக்கு முன்பு சிறையிலிருந்து தப்பியோடியவன். அவனுடைய கைரேகையைப் பரிசோதித்ததிலிருந்து அது தெரியவந்தது!" என்றார் டிப்டி.

"அப்படியானால் அவனை நீங்கள் கைது செய்வதைப்பற்றி எனக்கு ஆட்சேபணையில்லை," என்று கேசவன் சொல்லிக்கொண்டிருக்கும்போதே,—வீட்டினுள்ளிருந்து, மஞ்சுளா பின் தொடர கேசவனிடம் ஏதோ கூற விரும்புபவன் போல் அவரை நோக்கி விரைந்து வந்தான் செல்லையா. அவருக்குப் பக்கத்தில் போலீஸ் அதிகாரிகள் நிற்பதைப் பார்த்ததும், அவன் சிறிது தயங்கி நின்றான்.

"என்ன விசேஷம்?" என்று அவனை வினவினார் கேசவன்.

"பழனியப்பன் நம் வீட்டைவிட்டு ஓடிப்போய்விட்டான். அவனை எங்குமே காணோம்!" என்றான் அவன்.

"காணோமா? அவன் எங்கே போயிருப்பான்?"

"அதுதான் தெரியவில்லை!" என்று சோகம் ததும்பக் கூறினான் செல்லையா. "நான் இந்த பங்களா முழுவதும் தேடிப் பார்த்துவிட்டேன்..."

"அதை நாங்களும் பார்த்துவிடுகிறோம்," என்று கடுமையான குரலில் கூறியவாறு, தன் சிப்பந்திகளுடன் மாளிகைக்குள் புகுந்தார் டிப்டி சூப்பரிண்டு.

அவரது தலை மறைந்ததும் கேசவன் செல்லையாவைக் கேட்டார்: "பழனியப்பன் உன்னிடம் ஏதாவது சொன்னானா?"

"ஆம்! தான் போய்விட விரும்புவதாக நேற்றிரவே கூறினான். என்னிடம் கொஞ்சம் பணமும் கேட்டான்."

"நீ கொடுத்தாயா?"

"நேற்று என் கையில் பணமில்லை. இன்றைக்குத் தருவதாக வாக்களித்திருந்தேன்."

"சரி, இனிமேல் அவன் திரும்பிவந்து உன்னிடம் பணம் அல்லது இதர உதவிகள் பெற முயன்றால், நீ மறுத்துவிட வேண்டும்."

"ஏன் அப்படி ?" என்று சற்று சிடுசிடுத்த தொனியில் கேட்டான் செல்லையா.

"அவன் ஒரு பழைய குற்றவாளி. போலீசாரால் வெகு நாட்களாய்த் தேடப்படுபவன். நேற்று வரையில் அது உனக்குத் தெரியாமலிருந்திருக்கலாம். ஆனால் இனித் தெரிந்த பிறகும் நீ அவனுக்கு உதவி செய்தால், நீயும் ஒரு குற்றவாளியாகி விடுவாய்!"

"அதைப் பற்றி எனக்கு அக்கறையில்லை. அவன் எனது நண்பன். அவன் திரும்பி என்னிடம் வருவானாயின்......"

"அவன் திரும்பி உன்னிடம் வருவானாயின், நீ உடனே அவனைப் போலீசாரிடம் ஒப்படைக்க வேண்டும்," என்று கண்டிப்பான குரலில் கூறினார் கேசவன். "அவன் ஒரு பழைய குற்றத்திற்காக அனுபவிக்க வேண்டிய சிறைவாசம் இன்னும் பாக்கியிருக்கிறது. அதை அவன் அனுபவித்து விட்டு உன்னிடம் வந்தால், அப்புறம் நீ எவ்வாறு வேண்டுமானாலும் அவனுக்கு உதவி செய்யலாம். அப்படிக்கின்றி இப்போது நீ அவனிடம் அனுதாபம் காட்டினால், நீயும் தண்டிக்கப் படுவாய். இந்தச் சொத்துக்களும் உனக்குக் கிடைக்காமல் போய்விடும்!"

இப்படி இவர்களிருவரும் பேசிக் கொண்டிருக்கும் போதே, பங்களாவினுள்ளிருந்து பரபரப்போடு வெளியே வந்தார் டிப்டி சூப்பரிண்டு. பழனியப்பனைப் பற்றிக் கேசவன்கேட்ட அதே கேள்விகளை அவரும் செல்லையாவிடம் கேட்டார். கடைசியாக, "சிறையிலிருந்து தப்பியோடிய ஒரு பழைய குற்றவாளிக்குத் தங்க இடம் கொடுத்த குற்றத்திற்காக உன்னை ஏன் இப்போது நான் கைது செய்யக் கூடாது?" என்றார் கடுமையான குரலில்.

செல்லையா திருதிருவென்று விழித்தான்; துப்பறியும் கேசவன் முகத்தைப் பார்த்தான்.

கேசவன் சிரித்தார். "பழனியப்பன் ஒரு பழைய குற்றவாளியென்பது செல்லையாவுக்கு எப்படி சார் தெரியும்? உங்களுக்கே அந்த விஷயம் இப்போது தானே புரிகிறது?" என்றார் அவர் டிப்டியை நோக்கி.

எதற்கெடுத்தாலும் துப்பறியும் கேசவன் குறுக்கே நிற்பது டிப்டிக்குச் சிறிது எரிச்சலாக இருந்தது. எனினும் அதை வெளிக் காட்டிக் கொள்ள இயலவில்லை.

"சரி, அவன் பழையபடியும் உன்னுடன் தொடர்பு கொள்ள முயல்வானுனல், நீ உடனே போலீசாருக்குத் தகவல் கொடுக்க வேண்டும்; ஜாக்கிரதை! நீ பணம் ஏதும் கொடுக்காததினுல் அவன் வெகு தூரம் போயிருக்க முடியாது! இந்த வட்டாரத்தில் தான் தலை மறைவாகத் திரிந்து கொண்டிருப்பான்!" என்று செல்லையாவை எச்சரிக்கை செய்துவிட்டு, அவர் தன் கோஷ்டியுடன் காரில் ஏறினுர்.

---

### அத்தியாயம் : 18

## கண்ணன் காட்டிய வழி!

---

வெள்ளை மாளிகையை விட்டுப் புறப்பட்ட பழனியப்பன், வேறெங்கும் நெடுந்தூரம் போய் விடவில்லை. போலீஸார் அவனைத் தேடிக் கொண்டிருந்த அதே சமயத்தில், அவன் கண்ணனுடைய காட்டுப் பங்களாவில்தான் உட்கார்ந்திருந்தான்.

கமல வனத்தின் எல்லையை யடுத்து ஒரு சின்னஞ் சிறு 'காட்டு பங்களா'வை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு, அதில் தான் மட்டும் தனியாக வசித்து வந்தான். கண்ணன் தன்னுடைய போக்கு வரத்துக்கள், ஸ்திரி சகவாசங்கள், நண்பர் குழாங்கள் போன்ற 'சொந்த' விஷயங்களில் தன் தந்தையான வக்கீல் வேதாசலத்தின் தலையீடு இருக்கக்கூடாது என்பதற்காகவே, அவன் நெடு நாளாக அவரை விட்டுப் பிரிந்து: அவ்வாறு தனி வீட்டில் ஜாகை வைத்துக் கொண்டிருந்தான். முன் புறத்தில் ஒரு சிறிய தோட்டம், ஒரு குறுகலான தாழ்வாரம், ஒரு படுக்கை யறை, ஓர் உபரி அறை, ஒரு சமயலறை, ஒரு ஸ்நான அறை—இவ்வளவே அந்த 'பங்களா'வின் அமைப்பு. இரவு நேரங்களில் கண்ணனுக்குத் துணையாக இருப்பதற்கு, தினந் தோறும் புதிது புதிதான இளம் பெண்கள் எங்கிருந்தோ அங்கு வந்து சேர்வார்கள். இதைத் தவிர, விசேஷ சந்தர்ப்பங்களில் தன் நண்பர்களுக்கு அவன் அங்கு தடபுடலான விருந்துகளும் அளிப்பதுண்டு. பயங்கரச் சதித் திட்டங்களும் அங்கேதான் மதுக் கோப்பைகள் முன் உருவாவதுண்டு.

எங்கேயோ வெளியே போய்ச் சுற்றித் திரிந்து விட்டு, கண்ணன் தன் வீட்டுக்குத் திரும்பி வந்தான். உள்ளே பழனியப்பன் இருண்ட ஒரு மூலையில் பதுங்கி உட்கார்ந்திருப்பதைக் கண்டு அவன் வியப்புற்ருன்.

"அட ! நீ எப்போது வந்தாய்?"

"இப்போது தான்; கொஞ்ச நாழிக்கு முன்னால்." என்ருன் பழனியப்பன். அவனுடைய பேச்சும் தோற்றமும் கண்ணனுக்குச் சந்தேகத்தை அளித்தன.

"ஆமாம், நீ எப்படி உள்ளே நுழைந்தாய்? நான் வெளிக் கதவைப் பூட்டி விட்டல்லவா போயிருந்தேன்?" என்ருன் கண்ணன்.

"பூட்டை உடைத்துக் கொண்டுதான் உள்ளே வந்தேன்!" என்று முணுமுணுத்தான் பழனியப்பன்.

"ஏன் அப்படி? செல்லையா உன்னை இங்கே அனுப்பினானு?"

"இல்லை. நான் இங்கு வந்திருப்பது செல்லையாவுக்குத் தெரியாது. அவனுக்குத் தெரியவும் கூடாது."

"ஓஹோ!" என்று தலையை ஆட்டியவாறு தன் சட்டையைக் கழற்றி ஓர் ஆணியில் மாட்டி விட்டு, பழனியப்பன் அருகில் போய் அமர்ந்தான் கண்ணன்.

"என்ன சமாச்சாரம்? செல்லையாவோடு நீ சண்டை போட்டுக் கொண்டு வந்து விட்டாயா?" எனப் பரிவான தொனியில் அவன் பழனியப்பனை விசாரித்தான்.

பழனியப்பன் தன் சுய சரிதையைச் சுருக்கமாகக் கூறினான். "நேற்றிரவு போலீஸ் ஸ்டேஷனில் என் பெரு விரல் ரேகையை எடுத்துள்ளார்கள். நான் ஒரு தப்பியோடிய தண்டனைக் கைதியென்பது எப்படியும் அவர்களுக்குத் தெரிந்து போய்விடும். அவர்கள் என்னைத் தேடிப் பிடிப்பதற்குள் நான் இங்கிருந்து ஓடிப் போய் விடவேண்டும்," என்ருன் பழனியப்பன்.

"அப்படியா?......" என்று இழுத்தான் கண்ணன். "நீ இப்போது என்னிடம் உதவி கோரி வந்திருக்கிருய். ஆனால் இதே உதவியை நீ செல்லையாவிடமிருந்து எளிதில் பெற்றிருக்கலாமே?"

"அவனிடமிருந்து அதை நான் பெற விரும்பவில்லை!" என்ருன் பழனியப்பன் தீர்மானமான குரலில்.

"ஏன்?"

"எனக்கு அவன் உதவி செய்தது போலீசாருக்குத் தெரிந்தால், உடனே அவனும் குற்றவாளியாகி விடுவான். அதனால்

அவனுடைய சொத்துக்களை யெல்லாம் அவன் இழந்துவிட நேரும்!'' என்றான் பழனியப்பன்.

"ஓஹோ! நியாயந்தான்; அவன் சொத்துக்களை இழப்பது கூடாது. ஆனால் நான் மட்டும் உனக்கு உதவி செய்ய வேண்டும். அது போலீசாருக்குத் தெரிந்து அவர்கள் என்னை ஆறு மாதம் சிறையில் தள்ளினாலும், அதைப் பற்றி உனக்குக் கவலையில்லை; அப்படித் தானே?''

இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்காது மௌனமாயிருந்தான் பழனியப்பன்.

"அதிருக்கட்டும். நீ இங்கிருந்து புறப்பட்டு எங்கே போகப் போகிறாய்?'' என்று கேட்டான் கண்ணன்.

"நான் முதலில் சென்னை போய்ச் சேர்ந்தால் போதும். அப்புறம் நான் எப்படியும் தப்பித்துக் கொள்வேன். சென்னை வரையிலுள்ள ரயில் சார்ஜ் தான் எனக்கு இப்போது தேவை...!''

"நீ ரயிலிலோ, பஸ்ஸிலோ போனால், போலீசாரிடம் அகப் பட்டுக் கொள்வாய். இந்நேரம் அவர்கள் உன்னைத் தேட ஆரம் பித்திருப்பார்கள்!'' என்றான் கண்ணன்.

"அப்படியானால் நான் காட்டு மார்க்கத்தில் புகுந்து நடந்தே போய் விடுகிறேன். உனக்கு இஷ்டமிருந்தால் எனக்கு இரண்டு ரூபாய் கொடு. இல்லாவிட்டால் அதுவும் அவசியமில்லை!'' என்று எழுந்தான் பழனியப்பன்.

"கொஞ்சம் பொறு, அப்பா,'' என்று அவனைக் கையைப் பிடித்து உட்கார வைத்தான் கண்ணன். "நீ இந்த வீட்டுக்குள் நுழையும் போது உன்னை யாரேனும் பார்த்தார்களா?''

"என்னை என்ன அவ்வளவு முட்டாள் என்று எண்ணிக் கொண்டாயா?''

"அப்படியானால் சரி, நான் ஒரு யுக்தி சொல்கிறேன். அந்தப்படி செய்வாயா?''

"என்ன?''

"அதோ பார், கடற்கரை யோரமாக ஒரு பாழடைந்த கோயில் தெரிகிறது. அங்கே போய் உட்கார்ந்திரு. பொழுது இருட்டியவுடன், எவனாவது ஒரு படகோட்டியை உன்னிடம் அனுப்பி வைக்கிறேன். அவன் உன்னைத் தன் படகிலேற்றி, இரவோடிரவாய்ச் சென்னையில் கொண்டு போய்ச் சேர்த்து விடுவான்.''

அந்த வார்த்தையைக் கேட்டதும், பழனியப்பன் கண்களில் உளங்கலந்த நன்றியின் ஒளி வீசியது. "கண்ணன், நீதான் என் உண்மையான நண்பன்!"

"அதெல்லாம் ஒன்றுமே சொல்லாதே. நீ இங்கு வந்து போனதையே மறந்துவிடு. என் வீட்டில் குற்றவாளிகளை வைத்துக் கொண்டிருக்க முடியாது! நான் பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளை! குற்றவாளியை என் நண்பன் என்று வெளியுலகத்திற்குக் காட்டிக் கொள்ள மாட்டேனே தவிர, உனக்கு இந்த அற்ப உதவியைச் செய்கிறேன்! என்ன நான் சொல்லுகிறது, புரிகிறதா? இதோடு என்னையே மறந்து விடு. இன்னும் கொஞ்ச நேரத்தில் இங்கே சில நண்பர்கள் வரப் போகிறார்கள். அதற்குள் நீ போய்விடு," என்று அவனை வாசற்படியை நோக்கி வழிகாட்டினான் கண்ணன்.

பழனியப்பன் போனதும் கண்ணன் சிந்தனையில் ஆழ்ந்தான். அடுத்த படியாகச் செய்ய வேண்டியதென்ன? போலீசாரை டெலிபோனில் கூப்பிட்டு, பழனியப்பனை இப்போதே பிடித்துக் கொடுத்து விடலாமா? அல்லது அவனை வேறு விதமாகப் பயன் படுத்திக் கொள்ளலாமா? எதற்கும் சதிக் கூட்டாளி கோதண்டத்தையும் கலந்து கொண்டு ஒரு முடிவுக்கு வரலாமென அவன் தீர்மானித்தான்.

---

## அத்தியாயம்: 19

# கோதண்டத்தின் சூழ்ச்சி!

---

"நீ கூறுகிற யுக்தி பலிக்காது!" என்றான் கோதண்டம்.

"ஏன்? செல்லையாவின் மனப் போக்கை நீ தெரிந்து கொள்ளாமல் பேசுகிறாய். பழனியப்பனுக்காக அவன் தன் உயிரையும் கொடுக்கத் தயங்க மாட்டான். நாம் இப்போது வேறொன்றும் செய்ய வேண்டாம். பழனியப்பனை அவன் சந்தித்து, சிறிது பண உதவியும் செய்யுமாறு நாம் ஏற்பாடு செய்து விட்டு, அந்த சமயத்தில் போலீசாரைக் கூட்டி வந்து அவனைப் பிடித்துக் கொடுத்து விட வேண்டும். செல்லையாவும் குற்றவாளியாகி விடுவான். வெள்ளை மாளிகையின் சொத்து நம் பத்மாவதிக்கு வந்து விடும்! எனக்கு அது மிகவும் சுலபமான காரியம்," என்று தன் கையிலிருந்த காபியை உறிஞ்சினான் கண்ணன்.

இருவரும் கமல வனத்திலிருந்து நாலு மைல் தொலைவி லுள்ள ஒரு கிராமியக் காபி ஹோட்டலில் உட்கார்ந்து ரகசிய மாக உரையாடிக் கொண்டிருந்தனர்.

"நீ நினைக்கிறபடி ஒன்றும் நடக்கப் போவதில்லை," என்று தலையை ஆட்டினான் கோதண்டம். "சற்று முன்பு மஞ்சுளா எனக்கு டெலிபோன் பண்ணினாள். எக்காரணத்தை முன்னிட்டும் பழனியப்பனுக்கு உதவி செய்யக் கூடாதென்று, செல்லையாவை எச்சரிக்கை செய்திருக்கிறானும் துப்பறியும் கேசவன்."

"கேசவன் எச்சரிக்கையை அவன் பொருட்படுத்த மாட்டான்; அதாவது பழனியப்பன் விஷயத்தில் மட்டும். செல்லையா அவனிடத்தில் அவ்வளவு அன்பு வைத்திருக்கிறான். பழனியப் பனிருக்குமிடத்தை மட்டும் அவனுக்கு நாம் அறிவித்து விட்டோ மானால், கேசவனுக்கும் தெரியாமல் அந்த இடத்துக்கு அவன் ஓடி வருவான்......"

"அந்தப்படி அவனை நாம் ஒரு தனியிடத்துக்கு வரவழைத்து, அந்த சந்தர்ப்பத்தை **வேறுவிதமாகப்** பயன் படுத்திக் கொண் டால்?" என்று கண்ணைச் சிமிட்டினான் கோதண்டம்.

அந்த அர்த்த புஷ்டியான சமிக்ஞையைக் கண்ணன் நொடிப் பொழுதில் புரிந்து கொண்டான். "சபாஷ்! பிரமாதமான ஐடியா! இந்த யோசனை ஏன் முதலிலேயே **எனக்குத்** தோன்ற வில்லை?"

"ஏனென்றால், செல்லையாவை ஜெயிலுக்கு அனுப்புகிற திட்டத்திலேயே உன் புத்தி சுழன்று கொண்டிருக்கிறது", என்று மெதுவாகச் சிரித்தான் கோதண்டம். "அதைத் தான் நாம் ஏற்கனவே முயன்று பார்த்து விட்டோமே? அது பிரயோசனப் படவில்லையென்னும் போது, இனி நாம் வேறு மார்க்கங்களைத் தானே கையாள வேண்டியிருக்கிறது?"

"எப்படி?"

"தானிருக்குமிடத்துக்கு வந்து தன்னைச் சந்திக்குமாறு, பழனி யப்பனே செல்லையாவுக்கு ஒரு தகவல் அனுப்புகிறான் என்று வைத்துக் கொள்வோம். உடனே அவன் எப்படியும் தவறாமல் வந்து சேருவான். அந்தச் சமயத்தில் தற்செயலாக ஒரு விபத்து நேர்ந்து, அதில் இருவருமே இறந்து விடுவார்களானால்?"

"அதிலும் சில கஷ்டங்களிருக்கின்றன," என்று தயக்க முற்றான் கண்ணன். "ஏனென்றால், நமக்கு எதிரிடையாக வேலை

செய்பவன் துப்பறியும் கேசவன். கொலைக் குற்றங்களைக் கண்டு பிடிப்பதில் அவன் மகா தீரனென்று பேர் எடுத்தவன்......"

"அட பைத்தியமே! செல்லையாவையும் பழனியப்பனையும் கொலை செய்ய வேண்டுமென்றா நான் கூறினேன்? தற்செயலாக அவர்களுக்கு ஒரு விபத்து ஏற்படும் என்று தானே நான் சொன்னேன்? விபத்தினால் நேரும் மரணங்களுக்கு நாமா பொறுப்பாளி?"

"விபத்து என்றால், அதை எப்படி நாம் சிருஷ்டிக்க முடியும்? செல்லையாவுக்கும் பழனியப்பனுக்கும் ஒருமோட்டார் கார் கூட ஓட்டத் தெரியாதே?"

"மோட்டார் காரில் அவர்களுக்கு வேலையில்லை. அவர்களிருவரும் ஒரு படகில் போவார்கள். அந்தப் படகு தானாகவே கவிழ்ந்து அவர்களை மூழ்கடித்துவிடும். அதற்கெல்லாம் என்னால் எளிதில் ஏற்பாடு செய்ய முடியும். ஆனால், பழனியப்பன் அனுப்பும் செய்தியைத் துப்பறியும் கேசவனுக்குத் தெரியாமல் செல்லையாவிடம் எப்படிச் சேர்ப்பிப்பது என்பது இப்போது முக்கியமான பிரச்னை!" என்று ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான் கோதண்டம்.

"அது சுலபம்," என்று அலக்ஷியமாகக் கூறினான் கண்ணன்.

"எப்படி?"

"இன்றிரவு கிருஷ்ண மூர்த்தியின் வீட்டில் செல்லையாவுக்காக ஒரு விருந்து நடக்கப் போகிறது. அதற்கு என்னையும் அழைத்திருக்கிறார்கள். கமலவனத்திலுள்ள பெரிய மனிதர்கள் பலரும் வருவார்கள். அந்தச் சந்தடியில் செல்லையாவுக்கு ஒரு டெலிபோன் வந்தால், அதை யாரும் கவனிக்க மாட்டார்கள். ஒரு வேளை துப்பறியும் கேசவனே அதைக் கவனித்து விட நேர்ந்தாலும், செல்லையா அவனிடம் உண்மையைக் கூறமாட்டான்..."

"அப்படியானால் நம் காரியங்களெல்லாம் இன்றிரவே சித்தியாகி விட்டதாக எண்ணிக் கொள்!" என்று புன்னகைத்தவாறு, தன் நாற்காலியை விட்டு எழுந்தான் கோதண்டம். கண்ணன் திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டவனாய், "ஆமாம், இன்று முழுவதும் செல்லையா தன் வீட்டிலேயே தான் இருப்பானா?" என்று வினவினான்.

"இல்லை. அவன் மார்க்கெட்டுக்குப் போய்த் துணிமணிகள் வாங்கி வரவேண்டுமென்றும், கேசவனும் அவனோடு தொடரக் கூடுமென்று மஞ்சுளா சொன்னாள்!" என்றான் கோதண்டம்.

"ரொம்ப சரி. அதுவும் ஒரு விதத்தில் நமக்கு நல்லது தான்!" என்றான் கண்ணன்.

இருவரும் அந்த ஹோட்டலை விட்டு வெளியே வந்தனர். "நான் போய்ப் பழனியப்பனைக் கவனிக்கிறேன்," என்று கண்ணனிடம் விடை பெற்றுச் சென்றான் அவன் கருத்திற்கிசைந்த தோழன்.

---

### அத்தியாயம் : 20

## கன்னக்கோல் வேலை!

---

வெள்ளை மாளிகைக்கு டிப்டி சூப்பரிண்டு வந்து போனதிலிருந்து, வெகு நேரம் வரை டெலிபோன் அறையிலேயே உட்கார்ந்திருந்துவிட்டு வெளியே வந்தார் துப்பறியும் கேசவன்.

அவரைக் கண்டதும், "சரி, நாம் மார்க்கெட்டுக்குப் புறப்படலாமா?" என்றான் செல்லையா.

"மார்க்கெட்டுக்கு இன்று உன்னோடு நான் வரமுடியாது. எனக்கு வேறு வேலைகளிருக்கின்றன. ஆனால் நீ இவ்வூருக்குப் புதிதாகையால், நீ மட்டும் தனியே செல்வதும் உசிதமல்ல. பத்மாவதியம்மாளையும் மஞ்சுளாவையும் கூட அழைத்துக் கொண்டு போனால், அவர்கள் உனக்குப் பொருத்தமான நல்ல துணிகளைத் தேர்ந்தெடுத்துக் கொடுப்பார்கள். உங்களுக்காக ஒரு டாக்ஸியை வரச் சொல்லியிருக்கிறேன். நீ வாங்க வேண்டிய சாமான்கள் நிறைய இருப்பதால், நீங்கள் சீக்கிரமாகப் புறப்படுவது நல்லது!" என்றார் துப்பறியும் கேசவன்.

செல்லையாவுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. "கொஞ்ச நேரத்துக்கு முன்புதான் மஞ்சுளாவை நம்பக்கூடாது என்ற தொனியில் இவர் நம்மிடம் பேசினார். இப்போது இவரே நம்மை அவர்களோடு அனுப்பி வைக்கிறாரே?" என்று அவன் அதிசயித்தான்.

கேசவனது யோசனையைக் கேட்டு, மஞ்சுளாவும் பத்மாவதியுமே மனதிற்குள் வியப்புற்றனர்.

"இதில் ஏதேனும் சூழ்ச்சியிருக்குமோ?" என்று அவர்களுக்குச் சந்தேகம் தட்டியது. எனினும், செல்லையாவை ஒரு நாள் முழுவதும் தங்களுடன் கூட வைத்துக் கொள்ளும் சந்தர்ப்பத்தை நழுவவிட அவர்கள் விரும்பவில்லை.

பத்து நிமிஷத்திற்கெல்லாம் டாக்ஸி வந்து சேர்ந்தது. செல்லையா, மஞ்சுளா, பத்மாவதி மூவரும் அதில் புறப்பட்டுப் போயினர். அவர்கள் தலை மறைந்ததும், "என்ன சார், அவனை ஏன் இப்படி அந்த விஷப் பாம்புகளோடு அனுப்பினீர்கள்?" என்று கேசவனை வினவினான் தினகரன். "அவனுக்கு அவர்கள் ஏதேனும் தீங்கு விளைவித்து விட்டால்?" என்றும் அவன் கேட்டான்.

"அவர்கள் தீங்கு விளைவிக்கப் போவது என்னவோ நிச்சயந்தான். ஆனால் அவன் தங்களுடன் இருக்கும்போது அதைச் செய்ய மாட்டார்கள். தற்செயலாக அவனுக்கு ஏதேனும் விபத்து நேர்ந்தால் கூட, அந்தப் பழி தங்களைப் பீடிக்குமே யென்று அவர்கள் பயப்படுவார்கள். அதனால்தான் தைரியமாக அவனை அவர்களோடு அனுப்பினேன்," என்றார் துப்பறியும் கேசவன்.

தினகரனுக்கு இந்தப் பதில் திருப்தியளிக்கவில்லை. "இருந்தாலும் ஏன் இந்த விஷப் பரீட்சை? நானாவது கூடப் போயிருக்கலாமே?" என முனகினான் அவன்.

"உனக்கு வேறு வேலையிருக்கிறது. இன்று மத்தியானமே நீ சென்னை போக வேண்டும். அங்கே எனக்கு ஒரு அவசரச் செய்தி வந்திருக்கும். அதையும் இதரத் தபால்களையும் எடுத்துக் கொண்டு நீ உடனே திரும்பி வரவேண்டும். அதற்கிடையில் டிப்டி சூப்பரிண்டையும் உள்ளூர் பத்திரிகை நிருபர் ஒருவரையும் நான் பார்க்க வேண்டும். நம்முடைய **குண்டனை** இங்கு பன்னிரண்டே கால் மணிக்கு வந்து சேரும் வண்டியில் அனுப்பி வைக்குமாறு நான் சென்னைக்கு டெலிபோன் செய்திருக்கிறேன். அதை ஸ்டேஷனுக்குப் போய் அழைத்து வரவேண்டும். அதற்குள் நாம் சிறிது கன்னக்கோல் வேலையும் செய்து முடிக்க வேண்டும்......"

"என்ன! கன்னக்கோல் வேலையா?" என்று விழித்தான் தினகரன்.

"வேறொன்றுமில்லை. பத்மாவதியம்மாளின் ஜாகையைச் சிறிது சோதனை செய்ய வேண்டும். சும்மா பத்து நிமிஷ வேலை.

அது வரையில் நீ கொஞ்சம் வெளியே நின்று கவனித்துக் கொண்டிரு!" என்று கூறிவிட்டு, அவ்விடுதியை நோக்கி நடந்தார் கேசவன்.

தாம் கூறியபடியே, கச்சிதமாகப் பத்தாவது நிமிஷத்தில் அவர் அவ்வீட்டை விட்டு வெளியே வந்தார்.

"என்ன? ஏதேனும் பலன் கிடைத்ததா?" என்று விசாரித்தான் தினகரன்.

"அங்கே வேறொன்றுமில்லை; டெலிபோன் நம்பர்கள் குறித்து வைத்திருந்த சிறிய நோட்புக் ஒன்று கிடைத்தது. அது நமக்குப் பயன் படுமா வென்று பார்த்து விட்டு, திருப்பிக் கொண்டு போய் வைத்து விடவேண்டும். அதைத் தவிர, அங்கிருந்து இந்த பாட்டில் ஒன்றை எடுத்து வந்திருக்கிறேன்!" என்று நீட்டினார் துப்பறியும் கேசவன்.

தினகரன் அதைக் கையில் வாங்கிப் பார்த்தான். அது ஒரு காலி மதுப் பாட்டில்; அதன் லேபிள் மீது "ஸிலோன் கிளப்" என்று எழுதப்பட்டிருந்தது.

"இது மிகவும் விலையுயர்ந்த மது ஆச்சே? மேலும் இது இந்தியாவில் கிடைக்கக் கூடியதல்லவே?" என்றான் தினகரன்.

"இது சிலோனில் மட்டுமேதான் கிடைக்கும். அத்துடன், இதைக் குடித்துப் பழகியவர்களுக்குத்தான் இது பிடிக்கும். பத்மாவதி சிலோனில் இருக்கும்போது அவளுக்கு இந்தப் பழக்கம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் அதை விலை கொடுத்து இங்கு ரகசியமாகத் தருவிக்கும் அளவுக்கு, அவளிடம் பண வசதியோ ஆள் வசதியோ ஏது என்பது தான் புரியவில்லை!"

"அவளே அதை வரவழைக்க வேண்டியதில்லை. அவளுக்கு வேறு யாரேனும் வாங்கிக் கொடுத்திருக்கலாம்!"

"அப்படித் தான் நானும் ஊகிக்கிறேன்," என்றார் துப்பறியும் கேசவன்.

---

அத்தியாயம் : 21

## வேட்டை நாயின் மோப்பம்

---

சென்னையிலிருந்து வரும் பாஸஞ்சர் வண்டி, சரியாகப் பன்னிரண்டே கால் மணிக்குக் கமலவனம் ஸ்டேஷனில் வந்து

நின்றது. அதில் குண்டனை எதிர் பார்த்துக் காத்திருந்த துப்பறியும் கேசவன், நேரே கார்டுவானுக்குச் சென்றார். அதன் கதவு திறக்கப்பட்டது. உடனே, ஆரஞ்சுக் கலரில் வெண்புள்ளிகள் வீழ்ந்த ஒரு பெரிய வேட்டை நாயானது, அவர் தோள் மீது தாவிப் பாய்ந்தது.

பிளாட்பாரத்திலிருந்த ஜனங்களெல்லோரும், அந்த வேட்டை நாயையும் துப்பறியும் கேசவனையும் வேடிக்கை பார்த்து நின்றனர். கேசவன் தோள்கள் மீது தன் முன்னங் கால்களை வைத்து அழுத்திய வண்ணம் அவர் முகத்தை நக்கு வதற்குத் தீவிரமாக முயன்றது அந்த நாய். கேசவன் அதைத் தன் கைகளால் தள்ளிப் பார்த்தார்; தொண்டை கிழியக் கத்தி அதட்டினார்; அவற்றையெல்லாம் அது சட்டை பண்ணு வதாகவே தோன்றவில்லை. அவர் சிரித்தார்.

கடைசியாக, மெதுவான குரலில், " குண்டா, போதும் இறங்கு கீழே!" என்றார் அவர்.

நாய் பளீரென்று கீழே இறங்கி, மிகச் சாதுவாக நின்றது. அந்த மெதுவான குரலுக்குத் தான், அது கீழ்ப்படிவது வழக்கம் போலும்!

பக்கத்தில் நின்ற பள்ளிச் சிறுமி யொருத்தி, "இந்த நாய் ரொம்ப அழகாயிருக்கிறது. இதை நான் தொடலாமா?" என்றாள் ஆவல் ததும்ப.

"ஓ! சும்மா தைரியமாகத் தடவிக் கொடுக்கலாம். பெண்களிடத்தில் அதற்கு எப்போதும் பிரியமுண்டு!" என்று நகைத்தார் துப்பறியும் கேசவன்.

குண்டனின் அருகில் நெருங்கி, அவள் அதைத் தடவிக் கொடுத்தாள். பதிலுக்கு அவள் கரங்களை அது பக்ஷமுடன் நக்கியது.

பார்ப்பதற்குப் பயங்கரமாக இருந்தாலும் அது உண்மையிலேயே ஒரு சாதுவான நாய்தான். எந்தப் பச்சைக் குழந்தையும் அதனோடு பயமின்றி விளையாடலாம். ஆனால், ஏதேனும் அபாயகரமான தருணங்கள் வருமானால், அது ஒரு கொடிய சிறுத்தைப் புலியாக மாறிவிடும். அந்த விஷயத்தில், அது தன் எஜமானனைப் போலவே இயல்பு வாய்த்திருந்தது.

வேட்டை நாயை அழைத்துக் கொண்டு துப்பறியும் கேசவன் ரயில்வே ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தார். தற்செயலாக, அங்கு அவரை ஓவியர் கிருஷ்ண மூர்த்தி சந்தித்தார்.

"ஹலோ! இதெங்கேயிருந்து வந்தது? பார்ப்பதற்கு அழகாயிருக்கிறதே! ஆனால் பொல்லாததாகவும் இருக்குமோ?" என்று ஓவியர் கிருஷ்ண மூர்த்தி கேட்டார்.

"அதை நாம் எப்படியிருக்கச் சொல்லுகிறோமோ அப்படியிருக்கும்," என்று புன்முறுவலித்தார் கேசவன். "ஹே குண்டா, இவரைக் கொஞ்சம் கவனித்துக் கொள்!" என்றார் தம் நாயை நோக்கி.

உடனே குண்டன் தன் தலையைச் சற்று தாழ்த்தியவாறு, கிருஷ்ண மூர்த்தியைத் தன் சிவந்த விழிகளால் சீற்றத்தோடு நோக்கியது. அதைப் பரீட்சிப்பதற்காக, ஓரடி பின்னலெடுத்து வைத்தார் ஓவியர். "அசையாதே!" என்று எச்சரிக்கை செய்வதுபோல் "உர்ர் ..." என உறுமிய வண்ணம், தன் பற்களைப் பயங்கரமாகத் திறந்து காட்டியது வேட்டை நாய்.

"ஐயோ! பயமாயிருக்கிறது, ஸார்!" என்று பதறினர் கிருஷ்ண மூர்த்தி.

"சரி, குண்டா, இனி இவர் நம் நண்பர்!" என்றார் துப்பறியும் நிபுணர்.

உடனே பளிச்சென்று சாந்தமடைந்து, கிருஷ்ண மூர்த்தியின் அருகில் சென்று அவரை அன்போடு நக்கியது குண்டன்.

இருவரும் பேசிக் கொண்டே, கேசவனின் ரோல்ஸ் ராய்ஸ் நிற்குமிடத்திற்கு வந்தனர். "ஒன்று சொல்ல மறந்து விட்டேனே? இன்றிரவு உங்கள் வீட்டில் நடக்கும் விருந்துக்கு, நான் மஞ்சுளாவையும் அழைத்திருக்கிறேன்." என்றார் கேசவன்.

"அப்படியா?......அதை விட நீங்கள் ஒரு விரியன் பாம்பை அழைத்திருக்கலாம்!" என்றார் கிருஷ்ண மூர்த்தி. "இருந்தாலும் பரவாயில்லை. ஏதோ ஒரு காரியத்தைக் கருதித்தான் அவளை நீங்கள் அழைத்திருப்பீர்கள்."

"வேறொன்றுமில்லை. இன்றிரவு அவளையும் கண்ணனையும் நான் ஏக காலத்தில் கவனிக்க வேண்டியிருக்கிறது......"

"என்ன? கண்ணனைக் கூடவா தாங்கள் சம்சயப்படுகிறீர்கள்?" என்று வியப்புற்றார் ஓவியர்.

"என்ன செய்வது? பிறவியிலேயே நான் ஒரு சம்சயப் பிராணி. அது விஷயத்தில் உங்களுக்கும் எனக்கும் ரொம்ப வித்யாசம். நீங்கள் எல்லோரையும் நம்பிவிடுவீர்கள். செல்லையா

நம்பக் கூடாதவர்களை நம்புவான் ; நம்ப வேண்டியவர்களை நம்ப மாட்டான். நான் எல்லோர் மீதும் சந்தேகப் படுவேன். என் தொழிலே அப்படிப் பட்டது!" என்று சிரித்துக் கொண்டே தம் காரிலேறினார் துப்பறியும் கேசவன். அவர் அருகில் தாவி அமர்ந்தது குண்டன்.

வெள்ளை மாளிகையை அடைந்ததும், பழனியப்பன் படுத்திருந்த அறைக்குள் குண்டனை அழைத்துச் சென்றார் கேசவன். அவன் உபயோகித்த மெத்தை, போர்வை, தலையணைகளையெல்லாம் அதை மோந்து பார்க்க விட்டார். "குண்டா இந்த நபரை நீ கண்டு பிடிக்க வேண்டும்," என்றார்.

உடனே, அந்தப் பெரிய வேட்டை நாயானது, தரையருகில் தன் மூக்கை வைத்துக் கொண்டு, தேடிச் செல்ல ஆரம்பித்தது. வெள்ளை மாளிகையின் காம்பவுண்டுக்கு வெளியே போய், இரண்டு வயல் வெளிகளைக் கடந்து, ஒரு குறுங்காட்டினுள் அது பிரவேசித்தது. அந்தக் காட்டையும் தாண்டி, மறுபடியும் ஒரு வயல் வெளியை அது அடைந்தது. அந்த வயல்களின் கோடியில் காணப்பட்ட கண்ணனின் பங்களா வாயிலுக்கு அது வந்து சேர்ந்தது.

வாயிற்கதவு பூட்டப்பட்டிருந்தது. உள்ளே யாருமிருப்பதாகத் தோன்றவில்லை. வெளிக் கதவண்டை சற்று நின்று மோந்து பார்த்து விட்டு, நாய் கிழக்கு நோக்கித் திரும்பியது. கடைசியில் கடற்கரை யோரமாக இருந்த ஒரு பாழடைந்த கோவிலுக்குள், தன் எஜமானனை அது கூட்டி வந்து விட்டது.

அந்தக் கட்டிடத்திலும் யாரையும் காணோம். ஆனால் சில சிகரெட்டுத் துண்டுகள் தரையில் கிடந்தன சிகரெட்டுப் புகையின் வாசனை அங்கு நிலவி நின்றது. "இங்கிருந்து அவன் இப்போதுதான் வெளியே போயிருக்க வேண்டும்," என்று ஊகித்துக் கொண்டார் துப்பறியும் கேசவன்.

கோயிலை விட்டு வெளிப்பட்ட குண்டன், கடல் அலைகளின் அருகில் வந்து அப்பால் செல்லாது நின்று விட்டது. "சரி, சரி, பயல் படகின் மூலமாகத்தான் தப்பிச் சென்றிருக்க வேண்டும்," என்று முணுமுணுத்தவாறு, துப்பறியும் கேசவன் போலீஸ் ஸ்டேஷனை நோக்கித் தன் நாயுடன் நடக்கலானார்.

* * *

கேசவன் வருவதற்குச் சில நிமிஷங்கள் முன்னர்தான், அப்பாமுவ் கோயிலை விட்டுப் பழனியப்பன் அழைத்துச் செல்லப்

பட்டான். இருளப்பன், மாயாண்டி என்னும் இரண்டு பட கோட்டிகள் வந்து அவனை ஒரு நீராவி ரோந்துப் படகில் ஏற்றிச் சென்றனர். இருளப்பன் படகை யோட்டினான். மாயாண்டியும் பழனியப்பனும் அதன் 'காபின்' அறையில் உட்கார்ந்து உரையாடிக் கொண்டிருந்தனர்.

"நல்ல வேளையாக நான் தப்பி வந்து விட்டேன். இனி என்னை யாரும் பிடிக்க முடியாது!" என்று மகிழ்ச்சியோடு கூறினான் பழனியப்பன். "ஆனால் பசிதான் உயிரை வதைக்கிறது. நேற்றிரவு முதல் நான் ஒன்றுமே சாப்பிடவில்லை."

"எங்களிடம் கொஞ்சம் பழைய சாதம் இருக்கிறது. சாப்பிடுகிறாயா?" என்றான் மாயாண்டி.

"ஓ! தாராளமாக!" என்று ஆர்வத்தோடு கூறினான் பழனியப்பன்.

ஒரு மரப் பெட்டியைத் திறந்து, கட்டுச் சாத மூட்டையொன்றை வெளியே எடுத்தான் மாயாண்டி.

மாயாண்டிக்கு வயது முப்பது இருக்கலாம். முரட்டுச் சரீரம்; விகாரமான தோற்றம். ஏதோ ஒரு விபத்தினால், அவனது வலது கண் பழுது பட்டிருந்தது. இடது கன்னத்தின் குறுக்கே, பெரிய வெட்டுக் காயத்தின் பழந்தழும்பு ஒன்று காட்சியளித்தது. அவன் ஒரு வேலைக்காரன் போலவும், இருளப்பன் ஓர் எஜமான் போலவும் அவர்கள் நடந்து கொள்ளும் தோரணையிலிருந்து யூகித்துக் கொள்ளத் தக்கதாயிருந்தது.

பழையது முழுவதையும் பழனியப்பன் சாப்பிட்டு முடிந்தவுடன், ஒரு தர்மாஸ் பிளாஸ்கிலிருந்து அவனுக்குச் சிறிது சூடான காபி ஊற்றிக் கொடுத்தான் மாயாண்டி. ஒரு சக்தி வாய்ந்த மயக்க மருந்து அதில் கலந்திருப்பதை உணராமல், காபியை ஆவலோடு வாங்கிக் கடகடவென்று குடித்தான் பழனியப்பன்.

குடித்த சில நிமிஷங்களுக்கெல்லாம், தன்னையும் மீறிய தூக்கம் வந்து அவனை அமுக்க ஆரம்பித்தது.

"ஆமாம்,—இன்னும் எவ்வளவு நேரத்தில் நாம் போய்ச் சேரலாம்?" என்று கொட்டாவி விட்டான் பழனியப்பன்.

"நீ இப்போது எங்கே போக வேண்டும்?" என்று கேட்டான் மாயாண்டி.

"ஏன், சென்னைக்குத்தான், கண்ணன் உங்களுக்குத் தெரிவிக்கவில்லையா ?"

"கண்ணனா? அது யாரவன்?" என்று வியப்போடு கேட்டான் மாயாண்டி. ஆனால் பழனியப்பனின் காதில் அது விழவில்லை. அதற்குள் அவன் தரையில் சாய்ந்து கண்ணயர்ந்து விட்டான்.

உண்மையில் மாயாண்டிக்கோ இருளப்பனுக்கோ கண்ணனை நேரில் தெரியாது. அவனைப் பற்றி அவர்கள் கேள்விப்பட்டதும் கிடையாது. கோதண்டம் ஒருவனைத்தான் அவர்கள் அறிவார்கள். அவனுக்காகத் தான் அவர்கள் இப்போது பாழுங் கோயிலிலிருந்து பழனியப்பனை அழைத்து வந்தார்கள்.

பழனியப்பன் குறட்டை விடத் தொடங்கியதும், இருளப்பனிடம் சென்று, "அடுத்த படியாக இந்தப் பயலை என்ன செய்ய வேண்டும்?" என்றான் மாயாண்டி.

"கைகால்களைக் கட்டி ஒரு மூலையில் இழுத்துத்தள்ளி, ஏதேனும் ஒரு படுதாவைப் போட்டு அவனை மூடிவை. இந்தப் படகைக் கொண்டு போய்க் கரையோரமாக நிறுத்தி வைக்கிறேன். நீ இங்கேயே இருந்து ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள். நான் போய்க் கோதண்டத்திற்குத் தகவல் அனுப்பி விட்டு வருகிறேன்," என்று கூறினான் இருளப்பன்.

* * *

இதே சமயத்தில், டிப்டி சூப்பரிண்டு சிங்கார வேலு முதலியாருடன் போலீஸ் ஸ்டேஷனில் உரையாடிக் கொண்டிருந்தார் துப்பறியும் கேசவன்.

"ஆகவே, கண்ணன் பங்களாவுக்குப் போய், அங்கிருந்து தான் பழனியப்பன் படகின் மூலமாகத் தப்பிச் சென்றிருக்க வேண்டும் என்கிறீர்களா?" என்று வினவினார் டிப்டி.

"ஆம்," என்று தலையை அசைத்தார் கேசவன்.

"அப்படியானால், அதைப் பற்றி நாம் கண்ணனைக் கூப்பிட்டு விசாரிக்கலாமா?"

"விசாரித்தால், உங்களிடம் அவன் உண்மையை ஒப்புக் கொள்வான் என்று நம்புகிறீர்களா?"

"ஒரு நாளும் மாட்டான்! உண்மையிலே அவனுக்கு ஒன்றும் தெரியாமலிருக்கலாம். தெரிந்தாலும் தெரிந்ததாக ஒப்புக்

கொள்ள மாட்டான்'' என்று உதட்டைப் பிதுக்கினர் முதலியார்.
"என்ன பைத்தியக்காரத் தனம் செய்து விட்டேன்! ரயில் அல்லது பஸ் மார்க்கத்தில்தான் பழனியப்பன் தப்பியோடுவான் என்று நினைத்து, நான் படகுகளைக் கண்காணிக்க மறந்து விட்டேன். இந்நேரம் அவன் வெகுதூரம் போயிருக்கக் கூடுமல்லவா?"

"நான் அப்படி நினைக்கவில்லை. மறுபடியும் கமல வனத்தின் அருகிலேயே அவனை நாம் காண நேரலாம்!"

"ஏன்?"

"இப்போது, பழனியப்பன் தப்பிச் செல்வதற்கு யாரோ உதவியிருக்கிறார்களென்று தெரிகிறது. அவ்வாறு அவர்கள் ஒத்தாசை புரிந்ததன் உள் நோக்கம் என்ன? கேவலம், கருணையென்று கருதுகிறீர்களா?"

"கருணையாவது களி மண்ணாவது! அயோக்கியப் பசங்கள்!"

"அவனை ஏதோ ஒரு காரியத்துக்கு அவர்கள் பயன் படுத்திக் கொள்ளப் போகிறார்கள் அது என்ன காரியம் என்பது, அடுத்த நாற்பத்தெட்டு மணி நேரத்துக்குள் நமக்கு வெளியாகி விடும்!" என்றார் கேசவன்.

"நீர் பேசுவது ஏதோ ஜோசியம் கூறுவது போல் இருக்கிறதே?"

"அது மட்டுமல்ல. நேற்றிரவு நடந்த சம்பவங்களைப் பற்றி, நாளைக் காலையில் இன்னொரு அனாமதேயக் கடிதம் இவ்வூரெங்கும் பறக்க விடப்படும்."

"அதன் நோக்கம்?

"பொதுமக்கள் உள்ளத்தில் செல்லையாவைப் பற்றி இன்னும் சிறிது துவேஷத்தை வளர்க்கும் பொருட்டு. திடீரென்று அவனுக்கு ஏதேனும் அவகேடு நேர்ந்தால்கூட, அதைக் குறித்து யாரும் அனுதாபப்பட மாட்டார்களல்லவா?"

"உமக்கு இன்றைக்குக் கற்பனாசக்தி அபாரமாய்ப் பெருக ஆரம்பித்துவிட்டது. பேசாமல் உட்கார்ந்து ஒரு கதை எழுதிப் பத்திரிகைக்கு அனுப்புமேன்?" என்று சிரித்தார் டிப்டி.

"அதுவும் எழுதியிருக்கிறேன், **உங்களைப்** பற்றி!" என்று பதிலுக்கு நகைத்தார் கேசவன்.

"என்ன? என்னைப் பற்றியா?"

"ஆமாம். பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்பு நிகழ்ந்த முத்தையா முதலியாரின் கொலை சம்பந்தமாய் நீங்கள் மறுபடியும் புலன் விசாரணை செய்யப்போவதாக, ஒரு வதந்தி உலவுவதாக......"

"உமக்கென்ன பைத்தியமா?" என்று எரிந்து விழுந்தார் டிப்டி சூப்பரிண்டு.

"மன்னித்துக்கொள்ளுங்கள். செந்தில்நாத முதலியார் குற்றவாளி அல்ல என்பது உண்மைதான் என்று இப்போதாவது நீர் நிரூபிக்கலாம். அதை நீர் விரும்பவில்லை என்றால் அந்தச் செய்தி இன்னும் அச்சுக்குப் போகவில்லை! அதில் உங்கள் பேருக்குப் பதிலாக என் பேரை வேண்டுமானால் மாற்றிப்போட்டு விடுகிறேன், சரிதானா?" என்று சிரித்தார் துப்பறியும் கேசவன்.

இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்று தோன்றாமல் டிப்டி சூப்பரிண்டு விழித்துக் கொண்டிருந்துவிட்டு, "அந்தப் பழைய வழக்கில் புதிதாக ஏதாவது சாட்சியம் இப்போது கிடைக்குமென நினைக்கிறீரா? செந்தில்நாத முதலியார் குற்றவாளி அல்ல என்பது உண்மைதான் என்று இப்போது திட்டவட்டமாக நிரூபிக்க முடியுமா?" என்று கேட்டார்.

"நிரூபிக்க முடியும் என்றுதான் பரிபூரணமாக நம்புகிறேன்! செந்தில்நாத முதலியாருக்கு எதிராக விளங்கிய முக்கிய சாட்சியம் அருளானந்த சாமியார் கூறியதுதானே?" என்று கேட்டார் துப்பறியும் கேசவன்.

"ஆமாம்! அருளானந்த சாமியார் கூறிய சாட்சியத்தை ஆமோதித்த பத்மாவதியின் சாட்சியத்தை வேண்டுமானால் நாம் நம்பாமலிருக்கலாம். ஆனால் அருளானந்த சாமியார் பொய் சொல்லக்கூடியவரல்ல!" என்றார் டிப்டி.

"நான் அந்த இரண்டு சாட்சிகளையும் கூட நாளை இரவு வெள்ளை மாளிகையில் நடத்தப்போகும் ஓர் அதிசய விருந்துக்கு அழைத்திருக்கிறேன்!"

"அருளானந்த சாமியாரும் உம் அழைப்பை ஏற்றுக் கொண்டு வரப்போவதாகத் தெரிந்துகொண்டேன் ஆனால் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் அவர் கொடுத்த சாட்சியத்திற்கு ஒரு வார்த்தைகூட மாறுதலாகச் சொல்லப்போவதில்லை என்றும் சாமியார் சொன்னார்!"

"ஆனாலும் அவர் வெள்ளை மாளிகைக்கு வருவது அவசியம்!" என்று கேசவன் சொல்லும்போது டெலிபோன் மணி அலறியது.

---

அத்தியாயம் : 22

## பித்தனின் பிதற்றல்

---

டெலிபோன் ரிஸீவரைக் கையிலெடுத்தார் டிப்டி சூப்பிரண்டு சிங்காரவேலு முதலியார். அடுத்த விநாடியே அவர் முகம் பிரகாசமுற்றது. "ஆ! அப்படியா? இதோ வருகிறேன்!" என்று கூறியவாறு எழுந்தார் தம் இருக்கையை விட்டு.

"என்ன விசேஷம்?" என்று துப்பறியும் கேசவன் அவரைத் தன் விழிகளால் வினவினார்.

"கனகப்பனுக்குச் சிறிது பிரக்ஞை வந்திருக்கிறதாம். நான் அவனைப் பார்த்துவரப் போகிறேன். நீங்களும் வருகிறீர்களா?"

"ஓ! பேஷாக!" என்று தானும் எழுந்தார் கேசவன்.

போலீஸ் இலாகாவிலேயே நேர்மைக்குப் பேர் போனவர் சிங்காரவேலு முதலியார். இருந்தாலும், அவர் உள்ளத்தின் அடித்தளத்தில் ஓர் அற்ப ஆசை சுடர்விடத் தொடங்கியது. "என்னை அடித்தவன் செல்லையாதான்," என்று துப்பறியும் கேசவன் எதிரிலேயே கனகப்பன் கூறிவிட மாட்டானாவென, அவர் நெஞ்சம் அவாவுற்றது.

இருவரும் ஆஸ்பத்திரியின் வாசலில் போய்க் காரை விட்டிறங்கினார்கள். உடனே அவர்களை நோக்கி அவசரமாக ஓடிவந்தார் ஒரு டாக்டர்.

"சார், ஓர் எச்சரிக்கை. நோயாளிக்கு இப்போதுதான் பிரக்ஞை வந்திருக்கிறது. அவனுடன் நீங்கள் ஒரு நிமிஷத்திற்கு மேல் பேசக்கூடாது. அவன் மனத்தைப் புண்படுத்தக்கூடிய எந்த விஷயத்தையும் பிரஸ்தாபிக்கக் கூடாது," என்றார் அவர் டிப்டி சூப்பிரண்டை நோக்கி.

வேறு வழியில்லாமல், "சரி" என்று முணுமுணுத்தார் டிப்டி. "அவனிடம் நான் ஒரே ஒரு கேள்விதான் கேட்க வேண்டும்!"

கனகப்பன் படுக்க வைக்கப்பட்டிருந்த 'பிரைவேட்' வார்டுக்கு, அவர்களை அழைத்துச் சென்றார் டாக்டர். அவன் படுக்கைக்கு அருகில் ஒரு நர்ஸும், அவ்வறையின் ஒரு மூலையில் போலீஸ் இலாகாவைச் சேர்ந்த ஒரு துப்பறியும் இன்ஸ்பெக்டரும் உட்கார்ந்திருந்தனர்.

கட்டிலில் மல்லாந்து படுத்துக்கொண்டிருந்தான் கனகப்பன். அவன் கண்கள் இலேசாகத் திறந்திருந்தன. தலையில் அவனுக்குப் பலமான கட்டுப்போடப் பட்டிருந்தது.

அவனருகில் போய் நின்றுகொண்டு, தன் இயல்புக்கு மாறான கனிவான குரலில், அவனைக் கேள்வி கேட்கத் தொடங்கினார் டிப்டி சூப்பரிண்டு :

"கனகப்பா, நான்தான் போலீஸ் டிப்டி சூப்பரிண்டு. நேற்றிரவு உன்னை இப்படி மண்டையில் அடித்துக் காயப்படுத்தியவன் யார்? அவனை உனக்குத் தெரியுமா?"

"நன்றாய்த் தெரியும்!" என்று தன் விழிகளை அகல விரித்தான் கனகப்பன். அவனது வெறித்த பார்வைக்கு ஒரு கணப்பொழுது இலக்கானார் டிப்டி சூப்பரிண்டு. "எனக்குத் தெரியாதென்று அவர் நினைத்துக்கொண்டிருக்கிறாரோ? ஓஹோ?" எனக் கூறியவாறு, அவன் தட்டுத்தடுமாறி எழுந்திருக்க முயன்றான்.

"ஊஹூம்; நீ எழுந்திருக்கக் கூடாது. படுத்துக்கொண்டே பதில் சொல்," என்று அவனைத் தடுத்து அமர்த்தி சாந்தப்படுத்தினாள் நர்ஸ்.

"வேறொன்றும் வேண்டாம். உன்னை அடித்தவனுடைய பேரை மட்டும் சொல்; போதும்." என மிகக் குழைவோடு கோரினார் டிப்டி.

"என்னை அடித்தது...முத்தையா **முதலியார்** தான்!" என்று தன் கண்களை மூடினான் கனகப்பன்.

எல்லோருக்கும் தூக்கிவாரிப் போட்டது! முகத்தில் ஏமாற்றம் ததும்ப, முதலியார் துப்பறியும் கேசவனை நோக்கினார். பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் இறந்துபோன முத்தையா முதலியார்தான் தன் மண்டையிலடித்தார் என்கிறானே, இந்தப் பித்தனின் பிதற்றல் எப்போதுதான் தெளியுமோ, எப்படித்தான் இவனிடம் விஷயத்தைக் கிரகிப்பது என்று பார்த்தார்.

"சரி. இனி நீங்கள் அவனை ஒன்றும் தொந்தரவு பண்ணக் கூடாது. வாருங்கள் என் ஆபீஸ் அறைக்குப் போகலாம்," என்று

வழிகாட்டி நடந்தார் டாக்டர். டிப்டியும் துப்பறியும் கேசவனும் டாக்டரை மௌனமாகப் பின் தொடர்ந்தார்கள்.

ஆபீஸ் அறையில் போய் அமர்ந்ததும், கேசவன் டாக்டரைக் கேட்டார்: "இவன் பிழைத்தெழுவானென்று நினைக்கிறீர்களா?"

டாக்டர் மிக்க அவநம்பிக்கையோடு தலையை ஆட்டினார். "மண்டையிலுள்ள காயத்தைப் பற்றித் தான் நாங்கள் முதலில் பயந்தோம். ஆனால், ஆச்சரியகரமாக அது குணமாகிக்கொண்டு வருகிறது. எனினும் அவனுடைய ஹிருதயமானது மிக மோசமான நிலையில் காணப்படுகிறது. அதிகபக்ஷம், இன்னும் ஒன்று அல்லது இரண்டு வாரகாலம் அவன் உயிரோடிருக்கலாம்! ஆனால் இத்தகைய இருதய வியாதிகளில் எதையும் நிச்சயமாகச் சொல்வதற்கில்லை!" என்றார் டாக்டர்.

"அப்படியானால், வேறொரு டாக்டரையும் நான் இங்கு கூட்டி வந்து காட்டலாமா?"

"**யாரது?**" எனச் சற்றுக் கடுப்போடு கேட்டார் டாக்டர்.

"வேறு யாருமில்லை. அவர் எனக்கு மிகவும் வேண்டிய ஒரு நண்பர். **டாக்டர் ராமானுஜம்** என்று பெயர்."

அந்தப் பெயரைக் கேட்டதும், டாக்டரின் வதனமண்டலம் மலர்ச்சியுற்றது: "ஓ! பேஷாகச் செய்யுங்கள். அவரை உங்கள் மூலமாக அறிமுகம் செய்து கொள்ள நான் ஆவலோடிருக்கிறேன்!"

"யாரது, டாக்டர் ராமானுஜம்?" என்று விழித்தார் டிப்டி சூப்பிரண்டு முதலியார்.

"அவர் ஒரு பிரசித்திபெற்ற மனோதத்வ நிபுணர். ஆனால் பார்வைக்குப் பித்தன்போலிருப்பார்! வைரத்தை வைரத்தால் தான் அறுக்கவேண்டும் என்பதுபோல், பித்தனைப் பித்தனைக் கொண்டுதான் ஆராயவேண்டும்!" என்றார் புன்முறுவலுடன் துப்பறியும் கேசவன்.

"அதிருக்கட்டும். உமக்கு ஏதேனும் மனோதத்வ சாஸ்திரம் தெரியுமோ?" என்று புன்முறுவலோடு வினவினார் டிப்டி சூப்பரிண்டு.

"ஏன்?"

"முத்தையா முதலியாரே வந்து தன்னை மண்டையிலடித்ததாகப் பிதற்றுகிறானே கனகப்பன்,—அதன் தத்துவம் என்ன?

ஒரு வேளை முத்தையா முதலியாரின் ஆவியைப் பார்த்திருப்பானோ ?"

"நியாயமான கேள்விதான்," என்று தன் நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்தார் துப்பறியும் கேசவன். "ஆனால், இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுமுன், நான் உங்களை ஒரு கேள்வி கேட்கப் போகிறேன்."

"என்ன ?"

"அந்தக் காலத்தில் முத்தையா முதலியாரின் கொலை வழக்கை நடத்தியது தாங்கள் தானே ?"

"ஆமாம், அதற்கென்ன இப்போது ?" என்றார் டிப்டி சூப்பரிண்டு.

"அந்த வழக்கில் சாட்சியங்களெல்லாம் செந்தில் நாத முதலியாருக்கு எதிரிடையாகவே யிருந்தும், அவர் எப்படித் தண்டனை யடையாமல் தப்பினார் ?"

"அதுதான் எனக்கும் புரியவில்லை. இத்தனைக்கும், செந்தில் நாதர் சரியாகக்கூட எதிர் வழக்காடவில்லை. அவர் அமர்த்தி யிருந்த வக்கிலும் அவ்வளவு திறமைசாலியல்ல."

"ஆனால் அவருக்காக வேறொரு நபர் திறமையாக வாதாடி யிருக்கிறார். அதனால் தான் செநதில் நாதர் விடுதலையடைந்தார். இந்த உள் குட்டு நேற்றுத்தான் எனக்குத் தெரிய வந்தது !' என்றார் துப்பறியும் கேசவன்.

"நீங்கள் சொல்வது ஒன்றுமே எனக்கு விளங்கவில்லையே ?" என விழித்தார் டிப்டி.

"அந்த வழக்கு விசாரணையில் சம்பந்தப்பட்ட ஜூரார்களில் ஒருவரை நான் சந்திததேன். அவர் தான் எல்லாவற்றையும் எனக்கு விவரமாகக் கூறினார்," என்று ஆரம்பித்தார் கேசவன். "சாட்சிகளின் விசாரணை யெல்லாம் முடிநது, நீதிபதியும் வழக்கின் சாரத்தை எடுத்துரைதத பிறகு, ஆலோசனைக்காகத் தம் அந்தரங்க அறைக்குள் புகுந்தனர் ஜூராரகள். அவர்களில் ஒரே யொருவர் தவிர,—அவர் பெயா **மைக்கேல் பிள்ளை**,—பாக்கி அத்தனை பேரும, செந்தில் நாதர் குற்றவாளியென்றே தீாமானித்து விட்டனர்......"

"இல்லையே ? அவர்களெல்லோருமே ஏகோபித்தல்லவா செந்தில் நாதரை நிரபராதி யென்று தீர்ப்பளித்தார்கள் ?" என்று இடைமறித்தார் சிங்காரவேலு முதலியார்.

" அதற்குக் காரணம், அந்த மைக்கேல் பிள்ளை ஒருவரே; தம் திறமையான வாதத்தால், மற்ற அனைவரது மனத்தையும் மாற்றி விட்டார். அதற்கு முக்கிய ஹேதுக்களாயிருந்தவை, செந்தில் நாதரது கடந்த கால நன்னடக்கை நற்பண்புகளும், அவரைக் கன்னு பின்னுவென்று திட்டிய சமையற்காரக் கனகப்பனின் பிதற்றல்களுமேயாகும். செந்தில் நாதர் ஒரு பரம சாதுவாகை யால், அவர் ஒரு நாளும் இந்தக் கொலையைச் செய்திருக்க முடியாது; கனகப்பனே தன் பித்த வெறியில் முத்தையா முதலியாரைக் கொன்றிருக்கலாம், என்பது அவர் வாதம். இதைக் கேட்டதும், இதர ஜூரர்களின் மனத்திலும் சந்தேகம் தட்ட ஆரம்பித்தது. சந்தேகத்தோடு ஒரு நிரபராதியைத் தூக்கு மேடைக்கு அனுப்புவதைக் காட்டிலும், ஒரு குற்றவாளியை விடுதலை செய்வதால் பாதகமில்லை யென்று அவர்கள் முடிவு செய்தார்கள் !"

" அப்படியா சமாச்சாரம் ? எனக்கு இது இத்தனை நாளும் தெரியாதே ?" என்று பிரமித்தார் முதலியார்.

" உங்களுக்குத் தெரியக் காரணமில்லையல்லவா ?"

" அப்படியானால், அந்த மைக்கேல் பிள்ளையின் கொள்கையை,—அதாவது, கனகப்பன் தன் பித்த வெறியில் கொலை செய்திருப்பான் என்பதை,—**நீங்கள்** ஏற்றுக் கொள்கிறீர்களா?" என்று கேட்டார் டிப்டி.

"இல்லை, பித்த வெறியால் கனகப்பன் கொலை செய்திருப்பான் என்பதை நான் ஏற்றுக் கொள்ளவே மாட்டேன்," என்று அழுத்தந் திருத்தமாக உரைத்தார் துப்பறியும் கேசவன்.

---

## அத்தியாயம் : 23

# பயங்கரச் சதி

---

"கொஞ்சம் ஏமாந்தோமானால், நம் திட்டங்கள் எல்லாம் குட்டிச் சுவராகி விடும்" என்றான் கோதண்டராமன். "முதலாவதாக யாருக்கும் தெரியாமல் சேல்லையாவை நாம் படகுக்கு அழைத்து வரவேண்டும். எப்படியோ அவனை அழைத்து வந்து விடுவதாக வைத்துக் கொள்வோம். அடுத்த படியாக, அந்தப் படகுக்கு நாம் ஒரு விபத்தை விளைவிக்க வேண்டும். அந்த விபத்தில் செல்லையாவும் பழனியப்பனும் ஒன்றாகக் கொல்லப்பட வேண்டும். ஆனால், பார்ப்பவர்கள் யாரும் சந்தேகிக்காதபடி, அது தெய்வா

தீனமாக நேர்ந்த விபத்தைப் போல் தோன்ற வேண்டும். உதாரணமாக, உன்னுடைய ரோந்துப் படகை,—அதன் பெயரென்ன? மறந்து விட்டேனே?"

"என் படகின் பேர் **கடல் பேய்,"** என்ருன் இருளப்பன்.

இருளப்பனும் கோதண்டமும் கமல வனத்துக்கு வடக்கேயுள்ள ஒரு காட்டூரணியின் கரையில் உட்கார்ந்து உரையாடிக் கொண்டிருந்தார்கள். கோதண்டம் தொடர்ந்து பேசினன்;

"உதாரணமாக, கரையிலிருந்து இரண்டு மூன்று மைல்களுக்கு அப்பால் கொண்டு போய், கடல் பேயை நாம் தீயிட்டுக் கொளுத்தி விடுவதாக வைத்துக் கொள்வோம். அது சுலபமான காரியம் தான். ஆனல், அதில் செல்லையாவும் சேர்ந்து எரிந்து விடுவானகையால் அவன் பிரேதம் நமக்குக் கிடைக்காது. பிரேதம் கிடைக்கா விட்டால், அவன் இறந்து விட்டதை நிரூபிப்பதற்கு வெகு காலம் பிடிக்கும். அது வரையில் பத்மாவதியிடம் சொத்துக்கள் ஒப்படைக்கப்பட மாட்டா. அவளிடமிருந்து நாமும் ஒன்றும் பெற முடியாது......"

"படகை எரிப்பதென்பது சுத்த அபத்தமான யோசனே," என்று ஆமோதித்தான் இருளப்பன். "மற்றதெல்லாம் கிடக்கட்டும். நடுக் கடலில் அது தீப்பற்றியெரியும் போது, இதர படகுகள், அல்லது கப்பலாட்கள், அல்லது விமானங்கள் அதைப் பார்த்து விட நேரலாம். அவைகள் உடனே உதவிக்கு வந்து, நெருப்பை அணைத்தும் விடலாம். அதைவிட, கடல் பேயை ஏதேனும் ஒரு பாறையில் மோதி மூழ்கடித்து விட்டாலென்ன?"

"அப்படிக் கடற்பாறை ஏதேனும் இங்கே சமீபத்தில் இருக்கின்றதா?"

"ஓவியர் கிருஷ்ண மூர்த்தியின் பங்களாவை யடுத்த கடற்கரையிலிருந்து ஏறக்குறைய ஒரு மைல் தூரத்திற்குள் ஒரு பாறையிருக்கிறது," என்ருன் இருளப்பன். "இன்றிரவு நடைபெறவிருக்கும் விருந்தின் மத்தியில், ஒருவருமறியாமல் செல்லையாவைக் கடற்கரைக்கு இழுத்து வந்து விடவேண்டியது உன் பொறுப்பு......"

"அதற்கு நான் ஒரு யோசனே செய்திருக்கிறேன்," என்ருன் கோதண்டம்

"எப்படி?"

"செல்லையாவை டெலிபோனில் கூப்பிட்டு, பழனியப்பன் மிகுந்த அபாயத்திலிருப்பதாகவும், அவனுக்கு உதவி புரிய விருப்

பமிருந்தால், ஒருவருக்கும் தெரியாமல் வந்து சேருமாறும் அவனிடம் நான் கூறப் போகிறேன். உடனே அவன் கடற்கரைக்கு வந்து சேருவான்......"

"அது என்ன நிச்சயம்?" என்று சந்தேகித்தான் இருளப்பன்.

"இல்லை. அவன் நிச்சயமாக வருவான். பழனியப்பனிடம் அவனுக்கு அளவு கடந்த பிரியமுண்டு."

"ஒரு வேளை, தனக்கு வந்த டெலிபோன் செய்தியை அவன் துப்பறியும் கேசவனிடம் தெரிவித்து விட்டால்?"

"ஒரு போதும் தெரிவிக்க மாட்டான். நீ அதைப் பற்றிக் கவலைப்படாதே. ஏனெனில் கேசவனிடம் விஷயத்தைக் கூறினால் அவன் பழனியப்பனுக்கு உதவி புரிய விடமாட்டான்; மேலும் அவன் பழனியப்பனைப் போலீசாரிடம் பிடித்துக் கொடுக்க முயல்வான் என்பது செல்லையாவுக்குத் திண்ணமாகத் தெரியும்!" என்றான் கோதண்டம். "அப்படியே கேசவனுக்கு விஷயம் தெரிந்து, செல்லையாவைப் பின் தொடர்ந்து அவன் கடற்கரைக்கு வருவானானால், நீ சட்டென்று இருட்டில் ஒதுங்கிக் கொண்டு விடேன்?"

"அது சரிதான்," என்று ஆமோதித்தான் இருளப்பன். "ஆனால் கடற்கரைக்கு நான் போகப் போவதில்லை. நான் கரையிலிருந்து சிறிது ஒதுக்குப் புறமாகக் கடற்பேயை இருட்டில் நிறுத்திக் கொண்டு, அதிலேயே உட்கார்ந்திருக்கப் போகிறேன். மாயாண்டியிடம் ஒரு சிறு வத்தையைக் கொடுத்தனுப்பினால், அவனே செல்லையாவைக் கண்டு பேசி, அந்த வத்தையில் ஏற்றி அவனை என் படகுக்குக் கொண்டு வந்து விடுவான். கடற்பேயைப் பாறையில் மோதித் தகர்த்த பிறகு, நானும் மாயாண்டியும் அந்த வத்தையின் மூலம் தப்பித்துக் கொள்வோம்!"

"யோசனை நன்றாகத் தானிருக்கிறது.........ஆனால் ஒரு விஷயம்......" என்று இழுத்தான் கோதண்டம்.

"என்ன?"

"நீ சொல்லும் பாறையானது, கரையிலிருந்து ஒரு மைலுக்குள்ளேயே இருக்கிறது......"

"ஆனால் அவ்விடத்தில் தண்ணீர் இருபதடி ஆழத்துக்கு மேலிருக்கும். அவ்விருவரையும் மூழ்கடிக்க அது ஏராளம்..."

"நான் அதைச் சொல்லவில்லை. செல்லையா, பழனியப்பன் இருவருமே நன்கு நீந்தத் தெரிந்த பயல்கள். அவர்களது கைகால்களைக் கட்டிப்போடவும் முடியாது. ஏனென்றால், அப்போது அது தற்செயலான விபத்து அல்ல என்று வெளியாகி விடும். டாக்டர்களது பிரேத பரிசோதனையில், இம்மாதிரி பல நுணுக்கமான உண்மைகள் எளிதில் புலப்பட்டு விடும்......"

"அதற்கு நான் வேறொரு திட்டம் வைத்திருக்கிறேன்," என்று சிரித்தான் இருளப்பன்.

"என்ன?"

"பழனியப்பனுக்குச் சிறிது மயக்க மருந்துகொடுத்து அவனை நீராவிப்படகிலுள்ள காபின் அறைக்குள் சாமான்களோடு ஒன்ருகப்போட்டுப் பூட்டி வைத்திருக்கிறோம். அதே அறைக்குள் நாம் செல்லையாவையும் தள்ளி......"

"பிரயோஜனமில்லை. பின்னல் போலீசார் வந்து பார்க்கும் போது, உடைந்த படகின் காபின் அறை வெளிப்புறத்தில் பூட்டப்பட்டிருக்குமானல், அவர்கள் கட்டாயம் சந்தேகப் படுவார்கள்."

"காபின் கதவை நான் பூட்டப்போவதில்லை." என்ருன் இருளப்பன்.

"பிறகு?"

"செல்லையாவை உள்ளே தள்ளிக் கதவைச் சாத்தி, அதன் வெளிப்புறத்தில் பாராங்கற்கள் போன்ற இரண்டு பெரிய கனமான உப்புக் கட்டிகளை வைத்து அடைத்து விடுவேன்......"

"உப்புக் கட்டிகளா?" என்று ஆச்சரியத்தோடு கேட்டான் கோதண்டம்.

"ஆம்! அவற்றை நான் ஏற்கெனவே தயாரித்து வைத்திருக்கிறேன். அவை ஒவ்வொன்றும் இரண்டு அரிசி மூட்டைகளின் பளு வாய்ந்தவை. படகு மூழ்கிய சில நிமிஷங்களுக்கெல்லாம், பழனியப்பனும் செல்லையாவும் இறந்துவிடப்போகிருர்கள். அதற்கப்புறம் அந்தக் கட்டிகளும் கரைந்து போய்விடும். பிற்பாடு போலீசார்வந்து பரிசோதனை செய்தால்கூட, படகு மூழ்கிய சமயத்தில் பயல்களிருவரும் காபின் அறைக்குள் சிக்கிக் கொண்டிருந்தார்களென்பதை, அவர்களால் கண்டு பிடிக்க முடியாது!" என்ருன் இருளப்பன்.

## அத்தியாயம் : 24

# மஞ்சுளாவின் கோபம்

“விருந்துக்கு வரமுடியாதென்று யாருமே சொல்லவில்லை. ஆனல் நாம் அழைத்திருக்கும் நபர்கள் எல்லாம் தவருமல் வரு வார்களா வென்பதுதான் சந்தேகம்,” என்ருள் பவானி.

“ஏன் அப்படிச் சொல்கிருய்?” என்று வினவினுள் அவள் சகோதரி லலிதா.

“ஏனென்ருல், அந்த அநாமதேயக் கடிதங்களின் மூலம் ஏற் கனவே எல்லோருக்கும் செல்லேபாமீது ஓர் அருவருப்பு ஏற் பட்டிருக்கிறது. போதாக்குறைக்கு, நேற்றிரவு கனகப்பன்வேறு அடிபட்டிருக்கிருன். இவற்றையெல்லாம் உத்தேசித்து, பெரிய மனிதர்கள் பலர் வராமலிருந்து விடலாம்!” என்று பவானி சொல்லிக்கொண்டிருக்கும்போதே,—

“அட பைத்தியக்காரப் பெண்ணே!” என்று சிரித்தவண்ணம் சமையல் அறையின் உள்ளே வந்தார் ஓவியர் கிருஷ்ண மூர்த்தி. “இன்றிரவு நம் விருந்துக்கு இந்தக் கமலவனம் முழுவதுமே திரண்டு வரப்போகிறது. கவலைப்படாதே!”

“ஏன், இங்கே ஏதாவது அபூர்வமான காட்சிகள் நடக்கப் போகிறதோ?” என்று தன் தந்தையைக் கிண்டலாகக் கேட்டாள் பவானி.

“சந்தேகமில்லாமல்! முதலாவதாக, குழந்தைப் பருவமுதல் காட்டு மிராண்டிகளிடையிலேயே வளர்ந்துவிட்டு, திடீரென்று இங்கு ஒரு கோடீஸ்வரனைய் வந்து குதித்திருக்கும் செல்லேயாவே ஓர் அபூர்வமான காட்சிப் பொருள்தான். அத்துடன், மகாப் பிரசித்தி பெற்றவராகிய துப்பறியும் கேசவனை நேரில் சந்தித்துப் பேசுவதற்கு இதைவிட்டால் வேறு வாய்ப்புக் கிடைக்குமா? பேசா மல் இந்தவிருந்துக்கு நான் ஒரு டிக்கெட்டு வைத்திருக்க வேண் டும்; குறைந்த பக்ஷம் ஆயிரம் ரூபாயாவது இன்றைக்கு வசூலாகும். அந்தப் பணத்தைக் கொண்டு உனக்கு ஒரு கல்யாணத்தை நடத்திவிடலாம். அப்படிச் செய்யாததுதான் பைத் தியக்காரத் தனமாகப் போய்விட்டது!” என்று சிரித்தார் ஓவியர் கிருஷ்ண மூர்த்தி.

“ஏது, வரவர அப்பா ஒரு பெரிய வியாபாரியாகி விடுவார் போலிருக்கிறதே?” என்று சிரித்தார்கள் இரு பெண்களும்.

ஏனெனில், பண விவகாரத்துக்கும் ஓவியர் கிருஷ்ணமூர்த்திக்கும் தோட்டம் தூரம் என்பது பகிரங்க உண்மை. லாபநஷ்டங்களை மதிப்பிட்டு ஒரு காரியம் செய்வதென்பது அவருடைய இயல் பிலேயே கிடையாது. கையில் பணமிருக்குமானால், யார் கேட் டாலும் இல்லை யென்று சொல்ல அவருக்கு மனம்வராது. பணம் இல்லாத சமயத்தில் யாரேனும் வந்து உதவி கோரினால், அவர் களுக்காகத் தம் விலையுயர்ந்த சித்திரங்களைக்கூட அவர் அற்ப விலைக்கு விற்றுவிடுவார்!

ஓவியர் கிருஷ்ண மூர்த்தி எதிர்பார்த்தது போலவே, அழைக் கப்பட்டிருந்த விருந்தினர்கள் அனைவருமே வந்திருந்தார்கள். செல்லையாவை நேருக்கு நேர் சந்தித்தவுடன் அவன் மீது அவர் கள் உள்ளத்தில் ஒருவித அனுதாபம் உண்டாகியது. அவர் களுடைய கம்பீரமான நடை உடைபாவனைகள், மெருகேறிய பேச்சுத்திறமை இவற்றையெல்லாம் நோக்கும்போது, தன் னுடைய நாகரீகக் குறைபாடுகள் செல்லையாவிற்குத் தெற் றெனப் பட்டது. தன்னுடைய வாழ் நாளிலேயே அவன் அது வரையில் அத்தகைய நாகரிக வாலிபர்கள், நாரீ மணிகளின் மத்தி யில் பழகியதில்லை யாகையால், அவர்களிடம் பேசுவதற்கே அவனுக்கு சங்கோசமாயிருந்தது. ஆனால், அந்தச் சங்கோசமே அவன் மீது அவர்களுக்கு ஒரு கவர்ச்சியை விளைத்தது. கோடித் தீவில் அவன் அடைந்த வாழ்க்கை யனுபவங்களைப் பற்றி, மிக ஆவலோடு அவனிடம் கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தார்கள் அந்த குழுமியிருந்த ஆண் பெண்களனைவரும்.

ஆனால், பவானிமட்டும் அவனிடம் அதிகமாக நெருங்கவே யில்லை. அவன் வந்தவுடன் மரியாதைக்காக "வா" என்று கேட்டாள்; அப்புறம் அவன் பக்கம் அவள் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அதற்கு ஈடுசெய்வதுபோல, மஞ்சுளா அவனை இடைவிடாது அட்டைபோல் ஒட்டிக்கொண்டிருந்தாள். அவ ளுக்கே அவன் சொந்தமாகிவிட்டதுபோலவே, மஞ்சுளாவின் பேச்சும் தோரணையும் காணப்பட்டன. கண்ணனுக்கு இது கொஞ்சமும் பிடிக்கவில்லை. மஞ்சுளாவிடம் அதைப் பச்சை யாகவே அவன் கூறிவிட்டான்.

"நீ கொஞ்சம் எல்லை மீறிப்போகிறாய், மஞ்சுளா! உனக்கு இங்கிதம் தெரியவில்லை. செல்லையா அதி சீக்கிரத்தில் உன்னிடம் அலுப்படைந்து விடப்போகிறான். ஜாக்கிரதை!" என்றான் கண் ணன் குசுகுசுவென்ற குரலில். அதன் பிறகு மஞ்சுளாவும் கண் ணனும் இரகசியமான குரலில் கோபத்துடன் பேசிக்கொள்ள லானார்கள்.

"நீ என்ன சொல்லுகிறாய்?" என்று அவனைச் சீற்றத்தோடு கேட்டாள் மஞ்சுளா. ஏற்கெனவே, செல்லையா தன்னிடம் நடந்து கொள்ளும் தோரணையில் அவளுக்கு மிகவும் எரிச்சல் ஏற்பட்டிருந்தது. அதற்கு முதல்நாளெல்லாம் அவள் இஷ்டம் போல் வளைந்து கொடுத்துக்கொண்டிருந்த அவன், அன்று காலையிலிருந்து ஒரு மாதிரியாக நடக்கத் தலைப்பட்டான். அதற்குக் காரணம், துப்பறியும் கேசவனின் துர்ப்போதனைதான் என்று மஞ்சுளா தீர்மானித்துக் கொண்டாள்.

"ஒரு வாலிபனை அதிகமாக விரட்டுவாயானால், அவன் ஒரு நாளும் உனக்கு வசப்படமாட்டான், மஞ்சுளா!" என்று கண்ணன் மஞ்சுளாவின் காதுக்குள் சொல்லிவிட்டுக் கேலியாகச் சிரித்தான். "இனியும் நீ இப்படியே அவனைச் சுற்றித் திரிந்தால், தன் பணத்தின்மீது நீ கண்ணோட்டம் வைக்கிறாயோ வென்று அவன் சந்தேகிக்கத் தொடங்கி விடுவான்!"

"அவன் என்னை அப்படிச் சந்தேகித்தால், அதற்குக் காரணம் நீயாகத்தானிருக்கும்;" என்றாள் மஞ்சுளா.

"அப்படியே வைத்துக்கொள். இருந்தாலும் நீ இவ்வளவு பச்சையாக அவனிடம் உன் அபிப்ராயத்தைக் காட்டிக் கொள்ளக் கூடாது. அடுத்தாற்போல், பவானி எப்படி நடந்து கொள்கிறாள் பார்த்தாயா?"

"அவள் எப்படி நடந்து கொண்டால் என்ன? இந்நேரவரையில் அவள் மூஞ்சிக்கட்டையைப் பார்த்து அவன் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை."

"பேசுவதற்கு அவனுக்கு ஆவலிருக்கிறது. அது அவன் பார்வையிலிருந்தே தெரிகிறது. ஆனால் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அதேபோல் அவள் மனத்திலும் அவனிடத்தில் பிரியமிருக்கிறது. இருந்தாலும் அதை மறைப்பதற்காகவே அவள் தினகரனோடு சிரித்துச் சிரித்துப் பேசிக்கொண்டிருக்கிறாள். அதைப் பார்க்கப் பார்க்கச், செல்லையாவுக்கு அவள் மீது ஆசை அதிகரிக்கிறது......"

"போதும் உன் பிதற்றல்!" என்று வெடுக்கென்றுரைத்தாள் மஞ்சுளா. "செல்லையாவுக்கும் அவளுக்கும் கொஞ்சம்கூடப் பிடிக்காது. அது எனக்குத் தெரியும்."

"செல்லையாவைப் பிடிக்காவிட்டால், நேற்றிரவு கல்யாண வீட்டிலிருந்து திரும்பும்போது அவள் எதற்காக வெள்ளை மாளிகைக்குப் போகவேண்டும்?" என்று சற்று கடுமையாகப் பேச ஆரம்பித்தான் கண்ணன். "அதிருக்கட்டும். நீ இனிமேல் செல்

லேயா பக்கம் போகாதே. என் வார்த்தை மீறிப் போவாயானல், நாளைக்குப் போலீசார் கேட்கப்போகும் பல கேள்விகளுக்கு நீ பதில் சொல்ல நேரும்!'' என்றான் மஞ்சுளாவின் காதுக்குள் மிகவும் குசுகுசுவெனக் கண்ணன்.

"என்ன? இன்றைய விருந்திலும் நீ ஏதாவது விஷமம் செய்யப்போகிறாயா? இப்போதென்ன புதுச் சதி?'' எனத் துணுக் குற்றாள் மஞ்சுளா.

"அதெல்லாம் இப்போது என்னைக் கேட்காதே மஞ்சுளா! இங்கே பார்! செல்லையாவுக்கு இப்போது உன்மீது சுவாரசியம் குறைந்து விட்டது. என்னைப் புறக்கணித்துவிட்டு நீ அவனை அடையவும் முடியாது! நீ புத்திசாலிப் பெண்ணாயிருந்தால்......... செல்லையாவை விட்டுத் தொலைத்து விட்டுப்போய் நன்றாகத் தூங்கு! விடிந்து எழுந்ததும் வெள்ளை மாளிகையின் சொந்தக்காரிக்கு வாரீசுக் காரியாகி விடுவாய்; நானும் சொத்துக்கும் வாழ்க்கைக் கும் பங்கு காரனாகிவிடுவேன்!'' என்று உதட்டுக்குள்ளேயே சிரித் தான் கண்ணன்.

மஞ்சுளாவின் உள்ளத்தில் சஞ்சலமும் கோபமும் ததும்ப லாயின. கண்ணன், செல்லையா இருவர் மீதும் அவள் வெறுப் புற்றாள்.

"நேற்றிரவும் இப்படித்தான் நீ காரியத்தைக் கெடுத்து விட் டாய்! நீங்கள் எக்கேடோ கெட்டுப்போங்கள். நான் வீட்டுக் குப்போகிறேன்!'' என்று கோபத்தோடு கூறிவிட்டு, யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் மஞ்சுளா தன் வீட்டைநோக்கிப் புறப் பட்டாள்.

முதல்நாளிரவைப் போலவே, தன் மகள் விரைவாகத் திரும்பி வந்து விட்டதைக் கண்டு வியப்புற்றாள் பத்மாவதி. அதன் பிறகு தாயும் மகளும் வெகுநேரம்வரை குசு குசுவெனப் பேசிக் கொண்டே இருந்தார்கள்.

---

### அத்தியாயம் : 25

## அபயக் குரல்

---

ஓவியர் கிருஷ்ண மூர்த்தி வீட்டில் இரவு விருந்து மிகத் தடபுட லாக நடைபெற்றது. சாப்பாடு முடிந்ததும். ஒரு பெரிய சீட்டுக் கச்சேரி ஆரம்பமாயிற்று.

ஒரு சீட்டுக் கட்டை வைத்துக் கொண்டு பவானிக்குச் சில 'மாஜிக்' வேலைகள்செய்து காட்டினுன் உதவித் துப்பறிவாளனுன தினகரன். ஆடுதன் ராஜாவின் சீட்டை எடுத்துக் காட்டி, 'இந்த ஆடுதன் ராஜா எந்த ராணியை விரும்புகிருர் தெரியுமா? அதாவது கறுப்பு ராணியையா? சிகப்பு ராணியையா?' என்ருன் தினகரன்.

"யாரை?" என்ருள் ஆவலோடு பவானி!

"அதைச் சீக்கிரம் துப்பறிந்து சொல்லுகிறேன்!" என்ருன் தினகரன். பவானி மெல்ல செல்லையாவின் திசையைப் பார்த்தாள்.

செல்லையாவிற்குச் சீட்டாடத் தெரியாததால், அவன் மட்டும் ஒரு மூலையில் தனியே உட்கார்ந்து கொண்டிருந்தான். அவனைப் பார்ப்பதற்கே மிகவும் பரிதாபமாகயிருந்ததுபோலும் பவானிக்கு. "பாவம்! குறுகின குளத்திலே கொக்கு இருந்ததுபோல் உட்கார்ந்திருக்கிருர் செல்லையா. வாருங்கள், நாம் அவரிடம் போவோம்," என்று தினகரனை அழைத்தாள் பவானி.

தினகரனுடைய கைச் சாதுரியத்தைக் கண்டு பிரமித்துப் போய்விட்டான் செல்லையா. வைத்த கண் வாங்காது அவன் வாயைப் பிளந்து கொண்டிருந்தான்.

"எல்லாம் ஒரே மாயாஜாலம், மகேந்திர ஜாலம் மாதிரி இல்லையா? இப்படித்தான் சிலருடைய திறமையால் பலர் ஏமாந்து போகிருர்கள்!" என்ருள் பவானி, செல்லையாவைப்பரிவோடு கூர்ந்து பார்த்துக்கொண்டே. அந்தக் கனிவும், காதலும், ததும்பும் பார்வையில் செல்லையாவின் உள்ளம் பெரிதும் லயித்தது!

"பவானி! நான் உன்னேடு நடந்து கொண்ட முறைக்கு வெட்கப்படுகிறேன். தெரியாத்தனமென மன்னித்துவிடு!" என்ருன் செல்லையா.

"பரவாயில்லை!.........ஆனுல் கோடித் தீவிலிருந்து வந்ததும் வராததுமாக...ஏன் எங்களை எதிரிகள் போல பாவித்துக் கடுமையாக நடந்துகொண்டீர்கள்?" என்று கேட்டாள் பவானி.

"நான் என்ன செய்வேன்? அப்படி எனக்கு எச்சரித்திருந்ததால்......"

"யார் அப்படி எச்சரித்திருக்க முடியும்? கோடித்தீவிலிருந்து எங்கள் வீட்டிற்கு வரும்போது கண்ணனைத்தானே முதன் முதலில் சந்தித்துப் பேசினுய்?"

"ஆமாம்!" என்றான் செல்லையா.

"கண்ணனா எங்களுக்கு எதிராக எச்சரித்தான்?" என்று கேட்ட பவானி தூரத்தில் விருந்துக்கு வந்த பெண்ணொருத்தியோடு பேசிக் கொண்டிருக்கும் கண்ணனைச் சந்தேகக் கண்ணோடு பார்த்தாள். அந்தப் பார்வையைத் தூரத்திலிருந்தவாறே கண்ணன் யூகித்துக்கொண்டு விட்டான்.

"உம்......" என்று பெருமூச்சு விட்ட பவானியைக் கவனித்த செல்லையாவிற்கு பலவிதச் சந்தேகங்களும் திரும்பவந்து விட்டன.

அவன் கண்ணனை நம்பினான். இப்போது கண்ணனைச் சந்தேகிக்க வேண்டியிருந்தது. அதுபோலத்தான் மஞ்சுளாவின் விஷயமும்! முன்பு அவன் சந்தேகித்த பவானியின் வீட்டாரையே இப்போது நம்பவேண்டும் போலிருந்தது. ஆனால் பூரணமாக நம்பிவிட முடியுமா?......சரி, துப்பறியும் கேசவன் விஷயம்? செல்லையாவின் பிராண சிநேகிதனை பழனியப்பனைப் போலீஸாரிடம் பிடித்துக் கொடுக்கும்படி சொல்கிறார்! அப்படியானால் இந்த உலகத்தில் பழனியப்பனைத் தவிர வேறு யாரையும் பூரணமாக நம்ப முடியாது...அவனுக்காக எதையும் செய்யலாம்......!' செல்லையா அப்படி நினைக்கும் தருணத்தில், அவனை அங்கு தேடிக் கொண்டு வந்தாள் லலிதா.

"நீ இங்கேயா இருக்கிறாய்? வா, உனக்கு ஒரு டெலிபோன் வந்திருக்கிறது!" என்றாள் அவள் செல்லையாவை நோக்கி.

டெலிபோன் அறைக்கு அவளைப் பின் தொடர்ந்து சென்றான் செல்லையா.

அதே சமயத்தில் தினகரனும் பவானியும் இருந்த இடத்தில் திடீரென்று பிரசன்னமானார் துப்பறியும் கேசவன்.

"ஏன் அப்பா உனக்குச் சமாசாரம் தெரியுமோ?" என்றார் அவர் தம் உதவியாளனை தினகரனை நோக்கி.

"என்ன சார்?" என்றான் தினகரன்.

"அதோ கடற்கரையில் ஒரு பறக்கும் தட்டு வந்து இறங்கியிருக்கிறதாம். போய்ப் பார்த்து வாயேன்!"

"உங்களுக்குக்கூட இந்தப் பைத்தியம் பிடித்து விட்டதா?" என்று சிரித்தாள் பவானி.

தினகரனும் அவளோடு சேர்ந்து சிரித்தான். ஆனால் தன் எஜமான் கொடுத்த சமிக்ஞையை அவன் புரிந்து கொண்டான்.

"சரி, எனக்கு ஒரு கால்மணிநேரம் லீவு கொடு, நான் கடற்கரை வரையில் போய்வருகிறேன்" என்றான் அவன் பவானியை நோக்கி.

"அப்படியானால் நானும் வருகிறேன்." என்றாள் பவானி.

"இல்லை. நீ வரக்கூடாது!" என்று கூறிவிட்டு, சிரித்துக் கொண்டே எழுந்தான் தினகரன்.

பவானிக்குத் திடீரென ஒரு சந்தேகம்! மஞ்சுளா முதலில் விருந்தை விட்டு எழுந்து இருளில் பாய்ந்துபோனாள். அதன்பிறகு டெலிபோன் அழைப்பு வந்து செல்லையாவும் எழுந்து போனான்! அந்த ஆடுதன் ராஜா எந்தராணியைக் காதலிப்பான் எனத் துப்பறிந்து சொல்வதாகத் தினகரன் சொன்னான்...ஒரு வேளை மஞ்சுளா ஏதாவது...?

தினகரனை ஒரு பத்தடி முன்னால் போகவிட்டு அவனுக்குத் தெரியாமலே கருகும் என்ற இருட்டில் பின்தொடர்ந்தாள் பவானி.

தினகரனிடம் சமிக்ஞையைக் கொடுத்த பின் நேரே டெலிபோன் அறையை நோக்கி விரைந்தார் துப்பறியும் கேசவன். செல்லையாவை டெலிபோன் அருகில் கொண்டு போய் விட்டு விட்டு, லலிதா வெளியே வந்தாள். யார் கண்ணிலும் படாமல் கேசவன் ஒரு மூலையில் மறைந்து கொண்டார்.

ரிஸீவரைக் கையிலெடுத்தான் செல்லையா. டெலிபோனின் மறுமுனையிலிருந்து, "யார் பேசுவது?" என்று கேட்டது ஒரு கரகரத்த குரல்.

'செல்லையா பேசுகிறேன். நீர் யார்?'

"நான் யாரென்பதைப் பற்றி உனக்கு அக்கறையில்லை. உன்னிடம் ஒரு தகவல் தெரிவிக்குமாறு என்னைக் கேட்டுக் கொண்டான் உன் நண்பன். அவன் யாரென்பது உனக்குப் புரிந்திருக்கலாம்."

'யார், பழனியப்பனா?' என்று கேட்டவாறு சுற்று முற்றும் பார்த்தான் செல்லையா. தன்னை யாரும் கவனிக்கவில்லையென்று கண்டவுடன், தொடர்ந்து பேசினான் : "பழனியப்பன் இப்போது எங்கிருக்கிறான்?"

"அவனுக்கு நீ உதவி செய்வதாக வாக்களித்தால், அவன் இருக்குமிடத்தை உனக்குத் தெரிவிக்கிறேன்," என்று பதில் வந்தது.

"அவனுக்காக நான் எத்தகைய உதவியும் செய்யச் சித்தமாயிருக்கிறேன். முதலில் நான் அவனைப் பார்க்க வேண்டும்......"

"அப்படியானால் நேரே கடற்கரைக்கு வா. அங்கே ஒரு வத்தையை வைத்துக் கொண்டு உனக்காக ஒருவன் காத்திருப்பான். அந்த வத்தையிலேறி சுமார் ஒரு பர்லாங் தூரம் வந்தால், கடலில் ஒரு நீராவிப் படகைக் காணலாம். அந்தப் படகில்தான் ஒற்றைக் கையொடிந்து போய்க்கிடக்கிறான் பழனியப்பன்..."

"ஹா! கையொடிந்து போய் கிடக்கிறானா?" என்று பதறினான் செல்லையா. "நான் இதோ வருகிறேன்."

"ஆனால் இந்த விஷயம் வேறுயாருக்கும், குறிப்பாகத் துப்பறியும் கேசவனுக்குத் தெரியக்கூடாது."

"சரி," என்று டெலிபோன் ரிஸீவரைக் கீழே வைத்துவிட்டு அவ்வறையைவிட்டு அவசரமாக வெளியேறினான் செல்லையா.

ஒரு கரிய உருவத்தின் நிழல் திடீரெனப் பாய்ந்து வந்து அவன் தோளைப் பிடித்துக் கொண்டது! அது துப்பறியும் கேசவனின் உருவந்தான்!

"எங்கே செல்லையா கிளம்பினாய்? காற்று வாங்கவா கடற்கரைக்குப் போகிறாய்? அல்லது குற்றவாளிக்கு உதவி செய்யப் போய் நீயும் மாட்டிக் கொள்ளப் போகிறாயா?"

"நீர், நான் டெலிபோன் பேசியதைக் கேட்டீரா?" என்றான் செல்லையா.

"இல்லை! உனக்கு யாரிடமிருந்து டெலிபோன் அழைப்பு வந்திருக்குமென யூகித்துப் பார்த்தேன்! அது உன் விரோதியிடமிருந்தோ, நண்பனிடமிருந்தோ வந்திருக்கலாம். எப்படியிருந்தாலும் அது உனக்கு நல்லதல்ல!......பழனியப்பன் ஒரு படகில் இருக்கிறான் என்பது எனக்குத் தெரியும்! அதனால் கடற்கரைப் பக்கந்தான் நீ புறப்படுவாய் என்பதையும் சுலபமாக யூகித்து விட்டேன்."

"இப்போது நிஜமாகப் பழனியப்பனிடமிருந்து அழைப்புவந்திருந்தால், அவனுக்கு நீ உதவி செய்யப் போவதின் மூலம் நீயும் குற்றவாளியாகி உன்னுடைய சொத்துக்களை இழந்து விடுவாய்! டெலிபோன் அழைப்பு உன் விரோதிகளிடமிருந்து வந்திருந்தால் உன் உயிரை இழந்து விடுவாய்!" என்றார் துப்பறியும் கேசவன்.

"நண்பனுக்காக ஒன்றும் செய்யாமல் இருப்பதைவிட இரண்டையுமே இழந்து விடுவது மேல்!" என்றான் செல்லையா.

"முட்டாள் தனமாகப் பேசாதே! என்னுடைய புத்திமதியைக் கேட்பதாயிருந்தால் உனக்குப் பதில் என்னைப் போகவிடு!"

"நீர் போனால் என் நண்பனைப் பிடித்துப் போலீஸிடம் கொடுத்து விடுவீர். நீர் குற்றவாளி யாராயிருந்தாலும் விடமாட்டீர்! தயவு செய்து என் விஷயங்களில் தலையிடாமல் உம் வேலையைப் பார்த்துக் கொண்டு போம். உமக்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருகிறேன்!" என்றான் செல்லையா.

"உன் பணம் எனக்குத் தேவையில்லை!" என்று சொல்லி விட்டுத் துப்பறியும் கேசவன் வேறொரு புறம் போய்விட்டார்.

---

### அத்தியாயம் : 26

## மாயாண்டி செய்த தவறு!

---

**வா**னத்தில் இருள் சூழ்ந்திருந்தது. எனினும் கடலின் அடிப் புறத்திலிருந்தே வெண்கதிரோன் வீசிய நிலவொளியின் பிரதிபலிப்பால் கீழ் வானம் சிறிது வெளுப்புற்றிருந்தது. ஓவியர் கிருஷ்ண மூர்த்தியின் பங்களாவிலிருந்து புறப்பட்டுக் கரையை யடைந்த உதவித் துப்பறிவாளனான தினகரன் தன்னை நோக்கி ஒரு கரிய உருவம் இருளில் நகர்ந்து வருவதைக் கண்டான்.

ஆம்; மாயாண்டி தான்; தான் கொண்டு வந்திருந்த வத்தையைக் கரையோரமாக நிறுத்திவிட்டு, அவன் நேரே தினகரனை அணுகினான். அவனை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "நீ தான் செல்லையாவா?" என்றான் மாயாண்டி.

"ஆம்" என்றான் தினகரன்.

"உனக்குச் செய்தி கிடைத்ததல்லவா?"

"கிடைத்தது. ஆனால்......" என்று தயங்கினான் தினகரன். மாயாண்டி பேசுவதே அவனுக்குப் புதிராக இருந்தது. எனினும், அவனால் தனக்கு அளிக்கப்பட்ட செல்லையா-வேஷத்துக்குத் தக்கபடி, எல்லாம் தெரிந்தவன் போல் நடிக்கத் தொடங்கினான்.

தினகரனின் தயக்கத்தைப் பார்த்த மாயாண்டி, விஷயங்களை விளக்கிக் கூறினான்.

"உன் சிநேகிதன் பழனியப்பன் அதோ அந்த நீராவிப் படகிலிருக்கிறான். அவன் உன்னைப் பார்க்க விரும்புகிறான்......" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அவ்விருவருக்கும் அருகில் திடீரென்று வேறொரு கரிய உருவம் இருளோடு இருளாய் வந்து அங்கே நிற்பதைக் கண்டான் மாயாண்டி.

தினகரன் திரும்பிப் பார்த்தான். அங்கே சிரித்துக் கொண்டு காட்சியளித்தாள் பவானி.

“அட பைத்தியக்காரப் பெண்ணே! உன்னை யாரிங்கே வரச் சொன்னது ? ஓடு வீட்டுக்கு !” என்று அதட்டினான் தினகரன்.

அவனது கோபக்குறியைக் கண்டதும், பவானி தன் தவறை உணர்ந்தாள். வீட்டை நோக்கிச் சட்டென்று திரும்பினாள்.

“கொஞ்சம் நில்லம்மா,” என்றான் மாயாண்டி. ‘இவளைப் பங்களாவுக்குத் திரும்பிப் போக விட்டால், தன் திட்டமெல்லாம் சீரழிந்து விடும்,’ என்று அவனுக்குத் தெளிவாகப்பட்டது. அவன் ஒற்றைக் கண்ணன் என்பதை அவள் கவனித்திருப்பாளாகையால், தன்னை அடையாளம் காட்டி விடுவாள் என்றும் அவன் பயந்தான். சட்டென்று தன் சட்டைப் பையிலிருந்து ஒரு சூர் கத்தியை எடுத்தான். சடக்கென்று பவானியைப் பிடித்து இழுத்து அவளுடைய முதுகுப்புறம் கத்தியைக் குறி பார்த்துப் பிடித்துக் கொண்டான்.

“நீ வீட்டுக்குப் போகக்கூடாது. நீயும் செல்லையாவுடன் இந்த வத்தையில் ஏறிவர வேண்டும்,” என்றான் பவானியிடம் மாயாண்டி.

“என்ன இது ?” என்று திக்பிரமையுற்றாள் பவானி.

“இருவரும் பதில் பேசாது ஏறுங்கள் வத்தையில். இல்லா விட்டால் கத்தியால் குத்திக் கொன்று விடுவேன்,” என்று அதட்டினான் அம் முரடன்.

தினகரனும் பவானியும் போய் வத்தையில் ஏறினர். துடுப்புக்களைத் தினகரன் கையில் கொடுத்து விட்டு, பவானியின் பக்கத்தில் கத்தியை அவளுடைய கன்னப் பொட்டுக்கு நேரே பிடித்துக் கொண்டபடியே உட்கார்ந்தான் மாயாண்டி.

“தள்ளு வேகமாக,” என்று உத்திரவிட்டான் அந்த ஒற்றைக் கண்ணன்.

அவ்வாறே சிறு வத்தையைக் கடலில் தள்ளினான் தினகரன். சில நிமிஷங்களுக் கெல்லாம், நங்கூரம் பாய்ச்சி நிற்கும் கடற்பேய் என்னும் நீராவிக் கப்பலின் அருகில் வந்தடைந்தது அச் சிறு வத்தை.

வத்தையைக் கண்டதும் இருளப்பன் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. ஆனால் அடுத்த கணமே, அதில் ஒரு பெண் உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும் அவன் சந்தேகமுற்றான்.

“என்ன இது? இவளை ஏன் கொண்டு வந்தாய் ? யாரிவள்?” என்று கேட்டுக் கொண்டே, அவள் முகத்தில் டார்ச் லைட் அடித்

துப் பார்த்தான் இருளப்பன். அந்த விளக்கின் ஒளியில், தினகரன் முகம் அவன் திருஷ்டியில் பட்டது. அவன் திடுக்கிட்டான்.

"எங்கேடா செல்லையா?" என்று அதட்டிக் கொண்டே அவன் மாயாண்டியின் பக்கம் திரும்பினான்.

"ஏன், இவன் செல்லையா இல்லையா?"

"முட்டாள்! இவன் தினகரனடா! துப்பறியும் கேசவனின் சிஷ்யன்!"

அப்போதுதான், மாயாண்டி தான் செய்த மகத்தான தவறை உணர்ந்தான். அடுத்த படியாக என்ன செய்வதென்றறியாது அவன் ஸ்தம்பித்து நின்றான்.

"சரி ஏதோ ஆள் தெரியாமல் அவர் தவறுதலாக எங்களைக் கொண்டு வந்து விட்டார் போலிருக்கிறது. அதனால் பரவாயில்லை. மறுபடியும் எங்களைக் கரையில் கொண்டு போய்ச் சேர்த்து விடுங்கள். என் எஜமான் காத்துக் கொண்டிருப்பார்," என்று ஆரம்பித்தான் தினகரன்.

அவனை வெறுப்போடு முறைத்துப் பார்த்தான் இருளப்பன். "உன்னைக் கரையிலா கொண்டு போய் விடவேண்டும்? அது நடக்காது, தம்பீ. எப்போது நீ செல்லையாவுக்குப் பதிலாக வத்தையிலேறி வந்தாயோ, அப்போது செல்லையா அடைய விருந்த கதியே தான் உனக்கும் கிடைக்க வேண்டும்!" என்று கூறியவாறு, "டேய், இவர்களிருவரையும் நீராவிப் படகின் காபின் அறைக்குள் தள்ளு!" என்று மாயாண்டியை நோக்கி அவன் உத்தர விட்டான்.

தினகரனும் பவானியும் காபின் அறைக்குள் தள்ளப் பட்டனர். உடனே அதன் கதவு சாத்தப் பட்டது. இரு பெரிய உப்புப் பாறைகளால் அது கெட்டியாக அடைக்கப் பட்டது.

உள்ளே ஒரே இருட்டாக இருந்தது. எனினும் ஒரு மூலையில் யாரோ ஒருவன் படுத்திருப்பது தினகரனுக்குத் தெளிவாகத் தெரிந்தது. நெருப்புக் குச்சி யொன்றைக் கிழித்துப் பார்த்தான்.

கீழே கிடந்தவன் பழனியப்பன்!

அவன் கைகால்களெல்லாம் கட்டவிழ்க்கப் பட்டிருந்தன. ஆனால் இன்னும் மயக்க மருந்தின் வேகம் தெளியாது அவன் உறக்கத்தில் மூழ்கிக் கிடந்தான். தினகரன் அவனை அசைத்து உலுக்கி எழுப்பினான்.

இப்போது அவர்கள் ஏறி வந்த வத்தையைக் கடற் பேய் என்ற நீராவிப் படகின் பின் புறத்தில் ஒரு கயிற்ருல் பிணைத்து விட்டு, என்ஜினை 'ஸ்டார்ட்' செய்தான் இருளப்பன். அலைகளைக் கிழித்துக் கொண்டு, கடற் பேய் புறப்படலாயிற்று.

" இவர்கள் நம்மை எங்கே கொண்டு போகிருர்கள் ?" என்று திகிலோடு வினவினுள் பவானி.

" எங்கே கொண்டு போனுலென்ன ? கடவுளும், கேசவனும் நம்மைக் கட்டாயம் காப்பாற்றுவார்கள். கவலைப்படாதே !" என்று சிரித்தான் தினகரன். ஆனுலும் உள்ளூர அவனுக்கும் பயம் இருந்து கொண்டுதானிருந்தது.

---

அத்தியாயம் : 27

# செல்லையாவின் தீரம் !

---

டெலிபோனில் வந்த அபயக்குரலைக் கேட்டுவிட்டுப் புறப்பட்ட செல்லையா பதறியடித்துக் கொண்டு—ஆனுல் துப்பறியும் கேசவன் தன்னைப் பின் தொடராமலிருப்பதற்காகச் சுற்றுப் பாதையில் பதுங்கிப் பதுங்கி நடந்தவாறு கடற்கரையை வந்தடைந்தான். ஆனுல், அங்கே அவனுக்காகக் காத்திருப்பதாகக் கூறப்பட்ட வத்தையையோ நபரையோ காணவில்லை. சுற்றுமுற்றும் பார்த்தவாறு திகைத்து நின்ருன்.

அடுத்த நிமிஷம், ஒரு பெரிய படகு அங்கு வந்து நின்றது. அதிலிருந்து இறங்கி, நேரே செல்லையாவை நோக்கி வந்தார் துப்பறியும் கேசவன். அவரைப் பார்த்ததும் அவன் நெஞ்சு பகீரென்றது.

"செல்லையா, நீ எதற்காக இங்கு வந்து நிற்கிருய் என்பது எனக்குத் தெரியும். உன்னைக் கொல்வதற்காக இங்கு வஞ்சித்து அழைத்திருக்கிருர்கள் உன் எதிரிகள். அவர்கள் வார்த்தையை நம்பி நீ இங்கு வருவாயென்று எனக்குத் தெரியும். உனக்கு ஒன்றும் ஆபத்து நேராமல் காப்பாற்றும் பொருட்டு, நான் தினகரனை இங்கு முதலில் அனுப்பினேன். அவனை நீ சந்தித்தாயோ ?" என்று பரபரப்போடு கேட்டார் துப்பறியும் கேசவன்.

" இல்லையே ? நான் இன்னும் யாரையும் சந்திக்கவில்லை !" என்ருன் செல்லையா.

"அப்படியானுல் தினகரனுக்கே ஆபத்து நேர்ந்திருக்க வேண்டும். அவனைப் பின்தொடர்ந்து பவானியும் வந்தாள்.

அவளும் எதிரிகள் கையில் சிக்கிக்கொண்டிருக்கலாம். இப்படி ஏதேனும் ஆபத்து வரலாம் என்று எதிர்பார்த்தே, என்னுடைய படகை நான் சிறிது தூரத்தில் தயாராய்க் கொண்டு வந்து இருட்டில் மறைத்து வைத்திருந்தேன். அதைப் போய் நான் எடுத்து வருவதற்குள், காரியம் சிறிது மிஞ்சிப்போய்விட்டது. இருந்தாலும் பரவாயில்லை. நீ ஏறு படகில்!''

தினகரனும் பவானியும் தன்பொருட்டு ஆபத்துக்கு ஆளாகியிருக்கிறார்களென்று தெரிந்ததும், செல்லையா பதறிப்போய்ப் படகில் ஏறினான். உடனே, வெறித்தோடும் இளங்கன்றைப்போல், கீழ்த்திசையை நோக்கி வேகமாகப் பாய்ந்தது கேசவனின் படகு.

சந்திரன் அடிவானத்திலிருந்து லேசாகத் தலையை நீட்டினான். கேசவனின் பெரிய நீராவிப் படகின் சர்ச்லைட்டுகள் கடற்பரப்பைத் தம் ஒளி வெள்ளத்தால் துழாவிச் சுழன்றன. திடீரென்று, ''அதோ போகிறது ஒரு சிறு படகு!'' என்று தூரத்தே சுட்டிக் காட்டிய வண்ணம் கத்தினான் செல்லையா. அதைக் கண்டதும், தம் படகின் வேகத்தை இரட்டிப்பாக்குமாறு படகோட்டிக்கு உத்திரவிட்டார் துப்பறியும் கேசவன்.

எதிரிகளின் நீராவிப் படகின் காபின் அறைக்குள் அடைபட்டுக் கிடந்த தினகரன், அதன் ஜன்னல் துவாரத்தின் வழியாகப் பின்னால் வரும் படகின் விளக்கொளியைக் கண்டான். ''அதோ கேசவன் வந்துவிட்டார்!'' என்று கூவினான் பவானியைப் பார்த்து.

அதே சமயம் காபின் அறைக்கு வெளியே இருந்த மாயாண்டி ''நம்மை யாரோ துரத்தி வருகிறார்களே?'' என்று இருளப்பனை வியாகூலத்தோடு கேட்டான்.

''முட்டாள்! எல்லாம் உன்னால் வந்த வினை!'' என்று திட்டினான் இருளப்பன்.

இரண்டு படகுகளுக்குமிடையே கால் மைல் தூரம் வித்தியாசமிருந்தது. இருளப்பனுக்கு எதிரே சொற்பத் தொலைவில் ஒரு பயங்கரமான பாறை தலை நிமிர்ந்து நின்றது. ''டே மாயாண்டி, தயாராயிரு!'' என்று கத்தியவாறு, கடற்பேயை அதன் உச்ச வேகத்திற்கு ஊக்கினான் இருளப்பன்.

'படார்' என்று பாறையில் போய் மோதியது படகு. அதே க்ஷணத்தில், வத்தையைக் கட்டியிருந்த கயிற்றை அறுத்துவிட்டு, அதில் தாவிக் குதித்தான் மாயாண்டி. கண் மூடித் திறப்பதற்குள், அவன் பக்கத்தில் வந்து நின்றான் இருளப்பன்.

கடற்பேயின் மரப் பலகைகள் சடசடவென்று நெரிந்தன. தண்ணீர் குபுகுபுவென்று உள்ளே புகுந்தது. படகு சாய்ந்து மூழ்கியது. அதன் என்ஜின் புகை, தண்ணீருக்கு மேல் சுழன்றது. நொறுங்கிய கட்டைகளும் எண்ணெயும் நீர்மேல் மிதந்தன. அதைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே, தாம் ஏறியிருந்த வத்தையைக் கரையை நோக்கிச் செலுத்தினர் இருளப்பனும் மாயாண்டியும். பின் படகில் வருபவர்கள், நீரில் மூழ்கியவர்களைத் தேட முனைவார்களே தவிர, தம்மைப் பின்தொடர முயலமாட்டார்களென்பது அவர்களுடைய திண்ணமான எண்ணம்.

அவர்கள் எண்ணியது சரியாயிற்று. துப்பறியும் கேசவன் அவர்களை ஏறெடுத்துக்கூடப் பார்க்கவில்லை. அவர் கவனம் முழுதும் மூழ்கியவர்கள் மீதே லயித்திருந்தது. அடுத்த நிமிஷமே, அந்தப் பாறையண்டை வந்து நின்றது அவருடைய நீராவிப் படகு.

கடலினடியிலிருந்து குமிழிகள் கிளம்பிக்கொண்டிருந்தன. "இந்த இடத்தில் தண்ணீர் இருபது அடி ஆழத்திற்கும் அதிகமாக இருக்குமே?" என்று கவலையோடு கூறினான் படகோட்டி.

"தகுந்த உபகரணங்களில்லாமல் இருபதடிக்குக் கீழே மூக்குளிப்பதும், அங்கு மூழ்கிக் கிடப்பவர்களைத் தேடியெடுத்துக் கொண்டு வருவதும் சற்றும் சாத்தியமில்லாத விஷயங்களாயிற்றே?" என்று மனதிற்குள் கிலேசமுற்றார் கேசவன். "ஒரு வேளை, முத்துக்குளிப்பவர்கள் வேண்டுமானால் அதைச் செய்யலாம்......" என்று அவர் எண்ணிக்கொண்டிருக்கும் போதே திடீரென்று, தண்ணீருக்குள் குதித்தான் செல்லையா. அவனைப் பின்பற்றித் தானும் குதித்தார் கேசவன்.

சிறிது நேரத்தில் அவர் மூச்சுத் திணறியது. எனினும் சிரமப்பட்டு அடிவரையில் போய்த் தடவிப்பார்த்தார். ஒன்றும் அகப்படவில்லை. அவரது நுரையீரல் வெடித்துவிடும் போலிருந்தது. வேறு வழியில்லாமல் மேலே வந்தார்.

அதே சமயத்தில், அவருக்குப் பக்கத்தில் வேறொரு நபர் மேலெழும்புவது தெரிந்தது. திரும்பிப் பார்த்தார். கையில் பவானியைத் தாங்கியவண்ணம் காட்சியளித்தான் செல்லையா!

"இவளைப் பிடியுங்கள்!" என்று அவசரமாக அவளை அவரிடம் ஒப்படைத்துவிட்டு, அவன் மறுபடியும் கடலலைக்குள் மூழ்கினான். பவானியைக் கேசவன் தன் படகில் கொண்டுவந்து சேர்த்தார். அடுத்த சில விநாடிகளுக்கெல்லாம் கையில் தினகரனைச் சுமந்துகொண்டு மேலெழும்பினான் செல்லையா!

மறுபடியும் அவன் நீருள் மூழ்கினான். இந்தத்தடவை அவன் பழனியப்பனோடு திரும்பினான்!

மூவருக்கும் முதலுதவி சிகிச்சைகள் அளித்தார் அதில் திறமைசாலியாகிய கேசவன். அவர்களது சுவாசப்பைகளில் நிரம்பியிருந்த நீரெல்லாம் வெளியேற்றப்பட்டது. மூவரும் லேசாக மூச்சுவிடத் தொடங்கினார்கள்.

அத்தியாயம்: 28

# பதின்மூன்றாவது ஆண்டு நினைவுவிழா

"என்ன மிஸ்டர் கேசவன், உம்முடைய கட்சிக்காரன் செல்லையாவைப்பற்றி ஊரெங்கும் ஒரே பேச்சாயிருக்கிறதே? தன்னுடைய அபாரமான தீரச் செயலால் அவன் மூன்று உயிர்களைக் காப்பாற்றிவிட்டான் என எல்லோரும் வானளாவப் புகழ்கிறார்களே?" என்று விசாரித்தார் டிப்டி சூப்பரிண்டு சிங்காரவேலு முதலியார்.

"நானும் அதை ஓர் அபூர்வ சாதனையாகத்தான் நினைத்திருந்தேன். ஆனால் விசாரிக்கும்போது, அவனுக்கு இதெல்லாம் ரொம்பச்சாதாரண விஷயம் என்று தெரிகிறது. 'கடலின் உள்ளே ஏதாவது சுறாமீன் தென்பட்டிருந்தால், கொஞ்சம் சுவாரஸ்யமாயிருந்திருக்கும்,' என்கிறான் அவன்!"

"அட!" என்று ஆச்சரியமுற்றார் டிப்டி. "இதெல்லாம் அவன் கோடித்தீவிலிருக்கும் போது அந்தக் காட்டுமிராண்டிகளிடம் கற்றுக்கொண்ட வித்தை போலிருக்கிறது!"

"அது எப்படியோ இருக்கட்டும்! என் தினகரனுயிரைக் காப்பாற்றியதற்காக அவனுக்கு நான் கடமைப்பட்டு விட்டேன், அதன் பொருட்டாவது, அவன் தந்தை மீதுள்ள அபவாதத்தை நான் போக்கிவிட வேண்டும்! அதாவது அவன் தந்தை உண்மையாகவே கொலையாளி அல்ல என்பதை நிரூபிக்கவேண்டும்!" என்றார் கேசவன்.

"உம்!"

"வெள்ளை மாளிகையில் முத்தையா முதலியார் கொலையுண்டு, நேற்றிரவோடு பன்னிரண்டாண்டுகள் முடிந்துவிட்டன. இன்று பதின்மூன்றாம் ஆண்டு ஆரம்பம். அதை முன்னிட்டு வெள்ளை மாளிகையில் இன்றிரவு ஏறத்தாழ அதே நேரத்தை

யொட்டி ஒரு சிறிய ஆண்டு நினைவு விழா விருந்து நடத்தப்போகிறேன். அதற்கு நீங்களும் அவசியம் வரவேண்டும்!" என்ருர் துப்பறியும் கேசவன்.

"வேறு யாரார் வரப்போகிருர்கள்?"

"விருந்துக்கு அழைக்கப்பட்டுள்ளவர்களின் ஜாபிதா இதோ இருக்கிறது, பாருங்கள்," என்று கேசவன் ஒரு காகிதத்தை நீட்டினர். அதைக் கையில் வாங்கிப் பார்வையிட்டார் டிப்டி.

"இது யார் கோதண்டராமன்? பெயர் புதிதாய் இருக்கிறதே?"

"நம்து எல்லப்ப பிள்ளையின் குமாஸ்தா. பத்மாவதியம்மாளுக்கு ரொம்ப வேண்டியவர். என் அழைப்பைக் கண்டு அவர் வியப்புற்றிருக்கலாம். ஒரு வேளை அவர் வராமலும் இருந்துவிடலாம். அப்படிக்கின்றி, அவர் கட்டாயம் வந்து சேருமாறு தாங்கள் தான் கவனித்துக்கொள்ள வேண்டும்," என்று கண்ணைச் சிமிட்டினர் துப்பறியும் நிபுணர்.

---

## அத்தியாயம் : 29

# குட்டு உடைகிறது !

"என்ன வேடிக்கையாயிருக்கிறது? கொலை நடந்து பன்னிரண்டு வருஷங்கள் கழித்து, அதே வெள்ளைமாளிகையில், அதே தினத்தில், அதே இரவில், அதே நேரத்தை யொட்டி ஆண்டுவிழா விருந்தாமே? இந்தக் கேசவன் எதற்காக என்னையும் அதற்கு அழைத்திருக்கிருன்?" எனப் புழுங்கினுன் கோதண்டராமன்.

"ஒருவேளை, பத்மாவதியின் வீட்டுக்கு நீ இரண்டொரு தடவை வந்து போனது அவனுக்குத் தெரிந்திருக்கலாம்!" என்று பதிலளித்தான் கண்ணன்.

"அதற்கும் முத்தையா முதலியார் கொலைக்கும் என்ன சம்பந்தம்? அந்தக்காலத்தில் நான் இந்த ஊரிலேயே இல்லையே?"

"நான்கூட அந்தக் காலத்தில் ஒரு பள்ளிச் சிறுவனுய்த் தானிருந்தேன். ஆனல் **இப்போது** நான் ஒண்ணும் நம்பர் சந்தேகப் பேர்வழியாகக் கருதப்படுகிறேன். இன்று காலையில் பழனியப்பன் விஷயமாக டிப்டி சூப்பரிண்டு என்னைப் பன்னிப் பன்னிக் கேள்விகள் கேட்டார். எனக்கு ஒன்றுமே தெரியாதென்று நான் சாதித்துவிட்டேன்..."

"நீ என்னைப்பற்றி எதுவும் சொல்லிவிடவில்லையே?" என்று திகிலோடு கேட்டான் கோதண்டராமன்.

"நீ என்னை என்ன அவ்வளவு அடிமுட்டாள் என்று எண்ணிக்கொண்டாயா?" என்று கோபித்தான் கண்ணன். "இன்றிரவு நம்மெல்லோரையும் கேசவன் எதற்காக அழைத்திருக்கிறான் என்று நினைக்கிறாய்? நம்மை ஒருங்கு கூட்டி வைத்துத் திகிலடையச் செய்து, அப்போது நாம் ஏதேனும் வாய் தவறி உளறிவிட்டால் அதை வைத்துக்கொண்டு நம்மீது குதிரை ஏறுவதற்கே அவன் இந்த ஏற்பாடு செய்திருக்கிறான். நாம் மட்டும் ஜாக்கிரதையாய் வாயை மூடிக்கொண்டிருப்போமானால், நம்மீது அவன் எத்தகைய குற்றச்சாட்டையும் நிரூபிக்கமுடியாது!"

"அப்படியா சமாச்சாரம்?" என்று தலையை ஆட்டினான் கோதண்டராமன். "வரட்டும், இன்றிரவு என்னதான் நடக்கிறதென்று பார்ப்போம்."

"ஆமாம். அதற்குள் நாம் ஏன் ஆதாரமற்ற யூகங்களிலிறங்கி, நம் மூளையை அனாவசியமாகக் குழப்பிக்கொள்ள வேண்டும்?" என்றான் கண்ணன்.

---

## அத்தியாயம் : 30

# சாட்சியம் பொய்யா ?

---

இரவு மணி பத்தாயிற்று. அந்நேரம் வரையில் எங்கெங்கோ போய்ச் சுற்றியலைந்து விட்டு, வெள்ளை மாளிகைக்கு வந்தார் துப்பறியும் கேசவன்.

அம்மாளிகையைச் சுற்றிலும் ஒரே இருள் சூழ்ந்திருந்தது. உள்ளிருந்து ஒரு சின்னஞ் சிறு ஒளிக்கதிர்கூட வெளிப்படாதவாறு, அதன் ஜன்னல்களெல்லாம் சாத்தப்பட்டிருந்தன. முன்புறமிருந்த பெரிய ஹாலில், ஒரேயொரு ஊதா பல்ப் மட்டும் மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. வீடெங்கும் சுற்றிப் பார்த்துவிட்டு, அடுத்தாற்போல் நடைபெறவிருக்கும் நாடகத்துக்கு வேண்டிய அமைப்புக்களெல்லாம் செவ்வனேயிருக்கின்றன வென்று, தம் மனத்திற்குள்ளே திருப்தியுற்றார் கேசவன்.

அவருடைய அழைப்பில் குறிப்பிட்டிருந்தவாறு, சரியாகப் பத்தரை மணிக்குமேல் விருந்தினர்கள் ஒருவர் பின் ஒருவராக வரத் தொடங்கினர். முதன் முதலில் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து

கேசவனின் ரோல்ஸ்ராய்ஸ் காரில் அருளானந்த சாமியாரை அழைத்துவந்தான் தினகரன். சுமார் அறுபது வயதுக்கு மேலாகி விட்டதால், சற்று கூனிக் குறுகிக் காணப்பட்டார் அப் பெரிய மனிதர். எனினும், அவரது பார்வையிலும் பேச்சிலும் ஒருவிதக் கனிவும் தெளிவும் கலந்து விளங்கின.

"ஏதோ நீங்கள் அழைத்ததை மறுக்கமாட்டாமல் நான் வந்திருக்கிறேன். மற்றபடி, வேறு எவ்விதத்திலும் உங்களுக்கு நான் உதவியாயிருக்கக் கூடுமென்று என்னால் நம்ப முடியவில்லை!" என்றார் அவர் கேசவனை நோக்கி.

"நீங்கள் வந்ததே பெரிது. அதற்கு நான் நன்றி செலுத்துகிறேன்," என்று கூறிவிட்டு, செல்லையாவை அவருக்குக் கேசவன் அறிமுகப்படுத்தி வைத்தார்.

"உன் தந்தை எனக்கு ரொம்ப வேண்டியவர்," என்று தம் கண்களில் ஜலம் ததும்ப அவர் அவனைக் கட்டித் தழுவினார். "எனினும், அவருக்கு விரோதமாக நான் சாட்சியம் கூற நேர்ந்தது. அன்று நான் கோர்ட்டில் கொடுத்த அதே வாக்குமூலத்தைத்தான், இன்று நீங்கள் கேட்டாலும் நான் திருப்பிச்சொல்லப் போகிறேன்!" என்று அவர் கேசவனை நோக்கினார்.

"எனக்கு **அது** போதும்!" எனப் புன்னகைத்தார் துப்பறியும் நிபுணர்.

சிறிது நேரத்திற்கெல்லாம் இதர விருந்தினர்களும் அங்கு வந்து சேர்ந்தனர். அவர்களெல்லோரையும் அந்த இருளடைந்த படிக்கட்டின் வழியாக மேல்மாடிக்கு அழைத்துச்சென்று, ஒரு சிறிய அறையில் உட்காரவைத்தான் தினகரன்.

தினகரனுக்கும் செல்லையாவுக்கும் மத்தியில் டிப்டி சூப்பரிண்டு சிங்காரவேலு முதலியார் உட்கார்ந்திருந்தார். அடுத்தபடியாகக் கேசவன் என்ன செய்யப்போகிறார் என்பது அவருக்கே தெரியாமலிருந்தது. அவரைப்போலவே, கண்ணன், கோதண்டம், பத்மாவதி, மஞ்சுளா, அருளானந்த சாமியார், செல்லையா ஆகிய ஒவ்வொருவரும் ஒவ்வொரு வித ஊகத்தில் ஆழ்ந்துபோய், மௌனமாக உட்கார்ந்திருந்தனர். கடைசியாக, கேசவன் பேசத் தொடங்கினார்.

"நண்பர்களே, முத்தையா முதலியார் கொலையுண்ட பதின்மூன்றாவது ஆண்டு இன்று ஆரம்பமாகிறது. அந்தக் கொலை நடந்த சமயத்தில் இதே வீட்டில் தங்கியிருக்க நேர்ந்த அருளானந்த சாமியார் அவர்களும் பத்மாவதியம்மாளும் இப்போதும் இங்கு

இருக்கிறார்கள். நான் கூறப்போகும் பல விஷயங்கள், அவ்விருவருக்கும் ஏற்கெனவே தெரிந்தவைதான் என்பதில் சந்தேகமில்லை.

"அப்போது உலக மகாயுத்தம் மிகத் தீவிரமாக நடந்து கொண்டிருந்த காலம். அப்போது, இந்தக் கமலவனத்தின் அருகாமையில் இலங்கைப் பட்டாளம் ஒன்று தங்கியிருந்தது. அந்தப் பட்டாளத்தைச் சேர்ந்த சில உயர்தர அதிகாரிகள் முத்தையா முதலியாருக்குத் தற்செயலாக நண்பரானார்கள். அவர்கள் இவ்வூரை விட்டு மாறிப்போக வேண்டிய நாள் வந்தது. அதற்கு முதல் நாளிரவு, அவர்களுக்கு இந்த வெள்ளை மாளிகையில் ஒரு விருந்து நடத்தினர் முத்தையா முதலியார்......"

"ஆம். அன்றிரவுதான் அவர் கொல்லப்பட்டார்," என்று குறுக்கிட்டார் அருளானந்த சாமியார்.

"அது உண்மைதான்! யாரும் எதிர்பாராத விதமாக, சென்னையிலிருந்து அன்று மாலை செந்தில்நாத முதலியாரும் வந்திருந்தார். அவருக்கும் முத்தையா முதலியாருக்கும், பத்மாவதியம்மாள் விஷயமாக மனக்கசப்பு ஏற்பட்டிருந்ததென்பது பகிரங்க ரகசியம். அதாவது செந்தில்நாத முதலியாரை விட்டு விட்டு முத்தையா முதலியாரைப் பத்மாவதியம்மாள் மணக்க உத்தேசித்ததை முன்னிட்டு அந்த மனக்கசப்பு ஏற்பட்டிருந்தது. அவ்வாறு தமக்குப் பின் தம் தம்பிக்குச் சொத்துப் போகவிடாமல் செய்வதற்காகவே முத்தையா முதலியார் பத்மாவதியம்மாளை மணக்க விரும்பினதாகச் செந்தில்நாதர் ஆத்திரப்பட்டார் எனச் சொல்லப்படுகிறது. தற்செயலாக அன்று பத்மாவதியம்மாளும், ஏதோ தாங்கமுடியாத ஒரு தலைவலியினால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தார்கள்..."

"காரணம் வேறொன்றுமில்லை. அன்று வெய்யில் அவ்வளவு கடுமையாயிருந்தது!" என்றாள் பத்மாவதி

"ஓஹோ! அப்படியா சமாச்சாரம்? நான் வேறுவிதமாக அல்லவா நினைத்தேன்?" என்று அவளைக் கூர்ந்து நோக்கினார் கேசவன்.

"என்ன வேறுவிதம்?"

"நீங்களே நன்றாய் ஞாபகப்படுத்திப் பாருங்கள். உங்களுக்கு வந்தது வெறும் சாதாரணத் தலைவலியல்ல. ஒரு மயக்கமும் அதில் கலந்திருந்தது. அதனால், விருந்தில்கூடக் கலந்துகொள்ள முடியாமல், உங்கள் அறையில் போய் நீங்கள் படுத்துக்கொண்டு விட்டீர்கள்—"

"நான்தான் அந்த அம்மாளைப் போய்ப் படுத்துக்கொள்ளச் சொன்னேன். அவர்கள் முகத்தில் அவ்வளவு வேதனை காணப் பட்டது!" என்று விளக்கினார் அருளானந்த சாமியார்.

"அது எப்படியோ இருக்கட்டும். அதற்கென்ன இப்போது?" என்று சிடுசிடுத்தாள் பத்மாவதி.

"ஏன் அவசரப்படுகிறீர்கள்?" என்று சிரித்தார் கேசவன். "அன்று விருந்துக்கு வந்திருந்த ராணுவ அதிகாரிகளில், **காப்டன் கஜேந்திரம்பிள்ளை** யென்பவர் ஒருவர். அவர் இலங்கையைச் சேர்ந்தவர். பத்மாவதியம்மாளும் இலங்கையிலிருந்தவர்கள். இருவரும் ஒருவரையொருவர் நன்கறிந்தவர்கள். இது உண்மைதானா?" என்று அவர் பத்மாவதியை நோக்கினார்.

இதைக் கேட்டதும், அவள் முகத்தைப் பளீரென்று ஒரு பிரேதக் களை கவ்வியது.

"எனக்குத் தெரியாது!" என்று ஈனஸ்வரத்தில் இழுத்தாள் பத்மாவதி.

"அப்படியானால் அவரைக் கண்டதும் உங்களுக்கு மயக்கம் வரக் காரணம்?" என்றார் கேசவன்.

அவர் தொடர்ந்து பேசினார்: "அந்தக் கஜேந்திரம்பிள்ளை இப்போது காலமாகிவிட்டார். ஆனால் அவரைப்பற்றித் தீர விசாரித்து எனக்குத் தகவல் தெரிவிக்குமாறு, இலங்கையிலுள்ள என் நண்பர் ஒருவருக்கு டெலிபோன் செய்தேன். அங்கிருந்து வந்த செய்தியின்படி, கஜேந்திரம்பிள்ளை ராணுவத்தில் சேருமுன், அவர் ஏற்கெனவே யாழ்ப்பாணத்தில் ஒரு சப் இன்ஸ்பெக்டராக வேலைபார்த்தவர் என்று தெரியவந்தது. அந்த யாழ்ப்பாணம் கிரிமினல் கோர்ட்டில், பத்மாவதி யென்ற நபர்மீது ஏதேனும் கேஸ் நடந்ததுண்டா என்று என் நண்பரை மறுபடியும் விசாரித்தேன். அவர் போய்க் கோர்ட்டு ரிகார்டுகளையெல்லாம் புரட்டிப் பார்த்து, எனக்குப் பதில் தெரிவித்தார். ஒரு நம்பிக்கை மோசடி வழக்கில் தன் கணவனுடனும் **குருமூர்த்தி** என்ற மற்றோர் பேர்வழியுடனும், ஆறுமாதம் சிறைவாசம் அனுபவித்தவள் பத்மாவதியம்மாள் எனத் தெரியவந்தது. அந்த வழக்கில், போலீஸ் தரப்பில் கேஸ் நடத்தியவர்தான் கஜேந்திரம்பிள்ளை. அந்தப் பூர்வாசிரமக் கதையை அவர் வெளியிட்டு விடுவாரோ என்ற பயத்தால்தான், அவரைப் பார்த்ததும் பத்மாவதியம்மாளுக்கு மயக்கம் கண்டது...!"

"ஆம்! நான் சிறைவாசம் செய்தவள்தான்!" என்று திடீரென்று கத்தினாள் பத்மாவதி. "ஆனால் முத்தையா முதலியார்

கொலைக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்? அவரைக் கொலை செய்ததுகூட நான்தான் என்று கூறுகிறாயா? அதை உன்னால் நிரூபிக்க முடியுமா?" என்று அவள் சீறினாள் கேசவன் மீது.

டிப்டி சூப்பரிண்டு உள்பட, எல்லோருமே திக்பிரமையுற்று மௌனமாயிருந்தனர். ஆனால் அவள் சீற்றத்தைச் சிறிதும் பொருட்படுத்தாது, சிரித்துக்கொண்டே பேசினார் கேசவன்:

"அன்றிரவு பத்மாவதியம்மாள் பயந்தது சரியாய்ப் போயிற்று. கஜேந்திரம்பிள்ளை முத்தையா முதலியாரிடம் பத்மாவதியம்மாளின் பழங் கதையைக் கூறியேவிட்டார். இதைக் கேட்டதும், இயற்கையிலேயே குணக்கேடராகிய முதலியார், பிரளய ருத்திரனைப் போல் பெருங்கோபம் கொண்டார். அதனால் தான் தம் தம்பி செந்தில்நாத முதலியாரிடமும் அவர் எரிந்து விழுந்து பேசினார். தம் சொத்துக்களையெல்லாம் தான் மணக்கப் போகும் பத்மாவதியம்மாள் பேருக்கு எழுதி வைத்திருந்த உயில் டிராப்டைக் கிழித்துக் குப்பைத்தொட்டியில் போட்டார். ஆனால் அந்த டிராப்டைச் செந்தில்நாதர் கிழித்ததாகக் கோர்ட்டு விசாரணையின்போது போலீஸ்தரப்பில் வாதிக்கப்பட்டது..."

"அது சும்மா வெறும் சந்தர்ப்ப சாட்சியம்தான்!" என்று இடைமறித்தார் டிப்டி சூப்பரிண்டு. "முத்தையா முதலியாரின் அறையை விட்டுச் செந்தில்நாதர் வெளியே வந்த நேரம் என்ன? அது பன்னிரண்டு **அடித்து** ஐந்து நிமிஷமா, அல்லது பன்னிரண்டு **அடிக்க** ஐந்து நிமிஷமா என்பதே அந்த வழக்கில் பிரதான பிரச்னையாக விளங்கியது!"

"அந்தப் பிரச்னையைத்தான் நான் அடுத்தபடியாக எடுத்துக் கொள்ளப் போகிறேன்," என்றார் கேசவன். 'முத்தையா முதலியாரைக் கொலை செய்ததுகூட நான்தானா?' வெனச் சற்றுமுன்பு பத்மாவதியம்மாள் என்னைக் கேட்டார்கள்..."

"அதை இப்போதும்தான் கேட்கிறேன்!" என்று சப்தமிட்டாள் பத்மாவதி

"நீங்கள் முத்தையா முதலியாரைக் கொலை செய்யவில்லையம்மா; ஆனால், ஒரு பொய்ச்சாட்சி சொன்னதன் மூலம் அவருடைய தம்பி செந்தில்நாத முதலியாரைக் கொலை செய்ய—அதாவது, தூக்குமேடைக்கு அனுப்ப, முயன்றீர்கள்!" என்று சாவதானமாகக் கூறினார் கேசவன்.

"பொய்ச் சாட்சியா! அருளானந்த சாமியார் கூறியதைத் தான் கோர்ட்டில் நானும் கூறினேன். அப்படியானால் அவர் சொன்னதும் பொய்ச்சாட்சிதானா?"

"பத்மாவதியம்மாள் கேட்பது நியாயமான கேள்வி!" என்று ஆமோதித்தார் அருளானந்த சாமியார். "அந்த அம்மாளின் பழைய சரிதைகள் எனக்குத் தெரியாது. அதைப்பற்றி எனக்கு அக்கறையுமில்லை. ஆனால், அந்த அம்மாள் கோர்ட்டில் கொடுத்த வாக்குமூலம் மாத்திரம் பரிசுத்தமான உண்மையென்பதில் சந்தேகமில்லை. அதை நீங்கள் பொய்யென்றால், என் சாட்சியத்தையும் நீங்கள் பொய்யென்று கூறுவதாகத்தான் அர்த்தம்..."

"உங்களை நான் அவ்வாறு குற்றம் சாட்டவில்லை. ஏனெனில், உங்கள் சாட்சியத்திற்கும் அந்த அம்மாள் சாட்சியத்திற்கும் மலைக்கும் மடுவுக்கு முள்ள வித்யாசமிருக்கிறது!"

"எப்படி?" என்றார் வியப்புடன் அருளானந்த சாமியார்.

"அதை உங்களுக்கு இதோ விளக்குகிறேன்?" என்றார் துப்பறியும் கேசவன்.

---

### அத்தியாயம் : 31

## கால வித்தியாசம்

---

"பதின்மூன்று வருஷங்களுக்கு முன்னால், இதே தினத்தில், கிட்டத்தட்ட இதே நேரத்தில், பத்மாவதியம்மாள் தன் படுக்கையில் உறக்கமின்றிப் புரண்டு கொண்டிருந்தார்கள். விருந்து முடிந்து ராணுவ அதிகாரிகள் எல்லாம் வெளியே போய்விட்டார்கள். முத்தையா முதலியார் தம் படிப்பறைக்குள் புகுந்து விட்டார். செந்தில்நாதர் அவரைப் பின்தொடர்ந்து சென்றார். அருளானந்த சாமியார வர்களும் படுக்கப் போய் விட்டார்கள். வீட்டினுள்ளிருந்த விளக்குகளெல்லாம் அணைக்கப்பட்டு, இப்போதைப்போலவே அன்றும் இருட்டடிப்பு செய்யப்பட்டிருந்தது......?

"ஆம், ஆம், அப்போது யுத்தகாலமல்லவா ?" என்றார் டிப்டி சூப்பரிண்டு.

"அப்போது, சாமியாரவர்களே !" என்று தொடர்ந்து பேசினார் கேசவன். "ஒரு புஸ்தகம் எடுத்துவருவதற்காகத் தாங்கள் கீழே இறங்கிப்போனீர்கள். மாடிப் படிக்கட்டின் பாதி வழியில் போகும்போது, முத்தையா முதலியாரின் படிப்பறையைத் திறந்துகொண்டு, செந்தில் நாதர் அவசரமாக வெளியே வருவதைப் பார்த்தீர்கள்......"

"ஆம், அவர் என்னைத் தாண்டிச் சென்றார் மாடியைநோக்கி. அப்போது ஹால் கடிகாரத்தில் மணி பன்னிரண்டடித்து ஐந்து நிமிஷம் ஆகியிருந்தது!" என்றார் அருளானந்த சாமியார்.

"ரொம்பச் சரி, ஆனால் அன்றிரவு நடந்த அதே சம்பவத்தை, இன்றிரவு எனக்காக நீங்கள் **நடித்துக்** காட்டவேண்டும். காலஞ் சென்ற முத்தையா முதலியாருக்கும் செந்தில் நாதருக்கும் பதிலாக, முறையே டிப்டி சூப்பரிண்டும் தினகரனும் நடிப்பார்கள். இந்த நாடகத்தைப் பார்ப்பதற்கு, கீழே ஒரு பத்திரிகை நிருபர் காத்துக்கொண்டிருக்கிறார். வேண்டுமானால், செல்லையாவும் வந்து பார்க்கட்டும். மற்றவர்களெல்லாம் இந்த அறையிலேயே இருக்க வேண்டியது. சாமியாரவர்களே, இதற்கு அடுத்த அறையில் தானே அன்றிரவு தாங்கள் தங்கியிருந்தீர்கள்?"

"ஆம்," என்று தலையை அசைத்தார் சாமியார்.

"தயவு செய்து இப்போது அதே அறைக்குள் போயிருங்கள். என்னுடைய ஊதுகுழல் சப்தத்தைக் கேட்டவுடன், முத்தையா முதலியார் கொலையுண்ட இரவன்று எப்படிக் கீழே மாடிப் படிக் கட்டில் இறங்கி வந்தீர்களோ அப்படியே இப்போதும் இறங்கி வருமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்!" என்றார் துப்பறியும் கேசவன்.

"என்னவோ இதெல்லாம் வெறும் வீண் பொழுது போக்காய்த்தான் முடியப்போகிறது. இருந்தாலும் **உங்களுக்காக** இதை நான் மறுக்காமல் ஒப்புக்கொள்கிறேன்," என்று முணுமுணுத்தார் அருளானந்த சாமியார்.

"ரொம்ப வந்தனம். அப்படியானால் வாருங்கள் நாம் போகலாம்," என்று அவ்வறையை விட்டு வெளியே வந்தார் கேசவன். சாமியார் அந்த அறைக்குச் சென்றார். டிப்டி, தினகரன், செல்லையா மூவரும் கேசவனைப் பின்தொடர்ந்து கீழே யிறங்கினர்.

அவர்களெல்லாம் வெளியேறியதும், கோதண்டமும் மஞ்சுளாவும் ஏதோ பேசுவதற்கு வாயெடுத்தனர்.

"உஸ்!" என்று உடனே அவர்களைச் சீறி யடக்கினான் கண்ணன். "அட அறிவுகெட்ட ஜன்மங்களே, நாமெல்லாம் ஒரு பொறியில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதை மறந்து விடாதீர்கள். நம்மைச் சுற்றிலும் இரகசியமாக மைக்ரா போன்கள் வைக்கப்பட்டிருக்கலாம். நாம் என்ன பேசுகிறோம் என்பதை அவர்கள் மறைந்திருந்து கவனிப்பார்கள். ஆகையால் வாயை

அடக்கிக்கொண்டு மௌனமாயிருங்கள்!'' என்றான் மிக ரகசிய மான குரலில். அவன் சொல்வது நியாயந்தான் என்று உணர்ந் தவர்களாய், பதில் பேசாது உட்கார்ந்திருந்தனர் பத்மாவதி முதலியோர்.

கீழே ஹாலின் இருளை மிகைப்படுத்திக் காட்டுவதுபோலிருந் தது, அங்கு எரிந்து கொண்டிருந்த மங்கலான ஊதா விளக்கு. அதன் படிக்கட்டுக்கு எதிர்ப் புறத்தே தூரநின்றவாறு, தன் பிகிலை யெடுத்து ஊதினார் துப்பறியும் கேசவன்.

உடனே மாடியில் தாம் தங்கியிருந்த அறையை விட்டு வெளியே வந்தார் அருளானந்த சாமியார். மாடிப்படிகளில் அவர் இறங்கத் தொடங்கியதும், கீழேயிருந்த படிப்பறையின் கதவைத் திறந்துகொண்டு செந்தில் நாதராக நடிக்கும் தினகரன் வெளியே வந்தான். அடுத்த க்ஷணமே அவ்வறையின் கதவு மூடப் பட்டது. எனினும் அதற்குள், அதனுள்ளிருந்து வெளிப்பட்ட ஓர் ஒளிக்கற்றையானது, அந்த ஹாலில் வீசியடித்து மறைந்தது.

அறையிலிருந்து வெளிவந்த தினகரன், நேரே படிக்கட்டி லேறி சாமியாரைத் தாண்டிச் செல்லும் தருணம், "எல்லோரும் அப்படியே நில்லுங்கள்!'' என்று இரைந்து கூறினார் துப்பறியும் கேசவன். உடனே நிசப்தம் நிலவியது.

"சாமியாரவர்களே, தாங்கள் மேலேயிருந்து இறங்கி வரும் போது சுவரிலுள்ள கடிகாரத்தைப் பார்த்தீர்களா?''

"ஆம்; பார்த்தேன்?''

"அதில் மணியென்ன?''

"பன்னிரண்டு அடித்து ஐந்து நிமிஷம்!'' என்றார் சாமியார்.

"நிச்சயமாகச் சொல்லுவீர்களா?''

"நிச்சயமாகத்தான் சொல்லுகிறேன்!''

"அப்படியானால் சரி, தினகரா, கீழே படிப்பறையை விட்டு வெளிவரும்போது அதே சுவர்க் கடிகாரத்தை நீயும் கவனித் தாயா?''

"ஆம்.''

"அதில் நீ கண்ட மணி என்ன?''

"பன்னிரண்டு அடிக்க ஐந்து நிமிஷம்!''

"சரி. சாமியாரவர்களே, தயவு செய்து கொஞ்சம் வாருங்கள் கீழே. தினகரா, நீயும் வரலாம்!'' என்றார் கேசவன்.

இருவரும் கீழே இறங்கி வந்தார்கள். ஹாலின் மத்தியி லிருந்த ஒரு பிரகாசமான மின்சார விளக்கு பளிச்சென்று எரி யத் தொடங்கியது படிக்கட்டின் எதிர்ப்புறத்தே, வெகுதூரத்தில் செல்லையாவுக்கும் பத்திரிகை நிருபருக்கும் மத்தியில் நின்று கொண்டிருந்தார் துப்பறியும் கேசவன். முத்தையா முதலியாரின் ஸ்தானத்தில் தான் உட்கார்ந்திருந்த அறையைவிட்டு வெளியே வந்தார் டிப்டி சூப்பரிண்டு.

ஏககாலத்தில் எல்லோருடைய பார்வையும் நேரே சுவரி லுள்ள கடிகாரத்தை நோக்கிச் சென்றன. அதன் முட்களோ, பன்னிரண்டு **அடிக்க** ஐந்து நிமிஷத்தையே காட்டி நின்றன.

"மணி இப்போது பதினொன்றரைதான் ஆகிறது. ஆனால் கடந்த இரண்டு மணிநேரமாக அந்தச் சுவர்க்கடிகாரத்தை ஓடா மலே பன்னிரண்டு அடிக்க ஐந்து நிமிஷத்திலே நான் நிறுத்தி வைத்திருக்கிறேன்!" என்றார் துப்பறியும் கேசவன்.

அந்தச் சுவர்க் கடிகாரத்தையும் துப்பறியும் கேசவனையும் மாறி மாறி ஏறிட்டுப் பார்த்தார் சாமியார். அவர் மூளை குழம் பியது. ஒரு கொடிய துன்பத்தின் சாயை அவர் முகத்தில் படர்ந்தது.

"என்ன விபரீதம்? நான் எவ்வளவு முட்டாளாய் விட்டிருக் கிறேன்! அநியாயமாய் **என்பொய்ச் சாட்சியத்தால்** செந்தில் நாதரல்லவா தூக்கிலிடப்பட விருந்தார்! நல்லவேளை!" என்று தழுதழுத்த குரலில் புலம்பினார் அருளானந்த சாமியார்.

"நீங்கள் சொன்னது பொய்ச் சாட்சியமல்ல; **தவறுத லான** சாட்சியம்," என்று திருத்தினார் கேசவன்.

"எனக்கொன்றுமே விளங்கவில்லையே?" என்று விழித்தார் டிப்டி. "கடிகாரம் சரியாய்த்தானிருக்கிறது. ஏனெனில், அந்த அறைக்குள் போய் உட்காரு முன்பே அதை நான் ஒரு தரம் கவனித்தேன். சாமியார் கண்களுக்கு மட்டும் அது வேறு வித மாகக் காட்சியளித்ததன் காரணம் என்ன?"

"அதை நான் உங்களுக்குச் சுலபமாக விளக்க முடியும்," என்று ஆரம்பித்தார் கேசவன். "முதலாவதாக, அருளானந்த சாமியாரவர்களுக்கு எப்பேதுமே கண்பார்வை கொஞ்சம் மங் கல். மேலும், இந்த வீட்டில் அவர் அதிகமாகப் பழகியவரல்ல. பாதி ஜாமநேரத்தில், இருளடைந்த படிக்கட்டின் வழியே அவர் இறங்கி வந்தார். அப்போது அறையின் கதவு திறந்து மூடியதால்,

ஒரு வெளிச்சம் திடீரென்று தோன்றி மறைந்தது. அந்த வெளிச்சத்தில் ஒரு கடிகாரத்தையும் அதன் முட்களின் நிலையையும் கண்ணுற்றதாக அவர் கருத்துக்குப் பட்டது. ஆனால் பதின்மூன்று ஆண்டுகளுக்கு முந்திய அன்றிரவும் சரி, இன்றிரவும் சரியே; அவர் பார்த்தது உண்மையான கடிகாரமல்ல. அதோ படிக்கட்டின் எதிரேயிருக்கும் அந்தப் பெரிய நிலைக்கண்ணாடியில், கடிகாரத்தின் **பிரதி பிம்பத்தைத்தான்** அவர் பார்த்தார். அந்தப் பிரதிபிம்பத்தை இப்போது நீங்கள் எல்லோருமே பாருங்கள்: பன்னிரண்டு **அடித்து** ஐந்து நிமிஷம் ஆனதுபோலவே அதன் முட்கள் காணப்படுகின்றன." நிலைக் கண்ணாடியில் மாறிப் பிரதிபலிக்கும்போது, பன்னிரண்டுக்கு ஐந்து நிமிஷம் முன்னதாகவுள்ள முள் பன்னிரண்டைத் தாண்டி ஐந்து நிமிஷம் தள்ளியிருப்பதாக மாறு பிரதிபிம்பம் தோன்றுவதுண்டு!

ஆம்; கேசவன் கூறியது சரியாகவே யிருந்தது. நிலைக் கண்ணாடியையும் சுவர்க் கடிகாரத்தையும் மாறி மாறிப் பார்த்தார் டிப்டி சூப்பரிண்டு. அவர் முகத்தில் அசடுவழிந்தது. "அந்தக் கேஸ் நடக்கும்போது எங்களில் யாருக்குமே இது மூளையில் எட்டவில்லையே?"

"அதற்குக் காரணம், சாமியாரவர்களின் சாட்சியத்தில் யாருக்குமே சந்தேகம் தட்டவில்லை. அதைத் திறமையாகப் பயன்படுத்திக்கொண்டாள் பத்மாவதி. அவள் ஒருத்திக்குத்தான் அப்போது உண்மை தெரியும். எனினும், செந்தில் நாதரைத் தூக்கு மேடைக்கு அனுப்பிவிட்டால் முத்தையா முதலியாரின் சொத்துக்களைச் சுலபமாக அடைந்து விடலாம் என்ற துராசையால், உண்மையை மறைத்து அவள் பொய்ச்சாட்சியம் கூறத் துணிந்தாள்!" என்றார் கேசவன்.

அவர் கூறிய விளக்கத்தைக் கேட்டு, எல்லோரும் வியப்பே வடிவாய் நின்றார்கள்.

* * * *

கேசவன், ஏற்பாடு செய்த நாடகம், ஐந்தே நிமிஷங்களுக்குள் நடந்து முடிந்துவிட்டது. உடனே அனைவரும் ஹாலிலிருந்து மாடிக்குச் சென்றனர்.

கீழே நடந்த விஷயங்கள் எதுவுமே அறியாமல் விழித்துக்கொண்டிருந்தார்கள் பத்மாவதி முதலியோர். கேசவன் திரும்பி வந்ததும், கோதண்டராமன் கோபத்தோடு பேசத்தொடங்கினான்! "இது என்ன வேடிக்கை? என்னை எதற்காக இங்கு அழைத்து வந்தீர்கள்? பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் நடந்த முத்தையா

முதலியார் கொலைக்கும் எனக்கும் ஏதாவது சம்பந்தமுண்டா? அவர் இறந்தபோது நான் இந்த ஊரிலேயே இல்லையே? என்னை ஏன் அனாவசியமாகத் தொந்தரவு செய்கிறீர்கள்?'' என்று கேட்டான் கோதண்டம்.

"கொஞ்சம் பொறு, தம்பி!" யென்று கையமர்த்தினார் கேசவன். "பத்மாவதியம்மாளை உனக்கு எத்தனை நாளாகத் தெரியும்?"

"எனக்கு அந்த அம்மாளைத் தெரியவே தெரியாது!"

"அப்படியானால் 'சிலோன் கிளப்' என்ற மதுப்போத்தலை அவர்களுக்குக் கொடுத்தது யார்?"

இதைக்கேட்டதும் திடுக்கிட்டான் கோதண்டம். எனினும் அதைக் காட்டிக்கொள்ளாமல், "அது எனக்கெப்படித் தெரியும்?" என்றான் அழுத்தமாக.

"அதுபோகட்டும். பத்மாவதியம்மாளும் அவள் புருஷனும் யாழ்ப்பாணத்தில் தண்டிக்கப்பட்டபோது, அவர்களோடுகூட குருமூர்த்தியென்ற ஒருவனும் சிறைவாசம் செய்தானே, அவனை யாவது உனக்குத் தெரியுமா?" என்று சிரித்தார் கேசவன்.

இடியேறுண்ட நாகம்போல் ஸ்தம்பித்து நின்றான் கோதண்டம். கேசவன் சொன்னார்:

"அந்தக் குருமூர்த்திதான் இப்போது கோதண்டராமனாக விளங்குகிறாய் என்பதை, நான் குறிப்பிட்ட மது போத்தலிலுள்ள உன் கை ரேகைகளே எனக்குக் காட்டிக் கொடுத்தன."

"அப்படியே இருக்கட்டுமே? அதில் என்ன தவறு? என் பேரை நான் மாற்றி வைத்துக்கொண்டது சட்டப்படி குற்றமா?" என்று கேட்டான் கோதண்டம்.

"அப்படி நான் சொல்லவில்லையே? ஆனால், உன்னிடம் ஒரே யொரு விஷயம் மட்டும் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்பு கிறேன்."

"என்ன?"

"பத்மாவதியம்மாள் சிறைவாசம் செய்ததை வெளியிடாம லிருப்பதற்குக் கைக்கூலியாக, அவர்களுக்குக் கிடைக்கும் சொத்தில் எவ்வளவு பாகத்தை உனக்குக் கொடுப்பதாக அவர்கள் வாக்களித்திருந்தார்கள்?"

"இதெல்லாம் வெறும் கற்பனை, உம்மால் எதையுமே ருஜுப்படுத்த முடியாது!"

" அடபைத்தியக்காரா !" என்று சற்று கடுமையான தொனியில் ஆரம்பித்தார் கேசவன். "செல்லையாவையும் பழனியப்பனையும் கொல்வதற்கு நீ செய்த சதியின் முழுவிவரமும் எனக்குத் தெரியும். இருளப்பனும் மாயாண்டியும் என்னிடம் எல்லாவற்றையும் சொல்லி விட்டார்கள்......"

" அயோக்யப்பயல்கள்! உண்மையில் அந்தப் படகு விபத்தே இருளப்பனுடைய சூழ்ச்சிதான்......" என்று கோதண்டம் சொல்லிக் கொண்டிருக்கும்போதே,—

" என்னடா முட்டாள், உளறுகிறாய் ?" என்று அதட்டினான் கண்ணன். அடுத்த கணமே தன் தவறை உணர்ந்தவனாய் உதட்டைக் கடித்துக் கொண்டான் கோதண்டம்.

" இவர்கள் இரண்டுபேருமே அதில் சம்பந்தப் பட்டவர்கள் தான்," என எழுந்து நின்றாள் மஞ்சுளா. " செல்லையாவைக் கொன்றுவிட்டு, என்னையும் அம்மாளையும் மிரட்டிப் பணம் பறிப்பதற்கு அவர்கள் திட்டமிட்டிருந்தார்கள். ஆனால் அந்தத் திட்டத்தின் விவரம் எதுவுமே எங்களுக்குத் தெரியாது. இவர்களுடைய சதியில் எங்களுக்குக் கொஞ்சமும் சம்பந்தமில்லை......"

" சீ நாயே! மூடுவாயை!" என்று அதட்டியவாறு, தன் சட்டைப் பையிலிருந்து ஒரு துப்பாக்கியை எடுத்துப் பிடித்தான் கோதண்டம். "எல்லோரும் அப்படியே கைகளை மேலே தூக்குங்கள். யாரேனும் அசைந்தீர்களோ சுட்டு விடுவேன்," என்று அவ்வறையின் வாசற்படியை நோக்கி அவன் பின் செல்லலானான். அதே சமயத்தில், கீழே டெலிபோன் மணி கணகணவென்றொலித்தது.

துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்திக் கொண்டே தப்பி ஓட நினைக்கும் கோதண்டராமனே ராட்சஸனைப்போல நின்றான். அறையிலிருந்த எல்லோருமே பயந்து அசைவற்று நின்றனர். ஆனால் கேசவன்மட்டும் சிரித்துக்கொண்டே கோதண்டத்தின் துப்பாக்கிக் குறியை நோக்கி நெருங்கினார்.

"ஓய் நில்லும்! நில்லும்!! சுட்டுவிடப்போகிறான்!" என்று கத்தினார் டிப்டி சூப்பிரண்டு.

அடுத்த க்ஷணத்தில், குபீரென்று வேட்டை நாய்போல் கோதண்டத்தின் மீது தாவிப் பாய்ந்தான் செல்லையா.

அவனைப் பின்பற்றி, டிப்டியும் கேசவனும் சேர்ந்து பாய்ந்தனர்.

" படார்!" என்று அவ்வறையே அதிருமாறு ஒரு வெடிச்சப்தம் கேட்டது. அடுத்த விநாடியே, கோதண்டத்தின் கையிலிருந்த

அத்துப்பாக்கியைத் திருகிப்பறித்தான் தினகரன். "யாருக்கேனும் காயம்பட்டதா?" என்று கேட்டுக்கொண்டே சுற்று முற்றும் பார்த்தார் டிப்டி சூப்பிரண்டு.

"ஒருவருக்கும் ஒன்றுமில்லை. நீங்கள் முதலில் இவன்கையில் விலங்கை மாட்டுங்கள்," என்றார் துப்பறியும் கேசவன். தினகரா, நீ கீழேபோய் டெலிபோனைக் கவனித்துவிட்டுவா."

அடுத்தபடியாகக் கண்ணனின் கரங்களிலும் விலங்கு மாட்டப் பட்டது.

"ஓய்! மிஸ்டர் கேசவன்! நீர் அசகாயப் புலிதான்! ஆனால் கோதண்டத்தின் துப்பாக்கிக் குறிக்கு நேராக ஏனய்யா மார் பைக் காட்டிக் கொண்டு போனீர்? அவன் சுட்டுத்தள்ளியிருந் தால் நிம்மதியாய் துப்பறியும் தொழிலைத் தலைமுழுகிவிடலாம் என்றா?" என்று கேட்டார் டிப்டி சூப்பிரண்டு.

"அந்தக் கோதண்டம் துப்பாக்கி இல்லாமல் இங்கே வரமாட் டான் என்பது எனக்குத் தெரியும்! அதனால் அவன் தங்கியிருந்த ஹோட்டலுக்குப்போய் அவனுக்குத் தெரியாமல் துப்பாக்கி மருந்தை வெறும் வேட்டு மருந்தாக மாற்றிவிட்டு வந்தேன்! இல்லா விட்டால் அப்படி உயிருக்குத் துணிவேனா? நான் அவ்வளவு முட்டாளல்ல!" என்று சிரித்தார் துப்பறியும் கேசவன்.

டெலிபோன் அறையிலிருந்து ஓடோடியும் வந்தான் தின கரன்.

---

### அத்தியாயம் : 32

## பேயும் துப்பும் !

---

"ஆஸ்பத்திரியிலிருந்து தப்பியோடப் பார்த்தானாம் இந்த வெறியன் கனகப்பன். அதில் தடுமாறி, மாடியிலிருந்து கீழே வீழ்ந்து விட்டானாம். அவன் சீக்கிரம் இறந்து விடுவானென்று கூறுகிறார்கள்!" என்று டெலிபோன் தகவலைக் கூறினான் தினகரன்.

டிப்டியும் கேசவனும் ஆஸ்பத்திரிபோய்ச் சேருவதற்குள் கனகப்பன் இறந்து விட்டான். அங்கே அவர்கள் வருகைக்காகக் காத்திருந்தார், பிரபல மனோதத்வ நிபுணரான டாக்டர் ராமா னுஜம்.

"இறப்பதற்குச் சில நிமிஷங்களுக்கு முன்புதான் அவனுக் குப் பிரக்ஞை வந்தது. அவனைப் பிடித்திருந்த பைத்தியமும்

தெளிந்தது. தான் இறக்கப்போவதும் அவனுக்கு நிச்சயமாகத் தெரிந்தது. 'இனியாருக்கு நான் பயப்படவேண்டும்?' என்ற துணி வில், அவன் உண்மையைக் கூறிவிட்டான்!" என்றார் டாக்டர் ராமானுஜம்.

"என்ன உண்மை?" என்று கேட்டார் டிப்டி.

"நீங்கள் இங்கே அமர்த்தியிருக்கும் துப்பறியும் போலீஸ் அதிகாரி, அவன் கூறியதையெல்லாம் குறிப் பெடுத்துக்கொண் டிருக்கிறார். அவரையே கேளுங்கள்!"

"முத்தையா முதலியாரைத் தானே கொன்றதாகக் கன கப்பன் ஒப்புக்கொண்டான்!" என்று அவன் வாக்குமூலத்தை வாசித்துக்காட்டினார் அந்த அதிகாரி.

டிப்டியின் உள்ளத்தில் தோன்றிய ஆச்சரியத்தைச் சொல்லி முடியாது. "அப்படியானால் மைக்கேல் பிள்ளை ஊகித்தது சரியா யிற்று. முத்தையா முதலியாரை அவருடைய தம்பி செந்தில் நாத முதலியார் கொலைசெய்யவில்லை யென்றால், அவருடைய சமயல்காரன்தான் கொலை செய்திருக்கவேண்டும்! ஆமாம்!...... கனகப்பனேதான் பித்தவெறி பிடித்து முத்தையா முதலியாரைக் கொன்றிருக்கிறான்!"

"அதுதான் இல்லை!" என்று சிரித்தார் கேசவன். "அவரைக் கொன்ற பிறகுதான் அவனுக்கு வெறி பிடித்திருக்கிறது."

"அது எப்படி?"

"அது ஒரு நுணுக்கமான மனோதத்துவ விஷயம்" என்று குறுக்கிட்டார் ராமானுஜம். "முத்தையா முதலியார் இயற்கையி லேயே முன்கோபி. அன்றிரவு அவர் வேறு ஏதோ சிலகாரணங் களால் மகா ரௌத்ராகாரமாக இருந்திருக்கிறார். அப்போது, அவருக்கு ஏதேனும் வேண்டுமாவென்று கேட்கப் படிப்பறைக் குள் போன கனகப்பனை அவர் அகாரணமாகத் திட்டி அடித் திருக்கிறார். அவன் மீது வெறி நாய்போல் சீறி விழுந்தார். பல நாள் பொறுத்திருந்த கனகப்பனுக்கும், அன்று விதிவசத்தால் தன்னை மறந்த சீற்றம் வந்து விட்டது. அன்று எஜமானர் வாய்க்குவந்தபடி திட்டும்போது. 'அட, தேவடியாள் மகனே! போடா அப்பால்' என்று உச்சரித்து விட்டார். தன்னை எஜ மானர் அடித்துக் கொன்றாலும் பொறுத்துக் கொள்ளக் கூடிய கனகப்பனுக்குத் தன் தாயைத் தேவடியாள் என்று திட்டியதை மட்டும் பொறுக்க முடியவில்லை! ஆத்திரத்தில் என்ன செய் கிறோம் என்பதை அறியாமலே, பக்கத்தில் கிடந்த பேப்பர் அறுக்

கும் கத்தியை யெடுத்து அவரைக் குத்திவிட்டான். குத்திய பிறகே, தான் செய்த காரியத்தின் பயங்கரம் அவனுக்குப் புலப்பட்டது. தான் அப்படிச் செய்தோமா என்பதை நம்பக்கூட அவனுடைய இருதய ஓட்டம் நடுங்கியது. அதை நம்பவும் மனது மறுத்து விட்டது. அந்த மன அதிர்ச்சி தாங்காமல் அவன் மூர்ச்சையுற்று வீழ்ந்தான். அந்த அதிர்ச்சியின் காரணமாகவே அவன் அது முதற் கொண்டு பைத்தியமாகி விட்டான்.

"அப்படியானல், செந்தில் நாதர்மீது அவனுக்கு ஏன் அவ்வளவு வன்கண்மை பிறக்கவேண்டும்?" என்ருர் டிப்டி சூப்பரிண்டு.

"ஒரு கொலைப் பித்தனின் சித்தம் வேலை செய்யும் விதமே அப்படித்தான். பயத்தின் காரணமாகவே பெரும்பாலான பைத்தியங்கள் தோன்றுகின்றன. ஒருவன் தான் நினைத்துப் பார்ப்பதற்கே சகிக்க வியலாத சம்பவமொன்று நிகழ்ந்து விடும்போது அவன் பைத்தியமாகிருன். அந்தச் சம்பவமானது, அவனுடைய உள்ளத்தின் பாதாளக் குகைக்குள் தள்ளப்படுகிறது. அதை அவன் மறந்துவிட விரும்பி, மனதோடு போராடிப் பித்துப் பிடித்து அதை மறந்தும் விடுகிருன். எனினும் தன்னையறியாமலே ஒரு குற்ற உணர்ச்சி அவனின் உள்ளுணர்வைத் துன்புறுத்துகிறது. அதனிடமிருந்து தப்புவதற்காக, அந்தக் குற்றத்தை வேறு யார் மீதாவது அவன் ஆரோகித்து விடுகிருன். தன் மீது வரும் கோபத்தை வேறு யார்மீதோ காட்டுகிறேம் அல்லவா, அது போலத்தான்! தான் இந்தக் குற்றத்தைச் செய்யவில்லையென்ருல் இன்னெருவர் செய்ததாக நம்ப முயல்கிருன். அதனுல் உருவெளித் தோற்றங்களும், பிரமைகளும் உண்டாகின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் அது செந்தில் நாதர் தலையில் வீழ்ந்தது. அதனுல் தான் செந்தில் நாதரே கொலைகாரன் என்று பைத்திய வெறியில் உளறிக் கொண்டிருந்தான். அவனுக்குப் பழக்க வாசனை காரணமாக எஜமான விசுவாசம் உண்டாகையால் செந்தில் நாதரைப் பழிவாங்க வேண்டுமெனவும் துடித்துக் கொண்டிருந்தான். இப்போது சாகப்போகிறேம் என்ற உணர்ச்சி மேலோங்கிப் பைத்தியம் தெளியும்போது, தான் தான் எஜமானரைக் கொன்றேம் என்ற விஷயம் ஞாபகத்துக்கு வந்துவிட்டது. அதனுல் இருதயம் சட்டென அதிர்ச்சியுற்று விட்டது." என்ருர் மனேதத்துவநிபுணர்.

"ஓஹோ! அதனுல்தான் கனகப்பன் அடிக்கடி முத்தையா முதலியாரின் ஆவியைச் சந்திப்பதாகக் கூறினன்போலும்!" என்று தன் தாடையைத் தடவினர் டிப்டி சூப்பிரண்டு.

"ஆம். பைத்தியமானது உண்மையை இருதயத்தின் உள்ளே தள்ளிப் புதைத்து விடுகிறது. எனினும், அதையும் மீறிச் சில சமயங்களில் கனவு, ஆவிக்காட்சி போன்ற வடிவங்களில் உண்மையானது வெளிப்பட முயல்கிறது. வெள்ளை மாளிகையில் முத்தையா முதலியாரின் ஆவியைக் காண்பதாகக் கனகப்பன் சொன்னது எனக்கு அதிசயமாகத் தோன்றியது. மனச்சாட்சியில் ஏதாவது உறுத்திக் கொண்டிருந்தாலொழிய பேய்களை என்றும் காண்பதில்லை. அதனால்தான் பேய்களிடமிருந்து பலவற்றை நாம் துப்பறிய முடியுமென முன்பொருதடவை உம்மிடம் சொன்னேன்."

## அத்தியாயம் : 33

# வெள்ளை மாளிகையின் முடிவு

மறுநாளே இருளப்பனும், மாயாண்டியும் பிடிபட்டார்கள். பின்னர் நடந்த வழக்கு விசாரணையில் அவர்களும் கோதண்டமும் தலைக்குப் பத்து வருஷம் சிறைத்தண்டனை பெற்றார்கள். கண்ணனுக்கு நாலு வருஷம் சிறைத் தண்டனை கிடைத்தது. அவர்களைத் தண்டிக்கும் வழக்கில் பத்மாவதியும் மஞ்சுளாவும் அப்ரூவர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டு மன்னிப்படைந்தாலும், கேஸ் முடிந்தவுடன் அவர்கள் ஊரும், உலகமும் சிரிக்க அந்த ஊரைவிட்டே ஓடிப்போனார்கள். கடைசிவரையில் அவர்களின் துராசைக் கோட்டைகள் தரை மட்டமாகப் போனதே அவர்களுக்குப் பெரும் தண்டனையாக விளங்கின!

செல்லையாவின் ஆருயிர் நண்பன் பழைய தண்டனையை அனுபவிக்கச் சிறைக்கு அனுப்பப்பட்டாலும், அவனுடைய பிற்கால நன்னடக்கையைக் கருதி தண்டனைக்காலம் குறைக்கப்பட்டு சீக்கிரம் வெளியே வருவான் என்று தெரிந்தது.

பலவிதமான குற்றங்களுக்கும் காரணமாகிச் சிறைப்பட்டிருக்கும் வெள்ளை மாளிகையில் வசிப்பதற்கே செல்லையாவிற்குப் பிடிக்கவில்லை. அந்தப் பிரும்மாண்டமான மாளிகையைத் தமிழ் வளர்ச்சிச் சங்கத்திற்கு நன்கொடையாகக் கொடுத்து விட்டான். தாய்மொழித் தொண்டு ஒன்றுதான் வெள்ளை மாளிகையின் கறையைக் கழுவி அதைத் தூய்மைப் படுத்தும் என்று நம்பினான். பண ஆசைதான் சகலவிதமான தீமைகளுக்கும் மூலவேர் என்பதை உணர்ந்த அவன் தன் திரண்ட செல்வங்களையெல்லாம்

தமிழ்ப் பணிக்குக் கொடுத்து விட்டு, தன் கையாலே உழைத்துச் சேர்க்கும் சொத்துதான் உண்மையான சொத்து என எண்ணிக் கிராமாந்திரத்திற்குப் போய்விட்டான். அவனுடன் பவானியும் புறப்படத் தயாரானாள். உண்மையான காதலுடன் புன்னகை மொட்டாக விளங்கும் அவளை வாழ்கைத் துணைவியாகப் பெற்று, அவளுடன் ஒன்றாகச் சிறு வீட்டில் வசித்தாலும் அதுவே அவனுக்குப் பெரிய இன்ப உலகமாகத் தோன்றியது. அவ்விருவரையும் வழியனுப்ப வந்த துப்பறியும் கேசவனும் லலிதாவும், ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகை செய்து கொண்டார்கள். அப்போது அந்த நால்வரின் முகங்களில் பொங்கித் ததும்பிய உணர்ச்சிகளை ஓவியர் கிருஷ்ணமூர்த்தியால் தன் வாழ்நாள் முழுதும் மறக்க முடியவில்லை: அவற்றை ஓர் ஓவியத்தில் உருவாக்க கடைசிவரை முடிய வில்லை என்றும் கேள்வி !

---

முற்றிற்று.

[library stamp]

# புதுமுறைத் துப்பறியும் நாவல்கள்

**துப்பறியும் காதலி** — 'மேதாவி' எழுதியது

[குறும்புக்காரியான லீலா பயங்கரச் சதிக்கூட்டத்தைத் துப்பறியப் புறப்படுகிருள். ராயபுரம் கடற்கரையில் அடையாளம் தெரியாத பெண்ணின் பிரேதம் ஒன்று மிதக்கிறது! கடைசியில்…?] ரூ. 1-8-0

**கொலைப்பித்தன்** — வேலவன் எழுதியது

[இரண்டு ரகக் காதலிகளுக்கிடையே திண்டாடும் கதாநாயகனுக்காகப் பன்னிரண்டு வருஷங்களுக்குமுன் நடந்த கொலையை மறு விசாரணை செய்து பிரமிக்க வைக்கிருர் துப்பறியும் கேசவன்] ரூ. 1-4-0

**பேய் வீடு** — சிரஞ்சீவி எழுதியது

[மாலதியின் கணவன் காட்டுப்பாதையில் ஒரு சூனியக்காரக் கிழவியைச் சந்திக்கிருன் — ஒரு பேய் வீட்டிற்குள் மாலதியும் துப்பறியும் ராஜாமணியும் அகப்பட்டுக் கொள்கிருர்கள். முடிவு என்ன?] ரூ. 1-8-0

**ரகசிய அறை** — 'மேதாவி' எழுதியது

[காதலுக்காக நடிகையாக மாறும் மனோரமாவிற்கு இரு பயமுறுத்தல் கடிதங்கள் வருகின்றன. ஒன்றை எழுதியவன் கொலைப்படுகிருன், இன்னொருவன் அவளைத் தூக்கிச் செல்ல முயல்கிருன். ரூ. 1-4-0

**ரத்தப் பசி** — சிரஞ்சீவி எழுதியது

[சிறைஇருளுக்குள்ளே, இராவணன் முடி, மாயா ஜாலத் திருடன் மாலி முதலிய பயங்கர அத்தியாயங்களை உடையது.] ரூ. 1-4-0

**மர்மத் தீவு** — சிரஞ்சீவி எழுதியது

[மனிதவாடை தட்டுப்படாத மாயத் தீவிலே, மர்மக்குரல், மாய மனிதன், குறளி வித்தை, குமரி ஆசை, இவற்றிடையே அடுத்தடுத்து மர்மக்கொலைகள் நிகழ்கின்றன] ரூ. 1-4-0

**காதலன் கொலை வழக்கு** — சிரஞ்சீவி எழுதியது

[தத்ரூபமான கோர்ட் நடவடிக்கைகளுள்ள முதல் பாகமும் துப்பறிபவரின் புலன் விசாரணையுள்ள இரண்டாவது பாகமும் அடங்கியது] ரூ. 1-4-0

**இரட்டைக் கொலை** — ஜெகசிற்பியன் எழுதியது

['அபாய அறிவிப்பு' பத்திரிகாசிரியர் படுகொலை செய்யப் பட்ட மர்மத்தின் முடிவு திடுக்கிடக்கூடியது. யாரும் எதிர்பார்க்க முடியாதது] ரூ. 1-4-0

**துப்பறியும் ராஜு** — மேதாவி எழுதியது

[அக்காள் மரணத்தைக் கண்டுபிடிக்கப் பிராணுபத்தான, மர்மங்களிலெல்லாம் புகுந்து புறப்படுகிருன் தம்பி ராஜு] ரூ. 1-0-0

**மர்மக் கொலை** — சிரஞ்சீவி எழுதியது

[பலரின் நெஞ்சைக் கவர்ந்த மூன்ருவது பதிப்பு] ரூ. 1-0-0

**நீதி மயக்கம்** — சிரஞ்சீவி எழுதியது

[கணவன் கொலை யுண்டு கிடந்தான். காதலன் குற்றவாளி எனக் கருதப்பட்டான். ஆனல் முடிவு என்ன? இரண்டாம் பதிப்பு] ரூ 1-0-0

# நீங்கள் உயரமாக வளர்வது எப்படி?

*[கார்த்திகேயன் எழுதியது]*

இது உயரமானவர்களின் உலகம். உங்களுடைய உயரத்தையும் வளர்த்துக் கொள்ள முடியும் என்பதை எடுத்துக் காட்டும் பயிற்சிப் புத்தகம் இது —

ஆணுக்கும், பெண்ணுக்கும் எடையும் உயரமும் எப்படியிருக்க வேண்டும்? கவர்ச்சிகரமான உடல் தோற்றத்திற்கு ஒவ்வொரு அங்கத்தின் அளவு முறை என்ன? பெண்களில் சிலர் ஆண்மைத் தோற்றத்துடனும் ஆண்களில் சிலர் பெண்மைத் தோற்றத்துடனும் காணப்படுகிருர்களே, அத்தகைய பருவ வளர்ச்சிக் கோளாறுகளுக்குக் காரணம் என்ன? பரிகாரங்கள் என்ன? குட்டையானவர்கள் எவ்வளவு அங்குலங்கள் வரை வளரமுடியும். அதற்குரிய ஆகார நியதிகள், பழக்க வழக்கங்கள், தேகப் பயிற்சிகள் எவை? உங்களுடைய குழந்தைகள் நெட்டையாக வளர நீங்கள் கவனிக்க வேண்டியவை எவை?

ஏராளமான விளக்கப் படங்களும், தேகப்பயிற்சிச் சித்திரங்களும் அடங்கிய உடற்கலை நூல்.

விலை ரூ. 1—8—0

---

# ரேடியோ நாடகம் எழுதுவது எப்படி?

பி. எஸ். ராமையா எழுதிய கலை இயல். வெற்றிகரமாக ரேடியோ நாடகம் எழுதுவதற்கு வேண்டிய கதைப் பின்னல், உரையாடல், பாத்திர சிருஷ்டி, ஓசை ஒலிக் குறிப்புகள் முதலான சகல விஷயங்களும், ஒரு சிறு கதையும், அதைக் கால் மணி நேர ரேடியோ நாடகமாக மாற்றி யமைத்துக் காட்டும் மாதிரி வடிவமும் அடங்கிய சிறந்த நூல்.

விலை ரூ. 1—8—0

# சிந்தனையாளர் வரிசை

[ஒவ்வொரு சிந்தனையாளரின் வரலாறும், அவருடைய சிந்தனை களும், அவர் எழுதிய நூல்களின் சுருக்கங்களும், பொன் மொழி களும் ஏராளமான விளக்கப் படங்களும் அடங்கிய நூல் வரிசை.]

## 1. டார்வின்

'குரங்கினமும் மனித இனமும் ஒரு பொதுவான மூதாதை இனத்திலிருந்து உண்டாயின' எனக் கூறிச் சிந்தனைப் புரட்சி செய்து விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்தார் டார்வின்.

***— ஜெகசிற்பியன் எழுதியது***

## 2. பிளேட்டோ

புரட்சிகரமான சிந்தனைகள் அனைத்திற்கும் மூலவேர் என உலகம் முழுதும் கருதப் படுபவர் பிளேட்டோ.

***— அரு. ராமநாதன் எழுதியது***

## 3. கார்ல் மார்க்ஸ்

பொருளாதார விடுதலையே மனித குல மாண்பு என பொது வுடைமைப் பொருளாதாரப் புரட்சி செய்தவர் மார்க்ஸ்.

***— ரா. தணலன் எழுதியது***

## 4. ரூஸோ

பிரஞ்சுப் புரட்சிக்கு மூல காரணமானவர் எனவும், சுதந் திரத்தின் தந்தை எனவும் புதுமையைச் சிருஷ்டிக்கப் பிறந்தவர் எனவும் உலகம் போற்றிப் புகழும் சிந்தனையாளர் ரூஸோ.

***— கோமேதகவேலு எழுதியது***

## 5. பெஞ்சமின் பிராங்ளின்

அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் சுதந்திரப் புரட்சியின் போது விடி வெள்ளியாக விளங்கியவர் பெஞ்சமின் பிராங்ளின். தனி மனிதனின் முன்னேற்றத்தையும் தேச முன்னேற்றத்தையும் பற்றிச் சிந்தித்தவர்.

***மார்கரெட் கசின்ஸ்—அரு. ராமநாதன் எழுதியது***

## 6. அரிஸ்டாடில்

[சுமார் 2400 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய கிரேக்க தத்துவ ஞானியான அரிஸ்டாடிலின் சிந்தனைகள் உலக வளர்ச் சிக்கு உரமாக விளங்கி வருகின்றன. சிந்தனை ஏன் என்பதைப் பற்றியும் சிந்தித்த மாபெரும் சிந்தனையாளர் அவர்.]

***—கிருஷ்ணன்பாலா எழுதியது***

**ஒவ்வொன்றும் விலை ரூபாய் 1—4—0**

## புதுமணத் தம்பதிகளுக்கு

[மணமான ஒவ்வொரு தம்பதியும் அவசியம் படித்துப் பயன்பெற வேண்டிய, 'இளவேனில்' நல்ல தமிழ் நடையில் எழுதிய அருமையான விஞ்ஞான ஆராய்ச்சி நூல்—ஏன்?—திருமண, உடல், வயசுப்பொருத்தங்கள் — முதல் இரவு — பின்னிரவுகள் — உணர்ச்சி அலைகள்—இன்பநிலை — முதற் குழந்தை — கரு ஆகும் விதம்—ஆணா, பெண்ணா? —ஆண் மலடு, பெண் மலடு—கருத்தடை—இளமையின் பாதுகாப்பு; கனவொழுக்கு—இழந்த இளமையை மீண்டும் பெற வழி—இளமைதரும் மருந்துகள் முதலான பல்வேறு அத்தியாவசிய ஆராய்ச்சிகளும் விளக்கப் படங்களும் அடங்கியது]

விலை ரூ. 2—4—0

## இலாகிரிப் பொருள்களா ?

## எம தூதர்களா ?

[காபி, தேனீர், புகையிலை, பொடி, சிகரெட், வெற்றிலை பாக்கு, மது—முதலானவற்றைப் பற்றிய ஆராய்ச்சி அடங்கியது. சு. அ. இராமசாமிப் புலவர் எழுதியது]

விலை ரூ. 1—8—0.

## சுவையான நூல்கள்

**நாநாவின் தாய்**

[உலக மேதை எமிலி ஜோலா எழுதிய புரட்சிகரமான மிகப் பெரிய நாவல். இந்தநாவலில்தான் பாரிஸ்நகரின் போதைகளுக்குக் காரணமான நாடகக் கணிகை நாநாவின் ஆரம்ப வாழ்க்கை சித்தரிக்கப்படுகிறது.] விலை ரூ.4—0—0

**எதிர்வீட்டு ஜன்னல்**

[கோ. ந. சண்முகசுந்தரம் எழுதிய காதல் நாவல்] ரூ. 1-0-0

**ஆசை வெள்ளம்**

['சுகி' எழுதிய காதல் நாவல்] ரூ. 0-12-0

**உறவு முள்**

[ஜெகசிற்பியன் எழுதிய காதல் நாவல்] ரூ. 0-12-0

**சிலந்திக்கூடு**

[தங்கமணி எழுதிய பாலர் நாவல்] ரூ. 1-0-0

**அம்பிகாபதி**

[அரு. ராமநாதன் எழுதிய கதைக் களஞ்சியங்கள்] ரூ. 1-4-0

**கதாநாயகி**

[அரு. ராமநாதன் எழுதியது] ரூ. 1-4-0

### பொன்மொழிகள் வரிசை

**1. ஔவையார்** [அரு. ராமநாதன் தொகுத்தது–இரண்டாம் பதிப்பு] **2. விவேக சிந்தாமணி** [சிரஞ்சீவி] **3. பைபிள்** [இயேசுநேசர்] **4. திருக் குர்ஆன்** [எம். அப்துல் வஹ்ஹாப், எம். ஏ.] **5. பஞ்சதந்திரம்** [தி. நா. சுப்பிரமணியன்] **6. புத்தர்** [அரு. ராமநாதன்]

ஒவ்வொன்றும் விலை அணு எட்டு

[குறிப்பு: முன் பணம் அனுப்பித் தேவையான பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம். ஒரு ரூபாய்க்குட்பட்ட தொகைக்குத் தபால் தலைகள் அனுப்பலாம்.]

**பிரேமா பிரசுரம் :: சென்னை-24**

பிரேமா பிரசுரத்தில்

நீங்கள் விரும்பும் புத்தகம் எது

எங்களுக்கு எழுதுங்கள்

S. V. Arumugam.
Mudaliar &c.
Sivaganga Po.
(Ramnad Dist)



மனிதனுக்குப் பித்துப் பிடித்து விட்டால் அவன் சாதிக்க நினைக்கும் காரியங்கள் சற்று அமானுஷிய மாகவே இருக்கும்! கலைப் பித்து, காதல் பித்து, கௌரவப்பித்து, பணப் பித்து, பழி வாங்கும் பித்து, பெண் பித்து எனப் பலரகப் பித்துகளும் ஒரு கொலைப்பித்தைச் சுற்றி நடமாட ஆரம்பித்து விட்டால், பலரகப் பித்தலாட்டக்காரர்களும் ஏற்படுவது இயற்கையே! அத்தகையவர்களின் சிக்கல்களையெல்லாம் அவிழ்க்க முனையும் துப்பறியும் கேசவன் பலவிதமான சித்து வேலைகளும் செய்து நம்மைப் பிரமிக்க வைக்கிறார் இந்த நாவலில்.

அடுத்து என்ன நிகழப் போகிறது என்கிற ஆவலை அடுக்கடுக்காக எழுப்பும் விதமாக மர்ம நாவல் எழுதுவதற்குப் போதிய கைத்திறன் வேண்டும். அந்த வகையில் வேலவனின் கை வண்ணத்தையும், நடை வண்ணத்தையும் இந்த நாவலில் நாம் நிறையக் காணலாம்.

WRAPPER PRINTED AT THE ASIAN PRINTERS, MADRAS-5.